# மலரும் திருமறை

இரா. எட்வர்டு சாம்

## இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணையதளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

*WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599*

*Email: wordofgod@wordofgod.in*

## *Wishing you in the mighty name of Jesus Christ*

*We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.*

*95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.*

*WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599*

*Email: wordofgod@wordofgod.in*

# மலரும் திருமறை

## தற்காலத்தில் திருமறையைப் புரிந்துகொள்வதெப்படி?

இரா. எட்வர்டு சாம்

கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்

THE CHRISTIAN LITERATURE SOCIETY
POST BOX 501, PARK TOWN, MADRAS 600003

*COPYRIGHT*

*First printed*, 1973

*Cover design by Abraham Joseph*

PRINTED AT THE DIOCESAN PRESS, MADRAS—1973. B5025

## முன்னுரை

திருமறை விளக்கம்பற்றி தமிழில் ஒரு நூல் எழுதும்படி நான் கேட்டுக்கொள்ளப்பட்டேன். இப்பணியினைச் செவ்வனே நிறைவேற்றுவதற்குரிய அறிவோ, அனுபவமோ எனக்கில்லை. எனினும், இப்பொருள் தமிழ்நாட்டுத் திருச்சபையில் பெரும் சிக்கலான பிரச்சினையாயிருப்பதினால் இதனை எழுதும் பொறுப்பினை ஏற்றுக்கொண்டேன். சிறப்பாக, நமது கல்வி நிறுவனங்களில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு இந்நூல் பயன் படவேண்டும் என்பது இதன் நோக்கம். பட்டதாரி ஆசிரியர் களும், இதர ஆசிரியர்களும், மற்றும் திருச்சபையினர் அனைவருமே இந்நூலினைப் படிக்கவேண்டும் என்பது எமது அவா.

இந்நூலில் தரப்படும் பல கருத்துக்கள், 'இதுவரையிலும் நாம் அறிந்திருப்பதைவிட வித்தியாசமாயிருக்கலாம். வாசகர்கள் இவற்றினை அனுதாபத்தோடும், திறந்த மனதோடும் அணுகவேண்டும் என்பது எமது வேண்டுகோள். அறிவு சார்புள்ள விசுவாசத்தை நாடுகின்றவர்களுக்கு இந்நூல் துணைநிற்கும் என்பது எமது நம்பிக்கை.

இதனை எழுதுவதில் என்னை ஈடுபடுத்தி ஊக்கமளித்த மறைத்திரு. ஆ. தே. மனுவேல் அவர்களுக்கும், இதனை எழுதுங்கால் பல ஆலோசனைகள் தந்து பெரிதும் உதவிய மறைத்திரு. இராபின் மக்ளாஷன் அவர்களுக்கும், இதனை எழுதுவதில் பொறுமையாக உதவிசெய்த திருமதி எட்வர்டு சாம் அவர்களுக்கும் எமது இதயங்கனிந்த நன்றி உரித்தாகுக. இதனை எழுதுவதற்கு உடல் நலமும், உள்ள ஊக்கமும் அருளிய இறைவனுக்கு எஞ்ஞான்றும் எமது துதி உரித்தாகுக.

களியங்காடு
*1—9—1973*

இரா. எட்வர்டு சாம்

# பொருளடக்கம்


பக்கம்

முகவுரை .. 1

பாகம் 1—சில பிரச்சினைகள்

1. திருமறையும் புதைபொருள் ஆராய்ச்சியும் .. 15
2. திருமறையும் விஞ்ஞானமும் .. 23
3. திருமறையின் வரலாற்று வாய்மை .. 32

பாகம் 2—திருமறையின் வரலாறு

4. திருமறை ஒப்புக்கொள்ளப்பட்ட வரலாறு .. 43
5. திருமறை மொழியாக்கங்கள் .. 54

பாகம் 3—திருமறையின் பொருளடக்கம்

6. திட்டம் .. 65
7. இஸ்ரவேலரைத் தேர்ந்தெடுத்தல் .. 71
8. அரசர்களின் தோற்றமும் முடிவும் .. 85
9. மனச்சான்றின் மெய்க் காவலர் .. 91
10. ஒரு புதிய வாய்ப்பும் தோல்வியும் .. 100
11. வாக்குத்தத்தமும் நிறைவேறுதலும் .. 112
12. உலகில் இறையாட்சி .. 124
13. இயேசுவின் மரணமும் உயிர்த்தெழுதலும் .. 135
14. புதிய இஸ்ரவேல் .. 142
15. அனைத்துலகத் திருச்சபை .. 148

பாகம் 4—புத்தறிவு

16. திருமறையும் தூய ஆவியரால் ஏவப்படுதலும் .. 155
17. திருமறையும் இறைவழி வெளிப்பாடும் .. 162
18. திருமறையின் ஒப்புயர்வற்ற சிறப்பு .. 169

பக்கம்

19. திருமறையின் ஒருமைப்பாடு .. 176
20. திருமறையும் திருச்சபையும் .. 186

பாகம் 5—திருமறை விளக்கம்

21. இறையியல் நோக்கு .. 197
22. திருமறை விளக்கத்தின் சில அடிப்படைத் தத்துவங்கள் .. 203
23. நமது காலத்துக்கு திருமறையின் செய்தி .. 214

பின்னிணைப்பு

24. திருமறையின் கால அட்டவணை .. 224

# முகவுரை

சில மாதங்களுக்கு முன்னர், கிறிஸ்தவக் கல்லூரி மாணவருக்கான ஒரு மகாநாட்டில் தேவனுடைய இராச்சியம் என்பதற்குக் கடவுளின் அரசு என்பது திருமறை தரும் பொருள் என்று கூறினேன். மனித வாழ்க்கையிலும், சமூகத்திலும், வரலாற்றிலும் கடவுளின் சித்தம் நிறைவேற்றப்படுவதில் அவரது ஆட்சி விளங்குகின்றது; இயேசு கூறிய உவமைகள் பல இப்பொருளைத் தருகின்றன; எனவே, கடவுளின் அரசு முற்றிலும் வருங்காலத்துக்குரிய ஒன்றன்று; அது நிகழ்கால வாழ்க்கையில் செயல்படும் ஒன்ருகும்; ஆகவே, திருமறை நமது நிகழ்கால வாழ்க்கையில் மிகவும் ஆர்வமுள்ள ஒரு நூல் எனவும் நான் கூறினேன். உரை முடிந்த பின்னர் வாலிபன் ஒருவன் என்னிடம் வந்து, இன்று நீங்கள் கூறியது முற்றிலும் புதுமையாய் இருக்கின்றது; எங்கள் சபை ஊழியர் திருமறை மறுமையின் வாழ்வைப்பற்றிக் கூறும் நூல் எனவும், தேவனுடைய இராச்சியம் என்பது முற்றிலும் மறுமைக்குரிய ஒன்று எனவும் எப்பொழுதும் அருளுரைகளில் கூறுவதால் எனக்கு இவைகளில் ஆர்வமில்லை; ஆனுல், அது நிகழ்கால வாழ்க்கையோடு ஈடுபாடுகொண்டது என்று அறிந்ததும் இறைவனுக்கடுத்த காரியங்களில் எனக்கு ஆர்வமுண்டாகிறது எனக் கூறினுன்.

சில ஆண்டுகளுக்குமுன்னர் ஒரு ஞாயிறு காலை இறை வழிபாட்டில் பாபேல் கோபுரத்தைப்பற்றி அருளுரை ஆற்றினேன். பிறிதொரு சபையிலிருந்து அந்தத் தொழுகையிலே பங்குபெற்ற அறிஞர் ஒருவர், 'இதே அருளுரையை எங்களது மறை மாவட்டத்தில் இன்ன ஆலயத்தில் நிகழ்த்தினுல் உங்களைக் கல்லெறிவார்கள்' என்று கூறினுர். ஆனுல், அதே வாரத்தில் கல்வி கற்ற வாலிபன் ஒருவன் என்னைச் சந்தித்து, 'ஐயா, பாபேல் கோபுரம்பற்றிய அருளுரை மிகவும்

புதுமையாகவும், பயனுள்ளதாகவும் இருந்தது. அதை ஓர் உண்மை வரலாற்று நிகழ்ச்சி என்ற அளவில் விட்டுவிடுவதை விட, கடவுளற்ற மனித முயற்சிபற்றிய ஏளனச் சித்திரம் என நோக்கும்போது இன்றைய உலக வரலாற்றின் புகைப் படம்போல் உயிர்த் துடிப்புள்ளதாயிருக்கின்றது' என்று கூறினன்.

இந்த இரு எடுத்துக்காட்டுகளும், கல்வி அறிவு பெற்ற சமூகத்தில் பலர் திருமறைபற்றிய பரம்பரையான நம்பிக்கைகள், விளக்க முறைகள், விளக்கங்கள் ஆகியவற்றில் அதிருப்தியுற்றிருக்கின்றனர் என்பதைக் காண்பிக்கின்றன. இன்றைய விஞ்ஞான, பரவெளி யுகத்திற்கு (space age) ஏற்ப ஒரு விளக்கம் தேவை என்பதனை அவர்கள் நல்லெண்ணத்தோடே உணருகின்றனர் என்பதனையும் இவைகள் தெளிவாக்குகின்றன.

நமது வாலிபர்கள் பலர் திருமறைபற்றி கேள்விகள் கேட்பதற்குப் பயப்படுகின்றனர். அவர்கள் துணிந்து கேட்கும்போது திருப்திகரமான பதில்களைப் பெறுவதுமில்லை. இன்றையக் கல்வி முறையும் அருளுரை முறையும் கேட்பனவற்றை அப்படியே ஏற்றுக்கொள்ள எதிர்பார்க்கின்றன. கேட்பன பற்றி உள்ளத்தில் எழும் கேள்விகளைக் கேட்கவோ, கலந்து பேசவோ வாய்ப்பளிக்கப்படுவதில்லை. உண்மையான கேள்விகளைக் கேட்பதற்குப் பொதுவாக ஆர்வம் அளிக்கப்படுவதில்லை. அவைகளை எழுப்பினல் தங்களை அவிசுவாசிகள் என்று பிறர் சிந்தித்துவிடுவார்களோ எனப் பலர் பயப்படுகின்றனர். எனவே, அநேகர் தோற்றத்தில் விசுவாசிகள் போலவும், அகத்தில் அவிசுவாசிகளாகவும், சந்தேகவாதிகளுமாகவும் இருக்கின்றனர்.

### திருமறைபற்றிய இன்றையப் பொதுவான நிலை

நமது வாலிபர்களுக்கு மாத்திரமன்று, சபையினர் பலருக்கும் இக்காலத்தில் திருமறை ஒரு பிரச்சினையாயிருக்கின்றது. இக்கால இறையியற் பயிற்சி பரம்பரையான திருமறை விளக்கத்தைத் தழுவியதன்று. அறிவோடு திருமறையினைப் புரிந்துகொள்ளவும் இந்நிலையங்களில் பயிற்சி அளிக்கப்படுகின்றது. எனினும், திருப்பணியில் இதனைச் செய்வது கடின

மாயிருப்பதாலும், பரம்பரை மனப்போக்குள்ளவர்களின் எதிர்ப்பினைச் சந்திக்க விருப்பமின்மையினாலும் பலர் பரம்பரை யான முறையையே பின்பற்றுகின்றனர். தங்களது கல்விக்கும் செயலுக்குமுள்ள வித்தியாசத்தினால் அவர்கள் உள்ளத்தில் ஒரு போராட்டம் ஏற்படுகின்றது. அவர்கள் சொல்வதைக் கேட்கின்ற அறிவுடைய மக்களின் அகப்போராட்டமும் தொடருகின்றது. எனவே, இன்றையத் திருச்சபையில் திருமறைபற்றிய பரம்பரையான சிந்தனைகளே பெருமளவில் ஆதிக்கம் செலுத்துகின்றன.

### சமயச் சார்பற்ற கல்வி

இந்தியா சமயச் சார்பற்ற ஒரு நாடு (Secular State). அதாவது, கொள்கை அளவில் எந்தத் தனிப்பட்ட சமயத் தையும் இந்திய அரசு ஆதரிப்பதில்லை. ஆகவே, நம் நாட்டில் புகட்டப்படும் கல்வி சமயச் சார்பற்றது. மேலும், இக்காலக் கல்வி பெருமளவில் விஞ்ஞானப் போக்குள்ளது. உயர்நிலைப் பள்ளிகளில் விஞ்ஞானம் மிகவாகக் கற்பிக்கப்படுகின்றது. இங்குப் பரிணாமக் கொள்கை (evolution) போதிக்கப்பட்டுக் கல்லூரியில் இது விரிவாகக் கற்பிக்கப்படுகின்றது. சமயச் சார்பற்ற கல்விக்கும் கல்வியில் சம்பந்தப்படுவோரின் சமயத் துக்குமிடையில் (religion) ஒரு பிளவு இருப்பதுபோல் ஆசிரி யரும் மாணவரும் உணருகின்றனர். பள்ளியிலே கற்பவை அறிவை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. ஆலயத் திலும், திருமறை வகுப்பிலும் கேட்பன, படிப்பன விசுவாச அடிப்படையில் அமைந்திருக்கின்றன. அறிவுக்கும் விசுவாசத் துக்கும், அறிவின் அடிப்படையில் பெற்றுக்கொள்ளும் கல்விக்கும் விசுவாச அடிப்படையில் செயல்படும் சமயத்துக்கு முள்ள உறவினை உணர இயலாது பலர் திகைக்கின்றனர்.

எடுத்துக்காட்டாக, படைப்பைப்பற்றி மாணவன் ஒருவனை வினவினோம். அதற்கு அவன், ‘நான் விஞ்ஞானம் பயி லும் மாணவனானபடியால் பரிணாமக்கொள்கையை ஏற்றுக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். எனவே, திருமறைகூறும் படைப்பின் வரலாற்றை உண்மையென ஏற்றுக்கொள்ளுவது கடினமாயிருக்கின்றது’ எனக் கூறினான். இங்கே திருமறை கூறும் படைப்புக்கும் பரிணாமவாதத்திற்கும் தம்மிலுள்ள

உறவை உணர இயலாமை காணக்கிடக்கின்றது. இந்நிலையில் நமது இளைஞருக்கும், வாலிபருக்கும் உதவிசெய்யக்கூடிய திருமறைப் பாட வகுப்புகளின் நிலையைக் கவனித்தால், நிலைமை மிகவும் பரிதாபமாயிருக்கின்றது.

### நமது பள்ளிகள், கல்லூரிகளில் திருமறைப் பாடத்தின் நிலை

சமயச் சார்பற்ற கல்வி பிரச்சினையாயிருக்கும் நிலையில், நமது கல்வி நிலையங்களின் நிலை பரிதாபமாயிருக்கிறது. ஒரு காலத்தில் கிறிஸ்தவ சபையினரால் நடத்தப்படும் கல்வி நிலையங்களில் திருமறை கட்டாயப் பாடமாகக் கற்பிக்கப்பட்டது. இந்நிலை பெருமளவில் இக்காலத்தில் மாறிவிட்டது. எனவே, பள்ளி நேரத்திற்கு வெளியே கிறிஸ்தவ மாணவருக்கு மாத்திரம் திருமறை கற்பிக்கும் நிலை உருவாகியுள்ளது. நமது கல்லூரிகள் பலவற்றில் வாரத்தில் ஒருமணி நேரம் மாத்திரமே திருமறைப் பாடம் கற்பிக்கப்படுகின்றது. திருச்சபையின் நிர்வாகத்தில் ஆரம்பக் கல்வி இல்லாத இடங்களில் நிலைமை மிகவும் வருந்தத்தக்கதாக இருக்கிறது.

இவ்வித நிலையில், வசதியுள்ள இடங்களில் கற்பிக்கப்படும் திருமறைப் பாடமும் பல கல்வி நிலையங்களில் ஒழுங்கீனமாகவே கற்பிக்கப்படுகின்றது. ஆர்வமற்ற ஆசிரியர்கள், ஆர்வமுள்ளவர்களுக்குப் பாடம் ஆயத்தம்செய்யத் தகுந்த துணை நூல்கள் இல்லாமை, பள்ளி ஆண்டின் இறுதி வரும்போது திருமறைப் பாட வகுப்புக்குரிய நேரத்தை இதர பாடங்களுக்காக உபயோகித்தல், திருமறைப் பாடம் கற்பிக்கின்றவர்களுக்குப் பயிற்சியின்மை, திருப்தியற்ற பாடத் திட்டங்கள் போன்ற பல காரணங்களினால் இக்காலத்தில் நமது பள்ளிகள், கல்லூரிகள் பலவற்றில் இப்பணி திருப்திகரமாக நடைபெறவில்லை. ஏதோ சில கல்வி நிலையங்களில் தலைவர்களின் ஆர்வத்தாலும், சில ஆசிரியர்களின் முயற்சியாலும் ஓரளவு இப்பணி செவ்வனே நடைபெறுகின்றது என்பதனை நாம் மறுக்கவில்லை.

நமது கல்வி நிலையங்களால் நிறைவேற்ற இயலாத இப்பணியினை ஓய்வுநாட் பள்ளிகள் செய்ய வாய்ப்பிருக்கிறது. ஆகவே, நமது சபைகளிலும் நிறுவனங்களிலும் இருக்கும் ஓய்வுநாட் பள்ளிகளின் இக்கால நிலையினைப் பார்ப்போமாக.

### நமது ஓய்வுநாட் பள்ளிகளின் நிலைமை

தமிழ்நாட்டின் சில சபைகளில் சிறுவருக்கும், இளைஞருக்கும் திருமறை புகட்ட ஓய்வுநாட் பள்ளிகள் இல்லை. எனினும், பல சபைகளிலும் திருச்சபை நடத்தும் விடுதிகள் சிலவற்றிலும் ஞாயிறன்றோ, வேறு தினத்திலோ ஏதாவது ஒரு பாடத் திட்டத்தைத் தழுவித் திருமறைப் பாடம் கற்பிக்கப் படுகின்றது. பாடத் திட்டங்களில் வித்தியாசங்கள் இருக்கின்றன. அகில இந்திய ஓய்வுநாட் பள்ளி ஐக்கியம் (India Sunday School Union, Coonoor) வெளியிடும் பாடத் திட்டங்கள் திருமறைபற்றியும், திட்டத்தின் பொருட்கள் பற்றியும் பரந்த மனப்பான்மையுடையன. இப்பாடத் திட்டம் பொதுவாகப் பலராலும் பாராட்டப்படுகின்றது. இது தவிர, எழுத்தின்படி திருமறையை விசுவாசிக்கின்றவர்களால் (literalists) ஓரளவு குறுகிய மனப்பான்மையோடே, ஆனால் மிகவும் கவர்ச்சிகரமான முறையில் வெளியிடப்படும் பாடத் திட்டங்களையும் பல சபைகள் பின்பற்றுகின்றன.

திட்டங்களிலும் பிரச்சினைகள் இருப்பதோடு, ஓய்வுநாட் பள்ளி ஆசிரியர்களில் பெரும் எண்ணிக்கையினர் திருமறை கற்பிப்பதில் எவ்விதப் பயிற்சியுமற்ற வாலிபர்களாவர். திருமறையோவெனில் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றி ஓராயிரம் ஆண்டு காலமாக வளர்ந்த ஒரு நூல் நிலையம். அதனை விளக்குகின்றவர்களுக்குப் பயிற்சி இல்லையேல் அது பெருங்குறைவாகும். உத்தமமும் உண்மையுமாகத் திருமறை கற்பிக்கும் ஓய்வுநாட் பள்ளி ஆசிரியர்களும் இருக்கின்றனர் என்பதனை நாம் மறுக்கவில்லை. ஆயினும், அவர்களுக்குத் திருமறைபற்றிய அறிவும், அதனைக் கற்பிக்கப் பயிற்சியும் தேவை.

### இன்றைய நமது சபையினரின் பொதுவான மனநிலை

தமிழ்நாட்டுத் திருச்சபையின் பெரும் பகுதி கிராம சபைகளே. இவைகளில் அங்கம் வகிப்பவர்களில் பலர் கல்வி அறிவு குறைந்தவர்கள். இக்காலத்தில் கல்வி நிலையங்களும், கல்லூரிகளும் பட்டணங்களிலும் கிராமப்புறங்களிலும் பெருகி வருகின்றபடியால் சபையினரின் கல்வி நிலை துரிதமாக உயர்ந்து வருகின்றது. கிராமப் படிப்பகங்கள்,

வானொலி, பலவித பத்திரிகைகள் ஆகியவற்றின் மூலமாக மக்களின் பொது அறிவும் பெருகுகின்றது.

இச்சூழ்நிலையில் கற்றவர்களும், கல்லாதவர்களுமான சபையினரில் ஒரு சிலர் தவிர ஏனையோர் திருமறை இறைவன் நேரடியாக அருளிய அவருடைய வார்த்தைகள் அடங்கிய நூல், அதன் எல்லா வார்த்தைகளும் ஆவியானவரால் ஏவப்பட்டு எழுதப்பட்டவை, ஆகையினால் திருமறை கூறும் அனைத்தும் உண்மையானவை என நம்புகின்றவர்களாவர். திருமறை தரும் வரலாறு, இதர விவரங்கள் ஆகியவற்றில் பிழை இல்லை என இவர்கள் கூறுவார்கள். அவர்கள் அறிந்து பழகின மொழிபெயர்ப்பே பிழையற்றது என்பர். படைப்பைப் பற்றிய ஆதியாகமத்தின் ஆரம்ப அதிகாரங்களை எழுத்துக்கெழுத்து உண்மையானவை என ஏற்றுக்கொள்ளுவார்கள்.

மேலும் கல்வி அறிவு படைத்த பலர் தாங்கள் இதர துறைகளில் அறிவைச் சம்பாதிக்க உபயோகிக்கும் திறனாய்வு (Critical approach), வரலாற்று நோக்கு (Historical approach), ஏட்டாராய்ச்சி (Textual study) முதலியவற்றைத் திருமறை பயிலுவதில் உபயோகிக்க மறுக்கின்றனர். இதனால் ஏற்கெனவே கூறியதுபோலப் பள்ளி அறிவுக்கும், திருமறை அறிவுக்குமிடையில் நல்லுறவின்றி பெரும் பிளவு நிலவுகின்றது. இக்காரணத்தால் சிலருக்குத் திருமறை படிப்படியாகப் பழங்காலத்துக்குரிய ஒரு நூலாகிவிடுகின்றதேயன்றி அன்றாட வாழ்க்கைக்கு ஆக்க முறையில் ஆதரவு அளிக்கும் உயிருள்ள நூலாக விளங்குவதில்லை. வேறு சிலருக்கு அவர்களுடைய தனி ஆத்தும மீட்புக்கும் அவர்கள் தேவனுடைய இராச்சியம் செல்வதற்கும் வழிவகுக்கும் நூலாயிருக்கின்றதேயன்றி சமூகத்தை மாற்றி அமைக்கும் புரட்சிகரமான ஆற்றலளிக்கும் நிகழ்கால நூலாகத் திருமறை அறியப்படவில்லை.

மேற்கூறிய பல உண்மைகளை அறியும்போது, ஏன் இந்நிலை ஏற்பட்டுள்ளது என்ற கேள்வி எழுகின்றது. இந்நிலைக்கு ஒரு முக்கியக் காரணம் திருமறை எத்தகைய நூல், அதின் வரலாறு என்ன, அதின் முக்கியப் பொருள் என்ன, அதின் இலக்கியங்கள் எத்தன்மையுள்ளவை என்பன பற்றிய அறியாமையாகும். இந்நூலின் பிந்திய பகுதிகளில் இவற்றினை விவரமாகக் கூறுவோம். இங்கே சில தன்மைகளைச் சுட்டிக் காண்பிப்போம்.

### திருமறை கற்றுக்கொள்வதற்கு எளிய நூலன்று

பொதுவாக எல்லாக் கிறிஸ்தவ இல்லங்களிலும் திருமறைப் பிரதிகள் இருக்கின்றன. நம் நாட்டில் கிறிஸ்தவர்களில் ஒரு பெரும் தொகையினர் நாள்தோறும் ஒழுங்காகத் திருமறை வாசிக்கும் வழக்கம் உடையவர்கள். எனினும் தாங்கள் வாசிக்கின்றவற்றை அவர்கள் புரிந்துகொள்ளுகின்றார்களா என்பது சந்தேகத்துக்குரியதாகும். ஒருவேளை சங்கீதங்கள், நீதிமொழிகள், கதை போன்ற பாகங்கள் ஆகியவை எளிதில் புரிந்துகொள்ளக்கூடியவை என நாம் எண்ணலாம். உற்று நோக்கின் இவைகளும்கூட எழுதியவரின் பொருளைப் புரிந்து கொள்வதற்கு எளியவை அல்ல என்றறிகின்றோம். (உ—ம்) சங்கீதங்கள் பல தனிப்பட்ட சந்தர்ப்பங்களில் எழுதப் பட்டவையாம். அந்தச் சந்தர்ப்பங்களைப்பற்றிய அறிவு இல்லாவிடின் அவற்றைப்பற்றிய அறிவு குறைவுள்ளதேயாம். இறைவாக்காளரின் நூல்கள் (*Prophetic Writings*), புதிய ஏற்பாட்டு நிருபங்கள், தானியேல், தரிசன நூல் ஆகியவை, இதர உதவி இன்றி மூலப்பொருளின் அடிப்படையில் செவ்வனே புரிந்துகொள்ளுவது எளிதன்று. எனவே, தோற் றத்தில் எளியதுபோல் தோன்றினும், உண்மையில் திருமறை புரிந்துகொள்ளவும், விளக்கவும் எளிய நூலன்று.

### திருமறையின் மொழிகள்

பழைய ஏற்பாட்டு நூல்கள் எபிரேய மொழியிலும், புதிய ஏற்பாட்டு நூல்கள் கிரேக்க மொழியிலும் முதற்கண் எழுதப்பட்டிருந்தன. எபிரேயம், எபிரேயர் என்ற ஒரு சிறிய இனத்தவரின் மொழியாகும். இது பெரும்பாலும் எபிரேயரல்லாதவர்களால் பேசப்படாத ஒரு பழம் மொழி யாகும். இக்காலத்தில் இம்மொழி பேசப்படவில்லை. எனவே, இந்தப் பழம் மொழியிலிருந்து பழைய ஏற்பாட்டினை இக்கால மொழிகளில் ஒன்றில் மொழியாக்கம் செய்வது என்பது எளிதன்று. இக்காரணத்தினால் மொழிபெயர்ப்புகள் மூல மொழிபோல சிறப்புற அமைவதில்லை. நாம் படிப்பன மொழி யாக்கங்களாயிருப்பதால் பல சொற்களுக்கு அவற்றின் இயல்பான பொருளை மறந்து திருமறையின் சிறப்புப் பொருள் ஏற்றியே புரிந்துகொள்ளவேண்டும். மேலும், திருமறை

நூல்களில் முதல் ஏடுகள் ஒன்றும் நமக்குக் கிடைக்கவில்லை. இதுவரை கிடைத்துள்ள மூல ஏடுகள் முதல் ஏடுகளின் நகல்களேயாம். அவற்றிலிருந்தே மொழியாக்கங்கள் செய்யப்படுகின்றன.

கிரேக்க மொழி எபிரேயத்தைவிட இலக்கிய வளம் மிகுந்ததும் மத்தியதரைத் தீரத்து நாடுகளிலெல்லாம் பேசப்பட்டதுமான மொழியாகும். ஆயினும், முதல் நூற்றாண்டின் கிரேக்க மொழி இக்கால கிரேக்கத்தைவிட வித்தியாசமானது. எனவே, பழைய ஏற்பாடுபற்றி மேற்கூறிய பிரச்சினைகள் புதிய ஏற்பாட்டிலும் இருக்கின்றன. (உ—ம்) அன்பு என்ற ஒரே தமிழ்ச் சொல்லைக்கொண்டு மூன்றுவிதமான அன்புகளை விவரிக்கும் மூன்று கிரேக்கச் சொற்களை மொழியாக்கம் செய்யவேண்டியிருக்கின்றது ('அகபே'=இறையன்பு; 'ஈராஸ்'=ஆண், பெண் சார்புள்ள அன்பு; 'ஃபிலியா'= நண்பர்களிடையே நிலவும் நட்பு). ஆகவே, மொழியாக்கம் மூலமொழிக்கு நிகராயில்லாதபடியால் படிப்பவர்க்கு ஆர்வக் குறைவு ஏற்படுகின்றது. நமது கரத்திலிருக்கும் தமிழ்த் திருமறை, மூலமொழியின் தமிழாக்கமாகும் என்ற எளிய உண்மையை உணராத கிறிஸ்தவர்கள் இருப்பினும் ஆச்சரியமில்லை.

## கருத்து உருவங்கள் (Thought Forms)

தலைமுறைக்குத் தலைமுறை சிந்தனை வித்தியாசமிருக்கின்றது. திருமறையின் நூல்கள் நீண்ட காலமாக எழுதப்பட்டவை. கி.மு. ஆயிரம் முதல் கி.பி. நூறு வரை சிந்தனை முறைகளிலும், சிந்தனையிலும் வித்தியாசமுண்டு. கி.பி. நூறு முதல் நாளது வரையில் பல தத்துவங்களும் சிந்தனை முறைகளும் தோன்றியுள்ளன. எனினும், மனிதத் தன்மையில் பெரும் மாற்றம் ஏற்படவில்லை. அக்காலப் பிரச்சினைகள் பல இன்றும் பிரச்சினைகளாம். ஆனால், திருமறைக் காலத்துச் சிந்தனை முறைகளும் இக்கால மனிதனின் சிந்தனை முறைகளும் மிகவும் வித்தியாசமானவை. விஞ்ஞானம், புவியியல், பௌதீகம் போன்ற துறைகளில் பெரும் வித்தியாசங்கள் ஏற்பட்டுவிட்டன. எனவே, இக்கால விஞ்ஞான அறிவுக்குப் பொருத்தமற்ற சிலவற்றைத் திருமறையில் காணும்போது இந்நூலில்

ஆர்வம் குறைகிறது. எனவே, உண்மையில் திருமறைக்கும் விஞ்ஞானத்துக்கும் முரண் இல்லை என்று காண்பிப்பது இன்றியமையாதது. மேலும், பழைய கருத்துருவங்களின் இயல் பொருள்பற்றிய அறிவும் தேவை. (உ—ம்) மேசியா, மனித குமாரன் போன்ற சொற்றொடர்களுக்கு நீண்ட வரலாறும் விளக்கமும் உண்டு. அதனை அறியாவிடில் நாம் அவற்றிற்கு அளிக்கும் விளக்கம் தவறானதாக அமையும் வாய்ப்பிருக்கின்றது.

## திருமறையில் சில கீழ்நாட்டு மனப்போக்குகள்

திருமறையில் சில இடங்களில் திட்டவட்டமாகக் கணித முறைப்படி கூறப்படாமல் 'ஏறக்குறைய' என்ற முறையில் கூறப்பட்டுள்ளது. (உ—ம்) 1 இரா. 7:23ன்படி சாலொமோனின் தேவாலயத்திலிருந்த கடல் என்னும் தொட்டியின் சுற்றளவு அதன் விட்டத்தைவிட மூன்று மடங்கு என்று கூறப்படுகின்றது. ஆனால் கணிதப்படி சுற்றளவு, விட்டத்தை விட 3·1416 தடவை என்பது பிரமாணம்.

மேலும் இக்காலத்தில் மேற்கோள் எடுத்து உபயோகித்தால் எந்த நூலில், எப்பக்கத்திலிருந்து எடுக்கப்பட்டது என்று குறிப்பிடுவது பிரமாணமாகும். ஆனால், பழங்காலத்தில் இந்த வழக்கம் பின்பற்றப்படவில்லை. திருமறையில் பல இடங்களிலும் மேற்கோள்கள் எங்கிருந்து எடுக்கப்பட்டன என்பது கூறப்படவில்லை.

இதுமாத்திரமல்ல, திருமறை நூல்கள் எழுதப்பட்ட மத்திய கிழக்கு மக்கள் உருவகங்களை உபயோகிப்பதில் ஆர்வமுள்ளவர்கள். இயல்பின்படி அவர்கள் கவிதை மனப்போக்குள்ளவர்கள், கற்பனைத் திறன்மிக்கவர்கள். திருமறையில் கவிதைகளும், உருவகங்களும், கதைகளும் மல்கிக் கிடக்கின்றன. இவற்றினை உரைநடைபோல் கருதி எழுத்தின்படி பொருள்தர முற்படின் சிக்கல்கள் ஏற்படுகின்றன. இவ்விதக் கீழ்நாட்டு மனப்போக்குகளை மக்கள் அறியச்செய்வது இன்றியமையாததாகும்.

## பலதரப்பட்ட இலக்கியங்கள்

திருமறையில் வரலாறு, வாழ்க்கை வரலாறுகள், கதைகள், நாடகம், கவிதைகள், முதுமொழிகள், போதனைகள்,

உவமைகள், கடிதங்கள் போன்றவை இடம்பெறுகின்றன. இவை பல காலங்களில் வாழ்க்கையின் பல நிலைகளிலுள்ளவர்களால்—அரசர்கள், அறிஞர்கள், மேய்ப்பர்கள், வரி வசூலிப்போர் போன்றவர்களால் எழுதப்பட்டவை. இவை எல்லாவற்றிலும் ஒருமைப்பாடு இருக்கின்றது என்பது உண்மையேயாயினும், அந்தந்த இலக்கியத்தை அதற்கேற்ற முறையில் புரிந்துகொள்ளாவிடில் பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

### இந்நூலின் நோக்கம்

எனவே, இந்நூல் ஒரு முக்கிய நோக்கத்தோடு எழுதப்பட்டுள்ளது. திருமறைபற்றிய தவறான பல சிந்தனைகள் மாற வேண்டும். அதின் ஆகமங்களை எழுதியவர்கள் நாம் அவற்றை எவ்விதம் புரிந்துகொள்ளவேண்டுமென்று எதிர்பார்த்தார்களோ அல்லது அவர்கள் எப்படிப் புரிந்துகொண்டார்களோ என்று அறிந்து நாமும் புரிந்துகொள்ளவேண்டும். விஞ்ஞான முறையில் திருமறை ஏடுகளை ஆராய்ச்சி செய்வதினால் அதன் அழியா உண்மைகள் அழிந்துவிடுவதில்லை. திருமறை பரவெளி யுகத்திற்கும் நற்செய்தி தரும் நூல். அறிவு படைத்தவர்களும், அறிவுக்குப் பங்கமின்றித் திருமறையின் உண்மையை ஏற்றுக்கொள்ளலாம்; திருமறையின் ஏதோ சில பாகங்கள் கதைப்போங்கானவை என்ற அறிவினால் நமது விசுவாசம் அழிந்துவிடுவதில்லை எனக் காண்பிப்பது இந்நூலின் நோக்கமாகும்.

சிறப்பாகப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் திருமறைப் பாடம் கற்பிக்கின்றவர்களுக்கு இந்நூல் ஒரு துணையாகும். கற்பிக்கும்போதும் கேட்கும்போதும் எழும் பல கேள்விகளில் சிலவற்றிற்காயினும் இதில் பதில்கள் இருக்கின்றன என்பதும், பலவற்றிற்குப் பதில் காண இது அனுகூலமாகும் என்பதும் எமது நம்பிக்கை.

மேலும் இறையியற் கல்லூரியில் பிரவேசிக்கும் முதல் ஆண்டு மாணவரையும் மனத்திற்கொண்டு இந்நூல் எழுதப்பட்டுள்ளது. ஏனெனில், இவர்கள் திருமறையைப்பற்றிய சில அரைகுறையான சிந்தனைகளோடு வருகின்றனர். அவர்களுக்குத் திருமறைபற்றிய ஓர் அறிமுக நூலாக இது அமைகின்றது. ஏனெனில், இறையியல் கல்வியின் முதல் ஆண்டில்

ஐஞ்சுருள் (திருமறையின் முதல் ஐந்து நூல்கள்) மோசேயினல் எழுதப்படவில்லை, யோபின் நூல் ஒரு சிறந்த நாடகம், சங்கீதங்களில் சில தாவீது அரசன் இயற்றினவைகளல்ல, நற்செய்தி நூல்களில் புனித மார்க்கு முதலில் எழுதப்பட்டது என்பது போன்ற கூற்றுகளைக் கேட்டவுடன் அவர்களுக்கு அதிர்ச்சி ஏற்படலாம். இவ்வதிர்ச்சி அவிசுவாசத்திற்கு அனுகூலமாயிராமல் ஆழமான விசுவாசத்திற்கு வழிநடத்தப்பட இந்நூல் பேருதவியாயிருக்கும் என்பது எமது நோக்கம்.

இவை தவிர கல்வி கற்ற கிறிஸ்தவர்கள் பலர் திருமறையை ஊன்றிப் படிக்குங்கால் சிக்கல்கள் பல அவர்களை எதிரிடுகின்றன. ஆதியாகமத்தின் படைப்பு வரலாறு, யுத்தங்களில் கடவுள் பழிவாங்குதல், பழிக்கும் பல சங்கீதங்கள் போன்றவை பிரச்சினைகளை எழுப்புகின்றன. திருமறைபற்றிய பரம்பரையான கருத்துக்கள் இவைகளுக்குத் திருப்திகரமான பதிலளிப்பதில்லை. எனவே, இவ்வகையினருக்கும் இந்நூல் பயன் தரும்.

தமிழ்க் கிறிஸ்தவர்கள் பலர் திருமறை தவிர அதனை ஒட்டிய இதர நூல்களைப் படிப்பது மிகவும் குறைவு. ஏதோ சில பத்திரிகைகளையும் மாதாந்தர வெளியீடுகளையும் ஒரு சிலர் வாசிக்கக்கூடும். இவைகளும் பெரும்பாலும் பரம்பரையான கருத்துக்களின் அடிப்படையில் எழுதப்படுகின்றனவையாம். எனவே, தமிழ்க் கிறிஸ்தவர்கள் பயனுள்ள நூல்களைப் பயிலவும் இந்நூல் அனுகூலமாக இருக்கும்.

நூலின் அதிர்ச்சி தரக்கூடிய கருத்துக்களை ஆழமான விசுவாசத்துக்கு நேராக வழிநடத்தும்படி பொறுமையாகவும், சிந்தனையோடும் தொடர்பாகப் பயிலவேண்டும். இதுபோன்ற நூல்கள் பலவற்றை ஆங்கிலத்தில் முதலில் பயின்றபோது அதிர்ச்சியடைந்தவர்களில் நானும் ஒருவன். ஆனல், புதிய ஆழமான அடிப்படைகளில் விசுவாசம் அமைவதற்கு இந்த அதிர்ச்சி தேவையாயிருந்தது. எனவே, இந்நூலைப் பயிலுவோரும் தங்களது விசுவாசம் உறுதியான அடிப்படைகளில் அமைவதற்கு இவ்வறிவினை உபயோகிப்பார்கள் என்று நம்புகிறேம்.

### நூலின் அமைப்பு

இந்நூல் ஐந்து பாகங்களாக அமைந்துள்ளது. முதற் பாகத்தில் திருமறைபற்றிய சில முக்கியமான பிரச்சினைகளைச்

சிந்திப்போம். இரண்டாம் பாகத்தில் திருமறையின் வரலாறு, அதின் இலக்கியங்களின் தன்மை ஆகியவை அடங்கியிருக்கின்றன. மூன்றும் பாகத்தில் திருமறையின் பொருளடக்கம் விரிவாகத் தரப்படுகின்றது. இறைவனின் மீட்பின் திட்டம் எவ்வாறு பல பருவங்கள் மூலமாக நிறைவேறுகின்றது என்று இப்பாகத்தில் காண்பிக்கப்படுகின்றது. இறைவனின் மீட்பு அனைத்துலகுக்குமுரியது என்ற அடிப்படையில் இப்பாகம் எழுதப்பட்டுள்ளது. நான்காம் பாகத்தில் முதல் மூன்று பாகங்களிலும் புதிய கோணத்தில் திருமறையினைப் படிக்க முயற்சித்ததினால் ஏற்பட்டிருக்கும் புத்தறிவு தரப்படுகின்றது. இப்பாகத்தில் தூய ஆவியரால் ஏவப்படுதல், இறைவழி வெளிப்பாடு, திருமறையின் சிறப்பு, அதன் ஒருமைப்பாடு, அதிகாரம், திருமறையும் திருச்சபையும் ஆகிய பொருட்கள் ஆராயப்படுகின்றன. நூலின் இறுதிப் பாகம் திருமறை விளக்கப்பணியில் பயன்தரும் நோக்குடன் எழுதப்பட்டுள்ளது. 'இறையியல் கோணத்தில் திருமறையினை விளக்குதல் இப்பாகத்தில் இடம் பெற்றுள்ளது. இறுதியில் நம் காலத்துக்குத் திருமறையின் செய்தி யாது என்று கூறப்பட்டுள்ளது.

பாகம் 1

# சில பிரச்சினைகள்

# திருமறையும் புதைபொருள் ஆராய்ச்சியும்

**ப**த்தொன்பதாம் நூற்றுண்டின் பின் பாகம்முதல் புதை பொருள் ஆராய்ச்சி ஒரு சிறப்புத் துறையாகிவிட்டது. அழிந்து கிடந்த பல நாகரீகங்களின் சின்னங்களைத் தோண்டி எடுத்து அவற்றினை ஆராய்ச்சி செய்வதனுல் அநேக உண்மைகள் புலனுகின்றன.

திருமறையைச் செவ்வனே புரிந்துகொள்ளுவதற்கு அதன் வரலாறு, அதன் மக்களின் கலாச்சாரம், சமூக நிலை, அவர் களைச்சூழவாழ்ந்த மக்களின் சமூக,சமய நிலைஆகியவைபற்றிய அறிவு இன்றியமையாதது. புதைபொருள் ஆராய்ச்சியின் மூலம் இவைகளைப்பற்றிய அநேக உண்மைகள் உறுதி செய்யப் படுகின்றன. திருமறையின் பல நிகழ்ச்சிகளையும், கருத்துக் களையும், கால அமைப்பையும் புரிந்துகொள்ள இவை பெரிதும் துணை நிற்கின்றன.

புதைபொருள் ஆராய்ச்சியின் வரையறை (Limitations)

மொசெப்பெத்தோமியா, எகிப்து, பலஸ்தீனு ஆகிய நாடு களில் தோண்டி எடுத்த புதைபொருள்களைப்பற்றிய ஆராய்ச்சியின் பலனுக திருமறை சம்பந்தப்பட்ட செய்திகள் பல கிடைத்துள்ளன. ஆராயப்படும் பொருள்கள், மக்கள் உபயோகித்த பாத்திரங்கள், கட்டடங்கள், கல்வெட்டுகள், களிமண் பலகை எழுத்துக்கள் போன்றனவாகும். புதை பொருள் தோண்டுகிறவர்கள் திருமறையில் காணும் சில இடங்களையும், பொருட்களையும், பெயர்களையும் கண்டுபிடித் திருக்கின்றனர் என்பது உண்மையே. எனினும், அளவுக்கு மிஞ்சி இவற்றினை வற்புறுத்த இடமில்லை.

ஒரு ஜலப்பிரளயம் நிகழ்ந்ததற்குச் சில அடையாளங் களைக் கண்டுபிடித்திருக்கின்றனர். விழுந்துகிடந்த எரிகோ

வின் சுவர்களைத் தோண்டி எடுத்தனர். மெகிதோவின் குதிரை லாயங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இவைகளினுல் திருமறையின் சில சம்பவங்கள் உண்மையானவை என்று உறுதிப்படுகின்றன. எனினும் இவற்றிலிருந்து திருமறையின் மையப்பொருளாகிய கடவுள், மனிதன், உலகம், மீட்பு ஆகியவற்றை நிரூபிக்க இயலாது; எனவே புதைபொருள் ஆராய்ச்சியின் பலன்களுக்கு வரையறை உண்டு.

### வரலாற்று உண்மை உறுதிப்படுகின்றது

அதே வேளையில் புதைபொருள் ஆராய்ச்சி அளிக்கும் பேருதவி ஒன்று உண்டு. திருமறை கூறுகின்றவை பக்தியினுல் எழுதப்பட்ட வெறுங் கட்டுக்கதைகளாம் என்னும் கூற்று உண்மையற்றது என்பதை இது திட்டமாக உறுதிப் படுத்துகின்றது. கிறிஸ்துவுக்குமுன்னர் மூவாயிரம் ஆண்டுகளாகத் தூரக் கிழக்கு நாட்டிலே வாழ்ந்த பல இனத்தவராகிய மக்களில் இஸ்ரவேலர் ஒருவர் என்பதும், அவர்கள் வாழ்ந்த சில இடங்கள், அவர்களது தலைவர்கள் சிலரது பெயர்கள், ஆகியவை இஸ்ரவேலருக்கு அருகில் வாழ்ந்த இதர மக்களின் ஏடுகளிலிருந்து கிடைத்துள்ளன என்பதனை மறுக்க இயலாது.

எனினும், சில இடங்களில் புதைபொருள் கண்டுபிடித்தல், திருமறைக்கு விரோதமாகவும் இருக்கின்றது என்பதையும் மறத்தலாகாது. (உ—ம்) யோசுவா 7,8 அதிகாரங்களில் ஆயி பட்டணத்தின் வீழ்ச்சி விவரிக்கப்படுகின்றது. ஆயியைத் தோண்டி ஆராய்ந்தவர்கள் இந்த இடத்திலிருந்த சிறிய பட்டணம் யோசுவாவுக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே அழிந்துபோயிற்று என்றும், அதன் பின்னர் அது கட்டப்பட வில்லை என்றும் முடிவு செய்துள்ளனர். மேலும் முற்பிதாக் களின் வரலாறு,இஸ்ரவேலரது நாற்பது ஆண்டுகள் வனுந்தரப் பயணம் ஆகியவைபற்றி புறச்சான்றுகள் பெரும்பாலும் கிடைக்கவில்லை. புறச்சான்றுகள் இல்லாதபடியினுல் திரு மறையின் வரலாறுகள் உண்மையற்றவை எனக் கூறவும் இயலாது. இதுவும் புதைபொருள் ஆராய்ச்சியைப் பெருமை யாகக்கூற இடமில்லை என்பதை எடுத்துக்காட்டுகின்றது.

## புதைபொருள் ஆராய்ச்சியின் பிரச்சினைகள்

மேலும் பலஸ்தீனு பாறைகள் நிறைந்த ஒரு நாடு. ஒரே கட்டடத்தில் உபயோகித்த கற்களை அக்கட்டடம் பாழான போது அதனை இடித்து வேறு கட்டடங்களில் உபயோகிக்கும் வழக்கம் இருந்தது. அதனால் பழங்கற்கள், ஆராய்ச்சியினால் சிறப்பான பலனை எய்துவதில்லை. அதே வேளையில் மொசெப்பெத்தோமியாவில் இதே முறையில் செங்கல்களை உபயோகித்துள்ளனர். செங்கல் ஆராய்ச்சி பலனுள்ளது. ஏனெனில் அவற்றின் பழமையிலிருந்து காலத்தைக் கணக்கிடு வது எளிதாகும்.

இஸ்ரவேலர் எளிய மக்கள். சிற்பக்கலை இஸ்ரவேலில் வளர்ச்சி அடையவில்லை. சிலைகளும், மிகுதியான அலங்கரிப்பு களும் அவர்களது சமயத்தால் தடை செய்யப்பட்டன. ஆகை யால் புறச்சான்றுகள் கிடைப்பது கடினமே. இஸ்ரவேலர் எகிப்திலிருந்து விடுதலை அடைந்தது அந்நாட்டு ஏடுகளில் கூறப்படவில்லை. ஏனெனில் அரசர்கள் தங்கள் தோல்விகளை மிகைப்படுத்தாமல் தங்கள் வெற்றிகளையே உயர்வாக எழுதி வைத்தனர். இவற்றை நோக்குங்கால், புதைபொருள் ஆராய்ச்சியில் பிரச்சினைகள் பல இருக்கின்றன என்று அறிகின்றோம்.

## மத்தியக் கிழக்கில் புதைபொருள்

இஸ்ரவேலின் அரசியல், பொருளாதாரம், அன்றாட வாழ்க்கை, அண்டை நாட்டவரின் வாழ்க்கை நிலை ஆகியவை மத்தியக் கிழக்கின் வரலாறுபற்றிய புதைபொருள் ஆராய்ச்சி யிலும் மற்றும் ஏட்டாராய்ச்சியிலும் விளங்குவது முக்கிய மானதே.

திருமறை, அடிப்படையில் வாழ்க்கையைப்பற்றியும் ஒழுக்கத்தைப்பற்றியும் கூறும் நூலாகும். எனவே இத்துறை களில் புதைபொருள் ஆராய்ச்சி தரும் தகவல்கள் முக்கிய மானவை. இஸ்ரவேலரைச் சூழ வாழ்ந்த இதர மக்களின் சமயங்களைப்பற்றிக் கூடுதல் செய்திகள் புதைபொருட்கள் மூலம் கிடைக்குந்தோறும் இஸ்ரவேலரின் சமயம் அவர்களது சமயங்களைவிட மிகவும் சிறப்பான வித்தியாசங்களுடையது என அறிகின்றோம். முழுமையாக ஒப்பிடும்போது பாபிலோ

னிய, எகிப்திய, மோவாபிய, கானானிய சமயங்களைவிட இது சிறந்தது என்பதனை மறுக்க இயலாது. பாபிலோனில் மார்துக், மோவாபில் ஹீமாஷ், கானானில் பாகால், எகிப்தில் அக்நாத்தன் என்ற தெய்வங்களோடு ஒப்பிடும்போது, யாவே என்ற பெயரால் அழைக்கப்பட்ட இஸ்ரயேலரின் இறைவனைப் பற்றிய ஆரம்பக் கருத்துக்கள்கூட அதிவித்தியாசமானவை எனக் கூறலாம்.

### கலாச்சார கடன்பாடு

எனினும் பிறிதொரு உண்மையினையும் இங்கே கூறவேண்டும். அதாவது கலாச்சார காரியங்களில் இஸ்ரயேலர் தங்கள் அண்டை மக்களிடமிருந்து பல அம்சங்களை எடுத்துக்கொண்டனர் என்பது புதைபொருள் ஆராய்ச்சி தரும் செய்தி. இத்துறையில் எகிப்திய செல்வாக்கு மிகவும் குறைவு என ஆராய்ச்சியாளர் பலர் கருதுகின்றனர். எனினும் யோசேப்பின் வரலாற்றோடு இரண்டு சகோதரர்கள் பற்றிய ஒரு எகிப்திய கதையையும், 104ம் சங்கீதத்தோடு எகிப்திய அக்நாத்தானின் பாடல் ஒன்றையும், நீதிமொழிகள் நூலின் உபதேசத்தோடு எகிப்திய அமென்யெமோப்பின் போதகத்தையும் ஒப்பிடுங்கால், இவை தொடர்புடையனபோல் தோன்றுகின்றன.

### பாபிலோனிய ஒற்றுமை வேற்றுமைகள்

கி.மு. எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு பாபிலோனிய படத்தில் ஆதியாகமம் முதல் அதிகாரத்தில் அண்டத்தைப் பற்றித் தரப்படும் சித்திரம் ஒன்றிருக்கின்றது. தூண்களின்மேல் நிற்கும் தட்டையான பூமி, மேலே வளைந்த ஒரு திரை, அதிலே சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் பொருத்தப்பட்டிருத்தல், பூமிக்கு மேலேயும் கீழேயும் திரளான தண்ணீர் முதலியன இச்சித்திரத்தில் காணக்கிடக்கின்றன. செமித்திய மக்களிடையே (Semites) இது மிகுந்து காணப்பட்டது. சுமேரியாவில் கண்டுபிடிக்கப்பட்ட சுமார் கி.மு. இரண்டாயிரம் ஆண்டில் எழுதப்பட்ட களிமண் பலகை ஒன்றில் இதுபோன்ற ஒரு படைப்புக் கதை இருக்கின்றது. கி.மு. ஏழாம் நூற்றாண்டில் நினிவேயில் ஆஷுர் பானிபால் (Ashur Banipal) என்பவரின் நூல் நிலையத்தில் பாதுகாக்கப்

பட்ட கில்கமெஷ் (*Gilgamesh*) காவியம் என்ற பாபிலோனிய ஏட்டில், எயா (Ea) என்னும் தெய்வம் பக்தியுள்ள உட்னு பிஷ்டிம் (Utnapishtim) என்பாரிடம் வரப்போகும் தண்ணீர்ப் பிரளயத்தின் அழிவிலிருந்து (deluge) விடுதலை அடையும் முறையைக் கூறினதாக எழுதியிருக்கின்றது. அதில் தரப் படும் பேழையின் நீளம், பறவையை வெளியே விட்டுப் பார்ப்பது, நிசிர் மலையுச்சியின்மேல் பேழை தங்குவது போன்றவை திருமறை தண்ணீர்ப் பிரளய வரலாற்றின் சில பாகங்களை ஒத்திருக்கின்றன. இந்தப் பாபிலோனியக் கதை ஆதியாகமத்தில் இப்பாகத்தைவிட அநேக நூற்றூண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்டதாகும்.

கி.மு. *18*ம் நூற்றூண்டில் வாழ்ந்த பாபிலோனியனை ஹமுரபி (Hammurabi)யின் சட்டங்கள் கண்டுபிடிக்கப்பட்டு இலண்டனில் பிரித்தானிய பொருட்காட்சிச்சாலையில் (British Museum) வைக்கப்பட்டிருக்கின்றன. உபாகமத்தில் தரப் படும் யூத சட்டங்கள் இதற்குப் பல நூற்றூண்டுகளுக்குப் பின்னர் எழுதப்பட்டவை. இவற்றில் பல பாகங்கள் ஒத்திருக்கின்றன.

இவற்றிலிருந்து விளங்கும் உண்மை என்னவெனில், ஏற் கெனவே நிலவிய சில மூலங்களிலிருந்து பாபிலோனியரும் எபிரேயரும் தங்கள் சட்டங்களில் பலவற்றை எடுத்துக் கொண்டனர். ஆனால் அவற்றைத் தங்களது சமய அடிப்படை யில் எபிரேயர் அவற்றை ஆக்கி எழுதினர் என்பது மிகவும் முக்கியமாகும். இதனல் ஒற்றுமைகளைவிட, சிறப்பாக வேற்றுமைகளே அதிகம் என்பது உண்மையாகும். (உ—ம்) படைப்புப்பற்றிய ஆதியாகமத்தின் கதை பாபிலோனிய கதை யைத் தழுவி எழுதப்பட்டது என்பது ஆராய்ச்சியாளர்களின் முடிவு. ஆனல் பாபிலோனியக் கதை பல தெய்வ வணக் கத்தை (Polytheism) அடிப்படையாகக் கொண்டது. எபிரேயக் கதையில் இது முற்றிலும் அகற்றப்பட்டு, யாவே என்னும் ஒப்பற்ற வல்லமையுள்ள இறைவன் அடிப்படையாக அமைந்திருக்கின்றூர். இது ஒப்பற்ற ஒரு முக்கிய வித்தியாச மாகும். ஆகவே புதைபொருள் ஆராய்ச்சியின் பலனைக் கொண்டு திருமறையின் உண்மையை உறுதிப்படுத்தும்போது

எபிரேய மக்கள் தங்கள் அண்டை அயலாருக்கும் கடமைப் பட்டவர்கள் என்பதனை இவ்வாராய்ச்சி சுட்டிக் காட்டுகிறது.

### புதைபொருள் ஆராய்ச்சியின் சில எடுத்துக்காட்டுகள்

ஆதியாகமத்தில் முற்பிதாக்கள் பல இடங்களுக்கு அலைந்து திரிந்ததாகக் கூறப்பட்டிருக்கின்றது. இந்த இடங்களில் தேராகு, நாகூர், சேரா என்னும் பெயர்கள் மொசெப்பொத் தோமிய வியாபாரிகளின் குடியேற்றக் கிராமம் ஒன்றில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இந்த இடங்களில் கிராமங்களை உரு வாக்கி மக்களைக் குடியேற்றி ஆட்கள் பெயரால் அந்த இடங்களுக்குப் பெயர் சூட்டியிருக்கலாம் என்று கருதப்படு கிறது.

எகிப்திய எல் அமர்னு (El Amarna) களிமண் பலகைகளில் கபீரு (Habiru) என்ற பெயருள்ள மக்கள் அங்கு வந்து குடியேறினதாகக் கூறப்பட்டிருக்கின்றது. கபீரு (Habiru) என்றது, எபிரேயர்களை (Hebrew) குறிக்கலாம். இஸ்ரவேல ரது பலஸ்தீனு முற்றுகையில் சம்பந்தப்பட்ட பெத்தேல், கீரியாத்சேபேர் ஆகிய இடங்கள் கி.மு. பதிமூன்றும் நூற் றுண்டில் அழிந்து கிடந்ததாகவும் கிபியா, சீலோ ஆகியவை அதே காலத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டதாகவும் கண்டு பிடித்துள்ளனர்.

1 இரா. *14:21–26* வரை; 2 நாளா. *12:2–9* வரை, ஆகிய இடங்களில் எகிப்திய அரசனுன ஷீஷாக் ரெகோபெயாமின் காலத்தில் யூதாவைக் கொள்ளையிட்டதைப்பற்றிய மிகவும் சுருக்கமான ஓர் அறிக்கை காணக் கிடக்கின்றது. ஆனுல் எகிப்தில் கார்னுக் (Karnah) என்ற இடத்தில் கண்டுபிடிக்கப் பட்டிருக்கும் கல்வெட்டில் இந்தப் படையெடுப்புப்பற்றிக் கூடுதல் விவரங்கள் அறியக் கிடக்கின்றன. பலஸ்தீனுவில் டெல் பெய்ட் மிர்சிம் (Tell Beit Mirsim)=தெபீர் (Debir), டெல் எர்ருமெயிலா (Tel er-Rumileh)=பெத்ஷெமெஷ், மெகிதோ ஆகிய இடங்களில் தோண்டினவர்கள், ஷீஷாக் படையெடுத்த காலத்தில் இந்த இடங்கள் அழிக்கப்பட்ட தாகத் தெளிவுபடுத்தியிருக்கின்றனர்.

சமீப காலத்தில் சமாரியாவைத் தோண்டினபோது ஆகாப் அரசன் காலத்து கலாச்சார சிறப்புகள் பல கண்டுபிடிக்கப்

பட்டுள்ளன. அவ்வாறே மெகிதோ, எசியோன் கேபர் (Ezion Geber) ஆகிய இடங்களில் தோண்டியபோது சாலொமோனின் அரசு, செல்வம் இவைகளைப்பற்றிக் கூறிய பல விவரங்கள் உண்மையானவை என்று கண்டுபிடித்திருக்கின்றனர். எனவே, திருமறைக் கூறுவதைவிடவும் பலஸ்தீனு கலாச்சாரத்திலும், செழிப்பிலும், செல்வாக்கிலும் உயர்வுற்றிருந்ததாகப் புதை பொருள் ஆராய்ச்சி விளக்குகின்றது எனலாம்.

மேலும், இஸ்ரவேலரது பாபிலோனியச் சிறையிருப்பை உறுதிப்படுத்தும் அத்தாட்சிகள் பல கிடைத்துள்ளன. கி.மு. 7ம் நூற்றுண்டில் அழிக்கப்பட்ட அநேக யூதேயா நாட்டுப் பட்டணங்களைத் தோண்டிக் கண்டுபிடித்திருக்கின்றனர். இவைகள் கி.மு. 7ம் நூற்றுண்டில், அதாவது இஸ்ரவேலர் சிறைபிடித்துக் கொண்டுபோகப்பட்ட காலத்தில் அழிக்கப் பட்டுச் சில இடங்கள் அதன் பின்னர் திரும்ப கட்டப் படவில்லை. வேறு சில இடங்கள் பல்லாண்டுகளுக்குப் பின்னர் திரும்பவும் குடியேற்றமடைந்தன. கி.மு. 6ம் நூற்றுண்டில் பலஸ்தீனுவில் மக்கட் தொகை மிகக் குறைவாக இருந்ததாக வும் கண்டுபிடித்திருக்கின்றனர். மக்கள் பாபிலோனுக்குச் சிறை கொண்டுபோகப்பட்டதே இதற்குக் காரணமாகும்.

நீல நதி தீரத்தில் கி.பி. முதல் நூற்றுண்டில் வாழ்ந்த மக்களின் இலக்கியங்கள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. புனிதர் பவுலின் காலத்துக் கிரேக்க உரோமை உலகத்தின் சமூகம், வாணிபம்பற்றிய பல உண்மைகள் இவைகளில் அறியக்கிடக்கின்றன. இந்த எகிப்து நாட்டு யூத மக்களின் இலக்கியத்தில் திருமறையின் சில பாகங்களின் மூல மொழி ஏடுகள் கிடைத்துள்ளன. யாத். 20:2 முதல் உபா. 5:6 வரை யிலும், உபா. 6:4 முதல் சில வசனங்களும் கிடைத்துள்ளன. இது கி.மு. அல்லது கி.பி. முதலாம் நூற்றுண்டில் எழுதப் பட்டது என்பது ஆராய்ச்சியாளரின் கருத்து. இவை தவிர வேறு அநேக உண்மைகளையும் புதைபொருள் ஆராய்ச்சியின் மூலம் உறுதிப்படுத்தலாம்.

## முடிவுரை

மேற்கூறியவற்றிலிருந்து புதைபொருள் ஆராய்ச்சி திருமறை யின் பல நிகழ்ச்சிகளையும், எபிரேய மக்களின் கலாச்சாரத்தின்

பல உண்மைகளையும் உறுதிப்படுத்துகின்றது எனத் திட்டமாக அறிகின்றோம்.

எனினும், புதைபொருள் ஆராய்ச்சியினுல் இஸ்ரவேலரது சமயத்திற்கு விளக்கம் தர இயலாது. இறைவன், மனிதன், உலகம்பற்றிய திருமறை அறிவு உலக வரலாற்றிலேயே சிறப்பு மிக்கது. இது திருமறையின் மக்களது வரலாற்றின் அனுபவங்கள் மூலம் அவர்களுக்கு ஏற்பட்ட ஓர் அறிவாகும். புதைபொருள் ஆராய்ச்சி பழங்கால மக்கள் விட்டுச் சென்ற பொருட்களைப் (the material remains of man's past) படித்து அவற்றிலிருந்து சில உண்மைகளை உறுதிப்படுத்தவோ மறுக்கவோ செய்கின்றது. ஆனுல் இஸ்ரவேலரது சமய உண்மைகள் இறைவனின் வெளிப்படுத்தலிலும் மனிதனின் அனுபவத்திலும் அடிப்படை பெறுகின்றன. எனவே, அவற்றின் உண்மையை மனித அனுபவத்தின் அடிப்படையிலேயே ஏற்றுக்கொள்ளவோ மறுக்கவோ இயலும். இவ்வாறு திறந்த மனதோடே திருமறையை அணுகும் மக்கள் அதின் அடிப்படையான ஆழமான சமய உண்மைகளை ஏற்றுக்கொள்ள புதைபொருள் ஆராய்ச்சியின் பலன்கள் பெரிதும் துணைபுரிகின்றன. இக்காலத்தில் திருமறைக்கும் கிறிஸ்தவ விசுவாசத்திற்கும் விஞ்ஞானம் ஒரு பெருஞ் சவாலாக அமைந்திருக்கின்றது என்று பலர் கருதுகின்றனர். திருமறைபற்றிய உண்மைகளைத் துருவி ஆராயுமுன்னர் இப்பிரச்சினையில் கவனம் செலுத்துவது பயன்தரும்.

# திருமறையும் விஞ்ஞானமும்

திருமறை, விஞ்ஞானத்துக்கு முரண்பாடான நூல் என்ற கருத்து பல மக்களின் உள்ளத்தில் இருக்கின்றது. பகுத்தறிவு உள்ளவர்கள் திருமறையை அல்லது அதின் பல பாகங்களை உண்மை என்று ஏற்றுக்கொள்ள இயலாது என்பது இவர்களது கூற்று. திருமறை கூறும் பல காரியங்கள் தவறானவை என்று விஞ்ஞானம் நிரூபித்துவிட்டதாக இவர்கள் கூறுகின்றனர். மேல் நாட்டில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இவ்விதக் கருத்துக்கள் பிரபலமாயின. ஏகதேசம் ஒரு நூற்றாண்டுகாலமாக விஞ்ஞானத்துக்கும் திருமறைக்குமுள்ள உறவு பிரச்சினையாகக் கருதப்பட்டு விவாதம் நடைபெற்றுவருகின்றது. எனினும், இப்பிரச்சினை பெருமளவில் தவறான அடிப்படைகளில் எழுந்தது என்று இக்காலத்தில் கருதப்படுகின்றது.

### திருமறைபற்றிய பரம்பரையான கருத்து

திருமறை தெய்வீகமான நூல். இது தூய ஆவியின் ஏவுதலால் பிழையின்றி எழுதப்பட்ட நூல். திருமறை கூறுகின்றவை அனைத்தும் உண்மையானவைகள். அவைகளை அப்படியே ஏற்றுக்கொள்ளவேண்டும். கடவுளையும் மனிதனையும்பற்றி மாத்திரமல்ல, உலகத் தோற்றம், புவியியல், பௌதீகம் போன்ற எத்துறைபற்றியும் திருமறை கூறுவன பிழையற்றவை என்று கருதப்பட்டது. ஆரிகன் போன்ற (இரண்டாம் நூற்றாண்டு) அறிஞர்கள் சிலர் உருவக விளக்க முறையை (allegorical interpretation) உபயோகித்தபோதிலும் பொதுவாக, எழுத்தின்படியே மக்கள் திருமறை கூறுகின்றவை உண்மை என்று விசுவாசித்தனர்.

### விஞ்ஞானப் புரட்சி

கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டு முதல் விஞ்ஞானம் மிக விரைவாக வளர்ந்துள்ளது. ஆயினும் மனித வரலாற்றுத்

தொடக்க முதல் விஞ்ஞானம் மக்களால் அறியப்பட்டு உபயோகிக்கப்பட்டு வரப்படுகின்றது. பொதுவாகக் கூறின் விஞ்ஞான முறை என்பது கூர்ந்து ஆராய்தல் (observation), பரிசோதித்துப் பார்த்தல் (experiment), சரியானதா என்று சோதித்துப் பார்த்தல் (verification), ஒரு நியதி உருவாக்குதல் (hypothesis) என்பதாகும். பழங்காலக் கட்டடங்கள், வண்டிச் சக்கரங்கள், வளைவுச் சுவர்கள் (arches) இவைகளைக் கவனிக்கும்போது மக்கள் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே விஞ்ஞான முறையைக் கையாண்டனர் என்பது உறுதி. மனிதன் தனது உணவைக் கண்டுபிடித்ததும், தான் வாழ்வதற்கு இல்லத்தைக் கட்டுவதற்கு முற்பட்டதும் விஞ்ஞான அடிப்படையிலேயே எனலாம். கி.மு. 3000 ஆண்டு எகிப்து, சீனு, கிரேக்கம், இந்தியா ஆகிய நாடுகளில் விஞ்ஞானம் தழைத்திருந்தது. எகிப்தின் பிரமிட் கோபுரங்கள், அத்தேனேயின் பார்திஞன் (Parthenon) என்ற கட்டடம் இதுபோன்ற பல பழைய நாகரீகச் சின்னங்கள் விஞ்ஞானத்தின் தொன்மைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகள்.

எனினும் பதினேழாம் நூற்றாண்டு முதல் விஞ்ஞான முறை பல துறைகளிலும் உபயோகிக்கப்பட்டது. பூமி ஆராய்ச்சி, மருத்துவம், பௌதிகம் போன்ற துறைகளில் விஞ்ஞான முறை வெகுவாக உபயோகிக்கப்பட்டது. பதினெட்டாம் நூற்றாண்டில் விஞ்ஞான வளர்ச்சியின் மூலமாக மாபெரும் தொழிற்புரட்சி மேனாட்டில் ஏற்பட்டது. இவ்வாறு மக்களது சிந்தனையிலும், வாழ்க்கை முறையிலும் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுக்கொண்டிருந்தபோதிலும் திருச்சபை பெரும்பாலும் பரம்பரையான நம்பிக்கைகளையே பற்றிக்கொண்டிருந்தது.

## போராட்டம்

எனினும், விஞ்ஞானத்துக்கும் திருமறைக்குமுள்ள போராட்டம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வலுப்பெற்றது. 1830ம் ஆண்டில் உவ்லியம் பக்லாந்து (William Buckland) என்ற இங்கிலாந்து தேசத்து ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த புவியியல் மேதை *Bride Water Treatise* என்னும் ஒரு நூல் எழுதினர். இதில் பூமி பல மாற்றங்களின் மூலம் இன்றுள்ள நிலை அடைந்

துள்ளது என்றும், மண்ணினடியில் அழிந்து மறைந்துகிடக்கும் காடுகள், உயிரினங்களின் எலும்புக்கூடுகள், பாறைகளின் வயது இவைகளைப் பார்க்கும்போது உலகம் திருமறை கூறு வதைவிட மிகமிகப் பழமையானது என்றும் காண்பித்தார். இதுமுதல் விஞ்ஞானத்துக்கும் கிறிஸ்தவ சமயத்துக்குமிடை யில் போராட்டம் வலுப்பெற்றது எனலாம்.

1859ம் ஆண்டில் இங்கிலாந்தில் சார்ல்ஸ் டார்வின் என்பவர் 'இனங்களின் தோற்றம்' (*Origin of Species*) என்னும் நூலை வெளியிட்டார். இவர் 1829–1831 வரை இங்கிலாந்தில் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் இறையியல் கற்று திருப்பணிக் காக ஆயத்தப்பட்டார். அவர் பிரித்தானிய அரசில், தாவர இயல் நிபுணராக நியமனம்பெற்று, 1831–1836 வரை பீகிள் (Beagle) என்ற பெயருள்ள அரசினரின் கப்பலில் உலகம் முழுவதும் சுற்றிப் பயணம் செய்தார். இப்பயணத்தின்போது அவர் கண்டவை, நடத்திய ஆராய்ச்சிகள் ஆகியவற்றிலிருந்து இயற்கையின் உயிரினங்கள் நிரந்தரமாக ஒரே நிலையி லிருப்பவையல்ல என்ற முடிவுக்கு வந்து பரிணமக் கொள்கையை விரிவாக எழுதினர். மேற்கூறிய நூலில் பரிணம வாதத்தைப் பலவிதமான ஆதாரங்களுடன் எழுதினர். இதன் படி உயிரினங்கள் மிகவும் சிறிய உயிரினங்களிலிருந்து மாற்ற மும் விருத்தியும் அடைந்து பரிணமித்து இப்போதிருக்கும் நிலையை அடைந்துள்ளன. மனிதனும் இதர விலங்கினங்களி லிருந்து பல இலட்சக்கணக்கான ஆண்டுகளின் இனவிருத்தி யின் பலனாக இந்நிலை அடைந்துள்ளான் என்றும் டார்வின் எழுதினர். டார்வினுக்கு முன்னர் இப்பொருள்பற்றி பலர் எழுதியுள்ளனர். வரலாற்றுப்படி பண்டை கிரேக்கத் தத்துவ அறிஞர்களும் பரிணமம்பற்றி எழுதியுள்ளனர்.

பரிணமக் கருத்துக்கள் மக்களிடையில் பரவத் தொடங்கின போது திருமறையின் பல கூற்றுகளையும் இவை மறுக்கின்றன என்று திருச்சபைத் தலைவர்கள் பலர் கருதி எதிர்வாதத்தில் ஈடுபட்டனர். சிறப்பாக ஆதியாகமத்தின் ஆரம்ப அதிகாரங் களில் தரப்படும் படைப்பின் வரலாறு, பிரளயம், பாபேல் கோபுரம் போன்றவைகள் உண்மையற்றவைபோல் மக்கள் எண்ணும் ஆபத்து ஏற்பட்டது.

### பரிணாமமும் படைப்பும்

விஞ்ஞானம் கூறும் பரிணாமத்திற்கும் திருமறை தரும் படைப்பின் வரலாற்றிற்குமுள்ள தொடர்பு என்ன என்று இங்கே கூறுவது நலம்.

ஆதியாகமத்தின் ஆரம்ப அதிகாரங்களில் படைப்பின் வரலாறு தரப்படுகின்றது. இது ஒரு வரலாற்று நிகழ்ச்சியின் அறிக்கை என பல நூற்றாண்டுகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இறைவன் ஆறு நாட்களில் அகிலத்தைப் படைத்துப் பூமிக்கு வடிவம் நல்கி வானத்தில் சூரியன், சந்திரன் இதர கிரகங்களை வைத்தார்; பின்னர் பறவைகளும், மிருகங்களும் இறுதியில் மனிதரும் படைக்கப்பட்டனர். அண்ட சராசரத்தின் நடுப் பகுதி உலகம் என்றும், சூரியன் தினந்தோறும் பூமிக்கு ஒரு பக்கமிருந்து தோன்றி அதன் மறு பக்கத்தில் மறைந்தது என்றும் பழைய ஏற்பாட்டு ஆசிரியர் பலர் நம்பினர்.

எனினும், சென்ற சில நூற்றாண்டுகள் ஆராய்ச்சியின் பலனாக பூமி அகிலத்தின் நடுவன்று என்றும், இது சூரியனைச் சுற்றிச் செல்லும் கிரகங்களில் ஒன்று எனவும் அறிகின்றோம். மேலும் அகிலமும் அதில் ஒன்றாகிய மக்கள் வாழும் உலகமும் அதிகப் பழமைமிக்கவை எனவும் அறிகின்றோம். இவற்றின் தோற்றம் பல இலட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் நிகழ்ந்திருக்கவேண்டும் எனவும் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். டார்வின் ஆராய்ச்சியின்படி பல இலட்சக்கணக்கான ஆண்டுகளின் இனவிருத்தியின் பலனாக மனிதன் தோன்றினான் என்று கூறப்படுகின்றது என மேலே கூறியுள்ளோம். கண்களுக்குப் புலனாகாத அற்பமான உயிரினங்களிலிருந்து படிப்படியாக மாறி மாறி இந்நிலையை மனிதன் அடைந்தான் எனவும், இதற்கு முந்திய நிலை குரங்கு நிலை எனவும் அவர் கூறினார்.

இக்கூற்று திருமறையின் ஆரம்ப அதிகாரங்களுக்கு முரணாகத் தோன்றினபடியால் பல செயற்கையான முறைகளைக் கையாண்டு இரண்டையும் பொருத்துவதற்குச் சிலர் முயற்சிக்கின்றனர். படைப்பின் ஆறு நாட்களும் பரிணாமத்தின் (evolution) ஆறு பருவங்களைக் குறிக்கின்றன என்றும், ஒவ்வொரு பருவமும் பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளையுடைய

தென்றும் இவர்கள் கூறுகின்றனர். இம்முறை சிலருக்குத் திருப்தி அளிக்கின்றது. எனினும், நூலின் ஆக்கியோன் தாம் எழுதியவற்றை மக்கள் எவ்வாறு புரிந்துகொள்ளவேண்டுமென்ற நோக்கத்தோடு எழுதியிருப்பாரோ அவ்வாறே புரிந்துகொள்ள நாம் முயற்சிக்கவேண்டும். இவ்விதம் முயலும்போது ஆக்கியோன் விளக்கும் அழியாத உண்மைகளை அறியவேண்டுமேயன்றி அவர் கூறிய நுண்ணிய விவரங்கள் விஞ்ஞானத்திற்குப் பொருத்தமானவைதானு என்று வீணுகக் கேளாமலிருப்பதே நலம்.

ஆதியாகமப் படைப்பின் வரலாற்றின் நடு உண்மையாதெனில், இவ்வுலகம் வெறுமையிலிருந்து இறைவனுல் படைக்கப்பட்டு அவருக்கே சொந்தமானது என்பதாகும். கடவுளுக்கு வெளியே படைப்பின் சக்தி வேறொன்றுமில்லை. படைப்பின் வரலாற்றில் முக்கிய இடம் கடவுளுக்குரியது. அவர் படைப்புக்கு முன்னிருந்தவர்; தமது சித்தப்படி எல்லாவற்றையும் படைத்து அமைக்கிறுர். உலகமும் அவரும் ஒன்றல்லர். இந்த உண்மையையும் இதனடியில் எழும் இதர சில சத்தியங்களையும் விளக்குவதற்காக, தாம் எழுதிய காலத்தில் உலகைப்பற்றி நிலவிய பௌதீகக் கருத்துக்களைத் துணைகொண்டு ஆக்கியோன் எழுதினுர். உலகைப்பற்றிய பௌதீக கருத்துக்கள் தவறுனவை என நிரூபித்துவிட்டால் அவை கூறும் ஆழமான உண்மைகளும் தவறுனவை என்று பொருளாகாது. நடு உண்மை அழியா உண்மையாகும். அதனை விளக்கும்போது அக்காலத்தில் உலகைப்பற்றி நிலவிய பௌதீகக் கருத்துக்களைத் துணைகொண்டு போதித்தனர்.

ஆறு நாட்களில் இறைவன் அனைத்தையும் படைத்தார் என்ற கூற்று எபிரேய மக்களுக்குத் திருப்தி அளித்ததுபோல பரிணுமக் கொள்கை தற்காலம் பலருக்குப் பொருத்தமாகத் தோன்றுகிறது. கிறிஸ்தவப் பெரியோர் பலர், கடவுள் பரிணும முறையின்மூலம் அனைத்தையும் படைத்திருக்கலாம் (creation through evolution) எனவும் கருதுகின்றனர். காலம் செல்லுங்கால் பரிணுமக் கொள்கையைவிட அதிகத் திருப்தியளிக்கும் பிறிதொரு கொள்கை தோன்றும் வாய்ப்பு இல்லையெனவும் கூற இயலாது. அவ்விதக் கொள்கை ஒன்று தோன்றும்போது அதனையும் ஏற்றுக்கொண்டு, அதே வேளையில்

படைப்பையும் மறுக்காதிருக்க இயலலாம். இவ்விதம் விஞ்ஞானக் கருத்துக்கள் எவ்வளவுதான் மாறினாலும் அனைத்தையும் படைக்கிறவர் கடவுளே என்ற அடிப்படை உண்மை ஒருக்காலும் மாறாது. ஆகவே, பரிணாமக் கொள்கையினால் நமது விசுவாசம் பலம் அடைந்தாலும் பலவீனமடையலாகாது.

### வரலாற்று உலகில் போராட்டம்

மேலும், பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே அறிஞர்கள் பழங்கால ஏடுகளை விஞ்ஞான முறையில் ஆராய்ச்சி செய்வதுபோல் திருமறையின் நூல்களையும் ஆராய்ச்சி செய்ய முனைந்தனர். இதன்படி, பல பழங்கால நூல்கள் ஆரம்பத்தில் வாய்மொழிப் பாரம்பரியங்களாக இருந்தன; நாள் செல்லச்செல்ல இவை வளர்ந்து, பெரிதாகி, பிந்திய காலத்தில் எழுதப்பட்டன. ஆகவே, வரலாற்று ஏடுகளை ஆராய்ச்சி செய்யும்போது உண்மையாக நடந்த சம்பவம் எது, கற்பனை, அற்புதம் எவை என்று கண்டுபிடிக்க வேண்டும் என்றனர். இவ்வாறு திருமறை ஏடுகளை ஆராய்ச்சி செய்த பலர், திருமறையின் வரலாறு தனி வரலாறு மாத்திரமல்ல, அதின் பல பாகங்கள் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு விரித்து எழுதப்பட்டவை எனவும், அற்புதங்கள் வரலாற்று நிகழ்ச்சிகளல்ல என்றும் கூறினர். திருச்சபைத் தலைவர்கள் பலர் இந்தத் திறனாய்வு இயக்கத்தை வன்மையாக எதிர்த்து, தங்களது கருத்தின்படி திருமறையின் உண்மை என்று கருதினதைப் பாதுகாக்க முயற்சி செய்து, இவ்விதக் கருத்துக்களை எதிர்த்துப் பேசவும் எழுதவும் முற்பட்டனர்.

திறனாய்வின் பலனாகத் திருமறையின் முதல் ஐந்து நூல்களும் மோசேயினால் எழுதப்பட்டவையல்ல; அவை பல காலங்களில் எழுதப்பட்ட நூல்களைப் பல வரலாற்றுக் கட்டங்களில் இணைத்து எழுதப்பட்ட நகல்கள் என்று கண்டுபிடித்தனர். இவற்றில் முக்கியமாக நான்கு தனிப் பத்திரங்கள் (originally separate documents) இருக்கின்றன. அவற்றின் ஆக்கியோர் பெயர் அறியாதபடியால் J, E, D, P என்று ஆங்கிலத்தில் பெயர் தரப்படுகின்றது. இவற்றில் உபாகமம் (Deuteronomy) முழுவதும் D என்பவரால் எழுதப்பட்டது.

பிறிதொரு பாகத்திற்கு P (Priest) என்பது பெயர். ஏனெனில் இப்பாகம் பெருமளவில் பிரமாணங்கள், பலிகள்பற்றி யாத்திராகமம், லேவியராகமம், ஆதியாகமத்தில் கூறப் பெற்ற சில பாகங்களைக் கொண்டது. சடங்காச்சாரங்கள், எண்கள், அளவுகள், புள்ளி விவரங்கள், வம்ச வரலாறுகள் இதைச் சேர்ந்தவை. மற்றொரு பாகம் இறைவனுக்கு ஏலோகீம் என்ற (Elohim) எபிரேயச் சொல்லை உபயோகிக்கின்றபடியால் E என்று பெயர். நான்காவது ஒரு பாகம் இறைவனுக்கு யாவே அல்லது Jehovah என்ற பெயரை உபயோகிக்கிறபடியால் J என்றழைக்கப்படுகின்றது.

ஆராய்ச்சியாளர்கள், J ஒன்பதாம் நூற்றாண்டிலும், E எட்டாம் நூற்றாண்டிலும் எழுதப்பட்டு, D ஏழாம் நூற்றாண்டிலும், P ஐந்தாம் நூற்றாண்டிலும் எழுதப்பட்டு, பின் நெகேமியாவின் காலத்தில் (கி.மு. 444) ஒன்றாக இணைக்கப்பட்டு இப்போதிருக்கும் நிலை அடைந்தன என்கின்றனர்.

இப்படியே விஞ்ஞான முறையில் திருமறையின் இதர நூல்களையும் அவற்றின் அமைப்பையும் பல அறிஞர்கள் அணுகினர். புதிய ஏற்பாட்டிலும் நற்செய்தி நூல்கள் முதலில் வாய்மொழிப் பாரம்பரியமாகச் சில ஆண்டுகள் நிலவிய பின்னரே எழுதப்பட்டன என்றும் இவை எழுதப்படும் முன்னர் இயேசுவின் உபதேசங்கள், உவமைகள் கொண்ட சிறிய நூல்கள் உருவெடுத்தன என்றும், அவற்றிலிருந்து முதலில் மார்க்குவும் பின்னர் மத்தேயுவும், லூக்காவும் பல்லாண்டுகளுக்குப் பின்னர் யோவானும் தனிப்பட்ட கோணங்களிலிருந்து எழுதினர் என்றும் ஆராய்ச்சியாளர் கூறினர். நிருபங்கள் பல மிகவும் பிந்திய காலத்தில் எழுதப்பட்டன என்றும் அவற்றில் சிலவற்றின் உண்மை ஆசிரியர் யார் என்பது பிரச்சினைக்குரியது எனவும் கூறினர்.

நற்செய்தி நூல்கள் எழுதப்படுவதற்கு முன்னர் கி.பி. 50 முதல் கி.பி. 60க்கு உட்பட்ட காலத்தில் பவுலடியாரின் கடிதங்கள் எழுதப்பட்டன. எனவே, புதிய ஏற்பாட்டின் நூல்களும் அவை எழுதப்பட்ட கால முறைப்படி அமைக்கப் படவில்லை என்பது குறிப்பிடத்தகும். பவுலடியாரின் கடிதங்களில் கலாத்தியர், தெசலோனிக்கேயர் ஆகியவை முதலில் எழுதப்பட்டவை என்றும்; ரோமர், கொலோசேயர் போன்

றவை பிந்தி எழுதப்பட்டவை என்றும் அகச்சான்றுகளிலிருந்து ஆராய்ச்சியாளர்கள் முடிவு செய்துள்ளனர். எஞ்சிய புதிய ஏற்பாட்டு நிருபங்களின் சிலவற்றின் ஆசிரியர்கள் காலம்பற்றி, அறிஞர்களிடையில் கருத்து வேற்றுமைகள் நிலவுகின்றன.

விஞ்ஞான முறையில் புதிய ஏற்பாட்டை ஆராய்ச்சி செய்த தன் முக்கிய பலன், நற்செய்தி நூல்களைப்பற்றிக் கிடைக்கும் தகவல்கள் ஆகும். ஏனெனில், நற்செய்தி நூல்களில் வெறும் சரித்திர அறிக்கை மாத்திரமல்ல நூலாசிரியர்களின் நோக்கும் கருத்தும் இசைவாக இடம் பெற்றிருக்கின்றன எனக் கண்டு பிடித்துள்ளனர். மார்க்கு முதலில் எழுதப்பட்டது என்பதி லிருந்து அதிக வரலாற்று வாய்மை இதிலிருக்கின்றது என்பது உறுதி. மத்தேயுவில் மார்க்குவைவிடக் கூடுதல் விபரங்களும் நிகழ்ச்சிகளும் தரப்படுகின்றன. யோவானில் சம்பவங்களைக் குறைத்து ஆராய்ச்சியும் அறிவுரைகளும் மிகுதியாய்த் தரப்படு கின்றன. இவ்வித வித்தியாசங்களை மனத்திற்கொண்டே அவற்றைப் பயிலவேண்டும்.

## முடிவுரை

விஞ்ஞானம் மிகவாய் வளரத்தொடங்கிய காலத்தில் திரு மறைக்கும் விஞ்ஞானத்திற்கும் பெரும் முரண்பாடு இருப்ப தாகக் கருதப்பட்டது. எனினும், போகப்போக இந்த முரண்பாடு உண்மையானதன்று என்பதனை அறிஞர்கள் கண்டுகொண்டனர். விஞ்ஞானமும் திருமறையும் பிரத்தி யேக நோக்கம் கொண்டவை என்ற அறிவு இதற்கு ஆதார மாயிற்று. திருமறை சமய நோக்கோடு இறைவனையும் மனிதனையும் உலகையும்பற்றிப் பேசுகின்றது. விஞ்ஞானம் கண்கண்ட சடப்பொருள்கள், அவற்றின் தன்மை, அவற்றை ஆளும் நியதிகள் ஆகியவற்றை ஆராய்கின்றது. விஞ்ஞான முறையில் திருமறையை ஆராய்ச்சி செய்வது முதலில் அதிர்ச்சியை அளித்தபோதிலும் பின்னர் அது அனுகூல மாயிற்று. உண்மை வரலாற்றையும், வரலாற்றுச் சார் புள்ளவைகளையும், வெறுங் கதைகளையும் பிரித்தறிந்து பயனடைய இது உதவிற்று. இப்பொருளில் விஞ்ஞானம் திருமறைக்குத் துணை நிற்கின்றது எனலாம். எனவே, விஞ் ஞான உண்மைகளைத் திருமறையில் தேடாமல் திருமறையை ஒரு சமய நூலென நோக்கின் பிரச்சினைகள் குறைகின்றன.

விஞ்ஞானம் எழுப்பும் கேள்விகளில் ஒன்று திருமறையின் வரலாற்று வாய்மையைப்பற்றியதாகும். திருமறை ஏடுகள் அனைத்தும் வரலாற்றுச் சார்புள்ளவைகள்தானா அல்லது ஒவ்வொரு நூலும் எந்த அளவு வரலாற்றுச் சார்புள்ளது என்று கேட்கப்படுகின்றது. வரலாற்றுச் சார்பில்லாதவைகள்போல் தோன்றும் சில பாகங்களைக் கவனிக்கும் மக்களுக்கு இது பிரச்சினையாகிவிடுகின்றது. எனவே, தொடர்ந்து திருமறையின் வரலாற்று வாய்மையினைச் சிந்திப்போம்.

# திருமறையின் வரலாற்று வாய்மை

## (HISTORICITY)

### பிரச்சினை

திருமறையின் வரலாறு உண்மையானதுதானா என்று பலர் கேட்கின்றனர். மிருகம் பேசிற்று, கோடரி மிதந்தது. சூரியன் நின்றது என்று கூறும் ஒரு நூல் உண்மையானதாயிருக்குமா என்று சந்தேகிக்கின்றனர். கர்மேல் பர்வதத்தில் தண்ணீர் வார்க்கப்பட்ட பலியில் எப்படி நெருப்பு வரக்கூடும் என்று உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் திருமறைப் பாட வகுப்பிலே கேட்கின்றார்கள். யோசே கோலை உயர்த்தினான்; செங்கடல் பிளந்தது என்பதின் பொருள் என்ன? விஞ்ஞான அறிவு பெருத்த இக்காலத்தில் எதை எடுத்தாலும் இது உண்மையில் நிகழ்ந்ததுதானா? இது எந்த விதிப்படி நிகழ்ந்தது என்று கேட்கப்படுகின்றது.

### அடையாளங்களும் பொருளும்

திருமறை நூல்கள், குறிப்பாகப் பழைய ஏற்பாட்டு நூல்கள் எழுதப்பட்ட காலத்தில் மக்கள் இவ்விதக் கேள்விகளைக் கேட்கவில்லை. அவர்கள் இந்தக் கதை ஏன் கூறப்பட்டது? இதன் பொருள் யாது? என்றே கேட்டனர். ஆகையால், மீனின் வயிற்றில் யோனா, சிங்கக் குகையில் தானியேல், எல்லா விலங்கினங்களின் பிரதிநிதிகள் அடங்கிய பேழை ஆகியவைகள் அவர்களுக்குப் பிரச்சினைகளாக இருக்கவில்லை. ஏனெனில் அக்கால மக்கள் அடையாளங்கள் (symbols) மூலமாகவும், கற்பனைச் சித்திரங்கள் (image) மூலமாகவுமே சிந்தித்தனர்.

பழைய ஏற்பாட்டை எழுதினவர்களும், நூல்களை ஒன்றாக இணைத்தவர்களும் பழங்கால அநாகரீக காட்டு மக்களல்லர். ஆதியாகமத்தை எழுதினவர்களும் பிரசுரித்தவர்களும், தோட்

டத்தில் கடவுள் சரீரப்பிரகாரமாக உலாவினதாக நம்பவில்லை, பாம்பு ஏவாளோடு பேசினதாக அவர்கள் நம்பவில்லை. இவைகள் உண்மை பொதிந்த அடையாளங்களாகவே அவர்களால் உபயோகிக்கப்பட்டன. எனவே, கடவுள் ஏதேனில் உலாவினுர் என்று எண்ணுவது உண்மையன்று என்று கூறுவது திருமறை முழுவதும் உண்மையற்றது என்று கூறுவதற்குச் சமம் என்பது தவருகும். அதேவேளையில் கடவுள் சரீரப்பிரகாரமாக ஏதேனில் நடந்தார் என்று சாதிப்பதும் தவருகும். ஏனெனில், எழுதியவரே அடையாள மொழியிலேயே இதனை எழுதி விளங்கிக்கொண்டிருப்பார்.

ஆகவே, ஆதியாகமத்தின் ஆரம்பக் கதைகள் உண்மை பொதிந்த அடையாளங்கள் என்று ஒப்புக்கொள்வது அறிவுடைமையாகும் (intellectual honesty). முற்பிதாக்களின் கதைகள் வரலாற்றுச் சார்புடையவைகளாயிருப்பினும் அவற்றில் புராண பாகங்கள் இருக்கின்றன. வனுந்தரப் பயணம், அதற்குப் பிந்திய பாகங்கள் ஆகியவற்றில் உண்மை வரலாறு மிகுதியாயிருப்பினும் எலிசா போன்றவர்களைப் பற்றிக் கூறுமிடத்துச் சிறிதளவு கதைப் பாகங்கள் இருக்கின்றன எனலாம்.

எபிரேய ஆசிரியர்கள் வரலாறுகளையும் புராண சார்புள்ளவைகளையும் சேர்த்து எழுதும்போது இக்காலத்தில் இவைபற்றி நமக்கு ஏற்படும் பிரச்சினைகளை நினைக்கவில்லை. திருமறையில் கூறப்பட்டிருப்பனவெல்லாம் வரலாற்று உண்மைகள் என்று நிரூபித்தால் மாத்திரமே அதின் உண்மையை ஏற்றுக்கொள்ளக்கூடும் என்று கூறும் மக்கள் இருப்பர் என்று அவர்கள் உணரவில்லை. ஏனெனில், அவர்களுக்குக் கதைகளும் வரலாறும் முக்கியமாயிராமல், அவற்றின் அடிப்படைச் சமய உண்மைகளே முக்கியமாயிருந்தன. எஸ்தர் போன்ற கதைகளில் இந்தச் சமய உண்மைகளைக் காண்பது நமக்குக் கடினமாயிருப்பினும் பொதுவாகத் திருமறையில் இந்த உண்மைகளைக் கண்டுபிடிப்பது மிகக் கடினமன்று.

இந்த அடிப்படையில் யாப்போக்கு ஆற்றங்கரையில் யாக்கோபின் போராட்டத்தில் அவரோடு போராடினவர் யார்? (ஆதி. 32:22பி.) எப்படிப்பட்டவர் என்பதல்ல, யாக்கோபின் அகப்போராட்டமும் அதன் விளைவாக அவரது

தன்மை மறுரூபம் அடைவதுமே முக்கியம். அப்படியே முட்செடி தரிசனத்தில் (யாத். 3) முட்செடி எப்படி எரிந்தும் அவியாதிருந்தது என்பதல்ல, மோசே அடைந்த அனுபவமும் யாவேயையும் அவரது மக்களையும் சேவிக்க அவர் பெற்றுக் கொண்ட அழைப்புமே முக்கியமானவை.

யாவேக்கும் மக்களுக்குமிடையில் நடைபெற்றதாகத் தரப் படும் உரையாடல்களும் இத்தகைய தன்மையுள்ளவைகளே. சம்பந்தப்பட்ட மக்களின் உள்ளங்களில் யாவே தரும் திட்டங் கள், சிந்தனைகள் ஆகியவை உரையாடல் முறையில் அடை யாள ரூபமாக எழுதப்பட்டுள்ளன. எபிரேயர்கள் நேர்முகப் பேச்சை (direct speech) அதிகமாக விரும்பி உபயோகித்தனர். (உ—ம்) சவுல் அரசன் கடவுளின் சித்தத்தை மீறி நடந்தபோது தாவீதை வருங்கால மன்னனாக அபிஷேகம் செய்வது யாவேயின் சித்தம் என்று சாமுவேலுக்குத் தெளிவாயிற்று. இது ஓர் உரையாடல் முறையில் அடையாள ரூபமாக அமைக் கப்பட்டுத் தரப்பட்டுள்ளது (1 சாமு. 16:1–13).

### பழைய, புதிய ஏற்பாடுகளிடையில் வித்தியாசம்

திருமறையின் வரலாற்று உண்மைபற்றிப் படிக்கும்போது பழைய ஏற்பாட்டிற்கும் புதிய ஏற்பாட்டிற்கும் பெரும் வித்தியாசம் இருப்பதை அறியவேண்டும். பழைய ஏற்பாட் டைப் பொறுத்தவரையில், பல கதைகள், நூற் றூண்டுகள் காலமாக மக்களின் ஞாபகத்திலும் வழிபாட் டிடங்களிலும், வாய்மொழிப் பாரம்பரியங்களாக நிலவின. ஆபிரகாமுக்கு ஏகதேசம் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னரே இவைகள் எழுதப்பட்டன. அதிலிருந்து திரும்பவும் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னரே பழைய ஏற்பாடு இறுதி நிலை அடைந்தது.

புதிய ஏற்பாட்டைப் பொறுத்தவரையிலும், குறிப்பாக நற்செய்தி நூல்கள், அவை தரும் சம்பவங்கள் நடைபெற்று ஒன்று அல்லது இரண்டு தலைமுறைகளுக்குள்ளே எழுதப்பட்டு விட்டன. கண்டவர்களாலும், கண்டவற்றைக் கூறியதைக் கேட்டவர்களாலும் இவை எழுதப்பட்டன. ஆகையால் பெருமளவில் சம்பவங்கள் நிகழ்ந்தவாறே எழுதப்பட்டன எனலாம். நேரில் கண்டவர்களின் எண்ணிக்கை குறையுந்

தோறும் ஏகதேசம் ஒரு தலைமுறைக்குள்ளாக அவற்றை எழுதத் தொடங்கிவிட்டனர் எனலாம்.

உயிர்த்தெழுதலுக்கும் புனிதர் மார்க்குவின் நற்செய்தி நூல் எழுதப்பட்டதற்குமிடையில் ஏகதேசம் முப்பது ஆண்டுகள் இடைவெளி மாத்திரமே உண்டு. இந்த முப்பது ஆண்டுகளும் வெறுமையின் காலமன்று. இக்காலத்தில் கிறிஸ்தவ நற்செய்தி பரப்புனர்கள் நற்செய்தியைப் பரப்புவதில் முனைப்பாக ஈடுபட்டிருந்தனர். இக்காலத்தில் திருச்சபை துரிதமாக வளர்ந்தது. நற்செய்தி எருசலேமிலிருந்து ஆசியாவிலும் ஐரோப்பாவிலும் ரோமைப் பேரரசின் தலைநகரான ரோமாபுரி வரையிலும் பரவிற்று.

ஆகவே, இயேசுவின் செயல்களும் போதனைகளும் நற்செய்தி பரப்புனர்களால் திரும்பவும் திரும்பவும் கூறப்பட்டு அவர்களது சிந்தனையில் அமைப்புப்பெற்றன. அவைகள் எழுதப்படத் தேவை ஏற்பட்டபோது அதிக வித்தியாசமும் சிரமமுமின்றி எழுதப்பட்டன.

மேலும், இயேசுவைப்பற்றி திருச்சபை கூறியவற்றை யூத சமயத் தலைவர்கள் மறுக்காதது இவற்றின் வரலாற்று உண்மைக்கு உறுதியான சான்றாகும். இயேசுவே மீட்பரும் ஆண்டவருமாயிருக்கிறார் என்ற திருச்சபையின் அருளுரை யூதர்களுக்கு அருவருப்பாயிருந்தது. இயேசுவின் அற்புதங்கள், தம்மைப்பற்றி அவர் கூறியனவாகப் பிரச்சாரம் செய்யப்பட்டவை பொய்யானவைகளாயிருந்தால் யூதர்கள் ஒரே எதிர்ப்பாக எதிர்த்து மிகவும் எளிதாக இயேசு இயக்கத்தை அழித்திருக்க இயலும். ஆனால் எழுதுவதில் சிறந்த யூதர்கள் இவ்விதமாக ஒன்றும் எதிர்ப்பு முறையில் எழுதாதது இயேசுவின் அற்புதங்கள், உபதேசம், உயிர்த்தெழுதல் ஆகியவை பற்றிக் கூறப்பட்டவை உண்மையானவை என்பதனை உறுதிப்படுத்துகின்றது. ஆகவே, புதிய ஏற்பாட்டு வரலாறுகள் அனைத்தும் உண்மை நிகழ்ச்சிகளின் அறிக்கைகள் எனலாம்.

திரும்பவும் பழைய ஏற்பாட்டைக் கவனிப்போம். எலியா இரதத்தில் ஏறி பரலோகத்துக்குச் சென்றார் என்பதை வரலாறு என்று ஏற்றுக்கொள்ள பலர் மறுப்பர். அதே வேளையில் எபிரேயரது சமயத்திலும் அரசியலிலும் முக்கிய இடம்வகித்த எலியா என்ற இறைவாக்காளர், கி.மு. ஒன்பதாம் நூற்றாண்

டிலே தொண்டாற்றினர் என்பதனை மறுக்கப் போதிய ஆதார மில்லை. எலியாவின் ஆள் தன்மையின் உயர்வான ஆற்றலைக் கவனிக்கும்போது இப்படிப்பட்ட ஒரு முடிவுக்குத் தகுதியுள்ள வர்போல் அவர் தோற்றமளிக்கின்றார் எனக் கூறுவாரும் உளர். எனினும் எலியா பரமேறிய இந்நிகழ்ச்சி தரப்படா விடினும் எலியாவின் ஆள் தன்மை குறைவுபடுவதில்லை.

முற்பிதாக்கள் நாட்டிலே அலைந்து திரிந்ததாகக் கூறப் படுவது அக்கால மக்களின் நாடோடி (nomadic) நிலைக்குப் பொருத்தமாக இருக்கின்றது. பலஸ்தீனாவை இஸ்ரவேலர் வெகு பாடுபட்டுச் சொந்தமாக்கிக்கொண்ட வரலாறு ஏற்றுக் கொள்ளத் தகும். இக்கடின முயற்சியில் இஸ்ரவேலர் யாவே தங்களை நடத்துவதுபற்றி பல உண்மைகளைக் கற்றுக்கொள் கின்றனர்.

எஸ்றா *1:1–4* வரையில் கோரேஸ் மன்னன் சிறைப்பட் டிருந்தவர்களை விடுவித்த கட்டளை தரப்படுகின்றது. இது வரலாற்று உண்மை. சிறையிருப்பும், திரும்ப வருதலும் இஸ்ரவேலரது சமயத்திலும் இலட்சியத்திலும் புரட்சிகரமான மாற்றங்களைக் கொண்டுவந்தன என்பது உண்மையே.

இஸ்ரவேலரது வரலாற்றின் ஆரம்பக் கட்டத்தில் எகிப்தி லிருந்து விடுதலையடைந்து வனாந்தரப் பயணம் செய்ததின் வரலாற்று உண்மை மிகச் சிக்கலானதாகும். எனினும் இஸ்ர வேலரது வரலாற்றில் இது மிகவும் முக்கிய நிகழ்ச்சியாகும். எகிப்தின் வாதைகள், செங்கடல் பிளந்தது, பத்துக் கட்டளை களும் பிரமாணங்களும் அருளப்படுவது இவற்றில் வரலாற்று உண்மை எது என்று கேட்கப்படுகின்றது. இவைகளின் வரலாற்று உண்மை முக்கியமானதன்று எனச் சிலர் விவாதிக் கின்றனர். எனினும் எகிப்திலிருந்து தங்கள் முன்னோர் விடுதலை பெற்று வந்த ஒரு நிகழ்ச்சி தங்கள் வரலாற்றில் இல்லையேல், அவர்கள் அடிமைகளாயிருந்த ஓர் இழிவான கதையை அவர்கள் கற்பனை செய்து எழுதுவதற்குத் தேவை யில்லை என்று நிச்சயமாகக் கூறலாம். தொடர்ந்து நடை பெற்ற பல நிகழ்ச்சிகளின் விளைவாக எபிரேயர்கள் எகிப்தி லிருந்து விடுதலையடைந்தனர் என்பது உறுதி.

இந்தச் சம்பவம் எகிப்திய ஏடுகளில் கூறப்படவில்லையே என்று கேட்கப்படுகின்றது. எகிப்திலிருந்து இஸ்ரவேலராகிய

அடிமைகள் விடுதலை பெற்றுச் சென்றது இஸ்ரவேலருக்குத் தான் முக்கிய நிகழ்ச்சியேயன்றி எகிப்தியருக்கு அது முக்கிய மான ஒன்றன்று. மேலும் அவர்களைப் பின்சென்ற எகிப்திய சேனை அழிந்து போனபடியால் தங்கள் பெருமைக்கு இழிவான வற்றை அரசர்கள் எழுதாமல் விட்டுவிடும் வழக்கத்தின்படி இதனை எழுதி வைக்கவில்லை என்றும் கூறலாம்.

விடுதலையிலும், வனந்தரப் பயணத்திலும் அநேகப் பாகங்கள் கதைகள்போல தோன்றினாலும் மோசேயின் வீர சேவை, அடிமை வாழ்விலிருந்து விடுதலை, யாவேயை வழி படுதல், உடன்படிக்கை, நியாயப்பிரமாணம், உடன்படிக் கைப் பெட்டி, வனந்தரப் பயண வாழ்க்கை ஆகியவை இஸ்ரவேலரது பிந்திய வரலாற்றில் முக்கிய இடம் பெறு கின்றன. ஆகவே, இப்பாகங்கள் வரலாற்று உண்மையுள்ள தாகவே விளங்குகின்றன.

## வரலாறு சார்ந்த சமயம்

கிறிஸ்தவம் வரலாறு சார்புள்ள சமயம் என்று நாம் கூறுகின்றோம். அதாவது கிறிஸ்தவ சமயம் ஏதோ நல் வாழ்க்கைபற்றிய சில கொள்கைகளிலோ, கடவுளைப்பற்றிய சில கற்பனைகளிலோ, அடிப்படை பெறுமல் வரலாற்றிலே நடந்த சில உண்மையான சம்பவங்களில் வேரூன்றி இயங்கு கின்றது. பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் கொள்கைகளைவிட நிகழ்ச்சிகளே முதலிடம் வகிக்கின்றன.

இரு ஏற்பாடுகளிலும் விசுவாச அறிக்கைகளில் (creedal confessions) வரலாற்று நிகழ்ச்சிகள் அறிக்கை செய்யப்படு கின்றன. (உ—ம்) உபாகமம் 6:24,25; 26:5—9 ஆகிய இடங் களில் தரப்படும் எபிரேயரது விசுவாசப்பிரமாணத்தில் எகிப்தின் விடுதலையின் நிகழ்ச்சி தரப்படுகின்றது. திருச் சபையின் விசுவாசப்பிரமாணங்களில் (creed) இயேசுவின் வாழ்க்கையின் பொந்தியு பிலாத்துவின் காலத்து வரலாற்று நிகழ்ச்சிகளும் அறிக்கை செய்யப்படுகின்றன. உபாகமம் 26:5—9 வரை எபிரேய மக்கள் அறுப்புப் பண்டிகையை ஆசரிப்பதுபற்றிக் கூறப்படுகின்றது. எபிரேயரைச் சூழ வாழ்ந்த மக்களால் அறுப்புப் பண்டிகை ஓர் இயற்கையின் பண்டிகையாக ஆசரிக்கப்பட்டது. ஆனல் இஸ்ரவேலர்

இப்பண்டிகையிலும் வரலாற்று நிகழ்ச்சியாகிய 'எகிப்திலிருந்து விடுதலை'யை நினைவுகூர்ந்தனர். ஏனெனில், விடுதலையும் அதனைத் தொடர்ந்த நிகழ்ச்சிகளுமே அவர்களை ஒரு மக்கள் கூட்டமாக இணைத்து உருவாக்கின என்பது அவர்களது உறுதியான விசுவாசம். இவ்வாறே இஸ்ரவேலரது தொழுகையும் வரலாற்று நிகழ்ச்சிகளை நினைவுகூரும் அனுபவத்தோடு உறவுபடுத்தி அமைக்கப்பட்டிருந்தது. (உ–ம்) சங். 44:1–8; 78; 105; 106; 126; 135; 136. திருச்சபையும் தனது தொழுகையின் உச்சநிலையாகிய பரிசுத்த நற்கருணையில் கிறிஸ்துவின் மரணம், உயிர்த்தெழுதல் ஆகிய வரலாற்று நிகழ்ச்சிகளை நினைவுகூருகின்றது.

ஆகவே திருமறையில் வரலாறு சார்பற்ற சில பாகங்கள் இருக்கின்றன என்று ஒப்புக்கொண்டு அவை ஏன் சேர்க்கப்பட்டன என்று காரணம் காட்டிவிடுவது நலம். புராண சார்புள்ளவற்றை வரலாறுகள் என்று நிரூபித்துக் காண்பிக்க வீண் முயற்சிகள் செய்யத் தேவையில்லை. அவைகள் கதைகள், கதை பொதிந்த உண்மைகள் என்று ஒப்புக்கொள்வதில் தவறில்லை. தனிப்பட்ட சில சம்பவங்கள் உண்மை வரலாறுதானு என்பதுபற்றித் தொடர்ந்து கருத்து வேற்றுமை நிலவக்கூடும். எனினும் இவை எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்டாலும் திருமறையின் முக்கிய வரலாற்று பாகம் உண்மையானது என்பதே திறனாய்வின் முடிவாகும். திறனாய்வு இவற்றின் வரலாற்று உண்மையை விஞ்ஞான முறையில் நிரூபித்திருக்கிறது; இவைகள் குறிப்பிட்ட காலத்தில் நிகழ்ந்தவை. இந்த நிகழ்ச்சிகள் யாருடைய வரலாற்றில் நிகழ்ந்தனவோ அவர்கள் அச்சம்பவங்களில் கடவுள் செயலாற்றுவதை உணர்ந்தனர் என்பது உறுதியே.

எனினும் திருமறை வரலாறு வெறும் வரலாறன்று. புகைப்படக் கருவி ஒரு நிகழ்ச்சியை நடந்தவாறே புகைப்படம் எடுத்தளிக்கலாம். ஆனுல் அந்தப் புகைப்படம் சித்திரிக்கும் நிகழ்ச்சி நல்லதோ, தீயதோ என்று அந்தப் படம் கூறுவதில்லை. திருமறை வரலாறு இப்படிப்பட்ட புகைப்படம் போன்றதன்று.

ஏனெனில் திருமறை வரலாற்றின் முக்கிய மையப் பாத்திரம் இறைவன். அவரே அந்த வரலாற்றை இயக்குகின்றவர்.

அவர் அதில் செயலாற்றி ஈடுபாடு கொண்டுள்ளார். அவர் ஏதோ ஓர் அரூபியான சக்தியாக அல்ல, நேரடியான முறையில் (personal) அவர் வரலாற்றில் ஈடுபாடு கொண்டுள்ளார்.

எனவே திருமறையின் வரலாறு பொருள் சார்புள்ளது (history as interpreted). அதாவது, இறைவன்பால் விசுவாசம் கொண்டவர்களின் கோணத்திலிருந்து இந்த வரலாறு எழுதப்பட்டிருக்கின்றது. எனவே, வரலாற்று நிகழ்ச்சிகளின் உயிரற்ற ஓர் அறிக்கையாக அல்ல, பொருள் கலந்துவிட்டபடியால் உயிர்த் துடிப்புள்ள அறிக்கையாகத் திருமறை வரலாறு திகழ்கின்றது. அனைத்தும் இறைவனின் திருநோக்கத்தின் அடிப்படையில் எழுதப்பட்டுள்ளது. எனவே, தாங்கள் எழுதும் வரலாற்றில் கடவுள் செயல்படுகின்றார் என்ற விசுவாசத்தோடு ஆக்கியோர் எழுதியுள்ளனர். அவ்வாறே, ஆக்கியோரின் விசுவாசமுள்ளவர்கள் இந்த வரலாற்றின் சிறப்பை அறிகின்றனர்.

திருமறையின் பெரும்பாகம் வரலாற்று வாய்மையுள்ளது எனவும்; திருமறையில் கதைகள், புராண சார்புள்ள பாகங்கள் சில இடம் பெற்றுள்ளன எனவும் இவ்வதிகாரத்தில் நாம் கூறியுள்ளோம். இதனைத் தொடர்ந்து திருமறை திருச்சபையினால் ஒப்புக்கொள்ளப்பட்ட நீண்டகால வரலாற்றை நாம் கவனிப்பது நல்லது. ஏனெனில் இவ்வதிகாரத்தில் நாம் படித்த பல உண்மைகள்பற்றிய கூடுதல் அறிவு அடுத்த அதிகாரத்தில் தரப்படுகின்றது.

பாகம் 2

# திருமறையின் வரலாறு

# திருமறை
# ஒப்புக்கொள்ளப்பட்ட வரலாறு

## (CANON)

உலகின் முக்கிய சமயங்களுக்கு அதிகாரபூர்வமான ஆதார நூல்கள் இருக்கின்றன. அதுபோலவே நமக்குத் திருமறை அதிகாரபூர்வமான ஆதார நூலாகும். இத்தகைய திருநூல் தொகுப்பிற்கு கனோன் (Canon) என்பர் (ஆ.தே. மனுவேல், 'இறையியல் அணிந்துரை', பக். 74). 'கனோன்' என்ற கிரேக்கச் சொல்லிற்கு 'நாணல்' என்பது பொருள். பின்னர் 'நாணலால் செய்யப்பட்டது' அல்லது 'நாணலைப்போன்று நேரானது' என்று பொருள் தந்து உவமை யாகு பெயராய் 'அளவுகோல்' எனப்பட்டது ('இறையியல் அணிந்துரை', பக். 74).

பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு ஆகியவற்றில் அடங்கிய நூல்கள் சிறிது சிறிதாக ஒவ்வொன்றாக இணைக்கப்பட்டு இன்றிருக்கும் நிலையை அடைய நீண்டகாலமாயிற்று என்பதனை அறியாத கிறிஸ்தவர்கள் பலர் நம் நாட்டில் இருக்கின்றனர். இவற்றில் பழைய, புதிய ஏற்பாடுகளுக்குத் தனித்தனி வரலாறுகள் இருக்கின்றன.

### பழைய ஏற்பாடு

பழைய ஏற்பாடு மூன்று படிவங்கள் மூலம் (stages) இன்றிருக்கும் நிலையை எய்தியது. முதலில் நியாயப்பிரமாண நூல்களும் (*Laws*), பின்னர் இறைவாக்காளர் நூல்களும் (*Prophets*), இறுதியில் ஞான நூல்களும் (*Writings*) சேர்க்கப்பட்டன.

### நியாயப்பிரமாண நூல்கள் (Laws)

கி.மு. 621ல் தேவாலயத்தில் ஒரு நியாயப்பிரமாண நூல் கண்டெடுக்கப்பட்டது (2 இரா. 23:24). எல்லா மக்களும்

கேட்டுக் கீழ்ப்படியும்படி இது வாசிக்கப்படவேண்டும் என்று யோசியா அரசன் கட்டளையிட்டான். இதுவே நாம் அறிகிறபடி யூதர்கள் அதிகாரபூர்வமாக எல்லாருக்குமுரியதாக ஒப்புக்கொண்ட முதல் நூல். இந்நூலில் உபாகமத்தின் பெரும்பாகம் இடம்பெற்றிருந்தது. இது இறைவாக்காளர் எரேமியாவின் உபதேசத்தின் அடிப்படையில் எழுதப்பட்ட பிரமாணங்கள் அடங்கிய நூலாகும். இதுபோல் வேறு பல பிரமாணங்களும் தோன்றின. காலாகாலத்தில் இவைகளும் சேர்க்கப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டு இப்போது பழைய ஏற்பாட்டின் முதல் ஐந்து நூல்களாகிய ஐஞ்சுருள் நியாயப் பிரமாணமாக ஒப்புக்கொள்ளப்பட்டது. சிறையிருப்பிலிருந்து திரும்பிவந்த மக்களுக்கு கி.மு. 444ல் (அல்லது வேறு சிலர் கூறுகிறபடி 397ல்) எஸ்றா வாசித்த நியாயப்பிரமாணம் இது அல்லது இதில் ஒரு பாகமாகும். சமாரியரும் தங்கள் திருமறையில் பஞ்சாகமங்களை ஒப்புக்கொள்ளுகிறபடியால் அவர்கள் தனித்தியங்கும்படி பிரியும் முன்னரே இது உருப் பெற்று ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது என்க.

### இறைவாக்காளர் ஆகமங்கள் (Prophetic Books)

முதல் பருவத்தைப்போல் இரண்டாம் பருவத்தைப்பற்றி திட்டவட்டமாகக் கூற இயலவில்லை. தீர்க்கரின் உரைகளும், அவர்களாலும் அவர்களது குழுக்களாலும் எழுதப்பட்டவைகளும், அவர்களது செல்வாக்கால் எழுதப்பட்ட வரலாற்று ஏடுகளும் காலாகாலத்தில் தோன்றின. கி.மு. மூன்றும் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இவை ஏற்றுக்கொள்ளப்பட்ட திருமறையின் பாகமாக நியாயப்பிரமாணத்தோடே காணப் படுகின்றன. இக்காலத்திற்குரிய திருச்சபை ஏற்காத மறை நூல்களில் (*Apocrypha*) ஒன்றிலே பன்னிரு தீர்க்கர்களைப் பற்றிக் கூறப்படுவதால் இக்காலத்தில் சிறிய தீர்க்கர்களின் நூல்கள் ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தன என்பது உறுதி. திருச் சபை ஏற்காத மறை நூலான 2வது மக்கபீயர் 2:13ல் நெகேமியா ஒரு நூலகம் அமைக்கவேண்டி இராஜாக்கள், இறை வாக்காளர்களின் நூல்கள், தாவீதின் நூல்கள், புனித நன்கொடைகள்பற்றி பல அரசர்களின் கடிதங்கள் ஆகியவைகளைச் சேர்த்துவைத்ததாக வாசிக்கின்றோம். ஆகவே

யோசுவா, நியாயாதிபதிகள், சாமுவேல், இராஜாக்கள், ஏசாயா, எரேமியா, எசேக்கியேல், 12 சின்ன தீர்க்கர்களின் நூல்கள் ஆகியன இதில் இடம்பெற்றன எனலாம்.

### ஞான நூல்கள் (Writings)

கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் மக்கபீயருக்கும் அந்தியோகஸ் எப்பிபானசுக்குமிடையில் போராட்டம் மிகுதியாகவே, நாட்டில் மக்கள் மனம் தளராது உறுதிப்படுவதற்கு அனுகூலமான நூல்கள் ஒன்றுசேர்க்கப்பட்டன. இதன்படி, சங்கீதங்கள், நீதிமொழிகள், யோபு ஆகிய பாடல் நூல்களும்; உன்னதப்பாட்டு, ரூத், புலம்பல், பிரசங்கி, எஸ்தர் ஆகிய ஐந்து நூல்களும்; தானியேல், நெகேமியா, எஸ்றா, நாளாகமங்கள் ஆகிய நூல்களும் சேர்க்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டன. யூதரது திருமறையில் மேற்கண்ட ஒழுங்கின்படியே இந்நூல்கள் அமைந்திருக்கின்றன. ஆனால் முதல் கிரேக்க மொழிபெயர்ப்பில் நமது திருமறையிலிருக்கும் ஒழுங்கு காணப்படுகின்றது.

புனித நூல்களைச் சேர்த்துப் பாதுகாக்கும் முயற்சி மக்கபீயர் காலத்தில் தீவிரமாயிற்று. ஏனெனில், அந்தியோகஸின் போர்வீரர் அந்தப் புனித நூல்களின் ஆற்றலை உணர்ந்து அவற்றை அழிக்க முற்பட்டனர். 1 மக்கபீயர் 1:56,57ன்படி ஒரு நியாயப்பிரமாணப் பிரதியை போர் வீரர்கள் கிழித்து நெருப்புக்கிரையாக்கினர். ஆகவே நூல்கள் மிகக் கவனமாகப் பாதுகாக்கப்பட்டன.

கி.மு. இரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மூன்றாவது வகையான ஞான நூல்களும் சேர்க்கப்பட்டன. எக்ளிசியாஸ்டிக்கஸ் (*Ecclesiasticus*, கி.மு. 133) என்னும் நூலின் முகவுரையில் இதுபற்றி கூறப்படுகின்றது. அதில் 'நியாயப்பிரமாணமும், இறைவாக்காளர் ஆகமங்களும் இதர நூல்களும்' என்று கூறப்பட்டிருக்கின்றது.

பலஸ்தீனாவில் இது நடைபெறும்போது சிதறடிக்கப்பட்ட யூதர்கள் அலெக்சாந்திரியாவில் இதைவிடக் கூடுதல் நூல்களைச் சேர்த்து உபயோகித்தனர். அவர்கள் கி.மு. 285க்கும் 247க்கும் இடைப்பட்ட காலத்தில் செப்துவஜிந்து (*Septuagint LXX*) என்றழைக்கப்படும் பழைய ஏற்பாட்டின் கிரேக்க

மொழியாக்கத்தை எழுதியபோது, பலஸ்தீனவில் ஏற்றுக் கொள்ளப்படாத பல நூல்களும் அதில் இடம்பெற்றன. இந்தக் கூடுதல் ஆகமங்கள் நமது திருமறையில் இல்லை. இந்த 14 நூல்களுக்கும் ஏற்காத மறை நூல்கள் அல்லது தள்ளுபடி ஆகமங்கள் (*Apocrypha*) என்று பெயர் வழங்கப்படுகின்றது. ரோமன் கத்தோலிக்கரின் திருமறையில் இவை இடம்பெற்றுள்ளன.

பலஸ்தீன தொகுப்புக்கும், அலெக்சாந்திரியா தொகுப்பிற்குமிடையிலுள்ள பிரச்சினை கி.மு. 100ம் ஆண்டில் ஜாம்னியா என்ற இடத்தில் கூடிய யூதப் பேரவையால் முடிவு செய்யப்பட்டு, பலஸ்தீன தொகுப்பாகிய 39 நூல்கள் மாத்திரமே ஒப்புக்கொள்ளப்பட்டவை என்று உறுதிப்படுத்தப்பட்டது. ஆகவே கி.மு. 621 முதல் கி.பி. 100ம் ஆண்டு காலம் வரையுள்ள நீண்ட காலத்தில் பல பருவங்களில் பழைய ஏற்பாடு இன்றிருக்கும் நிலையையடைந்தது.

## புதிய ஏற்பாடு

புதிய ஏற்பாட்டு நூல்களும் பழைய ஏற்பாட்டு நூல்களைப் போலவே ஏற்கெனவே நிலவிய நூல்களிலிருந்து கிரமமாக ஒன்றுசேர்க்கப்பட்டன. எனினும் பழைய ஏற்பாட்டு நூல்கள் சுமார் ஆயிரம் ஆண்டுகளாக வளர்ந்தவை. ஆனல் புதிய ஏற்பாட்டு நூல்களில் பெரும்பாகமும் ஒரே தலைமுறைக் காலத்தில் எழுதப்பட்டவைகளே. பழைய ஏற்பாட்டிலே சிறப்புள்ள இறைவாக்காளர்கள் சமயக் குரவர்களின் பெயர்களோடே சம்பந்தப்பட்ட நூல்கள் ஏற்றுக்கொள்ளப்படுவது எளிதாயிருந்ததுபோலவே புதிய ஏற்பாட்டிலும் அப்போஸ்தலரது பெயர்களோடு சம்பந்தப்பட்ட நூல்கள் ஏற்றுக்கொள்ளப்படுவது எளிதாயிருந்தது. அதோடு நூலின் பொருள் செறிவு, உபதேச ஒருமைப்பாடு ஆகியவைகளும் கவனிக்கப்பட்டன.

## புதிய ஏற்பாடு உருப்பெறுவதற்குரிய காரணங்கள்

முதலில் யூதத் திருமறையே திருச்சபையின் வழிபாட்டில் படிக்கப்பட்டது. புதிய உடன்படிக்கைக்குரிய ஒரு நூலின் தேவை படிப்படியாக உணரப்பட்ட பின்னரே நூல்கள் சேகரிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டன.

சில சபைகளில் கடிதங்களும் இதர கிறிஸ்தவ நூல்களும் ஆராதனைகளிலே வாசிக்கும் வழக்கம் இருந்தது. இரண்டாம் நூற்றாண்டின் நடுப்பாகத்தில் ஜஸ்டின் மார்டிர் (Justin Martyr) என்பவர் 'அப்பாலஜி' (*Apology* 1:67) என்னும் தமது நூலில், 'ஞாயிறு தோறும் பட்டணங்களில் அல்லது ஒரு நாட்டில் வாசம்பண்ணும் எல்லாரும் ஓரிடத்தில் கூடிவருவார்கள். அப்போஸ்தலரின் நூல்கள் அல்லது தீர்க்கர்களின் நூல்கள் படிக்கப்பட்டன. வாசித்து முடித்தபின்னர் தலைவர் இவைகளைப் பின்பற்றும்படி நல்லுரை வழங்குவார்' என்று எழுதியுள்ளார். புதிய ஏற்பாடு ஒப்புக்கொள்ளப்படுவதற்கு, கிறிஸ்தவ நூல்கள் ஆராதனைகளிலே வாசிக்கப்படுவது ஒரு காரணமாயிருந்தது.

இரண்டாவதாக, திரிபுக் கொள்கைகள் ஏற்படாமல் பாதுகாப்பதற்கு ஒப்புக்கொள்ளப்பட்ட புனித நூல்கள் தேவைப்பட்டன. இரண்டாம் நூற்றாண்டிலே மாண்டனஸ் (Montanus) என்பவரும் அவரைப் பின்பற்றியவர்களும் தூய ஆவியர் தங்களுக்குப் புதிய வெளிப்படுத்தல் அருளிச் செய்து துறவு மேற்கொள்வதே சிறப்பான தூய கிறிஸ்தவ வாழ்க்கை என்று காண்பித்ததாகக் கூறினர். இப்படிப்பட்ட புதிய ஏவுதல், வெளிப்படுத்தல் என்ற அடிப்படையில் திரிபு உபதேசங்கள் திருச்சபையினுள் புகுந்துவிடாமல் தடுப்பதற்கு உண்மையான வெளிப்படுத்தலைக் கூறும் நூல்களின் பட்டியல் ஒன்று தேவைப்பட்டது. இப்படியே அறிவுநெறிக் கோட்பாடு (Gnosticism) என்ற திரிபுக்கொள்கை அப்போஸ்தலர் அளித்த இரகசியமான பாரம்பரியங்கள் என்றழைக்கப்பட்ட சில வாய்மொழிப் பாரம்பரியங்களின் அடிப்படையில் உபதேசிக்கப்பட்டது. இதற்கு எதிராக முக்கிய சபைகளால் ஒப்புக்கொள்ளப்பட்ட நூல்களே தகுதியானவை என்று வற்புறுத்தப்பட்டது. இரேனேயாஸ் (Irenaeus) என்பவர் இரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் நான்கு சுவிசேடங்கள் மாத்திரமே உண்டு என்று வற்புறுத்திக் கூறினார். ஏனெனில் சுவிசேடங்கள் என்ற பெயரில், கற்பனை சார்ந்த பல அம்சங்களுள்ள அநேக நூல்கள் இருந்தன.

### மூரற்றோரியன் ஏடுகள் (Muratorian Fragment)

கி.பி. இரண்டாம் நூற்றுண்டின் இறுதியில் ஒப்புக் கொள்ளப்பட்ட பல நூல்களின் தொகுப்பு ஒன்று உருப் பெற்றுக்கொண்டிருந்ததாக மூரற்றோரியன் ஏடுகளிலிருந்து தெரியவருகின்றது. இது ரோமாபுரி சபையினரால் ஒப்புக் கொள்ளப்பட்ட நூல்களின் பட்டியலின் ஒரு பாகம். இதில் நமது புதிய ஏற்பாட்டின் 1 பேதுரு, 1 யோவான், யாக்கோபு, எபிரேயர் நிருபம் ஆகியவை தவிர எல்லா நூல்களும் தரப்படு கின்றன. ஒருவேளை இதன் தவறிப்போன பாகத்தில் அவை களும் இருந்திருக்கலாம். ஆனுல் இதே பட்டியலில் 'பேதுரு வின் தரிசனம்' (*Apocalypse of Peter*) என்ற பெயருள்ள ஒரு நூல் இடம்பெறுகின்றது.

### இதர பட்டியல்கள்

இதற்குச் சிறிது முந்தின காலத்தில் மார்சியன் (Marcian) என்ற திரிபுக் கொள்கையினன் பழைய ஏற்பாடு முழுவதையும் விட்டுவிட்டு லூக்கா நற்செய்தி நூலும் பவுலின் சில கடிதங் களும் மாத்திரம்கொண்ட ஒரு பட்டியலைத் தயாரித்திருந் தான். ஜஸ்டின் மார்டிரின் சீடனுன தேஷியன் (Tatian) நான்கு சுவிசேடங்களும் ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தன என்று கூறி நான்கிற்கும் ஓர் இசைவு நூல் (harmony) எழுதினுர். அலெக் சாந்திரியாவில் கிளெமெந்து (Clement) என்ற அறிஞரின் பட்டியலில் யாக்கோபு, 2 பேதுரு இல்லை; ஆரிகன் (Origen) என்னும் அறிஞருக்கு யாக்கோபு, யூதாபற்றி சந்தேகங்கள் இருந்தன. பழைய, புதிய ஏற்பாட்டு நூல்கள் சம அளவு புனித நூல்கள் என்று முதல் தடவையாக ஒப்புக்கொண்டவர் ஆரிகனுவார். கிளெமெந்தும் ஆரிகனும் எபிரேயர் நிருப ஆக்கியோன் பெயர்பற்றி சந்தேகப்பட்டனர். அலெக்சாந்தி ரியா பட்டணத்து டயோனிஷியஸ் என்பவர் வெளிப்படுத்தலின் ஆக்கியோன்பற்றி சந்தேகப்பட்டார்.

### நான்காம் நூற்றுண்டில்

நான்காம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் டயோக்ளிஷியன் (Diocletian) என்ற ரோமைப் பேரரசன் கிறிஸ்தவத் திருமறை ஏடுகளை அழிக்க முயற்சித்தான். இதனுல் திருச்சபைப்

பிதாக்கள் ஒப்புக்கொள்ளப்பட்ட நூல்கள் எவை என்று திட்டமான முடிவுக்கு வரத்துணிந்தனர்.

டயோக்ளிஷியனின் துன்புறுத்தலுக்குப் பின்னர் செசரியா பட்டணத்து யூசபியஸ் என்பவர் (Eusebius of Caesarea) மூன்று வகையான நூல்களைப்பற்றி எழுதியிருக்கிறார்.

1. ஏற்றுக்கொள்ளப்பட்டவை: நான்கு நற்செய்தி நூல்கள், அப்போஸ்தலர் நடபடிகள், எபிரேயர் உட்பட புனிதர் பவுலின் பதினான்கு கடிதங்கள், 1 பேதுரு, 1 யோவான், தரிசன நூல் (சந்தேகத்தோடே).

2. விவாதத்துக்குரிய நூல்கள் (Disputed): (அ) பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்டவை: யாக்கோபு, 2 பேதுரு, 2 யோவான், 3 யோவான், யூதா. (ஆ) உண்மையற்ற நூல்கள் (non-genuine): இவை புதிய ஏற்பாட்டில் இடம் பெறவில்லை. தரிசன நூல் இந்த வகையைச் சேரவேண்டியதாகுமோ என்று அவர் விவாதிக்கின்றார்.

3. தள்ளப்பட்ட நூல்கள் (Spurious).

### ஒப்புக்கொள்ளப்படுதல்

இன்றிருக்கின்ற பட்டியலை முதற்கண் தயாரித்தவர் புனிதர் அதனேஷியஸ் (St. Athanasius) என்பவராவர். கி.பி. 360ல் லவோதிக்கேயாவில் கூடிய திருச்சபைப் பேரவை, இவைகளே ஒப்புக்கொள்ளப்பட்ட நூல்கள், இவை மாத்திரமே திருச்சபையில் வாசிக்கப்படவேண்டும் என்று தீர்மானம் செய்தது. கி.பி. 397ல் மூன்றும் கார்தேஜ் (Carthage) பேரவையில் இது ஒப்புக்கொள்ளப்பட்டது.

இவ்வாறு நான்காம் நூற்றாண்டின் இறுதியில் முழு திருமறையும் உருப்பெற்று அதிகாரபூர்வமாகத் திருச்சபை முழுவதிலும் உபயோகிக்கப்பட்டது. ஆகவே:

1. திருமறை பல நூற்றாண்டுகளாக வளர்ந்த ஒரு நூல்.

2. அதன் தனி நூல்கள் எழுதப்பட்ட காலத்துக்கும் அவை அதிகாரபூர்வமாக ஒப்புக்கொள்ளப்பட்ட காலத்துக்கும் பெரிய இடைவெளி (interval) உண்டு.

3. ஏற்கெனவே நிலவிய, பல நூற்றாண்டுகளாகத் திருச்சபையினரால் உபயோகப்படுத்தப்பட்டுவந்த நூல்களிலிருந்து இவை தெரிந்தெடுக்கப்பட்டுத் தொகுக்கப்பட்டன.

ஆகவே, திருமறை முழுமை உருப்பெறும் முன்னரே திருச்சபை நான்கு நூற்றூண்டு காலமாகச் செயல்பட்டது என்பது மிகவும் ஆச்சரியமான ஓர் உண்மையன்ருே?

### இடைப்பட்ட காலம், பெயர்ப்புகளும் பிரச்சினைகளும்

திருமறையின் முதல் எழுதப்பட்ட பாகங்கள் இன்றைக்கு ஏகதேசம் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்டவை. கி.பி. 100ம் ஆண்டில் பழைய ஏற்பாட்டின் முப்பத்தொன்பது நூல்களும் கி.பி. நான்காம் நூற்ருண்டின் புதிய ஏற்பாட்டின் இருபத்தேழு நூல்களும் அதிகாரபூர்வமாக ஒப்புக்கொள்ளப்பட்டன.

எனினும் கி.பி. பதினூன்காம் நூற்ருண்டு வரை கரங்களால் பெயர்த்தெழுதப்பட்ட பிரதிகளும் நிலவின. பெயர்த்தெழுதும் எழுத்தாளன் (copyist) எவ்வளவு விழிப்பாக எழுதினுலும் அவன் தவறு செய்துவிடுகின்ருன். எழுதும்போது மூளைச் சோர்பு, கண் வேதனை, தொந்தரவுகள் (distractions), ஒளி குறைவு, பழமையான எழுதுகோல் ஆகியவைகளால் தவறுகள் ஏற்படும் வாய்ப்பு உண்டு. மேலும், மூல ஏடுகளில் அதிகாரங்கள், வாக்கியங்கள், வார்த்தைகளுக்கிடையில் இடைவெளி இல்லை. அடிக்கடி குறுக்கங்கள் (abbreviations) உபயோகிக்கப்பட்டன. குறியீடுகள் (punctuations) உபயோகிக்கப்படவில்லை. இவற்றினல், வார்த்தைகள் இரட்டித்தல், வரிகள் விடப்படுதல், தவருன வார்த்தைகளை உபயோகித்தல் ஆகிய பிழைகள் ஏற்பட்டன. பல நூற்ருண்டுகளாக இந்த முறை கையாளப்பட்டது. அடிக்கடி உபயோகிக்கப்பட்ட ஏடுகளின் மங்கிய எழுத்துக்களைப் பார்த்துப் பெயர்த்தெழுதும்போது இப்பணி மிகவும் கடினமாயிருந்தது. சில வேளைகள் புத்திசாலிகளான பெயர்ப்பாளர்கள் தங்களிடமிருந்த மூல ஏட்டில் தவறு என்று கருதினவைகளைத் திருத்தினர். இந்தத் திருத்தங்கள் பிந்திய காலத்துப் பெயர்ப்புகளினுள் புகுந்துவிடுவதுண்டு. இதனல் ஆதிமூல ஏட்டிற்கும் சில நூற்ருண்டுகளுக்குப் பின்னர் எழுதப்பட்ட பெயர்ப்புகளுக்குமிடையில் பல வித்தியாசங்கள் ஏற்பட்டன.

### மூல ஏடுகள்

சமீபகாலம் வரையில் நமக்குக் கிடைத்திருந்த பழைய ஏற்பாட்டு மூல ஏடு கி.பி. 14ம் நூற்றுண்டைச் சேர்ந்ததாகும். நமக்குக் கிடைத்துள்ள புதிய ஏற்பாட்டு மூல ஏடுகள், அவைகள் முதலில் எழுதப்பட்ட காலத்திலிருந்து முன்னூறு ஆண்டுகளுக்குள் எழுதப்பட்டனவாம். கடந்த இரண்டு நூற்றுண்டுகளில் புதிய ஏற்பாட்டின் அரமேயம், சிரியாக் போன்ற இதர மொழிபெயர்ப்புகளும் அநேக மூலமொழிப் பிரதிகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

1859ல் திஷன்டோர்ப் (Tishendorf) என்ற ஜெர்மானிய அறிஞர் சீனய் மலையிலிருந்த ஒரு மடத்தில் முழுத் திருமறையின் பழங்காலப் பிரதி ஒன்றைக் கண்டெடுத்தார். அதன் பின்னர், சிறிதும் பெரிதுமான அநேகப் பிரதிகள் கிடைத்த போதிலும் 1931ல் செஸ்டர் பீட்டி (Chester Beaty) என்பவர் எகிப்தின் அழிந்துபோன பட்டணங்களைத் தோண்டும்போது புதிய ஏற்பாட்டுப் பிரதி ஒன்றைக் கண்டெடுத்தார். இது கி.பி. மூன்றும் நூற்றுண்டில் எழுதப்பட்டது. அதோடு ஏகதேசம் கி.பி. 120ல் எழுதப்பட்ட யோவான் சுவிசேடத்தின் ஒரு பாகத்தையும் இவர் கண்டுபிடித்தார்.

1947ல் சவக்கடல் சுருள்கள் (*Dead Sea Scrolls*) சவக்கடல் ஓரத்தில் ஒரு குகையிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டன. இது ஒரு யூத சமயப் பிரிவினரின் நூல் நிலையம். இதில் கி.மு. இரண்டாம் அல்லது முதலாம் நூற்றுண்டில் எழுதப்பட்ட ஏசாயாவின் தீர்க்கதரிசனத்தின் ஒரு பிரதி கிடைத்திருக்கின்றது. மேலும் இரண்டாம் நூற்றுண்டுத் திருச்சபைப் பிதாக்கள் எழுதிய பல நூல்களில் பழைய ஏற்பாட்டிலும், பின்னர் புதிய ஏற்பாட்டில் இடம்பெற்ற நூல்களிலுமிருந்து நீண்ட பாகங்கள் மேற்கோள்களாகத் தரப்பட்டிருக்கின்றன. இவ்விதமாகக் கண்டுபிடிக்கப்பட்ட பல மூலங்களிலிருந்து பெருமளவில் சந்தேகமில்லாத மூல ஏட்டை உருவாக்க இயலுகின்றது. இந்த மூவாயிரத்துக்கு அதிகமான கண்டுபிடிப்புகளின் வெளிச்சத்தில் பழைய மொழிபெயர்ப்புகள் புதுப்பிக்கப்படுகின்றன. ஆகவே ஆங்கிலத்தில் அநேக மொழிபெயர்ப்புகளும் தமிழில் சில மொழிபெயர்ப்புகளும் வெளிவந்துள்ளன.

மேலும், சமீப காலத்தில் எகிப்தில் கண்டுபிடிக்கப்பட்ட திருமறைச் சார்பில்லாத பல கடிதங்கள், கணக்குகள், நீதி மன்றத் தீர்ப்புகள் போன்றவைகள் திருமறை காலத்து சமூக நிலைபற்றியும், சில வார்த்தைகளின் மூலப்பொருள்பற்றியும் நல்லறிவு நல்குகின்றன. (உ—ம்) இயேசுவின் பிறப்பின் காலத்து மக்கள் தொகை கணக்கெடுப்புபற்றி கி.பி. 104ல் எழுதப்பட்ட ஓர் ஏட்டில் வாசிக்கின்றோம். தெசலோனிக் கேயர் நிருபத்தில் ஒழுங்கற்று நடப்பது என்பது துன்மார்க்க நடத்தையல்ல, வேலைக்குப் போகாதிருத்தலாகும் (absenteeism and not riotous behaviour) என கி.பி. 66ல் எழுதப்பட்ட ஒரு வேலை பழகும் ஒப்பந்தத்திலிருந்து (a contract of apprenticeship) தெளிவாகின்றது. அப். 17:6ல் 'உலகத்தைக் கலக்குகிறவர்கள்' என்பது 'புரட்சிக்காரர்கள்' என்றல்ல, 'தொந்தரவு செய்கின்றவர்கள்' (pests and not revolutionaries) என்று பொருள்படும். இவ்வாறு அநேக வார்த்தைகளின் அர்த்தங்கள் சிறப்பான முறையில் அறியப்படுகின்றன.

இவ்வாறு பல நூற்றாண்டுகளாக வளர்ந்து, பல எதிர்ப்புகளையும் கடந்து வந்திருக்கும் நமது திருமறை, இத்தனைச் சிறப்புள்ளதாயிருக்கின்றது என்பது அதின் மாண்பினை மிகைப் படுத்துகின்றதேயன்றி குறைப்பதில்லை.

## திருச்சபை ஏற்றுக்கொள்ளாத மறை நூல்கள் (Apocrypha)

இவ்வகையில் பதினான்கு நூல்கள் உள்ளன. இவைகள் ரோமைச் சபையினரின் திருமறையில் இடம் பெற்றுள்ளன. 1546ல் திரெந்து (Trent) என்ற இடத்தில் கூடிய ரோமைத் திருச்சபை மன்றம் இவைகளை ஏற்றுக்கொள்ளாதவர்களைச் சபித்தது.

இவைகள் பெரும்பாலும் கிறிஸ்துவுக்கு முந்தின இரண்டு நூற்றாண்டுகளில் எழுதப்பட்டவை. கி.பி. 100ல் ஜாம்னியாவில் கூடிய யூத சபை தங்களது திருமறையில் இவை இடம் பெறலாகா எனத் தீர்மானித்துவிட்டது. இவற்றில் '1,2 மக்கபியர்' என்பன வரலாற்று நூல்கள், 'தோபீத்', 'ஜுடித்' என்பவை சிறந்த காதல் கதைகள், 'மனாசேயின் ஜெபம்' என்பது ஓர் அழகிய சங்கீதம். இவை தவிர இரண்டு ஞான நூல்களும், எஸ்ட்ராஸ் என்ற பெயரால் இரண்டு தரிசன

நூல்களும், எஸ்தர், மூன்று வாலிபரின் பாடல், பெல்லும் டிராகனும் (Dragon), பாருக் என்பனவும் இடம்பெறுகின்றன.

மல்கியாவுக்கும் இயேசுவுக்கும் இடைப்பட்ட காலத்து வரலாறு, சமயம், கலாச்சாரம் ஆகியவை இந்நூல்களில் அறியக் கிடக்கின்றன. சீர்திருத்தச் சபைகளில் சில இந்நூல்களைத் தனி மக்கள் தங்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டியாகவும் அறநெறிபற்றி அறிவு பெற்று பயனடையவும் வாசிக்க இடமளிக்கின்றன. ஆனால் இவற்றை மாத்திரம் ஆதாரமாகக் கொண்டு இறையியல் வகுக்கச் சீர்திருத்தச் சபைகள் இடம் தருவதில்லை. இவை கடவுளின் ஆவியால் ஏவப்பட்டு எழுதப் பட்டவைகளல்ல என்று கருதப்படுவதனால் இவை திருநூல் பட்டியலில் சேர்க்கப்படவில்லை.

சென்ற அதிகாரங்களில் திருமறை சம்பந்தமான சில முக்கிய பிரச்சினைகளைக் கவனித்தோம். எல்லாப் பிரச்சினைகளுக்கும் நாம் திருப்திகரமான பதில்களைத் தர இயலவில்லை. இவற்றில் பல பற்றித் தொடர்ந்து ஆராய்ச்சி நடைபெற்று வருகின்றது. எனினும் இந்த அதிகாரங்களில் நாம் பெற்றுக்கொண்ட பொது அறிவினைத் துணைகொண்டு திருமறையினுள் புகுந்து அதன் பொருளடக்கத்தைக் கற்றுக்கொள்ள முயற்சிப்போம்.

# திருமறை மொழியாக்கங்கள்

## செப்துவஜிந்து (Septuagint)

திருமறையில் பழைய ஏற்பாட்டின் பெரும்பாகம் எபிரேய மொழியிலும், இறுதியில் எழுதப்பட்ட சில பாகங்கள் எபிரேயத்தோடு தொடர்புள்ள அரமேக் (Aramaic) மொழியிலும் எழுதப்பட்டன. பழைய ஏற்பாடு முதலில் யூதரது திருமறையாக இருந்தது. தங்களது வரலாற்றின் பிந்திய பாகத்தில் யூதர்கள் அரசியல் வணிகக் காரணங்களால் பல நாடுகளிலும் சிதறி வாசம்பண்ணினர்கள். இக்காலத்தில் கி.மு. 334 முதல் 324 வரை உலக முற்றுகையில் முனைந்து நின்ற கிரேக்க அரசனை மகா அலெக்சாந்தர் கிரேக்கக் கலாச்சாரத்தை, சிறப்பாகக் கிரேக்க மொழியினை எங்கும் பரப்பினன்.

எகிப்தில் வாழ்ந்த யூதர் தங்களது தாய்மொழியினை மறந்து, கிரேக்க மொழி பயில முற்பட்டனர். எனவே, கி.மு. 285 முதல் 247 வரை எகிப்தில் அரசுபுரிந்த ஃபிலடெல்ஃபஸ் (Philadelphus) என்ற அரசன் 72 யூத அறிஞரால் யூதத் திருமறையினை கிரேக்க மொழியில் மொழியாக்கம் செய்தான். இவர்கள் இப்பணியினை 72 நாட்களில் செய்து நிறைவேற்றினர் என்பது பாரம்பரியம். இதற்குக் கிரேக்க மொழியில் எழுபத்திரண்டு என்று பொருள்படும் 'செப்துவஜிந்து' (Septuagint) என்ற பெயர் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இதில் நமது திருமறையில் பழைய ஏற்பாட்டிலிருக்கும் முப்பத்தொன்பது நூல்களும், மறை நூல்கள் (*Apocrypha*) பதினன்கும் இடம் பெற்றுள்ளன.

## வல்கேத் (Vulgate)

நான்காம் நூற்ருண்டின் பிற்பகுதியில் நமது திருமறை முழுமைபெற்று திருச்சபையால் ஒப்புக்கொள்ளப்பட்டது.

இதில் புதிய ஏற்பாடு கிரேக்க மொழியில் எழுதப்பட்டிருந்தது: பழைய ஏற்பாடு செப்துவஜிந்தாகும். கிரேக்க மொழி அறியாதவர்களுக்காக இரண்டாம் நூற்றாண்டில் சீரியாக் (Syriac) மொழியிலும், மூன்றும் நூற்றாண்டில் காப்திக் (Coptic) மொழியிலும், தொடர்ந்து கோதிக் (Gothic), ஆர்மீனியன் (Armenian) மொழிகளிலும் மொழியாக்கங்கள் தோன்றின.

நான்காம் நூற்றாண்டில் ரோமாபுரியில் போப்பாண்டவரா யிருந்த டமேஸஸ் (Damasus) என்பவரின் வேண்டுகோளுக் கிணங்க ஜெரோம் என்னும் அறிஞர் கி.பி. 384ல் நான்கு நற்செய்தி நூல்களையும், 386ல் புதிய ஏற்பாடு முழுவதையும் லத்தீன் மொழியில் மொழியாக்கம் செய்தார். கி.பி. 404ல் பழைய ஏற்பாட்டை மூலமொழியான எபிரேயத்தி லிருந்து லத்தீன் மொழியில் மொழியாக்கம் செய்து முடிக்கவே திருமறை முழுவதும் லத்தீன் மொழியிலானது. இதற்கு வல்கேத் (Vulgate) என்று பெயர். இதன் பொருள், 'பொது மக்களுக்குரியது' என்பதாகும்.

### ஆரம்பகால ஜெர்மன், ஆங்கில மொழியாக்கங்கள்

சீர்திருத்தப் பெரியாரான மார்டின் லூத்தர், 1521ல் புதிய ஏற்பாட்டினையும் தொடர்ந்து திருமறை முழுவதையும் ஜெர்மன் மொழியில் மொழியாக்கம் செய்தார். இங்கிலாந் தில், முறையே 1525ல் திண்டேல் (Tyndale) என்பவரும், 1538ல் கவர்டேல் (Coverdale) என்பவரும் வெளியிட்ட மொழியாக்கங்களை ஆதாரமாகக்கொண்டு 1538ல் 'பேரா யர்களுடைய திருமறை' (*Bishops' Bible*) என்னும் ஆங்கில மொழி திருமறை வெளியிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து ரோமன் கத்தோலிக்க சபையினர் 1582ல் புதிய ஏற்பாட் டையும், 1609–1619ல் பழைய ஏற்பாட்டையும் ஆங்கில மொழியில் வெளியிட்டனர்.

சீர்திருத்தச் சபையினரின் முக்கிய ஆங்கில மொழி திருமறை 1610ம் ஆண்டில் இங்கிலாந்து நாட்டில் முதலாம் ஜேம்ஸ் (James I) என்பவர் அரசுபுரிந்த காலத்தில் வெளியிடப் பட்டது. இதனை 'அதிகாரம் பெற்ற திருப்புதல்' (Authorised Version) என்றழைக்கின்றனர்.

### மொழியாக்கத்தில் பிரச்சினைகள்

மொழியாக்கம் செய்கின்றவர்கள் மூலத்தைத் தவறின்றி மொழிபெயர்க்கவேண்டும். மொழி நடை அழகாயிருக்க வேண்டும். இலக்கண விதிப்படி வாக்கியங்கள் அமைக்கப் படவேண்டும். எழுத்தில் தெளிவு இருக்கவேண்டும். எனவே மொழியாக்கம் செய்கின்றவர்களுக்கு மூலமொழிகளில் புலமை இன்றியமையாதது. அவர்கள் எம்மொழியில் மொழியாக்கம் செய்கின்றனரோ அம்மொழியிலும் புலமை மிகத் தேவை. அவர்கள் பன்மொழிப் புலவர்களாயிருப்பின் இதர மொழி களில் எவ்வாறு அமைத்திருக்கின்றனர் என்ற அறிவு பயன் தரும். மேலும் மொழிபெயர்ப்பில் ஈடுபடுகின்றவர்கள் திரு மறையினை நன்கறிந்திருப்பதும், அதன் செய்தியில் பற்றுறுதி யுள்ளவராயிருப்பதும் இன்றியமையாதது. எனவே, திருமறை மொழியாக்கம் எளிய செயலன்று; இது பிரச்சினைகள் நிறைந்த ஒரு பணி என்பது தெளிவு.

## தமிழ் மொழியாக்கங்கள்

### சீகன்பால்க்

முதல் தமிழ் புதிய ஏற்பாடு 1715ம் ஆண்டு வெளியிடப் பட்டது. இவ்வரிய சாதனையில் வெற்றிபெற்றவர் தரங்கம் பாடியில் உழைத்த பர்தலோமேயு சீகன்பால்க் என்னும் ஜெர்மானிய நற்செய்தி பரப்புனராவர். அவர் தாமே இப்பணியினைச் செய்தபடியால் தகுந்த வார்த்தைகளைக் கண்டுபிடிப்பது அவருக்கு எளிதாயிருக்கவில்லை. எனினும், ஏற்கெனவே ரோமன் கத்தோலிக்கச் சபையினர் தங்களது வழிபாட்டிற்குத் தேவைப்பட்ட சில திருமறைப் பாகங்களைத் தமிழாக்கம் செய்திருந்தபடியால் அவை அவருக்கு உதவியா யிருந்தன.

அந்த மொழியாக்கத்தின் நிலையினை விளக்குவதற்கு ஓர் எடுத்துக்காட்டைக் காணலாம். யோ. 3:16—'அதெனன ருலச சறுவேசுான லொகததை யிததனே சினேகிதெ திருநத படியினுலெ தமககொணணுன குமாானேத தநது அவரை விசுவாசிககிற பொகளெலலாரும கெடடுபபொகாமல நிததிய சீவனேப பெறவெணுமெனறிருநதாா.' இதனைப்

பார்க்கும்போது இது நமக்கு வேடிக்கையாயிருப்பினும்; சீகன்பால்க் அரும்பாடுபட்டு இந்த மொழியாக்கத்தினைச் செய்து நிறைவேற்றினுர் என்பதை நாம் உணரவேண்டும்.

சீகன்பால்க் 1719ம் ஆண்டு மரணமடையவே அவர் செய்துவந்த பழைய ஏற்பாடு தமிழாக்கப் பணியினை அதே ஆண்டில் தரங்கம்பாடிக்கு வந்த மறைத்திரு. பெஞ்சமின் சூல்ச் என்பவர் மேற்கொண்டார். 1723ம் ஆண்டு மார்ச் திங்கள் 18ம் நாள் இப்பணியினைத் தொடங்கிய அவர், 1725ம் ஆண்டு நவம்பர் திங்கள் 24ம் நாள் இதனை நிறைவேற்றினுர்.

### பெப்ரீஷியஸ்

இவர் ஜெர்மனியைச் சேர்ந்தவர்; இவர் லுத்தரன் சபை அங்கத்தினர்; 1740ம் ஆண்டு இந்தியாவுக்கு நற்செய்திப் பரப்புனராக வந்து சேர்ந்தார். சீகன்பால்க் இரண்டு ஆண்டு களில் நற்செய்தி பரப்பும் நோக்கத்தோடு துரிதமாகத் தமது மொழியாக்கப் பணியினைச் செய்தார். ஆனுல் பெப்ரீஷியஸ் தமிழ்க் கிறிஸ்தவர்களுக்காக, மிகவும் கவனமாக, ஆத்திரப் படாமல் தமது பணியினைச் செய்தார். இவரது பழைய ஏற்பாட்டுத் தமிழ் மொழியாக்கம் முழுவதும் அவரது காலத்தில் வெளியிடப்படவில்லை. எனினும், 1777ல் ஆதி யாகமம் முதல் நியாயாதிபதிகள் வரையிலும், 1782ல் ரூத் முதல் யோபு வரையிலும், 1791ல் சங்கீதங்கள் தொடங்கி உன்னதப்பாட்டு வரையிலும், 1796ம் ஆண்டில் தீர்க்கதரிசன நூல்களும் பிரசுரிக்கப்பட்டன.

இந்த மொழியாக்கத்தின் தன்மைக்கு விளக்கமாகச் சில எடுத்துக்காட்டுகளைக் காணலாம்: ஆதி. 1:1,2—'ஆதியிலே பராபரன வானததையும பூமியையுஞ சிருஷடிததாா. பூமியோவெனில ரூபமறறதும வெறுமையுமாயிருநதது. ஆழததின மேலிருளுமாயிருநதது. ஆனுல பராபரனுடைய ஆவி தணணீாகளின மேலே அசைவாடிககொணடிருநதது.' சீகன்பால்க் செய்த மொழியாக்கத்தினைவிட இது சிறந்தது என்பது மிகத் தெளிவாக இதில் விளங்குகின்றது. இக் காலத்தில் தமிழ்ச் சுவிசேட லுத்தரன் சபையார் இந்த மொழியாக்கத்தையே உபயோகிக்கின்றனர்.

### இரேனியஸ்

1804ம் ஆண்டில் இங்கிலாந்தில் ஆரம்பிக்கப்பட்ட பிரித்தானிய திருமறைக் கழகத்தின் (British Bible Society) கிளை ஒன்று 1820ல் சென்னையில் நிறுவப்பட்டது. தமிழில் திருமறையை அச்சிட்டு வெளியாக்க விரும்பிய திருமறைக் கழகத்தார் இரேனியஸ் (Rhenius) போதகரிடம் இப்பணியினை ஒப்படைத்தனர். ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த இவர் 1814ம் ஆண்டு சர்ச் மிஷன் சங்கத்தின் ஊழியராக இந்தியா விற்கு வந்தார். இவர் மொழிபெயர்த்த நான்கு நற்செய்தி நூல்களும், அப்போஸ்தலர் நடபடிகளும் 1827லும் புதிய ஏற்பாடு முழுவதும் 1833லும் அச்சிடப்பட்டன. 1840ல் முதல் தடவையாக பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும் சேர்ந்த ஒரு பிரதியாகத் திருமறை வெளியிடப்பட்டது. இதில் பெப்ரீஷியஸ் போதகருடைய பழைய ஏற்பாட்டு மொழியாக்கமும், இரேனியஸ் ஐயருடைய புதிய ஏற்பாட்டு மொழியாக்கமும் அடங்கியிருந்தது. இரேனியஸ் ஐயர் தொடங்கிய பழைய ஏற்பாட்டுத் தமிழாக்கம் ஆதியாகமம் முதல் நியாயாதிபதி வரையிலும், சங்கீதம், ஏசாயா, தானி யேல் என்னும் நூல்களோடு முடிவுற்றது.

### பெர்சிவல் (Percival) மொழியாக்கம்

1835ம் ஆண்டு நிறுவப்பட்ட யாழ்ப்பாண திருமறைக் கழக கிளைச் சங்கம் பழைய மொழியாக்கங்களைத் திருத்தி புதிய திருப்புதல் ஒன்று எழுத 5 பேர் கொண்ட ஒரு குழுவினை 1839ல் நியமித்தது. இவர்களில் ஒருவர் பெர்சிவல் என்பவர். இப்போதகரின் அயரா உழைப்பினால் 1847 அல்லது 1848ம் ஆண்டில் திருமறைத் தமிழாக்கப் பணி முடிவுற்றது. இதனைச் சென்னைத் திருமறைக் கழகத்தினர் ஏற்றுக்கொள்ள மிகவும் தயக்கமடைந்தனர்.

### பவர் (Bower) மொழியாக்கம் அல்லது ஐக்கியத் திருப்புதல்

இதுவே இக்காலத்தில் லுத்தரன் சபைகளைத் தவிர ஏனைய சபைகளால் உபயோகிக்கப்பட்டு வருகின்றது. திருச்சபை பொதுவாக ஒப்புக்கொண்ட தமிழ்த் திருமறை இல்லாத படியால் பிறிதொரு தமிழாக்கம் தேவையென சென்னைத்

திருமறைக் கழகம் உணர்ந்தது. இதன் பலனாக பவர் (Bower) போதகரின் தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டது. இக்குழுவினரின் முயற்சியினால் 1871ல் முழுத் திருமறை அச்சிடப்பட்டு வெளியாக்கப்பட்டது. இப்பணியில் பல நற்செய்தி பரப்புக் கழகங்கள் பங்குபெற்றபடியால், இதற்கு 'ஐக்கிய மொழியாக்கம்' என்று பெயர் வழங்கப்படுகிறது.

## லார்சன் மொழியாக்கம்

ஐக்கிய மொழிபெயர்ப்பில் பல குறைகள் இருப்பதைத் திருச்சபைத் தலைவர்கள் உணர்ந்தனர். திருமறை நூல்களின் மூல ஏடுகள் பல புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டபடியால், ஏற்றுக்கொள்ளப்பட்ட மொழியாக்கம் என்ற (Authorised Version) 1611ம் ஆண்டின் ஆங்கில மொழியாக்கத்தைப் புதுப்பிக்க 1870ல் 28 பேர் கொண்ட ஒரு குழு நியமிக்கப்பட்டது. இக்குழு 1881ல் புதிய ஏற்பாட்டையும், 1885ல் பழைய ஏற்பாட்டையும் ஆங்கிலத்தில் வெளியிட்டது. பவர் திருமறை 1611ம் ஆண்டின் ஆங்கில மொழியாக்கத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தமையால், அதனையும் திருத்துவது தேவையாயிற்று. 1923ம் ஆண்டு பெங்களூர் இறையியல் கல்லூரித் தலைவராயிருந்த L. P. லார்சன் ஐயர் இப்பணியினை மேற்கொள்ளவேண்டுமெனத் திருமறைக் கழகம் திட்டமிட்டது. 1924ம் ஆண்டு இப்பணி தொடங்கப்பட்டது. 1927ம் ஆண்டு ஏப்ரல் மாதம் புதிய ஏற்பாடு முழுவதும் மொழியாக்கம் செய்து முடிக்கப்பட்டது. புதிய மொழியாக்கத்திற்கு எதிர்ப்பு வலுத்தது. ஏனெனில், பல உபதேச மாற்றங்கள் செய்யப்பட்டிருப்பதாகப் பலர் கருதினர். லார்சன் ஐயர் கிறிஸ்துவின் தெய்வீகத்தை மறுக்கும் சிந்தனைக் குழுவைச் சார்ந்தவர் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டது. எனினும் பழைய ஏற்பாட்டு மொழியாக்க வேலை தொடர்ந்து நடைபெற்றது. 1936ம் ஆண்டில் முழு திருமறை வெளியிடப்பட்டது. இந்நூல் மிகவும் கவனமாகச் செய்யப்பட்ட போதிலும், பொது அங்கீகாரம் பெறவில்லை என்பதனை மறத்தலாகாது.

### மோனகன் மொழியாக்கம்

லார்சன் மொழியாக்கம் திருத்தப்படவேண்டுமென்று பொதுவாகக் கருதப்பட்டது. 1939ம் ஆண்டு பிப்ருவரி மாதம் இந்தியத் திருமறைக் கழகம் இதற்கு அனுகூலமாக ஒரு தீர்மானம் செய்தது. முதற்கண் புதிய ஏற்பாட்டினை மொழியாக்கம் செய்ய திரு. C. H. மோனகன் என்பவரின் தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டது. இக்குழுவில் பேராயர்கள் ஸ்தேவான் நீல், அசரியா ஆகியோர் பணிபுரிந்தனர். 1941ம் ஆண்டு புதிய ஏற்பாட்டு மொழியாக்கம் நிறைவேறியது. பழைய ஏற்பாட்டு மொழியாக்கத்திற்கு உதவியாக எபிரேய மொழிப் புலவர்களான M. H. ஹாரிசன் அவர்களும், மார்க்கஸ் வார்ட் அவர்களும் இக்குழுவோடு சேர்க்கப்பட்டனர். பழைய ஏற்பாட்டின் மொழியாக்கம் 1946ல் நிறைவேறியது. 1949ம் ஆண்டு புதிய முழுத் திருமறை வெளியாயிற்று. இதில் பழைய ஏற்பாட்டில் 1064 பக்கங்களும், புதிய ஏற்பாட்டில் 315 பக்கங்களும் இருந்தன. இதன் புதிய பதிப்பு ஒன்று சில திருத்தங்களுடன் 1954ல் வெளிவந்தது. இந்திய சுவிசேட லூத்தரன் சபையினர் இதனை உபயோகிக்கின்றனர். இம்மொழியாக்கத்தில் பவர் மொழியாக்கத்தின் பல குறைகள் தவிர்க்கப்பட்டுள்ளன. எனினும் வடமொழிக் கலப்பும், கிறிஸ்தவத் தமிழ் உபயோகமும் இதின் குறைகளெனக் கூறப்படுகின்றது. (உ–ம்) ஜீவன், ஸ்நானம், 'கட்டளை' என்பதற்குக் 'கற்பனை.'

### ரோமன் சபை மொழியாக்கங்கள்

சீர்திருத்த சபையில் மொழியாக்கப் பணி நடைபெற்ற காலத்தில், ரோமன் சபையிலும் இதே முயற்சி நடைபெற்றது என்பது குறிப்பிடத்தகும். முதல் ரோமன் திருச்சபைப் புதிய ஏற்பாடு 1857லும், அடுத்த மொழியாக்கம் 1890லும், பழைய ஏற்பாடு 1904லும், முழுத் திருமறை 1960லும் வெளியிடப்பட்டன.

சமீப காலத்தில் ரோமன் கத்தோலிக்கச் சபையினரால் வெளியிடப்பட்டுள்ள புதிய ஏற்பாட்டின் மொழியாக்கம் ஒன்று சிறப்புமிக்கது என்று பலராலும் பாராட்டப்படுகின்றது. தற்காலத் தமிழில் உயரிய நடைமுறையில்,

பொருள் விளக்கங்களுடன் இது வெளியிடப்பட்டுள்ளது. சாதாரண மக்களும் திருமறையினைப் படித்துப் புரிந்து கொள்ளவேண்டும் என்ற சிந்தனை ரோமன் கத்தோலிக்கச் சபையிலும் வலுப்பெற்று அதிகாரபூர்வமாக ஆதரவும் பெற்றுள்ளது.

திருமறை மொழியாக்கம் தொடர்ந்து நடைபெறும் ஒரு பணியாகும். ரோமன் கத்தோலிக்கச் சபையிலும், சீர்திருத்தச் சபைகளிலும் புதிய மொழியாக்கங்கள் செய்யப்பட்டு வருகின்றன. காலஞ் செல்லுந்தோறும் சொற்கள் பொருள் இழந்து புதிய பொருள் ஏற்பதாலும், மொழிநடையில் மாற்றங்கள் ஏற்படுவதாலும், மக்கள் புரிந்துகொள்ளும் முறையில் திருமறையைக் கொடுக்கவேண்டியதிருப்பதாலும், மொழியாக்கப் பணி தொடர்ந்து நடைபெறும் ஒன்றாகும்.

பாகம் 3

# திருமறையின் பொருளடக்கம்

# திட்டம்

இதுவரை நாம் படித்ததிலிருந்து இரண்டு உண்மைகள் விளங்குகின்றன. ஒன்று விஞ்ஞான முறையிலும் இலக்கிய வரலாற்று அடிப்படையிலும் திருமறையைத் திறனாய்வு செய்த தினுல் திருமறை பெருமளவில் உண்மையான வரலாற்று நிகழ்ச்சிகளின் நூல் என்பது உறுதியாகிறது. திறனாய்வு செய்வதனுல் திருமறை முழுவதும் வெறும் கட்டுக்கதை, இயேசு என்று ஒருவர் வாழ்ந்ததேயில்லை என்ற முடிவுக்கு வரத் தேவையில்லை. இரண்டாவது இந்த வரலாற்று நிகழ்ச்சிகள் நம்மைப்பற்றியும் அகிலத்தில் மனிதனது இடத்தைப்பற்றியும் சில முடிவுகளை எடுத்துக்காட்டும் நோக்கத்தோடு விளக்கப்படு கின்றன என்பதாகும். ஏதோ எழுதவேண்டும் என்பதற்காக இவைகள் எழுதப்படாமல், படிக்கின்றவருக்கு ஒரு சவாலாக இது எழுதப்பட்டுள்ளது. எலியா கூறினதுபோல் (1 இரா. 18:21), 'கர்த்தர் தெய்வமானுல் அவரைப் பின்பற்றுங்கள்; பாகால் தெய்வமானுல் அவனைப் பின்பற்றுங்கள்' என்பதே அந்த அறைகூவல். திருமறையை எழுதியவர்களின் எதிர் பார்ப்பின்படி அவர்களது விளக்கத்தை ஏற்றுக்கொண்டவர் களின் மனப்போக்கையும், செயல்களையும் அது மாற்றி யமைத்துவிடுகின்றது.

ஆகவே, முதற்கண் திருமறை முழுவதிலும் விளங்கும் சித்திரத்தின் முழுமையையும் அது எழுதப்பட்டிருக்கும் கருத்துக் கோணத்தையும் (point of view) அறியவேண்டும். திருமறை பலரால் பல காலங்களில் குறிப்பிட்ட பல சந்தர்ப்பங் களில் எழுதப்பட்ட நூல்களின் இசைவான இணைப்பு என முன்னரே கூறியுள்ளோம். இந்த இசைவு கடவுளையும் மனிதனை யும்பற்றிய சில உறுதியான நம்பிக்கைகளில் நிலவுகின்றது. இந்த உறுதியான நம்பிக்கை, அன்றாட வாழ்க்கையின் குழப் பங்கள், பின்னல்கள் மத்தியிலும் செயல்படும் வல்லமை

யுள்ள இறைவன் ஒருவர் இருக்கின்முர், அகிலத்தின் இருக்கையும் இயக்கமும் அவரைச் சார்ந்திருக்கின்றன, இந்த வாழ்க்கையினைப்பற்றிய அவருடைய நோக்கம் வரலாற்றிலே வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது, அவரது சேவையிலேயே நாடுகளும் மக்களும் ஒருவருக்கொருவரும் அவரோடும் இசைவுற்று வாழ இயலும் என்பதாகும்.

ஓரளவு இதர சமயங்கள் பலவற்றிலும் இந்த உண்மை காணக்கிடக்கின்றபடியால் திருமறையில் என்ன சிறப்பு இருக்கின்றது என்று கேட்கலாம். சமயங்கள் பல மனிதனுக்கும் கடவுளுக்கும், கடவுளுக்கும் மனிதனுக்குமுள்ள உறவைப் பற்றிக் கூறுகின்றன. எனினும், கடவுளைப்பற்றியும் மனிதனைப் பற்றியும், மனிதனுக்கும் கடவுளுக்கும், மனிதனுக்கும் மனிதனுக்கும் உள்ள உறவுபற்றித் திருமறை கூறுவது மற்றச் சமயங்கள் இவைபற்றிக் கூறுவதைவிட மிகவும் வித்தியாசமானவை, உயரியவை. இதர சமயங்களுக்கும் திருமறையின் சமயத்துக்குமுள்ள முக்கிய வித்தியாசம், இயேசுகிறிஸ்துவின் மைய இடமும் கடவுளின் மக்களாகிய திருச்சபையின் தோற்றமும் இயக்கமும் எனலாம்.

## திருமறை முழுமையைப் பார்க்க

கிறிஸ்தவக் கண்ணேட்டத்தில் திருமறையைப் படிக்கும்போது கிறிஸ்துவுக்கு முக்கிய இடம் அளிக்கவேண்டும். ஆனால், ஒரு பொருளில் திருமறை ஒரே நூல். இதில் ஒரு ஒருமைப்பாடு நிலவுகின்றது என நாம் கூறியுள்ளோம். ஆகையால், ஆதியாகமத்திலிருந்தே ஆரம்பிக்கவேண்டும்.

ஒரு பொருளில் இது ஒரு தெய்வீக நாடகம்போல் (divine drama) காட்சியளிக்கின்றது. நித்தியத்தைப் பின்னணியாகக்கொண்டு இது நிகழ்கின்றது. ஆதியாகமம் முதல் பதினொரு அதிகாரங்கள் இதன் ஆரம்பக் கட்டம் (prologue). தரிசன நூல் இதன் இறுதிக் கட்டம் (epilogue). இடையில் மூன்று அங்கங்கள்—இஸ்ரவேலரது அழைப்பும் தோல்வியும், கிறிஸ்து பெருமானின் வாழ்க்கை, கிறிஸ்தவத் திருச்சபை நிறுவப்படுதல் என்பன.

## ஆரம்பக் கட்டம்

திருமறை முக்கியமாகக் கடவுளைப்பற்றிக் கூறும் ஒரு நூல். இந்தத் திட்டம் முழுவதிலும் அவரது செயல்கள் விவரிக்கப்

படுகின்றன. அவற்றிலிருந்து அவர் யார் என்பதனை நாம் அறியலாம்.

'ஆதியிலே கடவுள்' என்று திருமறை ஆரம்பிக்கின்றது. அதைத் தொடர்ந்து படைப்புப்பற்றிய வரலாறுகள்மூலம் மூன்று இறையியல் உண்மைகள் தரப்படுகின்றன:

1. கடவுள் இருப்பதினாலேயே அகிலம் இருக்கின்றது.

2. மற்ற உயிரினங்களைவிட வித்தியாசமான மனிதன் கடவுளோடு நல்லுறவுகொண்டு வாழ்க்கை நடத்தும் தன்மையும் நோக்கமும் உள்ளவனாகப் படைக்கப்பட்டுள்ளான்.

3. உலகமும் அதிலுள்ள அனைத்தும் கடவுளுக்கு மிகவும் அருமையானவை, பொருள் நிறைந்தவை.

இதை எழுதிய P (திருமறையின் முதல் ஐந்து நூல்களின் ஆக்கியோர்களில் ஒருவர் P) ஆசிரியனுக்கு உலகம் படைக்கப்பட்ட முறையினைப்பற்றிச் சிறப்பான வெளிப்படுத்தல் எதுவும் அருளப்படவில்லை. ஆனால், தனது மக்களின் வரலாற்றிலிருந்து, தன் மக்கள் அறிந்துகொண்டதுபோலவே அவனும் மேற்கூறிய உண்மைகளை அறிந்தான். இந்த உண்மைகளை அவனுக்குக் கிடைத்த படைப்புப்பற்றிய வரலாற்றின்மூலம் அவன் எழுதிவைக்கின்றான். திருமறையின் படைப்புப்பற்றிய வரலாற்றிற்கும் பாபிலோனிய படைப்புக் கதைக்கும் சில ஒற்றுமைகள் இருக்கின்றன என்று அறிவது முக்கியமன்று. ஆனால், திருமறையின் ஆரம்பத்திலேயே, உலகம் ஏதோ எதேச்சையாகத் தோன்றிய ஒன்றன்று, அது நோக்கமற்ற ஒரு விதியின் கரத்தில் இயங்கவில்லை, அது ஓர் ஆள் சாராத பரிணாம இயல்பூக்கமுமல்ல; ஆனால் அது கடவுளினால் படைக்கப்பட்டு ஆளப்பட்டு வருகின்றது என்ற உண்மை தரப்படுவதே சிறப்பாகும். அக்கடவுளின் தன்மை, தொடர்ந்து நடைபெறவிருக்கும் அவரது செயல்களிலே காணக்கிடக்கின்றது.

## மனிதனும் பாவமும்

ஆதியாகமம் முதல் இரு அதிகாரங்களில் உலகினைப்பற்றி இறைவனின் திருச்சித்தம் யாது என்று விவரிக்கப்படுகின்றது. மனிதனைத் தமது சாயலில் படைத்த இறைவன் அவனது வாழ்க்கைக்குப் பயனும் மகிழ்ச்சியுமாக பல பொருட்களைப்

படைப்பிலே அமைத்துள்ளார். மனிதன் படைக்கப்பட்ட வைகளை அனுபவிப்பதோடு தன்னை உண்டாக்கினவரோடு நல்லுறவுகொண்டு அவருக்குக்கீழ்ப்படிந்திருக்கவேண்டியவன்.

ஆனால், மனிதனின் சுயசித்தத் துர்ப்பிரயோகத்தினாலும், பெருமையினாலும், கீழ்ப்படியாமையினாலும் அவனிலிருந்த கடவுளின் சாயல் சிதைகின்றது. கடவுளின் சாயல் என்பது உடற்கூறு ஒற்றுமையன்று. இது மனிதனுக்குக் கடவுள் கொடுத்த சுயாதீனமாகும். அதாவது கடவுளோடு உறவாடவும் இயற்கையை அடக்கி ஆளவும், அவன் இயற்கையின் ஒரு பாகமாயிருப்பினும் கடவுளின் வார்த்தையைக் கேட்டு உணர்ந்து கீழ்ப்படிந்து இயற்கைக்கு அப்பாற்பட்டவனாக வாழ்வதற்குரிய ஆற்றலாகும். இது கடவுளோடு மனிதன் கொள்ளும் ஒப்புயர்வற்ற உறவுநிலையாகும்.

இந்தச் சாயலை மனிதன் இழந்த அல்லது இந்தச் சாயல் மனிதனில் சிதைந்த காலம் எது என்ற கேள்வி திருமறையின் தன்மைக்கு ஏற்புடைத்தன்று. திருமறையில் இதனைச் சித்திர முறையில் விவரித்தவர்கள் அன்று தாங்கள் கண்ட மனித நிலையை விவரித்தனரேயன்றி கால ஒழுங்கில் இது எப்போது நேரிட்டது என்றுகூற முற்படவில்லை. ஆதாம், அதாவது மனிதன், வாழ்க்கைக்கும் வரலாற்றுக்கும் இறைவனை மையமாகக்கொண்டு வாழாமல் தன்னை மையமாகக்கொள்ளும் பெருமையே பாவமாகும். அதுவே பாவத்தைப் பிறப்பிக்கின்றது. இதுவே அவனது வீழ்ச்சி. 'நீங்கள் தேவர்களாவீர்கள்' என்று சர்ப்பம் கூறினதும் ஏவாள் பழத்தைப் பறித்துப் புசித்தாள் என்பதின் பொருள் இதுவே. மனிதன் தனக்கும் வரலாற்றுக்கும் தானே ஆட்டிப்படைக்கும் இறைவனாயிருக்க முயற்சிக்கின்றான் என்பதே இதன் பொருள்.

இது அவனுக்கு விலக்கப்பட்ட கனி, அதை அவன் புசிக்கின்றான். இறைவனுக்கும் அவனுக்குமுள்ள உறவு முறிகின்றது. தொடர்ந்து மூன்றும் அதிகாரம் முதல் பதினோராம் அதிகாரம் வரை அநேக வரலாறுகள் மூலமாக உலகில் பாவம் எவ்வாறு பெருகுகின்றது என்று கூறப்படுகின்றது. (உ–ம்) காயீன் ஆபேலைக் கொலை செய்தல், தேவகுமாரர் மனிதப் பெண்களை இச்சித்தல், பாபேல் கோபுரம் முதலியன ஆழமான உண்மைகளடங்கிய வரலாறுகள்.

இவை எழுதப்பட்ட காலத்தும், எக்காலத்தும், இக்காலத்தும், கீழ்ப்படியாமையாகத் தொடங்கும் பாவம் கொலையாக வளர்ந்துவிடுகின்றது. மனிதனின் கற்பனையில் பாவம் கலந்துவிடுகின்றது. 'அவன் இருதயத்து நினைவுகளும் உத்தேசங்களும் எப்போதும் பொல்லாதவைகளே' (ஆதி. 6:5). எனவே, ஆதியாகமத்தின் ஆரம்ப அதிகாரங்களில் மனிதன் கீழ்ப்படியாதவனுக, சுய சித்தத்தின்படி நடக்கிறவனுக, கொலைபாதகனுக, குடிகாரனுக, ஒழுக்கமற்றவனுகக் காட்சியளிக்கின்றுன். இது எக்காலத்தும் மனிதனைப்பற்றிய உண்மையான சித்திரம் என்பதனை யாரால் மறுக்க இயலும்?

## பாவமும் நியாயத்தீர்ப்பும்

திருமறையின் முக்கிய பொருள்களில் ஒன்றுகிய நியாயத்தீர்ப்பு நோவாவின் கதையில் தரப்படுகின்றது. நியாயத்தீர்ப்பின் நியதி ஒன்றினை இறைவன் ஒழுக்க உலகினுள் அமைத்துள்ளார். மனிதனது தீய செயல்கள் இயல்பாகவே அவன் மேல் நியாயமான தண்டனையை வருவிக்கின்றன (ஆதி. 6:7). குளத்தில் எறியப்பட்ட கல் இயல்பாகவே அலை இயக்கத்தை உண்டாக்குவதுபோல பாவம் தண்டனையைத் தானே தருவித்துக்கொள்ளுகின்றது. ஒழுக்கமற்ற வாழ்க்கை, ஆரோக்கிய விதிகளுக்கு விரோதமான செயல்கள் ஆகியவற்றின் பலனுக உடல்நலம் கெடுகின்றது உண்மையன்றே! நோவாவின் பேழை பற்றிய கதை பாபிலோனிய நாட்டிலிருந்து வந்தது. ஆனுல், அக்கதையின் இழிவான அம்சங்கள் அகற்றப்பட்டு எபிரேயரின் ஒரே கடவுள் விசுவாசத்துக்கும் பொருளுக்கும் ஏற்ப மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

## நியாயத்தீர்ப்பும் இறையருளும்

கடவுளின் நியாயத்தீர்ப்பு எப்படித் தவிர்க்க இயலாததோ அப்படியே அவரது இரக்கமும் தவிர்க்க இயலாதது. பாவத்தினிமித்தம் மக்கள் அழிக்கப்பட்டாலும் நீதிமானுன நோவாவினிமித்தம் அகிலம் அழிக்கப்படவில்லை. புதிய ஆரம்பத்திற்குரிய வாய்ப்பு இறைவனின் பொருளால் அளிக்கப்படுகின்றது. மனிதன் பாவம் செய்தபோதிலும் அவன் இறைவனின் அருள் வட்டத்தினுள்ளேயிருந்து தண்டனையை அனுபவிக்

கின்ருன். ஆதி. 9:12ல் இந்த உடன்படிக்கையின் அடையாளமாக ஒழுங்குள்ள ஓர் உலகும் அதின் செழிப்பும் அளிக்கப்படுகின்றன. இதன் பொருள் மனிதன் நன்றியுள்ளவனுகத் தன் வாழ்க்கைக்கு இறைவனை மையமாகக்கொண்டு பிறரது உரிமைகளை மதித்து வாழவேண்டும் என்பதாகும். மனிதன் சுய மையத்திலிருந்தும் கீழ்ப்படியாமையின் தோல்வியிலிருந்தும் விடுதலையடைந்து அவன் எப்படியிருக்கப் படைக்கப்பட்டானே அப்படி ஆகவேண்டும் என்பதனை அது காண்பிக்கின்றது. கடவுள் மனிதனுக்காக அக்கறைப்படுகின்ருர் என்பதே அதின் செய்தி.

எனவே, திருமறையின் திட்டம் ஆதியாகமம் முதல் பதினெரு அதிகாரங்களிலும் தரப்படுகின்றது. இறைவன் அனைத்தையும் படைத்து மனிதனையும் தன் சாயலில் படைத்துத் தன்னேடு நல்லுறவுகொண்டு வாழ்க்கை நடத்தும்படி வைக்கின்ருர். அவனே தன்னை வாழ்க்கைக்கு மையமாக வைத்து வாழ்க்கை நடத்த முற்பட்டுக் கீழ்ப்படியாமையில் ஈடுபடுகின்ருன். அதிலிருந்து பாவம் பெருகுகின்றது. ஆனுல், படைக்கும் ஆண்டவர் பாதுகாக்கிறவரும் மீட்பருமாக இருக்கிறபடியால் அவர் மனிதனையும் அவனது வரலாற்றையும் மீட்கும் திட்டத்தில் உடனேயே ஈடுபடுகின்ருர். இந்த மீட்பின் செயல் எவ்வாறு நடைபெறுகின்றது என்பதனைத் திருமறையின் எஞ்சிய பாகம் விளக்குகின்றது.

# இஸ்ரவேலரைத் தேர்ந்தெடுத்தல்

முந்தின அதிகாரத்தில் கடவுளின் திட்டத்தைப் பார்த்தோம். பாவத்தில் வாழும் மனுக்குலத்தை மீட்பதே இந்தத் திட்டம். மனுக்குலத்தின் பிரதிநிதியான நோவாவோடே செய்த உடன்படிக்கை முழு மனுக்குலத்தினிடம் கடவுளின் அக்கறையை அறிவிக்கின்றது. மனுக்குலத்தைத் தம்மிடம் ஒப்புரவாக்கி, மக்கள் ஒருவருக்கொருவர் நல்லுறவு ஏற்படுத்துவது தமது சித்தம் என்பது அதில் தெரிவிக்கப்படுகின்றது. இதை அவர் நிறைவேற்ற உபயோகிக்கும் முறையை இந்த அதிகாரத்தில் கவனிப்போம்.

### இஸ்ரவேலரும் உலகத் தோற்றமும்

ஏற்கெனவே கூறப்பட்டதுபோல் தாவீதரசன் காலத்துக்கு முன்னர் இஸ்ரவேல் மக்கள் தங்கள் வரலாற்றினை எழுதி வைக்கவில்லை. கி.மு. பத்தாம் நூற்ருண்டாகிய தாவீது—சாலொமோன் காலத்திலேயே தாங்கள் கடவுளால் ஒரு சிறப்பு நோக்கத்தோடே தெரிந்துகொள்ளப்பட்ட மக்கள் என்ற நம்பிக்கையின் (conviction) உறுதியினுல், ஏற்கெனவே வாய்மொழிப் பாரம்பரியங்களாக நிலவிய முற்பிதாக்கள் வரலாற்றினை இந்த உறுதியின் கோணத்தில் அமைத்து எழுதத் தொடங்கினுர்கள் இஸ்ரவேலர்.

இவ்விதம், P என்ற எழுத்தால் குறிப்பிடப்படும் வரலாற்ருசிரியன் அல்லது ஆக்கியோர் குழுவினர், கடவுளால் தெரிந்துகொள்ளப்பட்ட மக்களாகிய மீட்கும் சமூகத்துக்கும் உலக வரலாற்றின் ஆரம்பத்துக்கும் ஒரு தொடர்பு இருக்கிறது என்று உணருகின்றனர். ஏனெனில், மனுக்குலம் முழுவதுக்கும் கடவுளின் மீட்பை வழங்கும் கருவியாகவே யாவே அவர்களைத் தெரிந்துகொண்டார்.

## ஆபிரகாம்

எனவே, கடவுளின் திட்டத்தின் அறிமுக பாகமாகிய ஆதியாகமம் 1—11 வரையுள்ள பாகத்தின் இறுதியிலே, உலகின் எல்லா மக்களின் கூட்டத்திலிருந்து ஒரு மக்கள் தொகுதியைக் கடவுள் தெரிந்துகொண்டார் என்று காண்பிக்கும்படி வம்ச வரலாறுகளின் அட்டவணை ஒன்று தரப்படுகின்றது. நோவாவின் மூன்று மக்களும் உலகின் மூன்று இனங்களின் பிரதிநிதிகள். இவற்றில் ஒன்று செமித்திய இனம். இந்த இனத்தின் ஒரு பிரிவாகிய எபிரேயரை கடவுள் தெரிந்து கொள்கின்றார். எபிரேயரில் தேராகு என்பவருடைய வம்சத்தைத் தெரிந்துகொண்டு இஸ்ரவேலின் கோத்திரங்களின் பிதாவாகிய ஆபிரகாமை அதிலிருந்து தெரிந்துகொள்ளுகிறார்.

## ஆபிரகாம் மூலம் ஒரு மக்கள் தொகுதி

ஆபிரகாம் மூலம் கடவுள் ஒரு மக்கள் தொகுதியை எழுப்பி அவர்களைத் தமது சித்தத்தை நிறைவேற்றும்படி தம்மோடு சிறப்பு உறவுகொண்ட மக்களாக அமைத்துக் கொள்கின்றார். ஆகவே, ஆபிரகாமைத் தேர்ந்தெடுக்கும் செயல் அனைத்துலக (universal) நோக்கம் கொண்டதாகும். "நீ என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தபடியினால், பூமியிலுள்ள சகல ஜாதிகளும் உன் சந்ததியின் ஆசீர்வாதத்தைச் சொல்லித் தங்களை வாழ்த்திக்கொள்வார்கள்' (ஆதி. 22:18). இதர மக்களுக்கு ஒளியாக இஸ்ரவேலர் தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்ற இறைவாக்காளரின் கூற்று இங்கே அரும்புகின்றது. ஆபிரகாமோடே செய்யப்பட்ட உடன்படிக்கை நோவா மூலம் மனுக்குலம் முழுவதோடும் செய்யப்பட்ட உடன்படிக்கையை நிறைவேற்றிற்று. ஆபிரகாமோடே செய்யப்பட்ட உடன்படிக்கை இயேசுகிறிஸ்துவில் நிறைவேறிற்று (கலா. 3:8).

ஆகவே, முற்பிதாக்களைப்பற்றிய வரலாறுகள் இந்த அழைப்பின் கோணத்திலிருந்து எழுதப்பட்டன. முற்பிதாக்களின் வரலாற்றில் கதைகள் பல இடம்பெற்றுள்ளன. ஆபிரகாம் என்று ஒருவர் வாழ்ந்ததாகப் பழம்பொருள் ஆராய்ச்சியினால் இதுவரை நிரூபிக்க இயலாதபடியால் அவர் வரலாற்று மனிதன் என்பதனை மறுக்கத் தேவையில்லை.

ஆபிரகாம் என்று ஒரு பெரியார் இஸ்ரவேலரது வரலாற்றிலே வாழ்ந்ததில்லே என்று மறுப்பதற்குச் சான்றுகளும் இல்லே. எந்த நாட்டின் வரலாற்றிலும் கடந்தகாலப் பெருந்தலேவர்களின் சிறப்பு வரலாற்ருேடே பல கதைகள் சேர்த்துக் கூறப்படுவது அக்காலத்தின் இயல்பே. ஆபிரகாமைப்பற்றிக் கூறியுள்ளவை வரலாற்று அடிப்படையில் உண்மையானவை என்று பழம்பொருள் ஆராய்ச்சியும் பொதுவான முறையில் உறுதிப்படுத்துகின்றது.

கி.மு. 2000 ஆண்டு கட்டத்தில் மத்திய கிழக்கில் (Middle East) நாம் முதலில் எபிரேய மக்களேச் சந்திக்கின்ருேம். மொசெப்பெத்தோமியாவில் ஊர் என்ற இடத்தில் அவர்கள் வரலாற்றிலே காட்சியளிக்கின்றனர். அரேபிய வனந்தரத்திலிருந்து செழிப்பான இடம் தேடி வந்த பல மக்கள் கூட்டங்களில் இவர்களும் (எமோரியர், கானனியர், பெனிக்கேயர்) ஒரு கூட்டமாயிருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் பலர் கூறுகின்றனர். நாடோடிகளான இந்த மக்கள் மிகவும் வளர்ச்சியடைந்த மொசெப்பெத்தோமிய (பாபிலோனியா) நாகரிகத்தை இங்குச் சந்திக்கின்றனர்.

வரலாற்று அறிவின்படி சிந்தித்தால் ஊர் என்ற இடத்திலே தேராகும் அவனேச் சேர்ந்தவர்களும் சில காலம் மாத்திரமே வாழ்ந்திருக்கக்கூடும். ஏகதேசம் கி.மு. 1960 காலக்கட்டத்தில் ஏதோமியர் ஊர் என்ற இடத்திற்குப் படையெடுத்து வந்ததாக வரலாறு கூறுகின்றது. இக்காலத்திலேயே தேராகுவும் அவனேச் சேர்ந்தவர்களும் மொசெப்பெத்தோமியாவுக்கு வடமேற்கிலுள்ள ஆரானுக்குப் பயணமாயினர் எனலாம்.

ஆரானிலிருந்துதான் சரியானபடி வரலாறு தொடங்குகின்றது. ஏனெனில், இங்கிருந்துதான் தனது வம்சத்தின் தலேவனுன ஆபிரகாம் தெற்கு நோக்கி கானனுக்குள் தன் பரிவாரத்தோடே பயணம் செய்கின்ருன் (ஆதி. 12:1). அதுமுதல் அது அவர்களுக்கு வாக்குத்தத்த நாடாயிற்று.

## அடுத்த நானூறு ஆண்டுகள்

ஆபிரகாம் ஆரானிலிருந்து புறப்பட்டது முதல் நானூறு ஆண்டுக்காலம் அவரும் அவரது பின் சந்ததியாரும் பலஸ்தீனுவில் நாடோடி மக்களேப்போல், நிலேவரமான ஓரிடத்தில்

தங்காமல் அலேந்து திரிகின்றனர். திருமறையின் அகச்சான்றிலிருந்தும் புதைபொருள் ஆராய்ச்சியிலிருந்தும் மலேப்பாங்கான கானன் நாட்டிலே தங்கள் கன்றுகாலிகளுக்கு மேய்ச்சல் தேடி அலேந்தனர் என்றும், ஒவ்வொரு இடத்திலும் சில காலம் மாத்திரம் தங்கி அந்த நாட்டிலே அந்நியரைப்போல் வாழ்ந்தனர் என்றும் அறிகின்ருேம். ஆதி. 23ல் கூறப்படுவதை நாம் ஏற்றுக்கொண்டால் ஆபிரகாம் தன் மனேவியை அடக்கம் செய்ய விலேக்கு வாங்கின பூமி மாத்திரமே அவர்களுக்குச் சொந்தமாயிருந்தது. இவ்விதம் முற்பிதாக்கள் காலம் முழுவதும் அவர்கள் தங்களுக்குச் சொந்தமில்லாத ஒரு நாட்டிலே அலேந்து திரிகிறவர்களாயிருந்தனர். கானனின் செழிப்புள்ள இடங்களிலே ஏற்கெனவே வாழ்ந்துவந்த மக்களால் அவர்களுக்கு எவ்வித நெருக்கடியும் ஏற்பட்டதாகத் தெரியவில்லே. இந்தப் பகுதியின் இறுதிக் கட்டத்தில் பலஸ்தீனவில் பஞ்சம் ஏற்பட ஆபிரகாமின் சந்ததியார் செழிப்புள்ள எகிப்துக்குச் செல்வது தரப்படுகின்றது. வரலாற்றுக் கோணத்தில் பார்க்குங்கால் இக்காலம் அதிக முக்கியத்துவம் உடையதன்று. எனினும், புதைபொருள் ஆராய்ச்சியினுல் இக்காலத்தைப் பற்றிக் கூறப்படுகின்றவை அடிப்படையில் உண்மையானவை என்று உறுதிப்படுத்தப்படுகின்றன.

எனினும், சிமியோனும் லேவியும் சிகேமை அழித்த செயல், இரண்டு தனி ஆட்களின் செயல் என்பதைவிட, இரண்டு ஜாதியினரின் செயல் என்று கருதுவது பொருந்தும் என்றும் (ஆதி. 34:25பி.), லோத்தின் மனேவியின் முடிவுபற்றிக் கூறப்படுவது (ஆதி. 19:26) கதைப்பாகம் என்றும், யாக்கோபு–ஏசா உறவுகள் இஸ்ரவேலருக்கும் ஏதோமியருக்குமுள்ள உறவைக் குறிக்கும் என்றும், யாக்கோபுக்கும் லாபானுக்குமிடையில் ஏற்பட்ட உடன்படிக்கை (ஆதி. 31:44–53), இஸ்ரவேலருக்கும் சீரியருக்குமிடையில் நடைபெற்ற ஓர் உடன்படிக்கைபோலிருக்கிறது என்றும் அறிஞர்கள் பலர் கருதுகின்றனர். எனினும், இடங்களின் பெயர்கள், பிரயாணங்களின் விவரங்கள் ஆகியவை உண்மையானவை என்றும், ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களின் பலதரப்பட்ட தன்மைகள் இந்த விவரங்களின் வரலாற்று உண்மையினே உறுதிப்படுத்துகின்றன என்றும் கூறப்படுகின்றது.

ஆபிரகாம் தைரியமும் பரந்த மனப்பான்மையும் உத்தமமு முள்ள ஒருவர் என்பதில் சந்தேகமில்லை. யாக்கோபு பலர் விரும்பக்கூடிய உலக ஞானமுள்ள ஒருவராகவும், ஈசாக்கு மிகச் சிறந்த பண்புகளுள்ள ஒருவராகவும் விவரிக்கப்படுவது பலரால் உண்மை என்று ஏற்றுக்கொள்ளப்படுகிறது. யோசேப்பைப்போல் எளியவன் ஒருவன் பிரதம மந்திரியாகும் வரலாறு அக்காலத்திலும் இக்காலத்திலும் நிகழும் வரலாற்று உண்மையே.

## இறையியல் நோக்கு

எனினும் இவை அனைத்தும் ஆதியாகமத்துக்கு இறுதி அமைப்பு அளித்தவர்களின் இறையியல் நோக்கத்திற்கு ஏற்ப அமைக்கப்பட்டிருக்கின்றன. தங்களது வரலாறு வழிநடத்தப் பட்டுவந்திருக்கும் ஆச்சரியமான முறையை அவர்கள் சிந்திக் கும்போது ஆபிரகாம் இஸ்ரவேலரின் சிறந்த தந்தையாகக் காட்சியளிக்கின்றார். அவர்கள் பார்வையில் ஏதோ நாடோடி மக்கள் இடம்பெயர்வதினாலோ, பொருளாதாரக் காரணத் தாலோ ஆபிரகாமும் அவனது பரிவாரமும் கானானுக்குள் வரவில்லை. கடவுளின் கரமே அவர்களை நடத்தியது. தமது சொந்த மக்களின் ஸ்தாபகரான ஆபிரகாமை அவரே தெரிந்து கொண்டார் (ஆதி. 12:7). அவருக்கு அவர் நாட்டை வாக் களித்தார். நோவா மூலம் மனுக்குலதோடு உடன்படிக்கை செய்த கடவுள் ஆபிரகாம் மூலமும் உடன்படிக்கை செய் கின்றார்.

விருத்தசேதனம் என்பது ஒரு பழங்காலச் சடங்கு. ஆனால், அதனைக் கடவுளுக்கும் அவரது மக்களுக்குமுள்ள அக உறவின் புற அடையாளமாக அமைக்கின்றனர். இவ்வாறு கடவுளில் மனிதன் வைக்கவேண்டிய சரியான உறவை விளக்குகின்ற வரும் செயல் முறையில் காண்பிக்கின்றவருமாக ஆபிரகாம் விவரிக்கப்படுகின்றார். கடவுளின்—மக்களின் ஸ்தாபகராகத் தெரிந்துகொள்ளப்படும் ஆபிரகாம் கடவுளில் பூரண பற்றுதல் வைத்து அவரைச் சார்ந்து வாழ்பவராகவும், கீழ்ப்படிதலுக் குச் சிறந்த எடுத்துக்காட்டாகவும் அமைந்திருக்கின்றார். இதனாலேயே புதிய ஏற்பாட்டில் (கலா. 3:6; எபி. 11:8; யாக். 2:23) விசுவாசத்துக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக ஆபிரகாமை மேற்கோள் காண்பித்துள்ளனர்.

### ஆபிரகாம் முதல் யோசேப்பு வரை

எனவே, ஆபிரகாமைக் கடவுள் தெரிந்துகொண்டபோது இஸ்ரவேலரையே தெரிந்துகொண்டார். இந்த வரலாறு தொடருந்தோறும் இந்த உண்மை வர வர அதிகமாகத் தெளிவாகின்றது. ஆபிரகாமிலிருந்து ஈசாக்கு வழி, மனித எதிர்பார்ப்புக்கு வித்தியாசமாக, இளையவனை யாக்கோபின்மூலம் வரலாறு தொடருகின்றது. பன்னிரு கோத்திரங்களுக்கும் யாக்கோபு நிறுவனராயிருக்கின்றார். அந்நிய இரத்தம் கலந்துவிடாதபடி கடவுள் பாதுகாப்பதாகக் கூறப்படுவதின் பொருள் என்னவெனில், எல்லா நிகழ்ச்சிகளிலும் தங்களோடு ஈடுபட்டுக்கொண்டிருக்கும் கடவுளை அவர்கள் கண்டனர் என்பதாகும்.

தொடர்ந்து கொடிய நெருக்கடிகளின் மத்தியில் பொறுமையுள்ள சகோதரர்கள், வீண்பழி சாட்டும் எஜமானி, நீண்ட நாள் சிறைவாசம் ஆகியவைகளின் மத்தியிலும் இவைகள் மூலமாகவும் யோசேப்பு எகிப்திலே தலைமை அதிகாரியாகிவிடுகின்றார். கடவுளின் மக்கள் பஞ்சத்தால் அழிந்து போகாதபடி அவர்களுக்கு அமுதூட்டி, பாதுகாக்கக் கடவுள் 'யோசேப்பு திட்டத்தை' (the Joseph Plan) நிறைவேற்றுகின்றார். முற்பிதாக்களின் காலம் முடியும்போது இஸ்ரவேலராகிய கடவுளின் மக்கள் அந்நிய நாட்டிலிருக்கின்றனர். இதிலிருந்து அவர்களது வரலாற்றின் அதி உன்னத நிகழ்ச்சி சம்பவித்தது. அவர்கள் தெரிந்துகொள்ளப்பட்ட மக்கள் என்ற உண்மை முத்திரையிடப்படுகின்றது.

எகிப்து நாட்டிலே இஸ்ரவேல் மக்கள் அடிமைகளாயிருந்தார்கள். இங்கிருந்து மோசே என்னும் விடுதலை வீரரின் தலைமையில் அவர்கள் விடுதலையடைந்து, திரும்பவும் கானானுக்கும் பயணமாகின்றனர். இந்த வரலாற்றிலே இஸ்ரவேலைத் தமது மக்களாகக் கடவுள் தெரிந்துகொண்டார் என்பது எவ்வாறு உறுதிப்பட்டது என்பதைக் கவனிக்கும் முன்னர் இதிலிருக்கும் ஒரு பிரச்சினையைக் குறிப்பிடுவோம்.

### யாவே என்ற பெயர்

J ஆக்கியோனின் கருத்தின்படி இஸ்ரவேலரின் வரலாற்றின் ஆரம்பத்திலேயே இறைவனை யாவே என்ற பெயரால் மக்கள்

வழிபட்டனர். யாவேயோடுள்ள உடன்படிக்கை ஆபிரகாம் காலத்திலேயே செய்யப்பட்டதாகும் (ஆதி. 12:1). ஆனால் P, E ஆக்கியோரின் கருத்தின்படி யாவே என்ற பெயர் முதல் முதல் மோசேக்குத்தான் வெளிப்படுத்தப்பட்டது.

எனவே, இரண்டு பாரம்பரியங்களைச் சந்திக்கின்றோம். ஒன்றின்படி இஸ்ரவேலரது சமயம் ஆபிரகாமிலிருந்து ஆரம்பிக்கின்றது. மற்றுமுள்ள பாரம்பரியத்தின்படி முற்பிதாக்களின் வரலாறு இஸ்ரவேலரின் சமய வரலாற்றில் ஒரு முகவுரைச் சட்டமாக இருக்கின்றது. மோசேயிலிருந்தே அது சிறப்பான முறையில் ஆரம்பமாகின்றது. பத்தாம் நூற்றாண்டிற்குமுன் இரண்டு பாரம்பரியங்கள் நிலவின. இஸ்ரவேலர் (உபா. 26:5) நாடோடிகளாகத் திரிந்த அரமேய மக்கள், அவர்கள் எகிப்தில் அடிமைகளாயிருந்து விடுதலை பெற்று கானானைப் பிடித்துச் சொந்தமாக்கிக்கொண்டனர். மற்றுள்ளது இஸ்ரவேலர் ஊர் என்ற இடத்திலிருந்து ஆபிரகாமின் தலைமையில் வந்தவர்கள் என்பது (ஆதி. 38).

ஆதியாகமம், யாத்திராகமம் ஆகிய நூல்களைக் கவனமாகப் படிக்கும்போது எபிரேயர் அனைவரும் எகிப்துக்குச் செல்லவில்லை என்றும், ஒரு பாகத்தார் கானானிலேயே இருந்துவிட்டனர் என்றும் கூறுவதற்கு இடமிருக்கின்றது. இந்தக் கருத்து உண்மையாயிருப்பின் யாவே எகிப்தில் வைத்து அவர்கள் அறிந்த இறைவனல்லர்; அவர் அதற்கு முன்னரே ஆபிரகாமுக்குத் தம்மை வெளிப்படுத்தியிருந்தார் என்று கூறியிருக்கலாம்.

உண்மை எதுவாயிருப்பினும் இஸ்ரவேலரது சமயத்தை நிறுவியவராகப் புதிய ஏற்பாட்டு ஆசிரியர்களும் ஆபிரகாமைத்தான் ஏற்றுக்கொள்ளுகின்றனர். இதனால் எகிப்திலிருந்து விடுதலையும் வனாந்தரப் பயணமுமே அவர்களை ஒருமுகப்படுத்தி ஒரு ஜனமாக அல்லது ஒரு மக்கள் தொகுதியாக உரு அளித்தன என்பதனை ஒருவரும் மறுப்பதில்லை. ஆனால், ஆபிரகாமை விசுவாசத்துக்கும் கீழ்ப்படிதலுக்கும் புதிய இஸ்ரவேலாகிய திருச்சபைக்குக்கூட மாதிரியாக புதிய ஏற்பாட்டு ஆசிரியர்கள் பலர் குறிப்பிட்டுள்ளனர்.

### உறுதியான வரலாறு

முற்பிதாக்கள் வரலாற்றிலே பொதுவான வரலாற்று உண்மைகள் குறைவாகவும் கதைப் பகுதிகள் மிகுதியாகவும் இருக்கின்றன. ஆனால், இந்தப் பகுதியில் உண்மை வரலாறு மிகுதியாகவும் கதைப் பகுதிகள் குறைவாகவும் இருக்கின்றன. இவ்விதம் வரலாறு முன்னேறுந்தோறும் கதைப் பகுதிகள் குறைந்து, ஆகாப் காலம் வரும்போது பெருமளவு உண்மை வரலாறு மாத்திரமே தரப்பட்டு, அந்த அளவு விறுவிறுப்பும் குறையத் தொடங்குகின்றது.

வரலாற்றுக் கண்களோடு பார்த்தால் எகிப்தில் தானிஸ் என்ற இடத்தில் இரண்டாம் ராம்சேஸ் என்ற அரசனின் தலை நகரில் கட்டட வேலைசெய்த செமித்திய பணியாட்களின் கூட்டம் ஏகதேசம் கி.மு. 1290ல் தப்பியோடி பலஸ்தீனாவிலே குடியேறி இஸ்ரவேல் அரசை நிறுவினர் எனலாம். எகிப்தில் செமித்திய ஹிக்ஸாஸ் (Hyhsos) என்ற வம்சத்தார் ஆளுகை செய்யும்போது அவர்களது பாதுகாவலில் ஆபிரகாமின் பின் சந்ததியார் அங்கு வந்து கோசேன் நாட்டிலே குடியேறினர். யாத். 1:8ல் யோசேப்பை அறியாத பார்வோன் என்பது, ஹிக்ஸாஸ் வம்சத்தை வெளியேற்றி ஆட்சிக்கு வந்த எகிப்திய அரசன். அதிலிருந்து இஸ்ரவேலரில் திடகாத்திரமானவர்கள் கட்டட வேலை செய்ய வற்புறுத்தப்பட்டு ஒடுக்கப்பட்டனர். எகிப்தில் தொடர்பாக நடந்த அழிவுக்குரிய பல சம்பவங்கள் மூலம், உயரிய தலைவனான மோசேயின் தலைமையிலே அவர்கள் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையடைந்தனர்.

இந்த வரலாற்றைப் பிற்கால அனுபவத்திலிருந்து சிந்தித்த போது ஒரு சிறிய மக்கள் கூட்டம் புஜவலிமை மிக்க எகிப்திலிருந்து விடுதலையடைந்தது, தங்கள் வரலாற்றிலே ஈடுபட்டுச் செயலாற்றிவரும் இறைவன் யாவேயின் தலையீட்டால் நிகழ்ந்தது என்று உணர்ந்து எழுதினர். ஓர் உயரிய நோக்கத்தோடேயே அவர் இப்படி அவர்களை விடுவித்துக்கொண்டு வந்தார். உலகின் மக்கள் அனைவரும் உண்மையான ஒரே இறைவனை அறிந்து அவரைச் சேவிக்கும்படி வழி நடத்துவதே அந்த நோக்கம் என்றனர். ஆகையால் எகிப்திலிருந்து வெளி வருதல் என்பது, கடவுளால் விடுவிக்கப்பட்டு அவரால் அவரது

மக்களாக அவரோடு சிறப்பான முறையில் உறவுபடுத்தப் பட்ட செயல் என்றனர்.

பிந்திய காலத்தில் தீர்க்கர்களும் சங்கீதங்களை எழுதினவர் களும் திரும்பவும் திரும்பவும் இச்சம்பவத்தைப் பின்னோக்கிப் பார்த்து, அவர்களது சமயத்தின் ஆரம்ப நிகழ்ச்சி அதுவே என்று கூறினர். பிற்காலத்தில் இயேசுவும் அவரது அடியாரும் இச்சம்பவத்தின் முக்கியத்துவத்தை இன்னமும் ஆழமாக்கி னர்.

### விடுதலை நிகழ்ச்சி

இஸ்ரவேலர் எகிப்திலிருந்து விடுதலையடைந்த நிகழ்ச்சியில் வாதைகள், செங்கடல் பிளப்பு, அக்கினித் தூண், மேகத் தூண் ஆகியவைகளுக்குத் திருமறை அறிக்கைகள் மாத்திரமே சான்று. இவற்றிற்குப் புறச்சான்றுகள் இல்லை, தேவையு மில்லை.

சாதாரண முறையில் ஆராய்ந்தாலும் இந்த விடுதலையின் வரலாறு இஸ்ரவேலிலே பாடலாகவும் கதையாகவும் ஊறிப் போனதைக் கவனிக்கும்போது அசாதாரண நிகழ்ச்சிகள் பல நிகழ்ந்தன என்ற முடிவுக்கு வந்தால் ஆச்சரியப்பட இட மில்லை. யாத். 15ல் கூறப்படுகிறபடி எகிப்தில் நடைபெற்ற பல கொடிய வாதைகள் இஸ்ரவேலரின் விடுதலைக்கு வழிவகுத்தது என்றும், கீழ்காற்றின் உதவியால் கடல் பிளந்து மக்கள் கரை சேர்ந்து தப்பினர் என்றும் சிந்திப்பது கடினமன்று.

### மோசேயின் பணி

எகிப்தில் அடிமைகளாயிருந்த மக்களின் உள்ளத்தில் அடிமை வாழ்க்கையில் வெறுப்பை உண்டுபண்ணி அங்கிருந்து அவர்களை புறப்பட்டுபோகத் துணிச்சலுள்ளவர்களாக்கிய சிறப்பு மோசே யைச் சாரும். இஸ்ரவேலரை ஒரு ஜனமாக உருவாக்குவ தற்குக் கடவுள் உபயோகிக்கும் தலைவன் மோசே. மோசேயின் கோலையும் மற்றும் புராணக் கதை சார்புள்ள பாகங்களையும் விட்டுவிட்டாலும்கூட மோசே ஒரு தீரமுள்ள வீரனாகவும், அறிவுள்ள அரசியல்வாதியாகவும், சிறந்த இறைவாக்காளனாக வும் காட்சியளிக்கின்றார்.

எகிப்தின் தலைநகராகிய டானிஸில் (Tanis) அரச மாளிகை யில் வாழ்ந்த மோசே மீதியானின் வனாந்தரத்திலே தன்

விசுவாசத்தையும் வாழ்க்கைப் பணியையும் (Faith and Mission) அறிந்துகொள்ளுகின்ருர். இதற்கு ஏகதேசம் ஒரு நூற்ருண்டிற்குமுன்னர் எகிப்திய அரசன் ஒருவன் பல தெய்வ வணக்கத்தை அகற்றிவிட்டுச் சூரிய கடவுள் வழிபாட்டை மாத்திரம் நிறுவுவதற்காக முயற்சி செய்தான். ஆனுல், சூரியனல்ல, சூரியனேயும், சந்திரனேயும், நட்சத்திரங்களேயும் படைத்தவரே கடவுள். அவரே உலகை அரசு புரிகின்றவர், அவர் மனிதரது சேவையைக் கேட்கின்ருர், அவரே நாடு கடத்தப்பட்ட இந்த எபிரேயனுகிய மோசேயை அழைத்து எகிப்துக்கு அனுப்பித் தனது இனத்தவரை அடிமைத்தனத்திலிருந்து விடுதலேக்கு நடத்தக் கட்டளேயிடுகின்ருர்.

இவ்விதம் தன்னே அழைத்த இறைவனே யாவே (YHWH) (யாவே என்பதற்கு எல்லாவற்றையும் நிலேபெறச் செய்கின்றவர், He who causes to be) என்ற பெயரால் அவர் அறிகின்ருர். அவரது தலேயீட்டாலேயே இஸ்ரவேலர் விடுவிக்கப்பட்டதாகக் கூறி அவர்களேச் சீனுய் மலேக்கு நேராக அழைத்துச் செல்லுகின்ருர். அங்கே அவர்களே ஒற்றுமைப் படுத்தி ஒரு ஜனமாக அவர்களுக்கு வடிவம் அளிக்கின்ருர் மோசே.

## நியாயப்பிரமாணமும் வாழ்க்கை இலட்சியமும்

உபாகமத்தில் தரப்படும் வாழ்க்கைப்பிரமாணம் மோசேயால் அளிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இதில் நாம் சந்திக்கும் அநேக கட்டங்கள் அதே காலத்தில் வேறு பல மக்களிடையிலும் காணப்படுகின்றன. எனினும் பிற்காலத்தில் இதில் காணப்படும் அடிப்படை உண்மைகள் இஸ்ரவேலரின் வருங்கால வரலாற்றின் அடிப்படையாயிருந்தன. இவை எகிப்திலிருந்து விடுதலே, மோசே ஆகிய மூலங்களிலிருந்து வருகின்றன என்பது உறுதி.

இஸ்ரவேலர் கடவுளால் தெரிந்துகொள்ளப்பட்ட மக்கள், தமது சிறப்பான நோக்கத்தை நிறைவேற்றும் கருவியாக உலகின் இதர மக்கள் மத்தியிலிருந்து கடவுள் அவர்களேத் தெரிந்துகொண்டார்; இவர்கள் ஓர் உடன்படிக்கையின் மக்கள்; புனித மலேயாகிய சீனுய் மலேயில், இவ்விதமாகத் தங்களேத் தெரிந்துகொண்ட கடவுளுக்கு பத்துக் கட்டளே

களின்படி தாங்கள் எப்பொழுதும் கீழ்ப்படிவதாக அவர்கள் உடன்படிக்கை செய்தனர். 'விடுதலையும் வனந்தரப் பிரயாணமும்' என்ற நிகழ்ச்சிகளின் அடிப்படை உண்மைகள் இந்தக் கீழ்ப்படிதலின் பாதையில் அவர்கள் தவறும்போதெல்லாம் இந்தப் பிரமாணத்துக்குத் திரும்பும்படி அழைக்கின்றன.

## இஸ்ரவேலர் உறுதிப்படுதல்

இஸ்ரவேலர் எகிப்திலிருந்து புறப்பட்டதற்கும் கானானுக்குள் பிரவேசித்ததற்கும் இடைப்பட்ட காலத்தில் அவர்கள் வல்லமையும் ஒருமைப்பாடுமுள்ள ஜனமாக உருப்பெற்றனர். யாத். 12:37,38 படிக்கும்போது எகிப்திலிருந்து பெருந்திரள் மக்கள் வந்ததுபோல் தோன்றும் அளவு பெருந்தொகையினர் வரவில்லை என்று உல்லியம் நீல் கூறுகின்றார். அவர்களுக்குள்ளே வழக்குகளைத் தீர்க்க ஆட்கள் நியமிக்கத் தேவை ஏற்பட்டதைக் கவனிக்கும்போது அவர்கள் மிகவும் கடின இயல்புள்ள சிறு கூட்டத்தாராயிருந்தனர் எனலாம்.

ஆனால், நாளடைவில் இவர்களது எண்ணிக்கை வளர்ந்தது. ஏற்கெனவே எகிப்துக்குச் செல்லாத எபிரேயரின் பின்சந்ததியாரும் அவர்களோடு சேர்ந்து பெருந்தொகையினராகிவிட்டனர். மோசேயின் தலைமையின்கீழ் யாவே தங்களை அழைத்து தமது மக்களாயிருப்பதற்குத் தெரிந்துகொண்டார் என்ற சிந்தனையினால் அவர்கள் ஒன்றுபட்டுச் செயலாற்றத் துணிந்தனர்.

## கானான் முற்றுகை

யோசுவா, நியாயாதிபதிகள் ஆகிய நூல்களில் கானான் முற்றுகைபற்றித் தரப்படும் விவரங்களைத் திறனாய்வு செய்ய வேண்டும். யோசுவாவின் நூலில் விறுவிறுப்பாக யோசுவாவின் தலைமையில் கானான் முழுவதையும் அவர்கள் சொந்தமாக்கிக் கொண்டதுபோலத் தோன்றுகிறது (யோசு. 11:23). ஆனால், நியாயாதிபதிகளின் நூலில் முற்றுகை மிகவும் கடினமாக இருந்ததாகவும், ஒவ்வொரு பட்டணமாகப் பிடித்ததாகவும், இறுதியிலும் கானான் முழுவதையும் சொந்தமாக்கவில்லை என்பதுபோலவும் வாசிக்கின்றோம். பிற்கால வரலாறுபடி 200 ஆண்டுகளுக்குப் பின்னர் தாவீதின் காலத்தில்தான்

பலஸ்தீனுவின் பெரும்பகுதி இஸ்ரவேலருக்குக் கீழ்ப்பட்டிருந்தது என்று அறிகின்றோம்.

### கானுவின் நிலே

கி.மு. 1250ம் ஆண்டு கால கட்டத்தில் இஸ்ரவேலர் பலஸ்தீனுவுக்கு வந்து சேர்ந்தனர் எனலாம். பலஸ்தீனு பெயரளவில் எகிப்தியருக்குக் கீழ் இருந்தபோதிலும் அதன் சமவெளியில் கானுனியர் வாசம்பண்ணினர். இவர்கள் இஸ்ரவேலரைவிட மிக உயரிய கலாச்சாரம் உடையவர்களாயிருந்தனர். அவர்களது யுத்தக் கருவிகளும், கோட்டைகளும், இரதங்களும் இஸ்ரவேலருக்குப் பிரமிப்பை அளித்தன. எனினும், யூதா, கலிலேயா, நெகெப், யோர்தானுக்குக் கிழக்குப் பக்கம் ஆகிய இடங்களில் இஸ்ரவேலர் குடியேறினர். இங்கிருக்கும்போது ஏற்கெனவே குடியிருந்த கானுனியரால்லை, வெளியில் கிழக்கு வனந்தரத்திலிருந்துவந்த கொள்ளேக் கூட்டங்களால் அவர்களுக்கு ஆபத்து ஏற்பட்டது.

### நியாயாதிபதிகள்

ஒத்னியேல், எகூத், பாராக், கிதியோன் என்னும் தலைவர்களின் தலைமையில் அவர்களைத் தடுத்து நிறுத்தியதோடு இஸ்ரவேலரும் போர் வலிமை பெற்றனர். கடினமான வாழ்க்கையும், ஒன்றிணைக்கும் யாவே வணக்கமும் அவர்களை வருங்கால யுத்தங்களுக்கு வலிமையுள்ளவர்களாக மாற்றியமைத்தன.

எனினும் ஒரு புதிய சத்துரு தலைதூக்கினுன். கி.மு. 1190ம் ஆண்டில் கிரேத்தாவிலிருந்து வந்த கடல் கொள்ளைக்காரரான பெலிஸ்தியர் பலஸ்தீனுவின் கடற்கரை தீரத்தில் குடியேறினர். பலஸ்தீனு என்ற பெயர் பெலிஸ்தியர் என்பதிலிருந்து வருகின்றது. இவர்கள் சிறிது காலத்தில் மத்திய கிழக்கில் மிகவும் சக்திவாய்ந்தவராகிவிட்டனர். இவர்களை எதிர்ப்பதற்கு சிறு தலைவர்களால் இயலாது என்று உணர்ந்தபடியால் தங்களுக்குச் சவுல் என்ற வீரனை அரசனுக மக்கள் ஏற்படுத்தினர் (1 சாமு. 8:10பி.ன்படி இது இஸ்ரவேலரின் வீழ்ச்சிக்குக் காரணமாயிற்று). சவுலின் வீரமிக்க முயற்சியினுல் பெலிஸ்தியர் தடுத்து நிறுத்தப்பட்டு இஸ்ரவேலர் ஓர் அரசாக நின்றனர்.

இந்த அரசியல் வெற்றியினல் சமயமும் ஒழுக்கமும் சிதைவுற்றன. இக்காலத்தில் பலஸ்தீனுவில் கொடிய பல தெய்வ வணக்கம் (Polytheism) இருந்தது. தேவதாசிகள், ஆண் புணர்ச்சி, பாம்பு வணக்கம், நரபலி ஆகியவை மலிந்து கிடந்தன. இவை எபிரேயர்களேயும் கறைப்படுத்தின. அதிகார பூர்வமாக யாவே அவர்களது இறைவனுயிருந்தபோதிலும் பல தெய்வ வணக்கத்தின் இழிவு அவர்களது சமய, சமூக வாழ்க்கையைச் சீர்குலேயச் செய்துவிட்டது. வனந்தரத்தின் கட்டுப்பாடான வாழ்க்கை குலேந்தது. இக்காலத்தில் யாவே, பாகால் என்பவை ஒன்றையே குறிப்பதுபோல் உபயோகப்படுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தகும். பிற்கால நூலாசிரியர்கள் மந்திரம், பில்லிசூனியம், விபசாரம், துன்மார்க்கம் ஆகியவற்றை வன்மையாகக் கண்டித்து எழுதுவதிலிருந்து அப்பொழுது ஏற்பட்ட சீரழிவு மிகவும் கொடியதாக இருந்திருக்கவேண்டும்.

இப்படிப்பட்ட சீர்கேடு ஏற்பட்டதில் ஆச்சரியமில்லே. எபிரேய மக்கள் ஆடு, மாடுகளே மேய்க்கும் நாடோடிகளாக நாகரீக மணம் வீசப்பெருதவர்களாயிருந்தனர். கானனிய மக்களோ, பட்டணங்கள், ஆலயங்கள் கட்டி நிலத்தில் விவசாயம்செய்து, திராட்சையும் ஒலிவமரமும் வளர்த்துப் பலவிதக் கலேகளில் தேர்ச்சிபெற்று, பட்டண வாழ்க்கை வாழ்ந்தனர். எனவே, இவற்ருலும் இவற்றின் தீமையாலும் இஸ்ரவேலர் வசீகரிக்கப்பட்டனர்.

இந்த இயக்கத்தில் யாவேயைக் கானனிய பாகாலேப்போல் கருதி மிகுதியான மக்கள் வழிபட்டனர். எனினும், இஸ்ரவேலரின் மனச்சாட்சியின் காப்பாளர்கள்போல் ஒரு சிலர் இந்தத் தவறை உணர்ந்து வனந்தர காலத்து வாழ்க்கையை வாழ முற்பட்டு யாவேயைத் தனிச் சிறப்புள்ள இறைவனுக வழிபட்டனர். இவர்கள் நசரேய பொருத்தனேக்காரர்கள் (Nazeritis), ரெகோபெயர் (Rachobitis) என்றழைக்கப்பட்டனர்.

## சிம்சோனும் சாமுவேலும்

சிம்சோனும் சாமுவேலும் இத்தகைய இருவராவர். சிம்சோன் ஒரு துறவிபோல் காட்சியளிக்காவிட்டாலும் தான் கடவுளால் அழைக்கப்படுவதாக உணர்ந்து தனது வலிமையைத் தன் மக்களே விடுவிக்க உபயோகிக்கின்ருன். இவன்

யெகோவாவுக்காகப் போராடிய ஒரு தலைவன் என்பது உண்மை.

சாமுவேலின் சேவை இதைவிடச் சீர்மிக்கது. 1 சாமு. 1:11ன்படி இவர் பிறக்கும்முன்னரே யாவேக்கு அர்ப்பணிக்கப்பட்டவர். ஆனால், இவர் மிகவும் புகழ்பெற்று இஸ்ரவேலரின் வருங்காலத்துக்கு முக்கிய பணியாற்றி ஆலோசனை கூறுகின்றார். இவரே யாவேயின் மனிதனாக, மக்களுக்கு ஏற்படவிருக்கும் ஆபத்தைக் கண்டு, சவுலை இஸ்ரவேலின்மேல் அரசனாக அபிஷேகம் செய்கின்றார். சவுல் தகுதியற்றவனான போது இஸ்ரவேலிலேயே மிகச் சிறந்த மன்னனாக விளங்கும் தாவீதை அவர் அபிஷேகம் செய்கின்றார்.

## தாவீது

சாமுவேலின் புத்தகங்களின் முக்கிய பாத்திரம் தாவீது. எனினும், அவனது அரசுக்குப் பின்னணியில் யாவேயின் இறைவாக்காளன் சாமுவேல் அவனது மனச்சாட்சியின் பாதுகாவலனாயிருந்து, இஸ்ரவேலரின் இறைவனாகிய யாவேயின் கட்டளையே அரசனுக்கும் குடிகளுக்கும் ஒரே பிரமாணமாக விளங்கி இதர அரசுகளைவிட இதை வித்தியாசமானதாகக் காண்பிக்கின்றது என்று போதித்தார். தாவீது தன் புகழ் பெருகிய காலத்து உரியாவின் மனைவியை நேசித்து உரியாவைச் சூழ்ச்சிமூலம் கொலைசெய்தபோது சாமுவேலின் பின்னடியாரான நாத்தான், அரசனைக் குத்தும் அவனது மனச்சாட்சி போல் அவனைக் கடிந்துகொண்டு குற்றத்தை உணர்த்திப் பாவத்தை அறிக்கை செய்யும்படி வழிநடத்துகின்றான் (2 சாமு. 11,12 அதி.).

இஸ்ரவேல் மக்கள் செழிப்பாலும், நாகரீகத்தாலும், பல தெய்வ வணக்கத்தாலும் எவ்வளவுதான் இழுப்புண்டுபோன போதிலும், யாவே வணக்கமும் நியாயப்பிரமாணமும் அவர்களுக்கு நினைவுபடுத்தப்பட்டபோது அவர்கள் தலைகுனிந்து நின்றனர். இந்தத் தீபம் அணையாது பாதுகாக்கும்படி யாவேக்கும் அவர்களுக்குமுள்ள சிறப்புறவையும் உத்தரவாதத்தையும் உணரும்படி காலா காலத்தில் அவர் தமது அடியாரை எழுப்பினார் என்பதை மறக்கலாகாது.

# அரசர்களின் தோற்றமும் முடிவும்

**ப**ழைய ஏற்பாட்டில் 1,2 சாமுவேல், 1,2 இராஜாக்கள், 1,2 நாளாகமம் ஆகியவை வரலாற்று நூல்கள் என்று கூறப்படுகின்றன. இவற்றில் சவுல், தாவீது, சாலொமோன் என்பவரது ஆளுகை காலமாகிய சுமார் நூறு ஆண்டு நிகழ்ச்சிகளை விவரிப்பதற்கு 66 அதிகாரங்களும், அரசு பிரிந்தபின் இரு நாடுகளின் 39 அரசர்களின் காலமாகிய 350 ஆண்டுகள் (கி.மு. 933 முதல் கி.மு. 586) வரலாற்றை விவரிக்க 39 அதிகாரங்களும் இருக்கின்றன. தாவீது எருசலேமை உரிமையாக்கி தலைநகராக்கினுர், சாலொமோன் தேவாலயத்தைக் கட்டினுர். இருவரும் நாட்டின் எல்லைகளை விரிவுபடுத்தினர். இதர 39 அரசர்களும் இஸ்ரவேல் அரசின் வீழ்ச்சியின் காலத்தில் ஆட்சி புரிந்தவர்களேயாவர். ஆனுல் சவுல் முதல் சாலொமோன் வரை அரசியல், சமய, சமூக, பொருளாதாரத் துறைகளில் மிகுந்த வளர்ச்சி ஏற்பட்டது.

### சவுல் (கி.மு. 1020 முதல் 1000 வரை)

சவுலின் முக்கிய பணி தனித்தியங்கிய கோத்திரங்களை ஒன்ருக்கி இஸ்ரவேலர் ஒரே மக்கள், ஒரே அரசு என்ற நிலையை உருவாக்கியதாகும். ஆனுல் பெலிஸ்தியர் அதிகமாக நெருக்கினபடியால் அவரும் அவரது பிள்ளைகளும் போர்க்களத்தில் சவுலின் வாழ்நாளிலே தாவீது அரசனுவதற்குரிய ஒழுங்குகளை சாமுவேல் செய்துவிட்டார். ஏனெனில், சவுல் ஒரு கொடிய எதேச்சாதிகாரிபோல் நடந்து யாவேயின் அடியான் என்றழைக்கப்படத் தகுதியற்றவராகிவிட்டார்.

### தாவீது (கி.மு. 1000 முதல் 961 வரை)

இவர் நாற்பது ஆண்டு காலம் ஆட்சி செய்கின்ருர். யாவே என்னும் இஸ்ரவேலின் கடவுளைவிட்டு அவர் ஒரு போதும் தவறிப்போகவில்லை. அவர் வேறு தெய்வ வழிபாடு

களையோ, அவற்றோடு சேர்ந்த ஒழுக்கச் சிர்குலைவையோ ஆதரிக்கவில்லை. அவர் ஒரு கவிஞர், போர் வீரர், அரசியல் மேதை. அவர் மக்களை மதித்தபடியால் சர்வாதிகாரப் போக்கு அவரிடமில்லை. மக்கள் அவரைப் பாராட்டவும் நேசிக்கவும் ஏற்ற முறையில் நடந்துகொண்டார். தமஸ்குவுக்கு அப்பால் அகாபா வளைகுடா வரையிலும் யோர்தானுக்குக் கிழக்கே வரையிலும் நாட்டின் எல்லைகளை அவர் விரிவு படுத்தினர்.

அவர் மிகவும் யுக்தியாக, அது வரையிலும் இஸ்ரவேலருக்குச் சொந்தமாயிராத எருசலேமைத் தம் வசப்படுத்தி, அரசின் தலைநகராக்கினர். அங்கே உடன்படிக்கைப் பெட்டியை வைத்து மக்கள் கவனத்தை ஈர்க்கும் நகரமாக ஆக்கிக்கொண்டார். பத்துக் கற்பனைகள் எழுதப்பட்ட கற் பலகைகள் உடன்படிக்கைப் பெட்டியினுள் இருந்தன. அதை ஒரு கூடாரத்தில் வைத்து இஸ்ரவேலர் உடன்படிக்கையின் மக்கள் என்பதையும், அவர்கள் வனந்தரத்தில் வாழ்ந்தது போல எளிய வாழ்க்கை வாழவேண்டும் என்பதையும் அவர்களுக்கு நினைவுபடுத்தினர். இது அவர்களைச் சூழ இருந்த பல தெய்வ வணக்க நாகரீகத்தின் ஈர்ப்புக்குள் மக்கள் இழுக்கப் படாதபடி உதவிற்று. இதனாலேயே பிற்காலத்தில் தாவீதின் காலம் பொற்காலம் என்று பாராட்டப்பட்டது.

### சாலொமோன் (கி.மு. 961 முதல் 922 வரை)

சாலொமோன் ஆசரிப்புக் கூடாரத்தை மாற்றி அழகிய ஆலயத்தைக் கட்டி ஆடம்பரத்தில் மக்களது கவனத்தை இழுத்தார். அவர் தந்திரமான முறையில் அரசனானர். தாவீது காலத்துவளத்தையும் செல்வத்தையும் துணைகொண்டு வீண் பெருமையான கட்டட வேலைகளில் ஈடுபட்டார்.

ஆடம்பரமான அழகிய அரண்மனையைக் கட்டிய பின்பு அரசனின் ஆதிக்கத்தின்கீழ் சமயம் (religion) செயல்பட வேண்டும் என்பதுபோல் தேவாலயத்தைத் தமது தொழுகைக்கான சிற்றாலயம்போல் சாலொமோன் கட்டினர். இவ்வாறு ஆசாரியத்துவம் அரசனுக்கு அடிமைப்படுகின்றது. இது பிற்காலத்தில் பெரும் தீமையாயிற்று. ஏனெனில், அரசன் விரும்பியதையே ஆசாரியர் செய்யவும் அதையே

கடவுளின் வார்த்தை என்றறிவிக்கவும் தூண்டப்பட்டனர். இதனால் முந்திய கால உண்மையான இறைவாக்காளர்கள் அரசனையும் ஆசாரியர்களையும் கடிந்துகொள்ளுகின்றனர். ஏனெனில் இறைவனின் பிரதிநிதிகளாயிருந்து மக்களை யாவே யின் வழியில் நடத்தவேண்டிய அரசர்கள் மக்களைத் தீய வழி களில் நடத்தினர். அரசனது மனச்சான்றுபோலிருந்து அவன் பாதை தவறாதபடி பாதுகாக்கும் கடமையை விட்டுவிட்டு புரோகிதர்களும் அவன் செயல்களுக்குத் தூபமிட்டு ஆமோதிக் கும் கூலியாட்கள் போலாகிவிட்டனர்.

சாலொமோன் தமது திட்டங்களை அமுல்படுத்தப் பொருள் தேடி வியாபாரத்தில் ஈடுபட்டார். உள் நாட்டு வாணிபமும் கடல் கடந்த வியாபாரமும் வளர்ந்து செல்வமும் செழிப்பும் மிகுந்தன. தந்தமும் குரங்குகளும் மயில்களும் வந்திறங்கின. ஆனால் மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படவில்லை. பளு வான வரி, கட்டாய வேலை, அந்நிய அரசுகளோடு உடன் படிக்கை, யாவேயை வணங்காத பெண்களை மணந்து அவர் களது தெய்வங்களுக்கு ஆலயங்கள் கட்டுதல், அந்நிய பழக்க வழக்கங்களைப் பின்பற்றல், பல தெய்வ வணக் கத்துக்கு இடமளித்தல் போன்றவற்றால் மக்கள் உள்ளங் களில் கசப்பும் வெறுப்பும் ஏற்பட்டன. இதனால் சாலொமோன் காலத்துக்குப் பின்னர் நிகழ்ந்த கொடிய சம்பவங்கள் கடவுளின் நியாயத்தீர்ப்பின் விளைவுகள் என்று எழுதப்பட்டிருக்கிறது.

## நாடு பிரிதல்

சாலொமோனின் மகன் ரெகோபெயாம் தந்தையைவிடக் கொடியவன். வரிப் பளுவை அதிகப்படுத்தினான். பத்துக் கோத்திரங்கள் சமாரியாவைத் தலைநகராகக்கொண்டு பிரிந்து யெரோபெயாம் என்பவனின் தலைமையில் இஸ்ர வேல் என்ற பெயரில் தனியரசாக இயங்கிற்று. தென் நாடு எருசலேமைத் தலைநகராகக்கொண்டு தாவீதின் சந்ததி யாரை அரசர்களாகக்கொண்டு யூதா என்ற பெயரில் சிற்றர சாக இருந்தது. இதற்குப் பின்னர் சிறப்புள்ள அரசர்கள் ஒருவரும் தோன்றவில்லை. படிப்படியாக இரு நாடுகளும் அந்நிய அரசுகளுக்கு இரையாகின. நாடு பிரிந்தது முதல்

அவற்றின் அழிவு வரையுள்ள ஏகதேசம் 3½ நூற்றூண்டு கால அரசர்கள் இஸ்ரவேலரசின் அழிவினைத் துரிதப்படுத்தியவர்கள் என்று குற்றஞ் சாட்டப்படுகின்றனர்.

தென் பகுதிக்கு எருசலேம் தலைநகராயிருந்தது. அதன் வழிபாடு மிகவும் இழிநிலையிலேயே இருந்தது. எனினும், இங்கே உடன்படிக்கைப் பெட்டி இருந்தபடியால் எகிப்தின் விடுதலை, வனுந்தரப் பயணம், நியாயப்பிரமாணம் ஆகியவை முற்றிலும் மறக்கப்படவில்லை. உத்தமமாக யாவே சமயத்தைப் பின்பற்றும் ஆர்வமுள்ள ஒரு சிலராவது இருந்தனர்.

வட நாட்டிலே எருசலேமுமில்லை, உடன்படிக்கைப் பெட்டியுமில்லை. ஆகையால் பழைய பிரபல வழிபாட்டிடங்களான தாண், பெத்தேல் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளித்து அங்கே உடன்படிக்கைப் பெட்டிக்குப் பதிலாக கன்றுக்குட்டிகளைச் (bull) செய்து நிறுத்தினன் அரசன் (1 இரா. 12:28பி.). காளை இதர மக்களின் செழிப்பின் தெய்வமாயிருந்தபடியால் அதை ஒட்டிய ஒழுக்கக்கேடான எல்லாப் பழக்கங்களும் உட்புகுந்துவிட்டன. அறநெறிக்கும் சமயத்துக்கும் உறவில்லா நிலை ஏற்பட்டது.

### எலியாவின் பணி (கி.மு. 850ம் ஆண்டு காலம்)

1 இரா. 12 முதல் 16 வரையுள்ள ஐந்து அதிகாரங்களில் இரு பகுதிகளின் எட்டு அரசர்களின் வரலாறு சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது. இஸ்ரவேலில் உம்ரி சமாரியாவைத் தலைநகராக அமைத்து நாட்டைப் பெரிதாக்கினன். ஆனாலும் அவன் பாராட்டப்படவில்லை. அவனது மகன் ஆகாபைக் குறித்து அதிக விவரங்கள் தரப்படுகின்றன.

ஆகாபின் மனைவி யேசபேல் தீருநாட்டு அரசகுமாரி. இவள் தன் நாட்டு பாகால் வணக்கத்தை இஸ்ரவேலில் புகுத்தி ஓர் ஆலயத்தையும் கட்டுவித்தாள். இதனை எதிர்த்தவர்கள் கொலை செய்யப்பட்டனர். யாவேயின் பேரில் பற்றுதலாயிருந்த ஒரு சிலரில் எலியாவும் ஒருவர்.

இவர் வனுந்தரத்திலிருந்து வருகின்றூர். சாமுவேல், நாத்தான் என்பவரது வரிசையில் தோற்றமளிக்கும் இவர் அவர்களைவிட மிகச் சிறந்தவர். இவரைப்பற்றிக் கூறப்படுகின்றவற்றிலிருந்து இவர் மக்களிடத்திலே நல்ல செல்வாக்

குள்ளவராயிருந்தார் என்பது உறுதி. வறட்சியிலும் பஞ்சத்திலும் வருந்தாதபடி இவர் பாதுகாக்கப்படுகின்றார். இவர் உயிரிழந்த குழந்தைக்கு உயிரளிக்கின்றார், மழை பெய்யாதிருக்கச் செய்கின்றார், மழையைத் தருவிக்கின்றார். அவர் இறையருள் பெற்றவராகச் செயலாற்றி உயிரோடேயே மறைந்துவிடுகின்றார். யார் உண்மையான தெய்வம் என்ற ஒரு பரீட்சை கர்மேல் மலையில் நடத்தி யாவே வழிபாட்டைத் திரும்பவும் நிலைநிறுத்தினார். பெருவாரியான மக்கள் நிலை மாறி யாவேயை உண்மையான இறைவன் என்று அறிக்கை செய்கின்றனர். பாகாலின் தீர்க்கர்கள் தீவிரமாக அழிக்கப்படுகின்றனர்.

நாபோத்தின் தோட்டம் குறித்த நிகழ்ச்சி அரசனது எதேச்சாதிகாரத்துக்கும் சமூக நீதிக்குமிடையிலுள்ள போராட்டம் எனச்சித்திரிக்கப்படுகின்றது. அரசன் நாபோத்தைக் கொன்றதற்காக எலியா அரசனைப் பழித்தார். அச்செயல் யாவேயின் பிரமாணத்தை மீறிய செயல் என்றும், யாவேயின் பிரமாணத்தின்முன் எல்லாரும் சமம் என்றும் எலியா ஆணித்தரமாக எடுத்துக்காட்டினார்.

ஆகவே, நெருக்கடி ஏற்பட்டு இஸ்ரவேலின் சமயம் அழிந்து போகும் ஆபத்து நிலை நேரிடும்போது அதை உணர்ந்த ஒருவர் எழும்பி, வீரமாகப் போராடி அந்தச் சமயத்தை உறுதிப்படுத்துவதைக் காண்க. ஆகாப்பும்கூட எலியாவுக்குப் பயப்படுகின்றான். ஏனெனில், யாவேயின் உண்மையான வாக்கினை எடுத்துக் கூறினால் மக்கள் கீழ்ப்படிவர்.

### எலிசா (கி.மு. 840ம் ஆண்டு காலம்)

இவரும் எலியாவைப்போல் வட பகுதியிலே பணி புரிந்தார். எலிசாவைப்பற்றிப் பல கதைகள் தரப்படுகின்றன. உண்மை என்னவெனில், எலியா ஆரம்பித்த போராட்டம் எலிசாவினாலே வெற்றிகரமாக முடிவுபெறுகின்றது. எலிசாவின் தூண்டுதலால் யெகூ அரியணையேறி ஏசபேலையும் வீட்டாரையும் அவர்களைச் சார்ந்த அனைவரையும் பாகால் வணக்கப் புரோகிதர்களையும் நிர்மூலமாக்கிவிடுகின்றான். யாவே வணக்கத்தினுள் புகுந்த பாகால் வணக்க அம்சங்கள் பல இன்னமும் அகற்றப்படவில்லை. ஆனால்

இனிமேல் யாவேயின் இடத்தை வேறெந்த தெய்வத்தாலும் அபகரிக்க இயலாது. இவ்விதமாகப் பெரிய இறைவாக்காளர்கள் எழும்புவதற்காக ஆயத்தம் செய்யப்பட்டது. அவர்கள் எழும்பி மக்களை உண்மையான கீழ்ப்படிதலுக்கு அழைத்தனர். யாவேயின் தன்மை, நோக்கம்பற்றி ஆழமான உண்மைகளையும் அவர்கள் போதித்தனர்.

### இஸ்ரவேல் அரசின் முடிவு

எட்டாம் நூற்றாண்டிலிருந்து இரு அரசுகளும் அழிவுக்கு நேராக விரைகின்றன. முதலில் சீரியாவாலும், பின்னர் அசீரியாவாலும் இரு நாடுகளுக்கும் ஆபத்து விளைந்தது. கி.மு. 721ல் வட பகுதி அசீரியருக்கு இரையாகி அழிக்கப்பட்டது. முக்கிய மக்கள் அசீரியாவிற்கு நாடு கடத்தப்பட்டனர். சமாரியா அழிக்கப்பட்டுப் பல இனத்தவர்கள் அங்குக் குடியேற்றப்பட்டனர்.

மக்கள் உடன்படிக்கையை மீறினர், தங்களது முன்னோர் வழிபட்ட இறைவனை மறந்தனர், அவரது பிரமாணங்களை மீறினர், அவர் அனுப்பிய தீர்க்கரின் வார்த்தைகளுக்கும் செவி சாய்க்கவில்லை. ஆகவே அவர்களது முடிவு நியாயமானது என்பதே அவர்களது வரலாற்றிற்கு இறுதி வடிவமளித்து எழுதித் தந்தவர்களின் கருத்து.

# மனச்சான்றின் மெய்க் காவலர்

## (KEEPERS OF THE CONSCIENCE)

கி.மு. 721ல் சமாரியா அசிரியாவினுல் அழிக்கப்பட்டது முதல், கி.மு. 167ல் யூதர்களின் சுதந்திரப் போர் வரையிலுள்ள காலத்தில் பல இறைவாக்காளர்கள் தோன்றினர். ஏசாயா முதல் மல்கியா வரையிலும் உள்ள செய்திகள், இவர்களது பணி, இக்காலத்தின் வரலாறுபற்றிய ஒரு விளக்கவுரைபோல் அமைந்துள்ளது. இவர்களது பெயர்களால் அறியப்படும் நூல்கள் கால அமைப்பின்படி ஒழுங்குபடுத்தித் திருமறையில் சேர்க்கப்படவில்லை. சிலவற்றில், ஒரே நூலில் பலர் பல சந்தர்ப்பங்களில் அறிவித்த உரைகள் இடம் பெற்றுள்ளன. சில தனிப்பட்ட அதிகாரங்களில்கூட பல சந்தர்ப்பங்களில் கூறப்பட்ட வார்த்தைகள் அடங்கியுள்ளன, எனினும், இந்த இறைவாக்காளர்கள் யாவேயின் ஆட்களாக, தங்களது கால நிகழ்ச்சிகளையும் நிலைமைகளையும் திறனுய்வு செய்து, சமயத்திலும் சமூகத்திலும் சீர்திருத்தம் தேவை என்பதைப் பயமின்றி வெளிப்படையாகக் கூறினவர்கள் என்பது தெளிவு.

### இந்த இறைவாக்காளர்கள் யார்?

எபிரேய இறைவாக்காளர்கள் குறி சொல்லுகிறவர்களல்லர். அவர்கள் இறைவனின் வாக்கை மக்களுக்கு அறிவிக்கின்றவர்கள். இறைவனேடு அவர்கள் நெருங்கிய உறவுகொண்டு வாழும்போது, தங்களது சமூகத்தின் வாழ்க்கையிலும், அரசுகளின் எழுச்சியிலும் வீழ்ச்சியிலும் அவரது இரக்கமும் நியாயத்தீர்ப்பும் செயல்படுவதை அவர்கள் கண்டனர்.

இவர்கள் எபிரேய மொழியில் 'நபி' என்றழைக்கப்பட்டனர். இவர்களில் பலர் தரிசனங்களைக் கண்டவர்கள். ஆனல் அவர்களது தரிசனங்களல்ல, அவர்களது அறிவுரை

களின் தீர்க்கம், நுண்ணறிவின் தெளிவு, நம்பிக்கைகளின் உறுதி, பணியின் பலன் ஆகியவைகளே முக்கியமானவை.

இவர்கள் நாட்டின் மனச்சான்றின் பாதுகாவலராயிருந்து, இஸ்ரவேலரின் இறைவனுன யாவேயை உண்மையாக வழி படும்படி மக்களுக்கு அறைகூவல் விடுத்தனர். இப்பொருளில் இவர்கள் சாமுவேல், நாத்தான், எலியா என்பவர்களின் வரிசையில் நிற்கின்றனர். மக்களும் மன்னரும் தன்னறி விழந்து நோக்கமற்று வாழ்க்கை நடத்தும்போது, இறை வாக்காளரின் குரல் கேட்டது. உலகினை இறைவனின் மெய்யறி வுக்கு வழிநடத்தும்படி இஸ்ரவேலர் அழைக்கப்பட்டவர்கள் என்ற உயரிய நோக்கத்தினை அவர்கள் உயர்த்திக் காண்பித் தனர். அவரது பிரமாணங்களையே இஸ்ரவேலர் தங்களது வாழ்க்கைகளில் நிறைவேற்றக் கடமைப்பட்டுள்ளனர் என்ப தனை ஆணித்தரமாக எடுத்துரைத்தனர்.

இஸ்ரவேலரது வரலாற்றிலும், சமயத்திலும் இந்த இறை வாக்காளரின் செல்வாக்கு மிக முக்கியமானதாகும். இவர் களது நூல்கள் பழைய ஏற்பாட்டில் மூன்றில் ஒரு பாகத்தை நிரப்புகின்றன. இவர்களது கருத்துக்களின் அடிப்படையிலும் இவர்களது செல்வாக்கினுலுமே பழைய பாரம்பரியங்களும், வரலாறும் புதுப்பித்து எழுதப்பட்டன. இவர்களது சிந்தனை களின் செல்வாக்கு நியாயப்பிரமாண நூல்களிலும், சங்கீதங் களிலும் பெருமளவில் பழைய ஏற்பாடு முழுவதிலும் பரந்து நிற்கின்றது.

இவர்களது உரைகள் பல இவர்களது அடியார்களால் எழுதப்பட்டுப் பாதுகாக்கப்பட்டன. ஆகவே, அவர்களது காலத்திற்குப் பின்னரும் அவர்களது செல்வாக்கு தொடர்ந் தது. இந்த இறைவாக்காளரில் சிலர் மிகவும் சாதாரண மக்களாயிருந்தபோதிலும், அவர்கள் இறைவாக்கினை எடுத் துரைத்த முறையில் மக்களிடத்தில் செல்வாக்கு படைத்து விட்டனர். வேறு சிலர் அரசில் செல்வாக்கு பெற்று நாட்டின் நலங்களை நிர்ணயிப்பதில் பங்குபெற்றனர். ஆனுல் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அவர்கள் இறைவன் அருளிய செய்தியைக் கூறும் அவரது குரலாகவே இருந்தனர். அவர்கள் பேசியவை அனைத்தும் இஸ்ரவேலுக்கும், அவர்களைத் தெரிந்துகொண்ட யாவேக்குமுள்ள உறவின் அடிப்படையிலே அமைந்திருந்தன.

இறைவாக்காளர் தங்களது பணியில் யாவேயின் தன்மை, உலகைப்பற்றிய அவரது நோக்கம் இவற்றை அறிந்துகொண்டனர். இஸ்ரவேலரது வரலாற்றின் முந்தின நிகழ்ச்சிகளையும், தங்கள் கண்கள்முன் வரலாற்றிலே நிகழ்கின்றனவற்றையும் அவர்கள் உற்றுநோக்கி ஆராய்ந்தபோது இந்த அறிவு அவர்களுக்கு ஏற்பட்டது. இந்த அறிவு இஸ்ரவேலரின் வருங்கால வரலாற்றினை மாற்றியமைத்துவிட்டதோடு இஸ்ரவேலரது சமயத்தின் உச்சக்கட்டத்தையும் எட்டியது. மன்னராளுகை இஸ்ரவேலில் தொடங்கியது முதல், அரசர்களும் ஆசாரியர்களும் கடமை தவறும்போது, இஸ்ரவேலர் தங்களது வரலாற்றிற்கு யாவே அளித்த உயரிய இலட்சியத்தை இழந்துவிடாதபடி பாதுகாக்கும் உத்தரவாதம் இறைவாக்காளர்கள்மேல் விழுந்தது.

## ஆமோஸ் (கி.மு. 750ம் ஆண்டு காலம்)

இவர் கி.மு. எட்டாம் நூற்றாண்டின் மத்திய காலத்தில், இஸ்ரவேல் நாடு கி.மு. 721ல் அழிக்கப்படுவதற்குமுன் பணியாற்றினார். இஸ்ரவேலிலே, அதாவது, வட நாட்டிலே இரண்டாம் யெரோபெயாம் அரசனாயிருந்தான். நாடு பெரிதாகி வியாபாரம் வியாபித்தது. செல்வமும் செழிப்பும் மிகுந்தது. மக்கள் யாவேயையும், அவரது பிரமாணங்களையும் மறந்துவிட்டனர். செழிப்பே வாழ்க்கைக்கு அரண் என்று அறிவீனமாகச் சிந்தித்துவிட்டனர். பணக்காரர் சுகபோகமாக வாழ்ந்தனர். ஏழைகளும் அனாதைகளும் கைவிடப்பட்டனர். மக்கள் பல செல்வந்தர்களுக்கு அடிமைகளானார்கள். நீதிமன்றத்திலும், தேவாலயத்திலும் நீதிபதிகளும் புரோகிதர்களும் சுயநலப் பிரியராகி அநீதியை ஆதரித்தனர். இலஞ்சம், ஏமாற்றுதல், சுரண்டுதல் தலைவிரித்துத் தாண்டவமாடின. வழிபாட்டில் தூய்மை அகன்று போகவே பாகால் வணக்கத்தில் தேவதாசிகள் இடம் பெற்றுவிட்டனர். திருநாட்கள் பெருகி வீண் உபவாசங்கள் மல்கி, பலிகளும், புண்ணிய யாத்திரைகளும் அதிகப்பட்டு உண்மையான பக்தியின் வழிபாடு அறவே அகன்றுவிட்டது.

தென் பகுதியிலுள்ள தெக்கோவா ஊர் மேய்ப்பன் ஆமோஸ் வட பகுதியின் அவலநிலையை அறிந்தான். அவன் இதயத்தில்,

யாவேயின் அறைகூவல் அடங்காக் குரலாகத் தொனித்தது. ஆமோஸ் வட பகுதியாகிய இஸ்ரவேலிலே இறைவாக்கு உரைக்க வந்தார்.

நீதியுள்ள இறைவனின் நியாயத்தீர்ப்பு என்பதே அவரது உரைகளின் அடிப்படை. சமூகத்திலே அநீதியையும், சமயத்திலே அவலட்சணமுமான காரியங்களையும் ஆர்வத்தோடே நடப்பிக்கும் மக்கள்மேல் வரவிருக்கும் கொடிய அழிவினை இடிமுழக்கம்போல் எடுத்துரைத்தார் ஆமோஸ் (ஆமோஸ் 1 அதி.). இஸ்ரவேலர் ஆடம்பரத்தோடே ஆசரிக்கும் பண்டிகைகளுக்கும், உபவாசங்களுக்கும், மோசேயின் மூலம் தம்மை வெளிப்படுத்தி நீதியையும் நல்நடத்தையையும் நாடும் யாவேக்கும் எந்தவித நல்லுறவுமில்லை என்று அவர் கூறினார். இதர மக்கள் மத்தியில் இஸ்ரவேலரை இறைவன் அழைத்தது இழிவான ஆடம்பரத்திற்காகவல்ல, இதர மக்களுக்கு இறைவனை அளிக்கும் உத்தரவாதமுள்ள உயரிய வாழ்க்கைக்காகவேயாம். இப்பணியில் இஸ்ரவேலர் பரிதாபமாகத் தவறிவிட்டனர். சட்டென் வரும் யாவேயின் தீர்ப்பு. அழிவே இஸ்ரவேலருக்குப் பரிசு என்றார் ஆமோஸ்.

கேட்டோர் செவிகளிலே இவை கொடிய துரோகச் சொற்களாக விழுந்தன. யாவே தங்களுக்கு ஆதரவாயிருப்பதனலேயே அரசிலும் நாட்டிலும் செல்வாக்கும் செழிப்பும் கொழிக்கின்றன; அப்படியிருக்க, தண்டனை வருவதெப்படி என்ற எரிச்சலோடே மக்கள் ஆமோஸை எரித்துவிடுவது போல் பார்த்தனர். ஆனால் ஆமோஸோவெனில், அரசையும் மக்களையும் ஒன்றுபோல் தெரிந்துகொண்டார். யாவேயைப் பாகாலுக்குச் சமமாக்கிப் பகிரங்க பாவங்களில் மக்கள் ஈடுபட்டதை இரக்கமின்றி இடித்துரைத்தார் ஆமோஸ்.

அசிரியர் வட பகுதிமேல் படையெடுப்பது இறைவனின் நியாயத்தீர்ப்பு நிறைவேறும் முறையென்று அவர் அறிவித்தார். அந்தத் தண்டனையின் நாள் யாவேயின் நீதி நிறைவேறும் நாளாகும். யாவே இஸ்ரவேலருக்காக மாத்திரம் அக்கறைப்படும் இறைவன் என்ற தப்புச் சிந்தனைக்குச் சாவு மணியடித்த ஆமோஸ், அவர் வரலாற்றின் இறைவன், ஆகவே காஞனியரின் வரலாற்றிற்கும் சீரியாவின் வரலாற்றிற்கும் அவரே ஆண்டவர் (9:7) என்ற ஆழமான சிந்தனையை

அம்பலப்படுத்தினர். அவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களும் அவரது பிரமாணங்களை மீறினால் தண்டனைக்கு உட்படுகின்றனர் என்று அவர் கூறினர்.

எனினும் ஆமோஸின் இறை அறிவு குறைவுள்ளது. மோசேயின் பாரம்பரியத்தின் அடிப்படையில் நாட்டின் சமூக, சமய நிலையை அவர் திறனய்வு செய்தபோது வரலாற்றிலே கடவுளின் பரந்த நோக்கத்தை அவர் அறிந்துரைத்தார். ஆனாலும் எபி. 1:1ன்படி இறைவனின் தன்மைபற்றிய பூரண வெளிப்பாடு இயேசுவிலேயே தரப்படுகின்றது.

## ஓசியா

ஆமோஸைப்போலவே இவரும் வட பகுதி கி.மு. 721ல் அழிக்கப்படுவதற்கு முன்னர் இறைவாக்கு உரைத்தார்.

ஓசியாவின் இல்லற வாழ்க்கை ஒரு சோகக் கதை. ஆனல் சோரம்போகும் தன் மனைவியை ரத்துச் செய்ய அவர் இதயம் இடமளிக்கவில்லை. அவள் எந்நிலையிலிருந்தாலும் திரும்பிவிட்டால் சேர்த்துக்கொள்ள அவர் இதயம் துடித்துக்கொண்டிருந்தது. இந்த இதயத் துடிப்பிலிருந்து இறைவனின் குரல் ஒலி கேட்டது ஓசியாவுக்கு. இஸ்ரவேலர் எவ்வளவுதான் பாவம் செய்தாலும், இறைவனின் அன்பிலிருந்து அவர்களை அவர் தள்ளிவிடவில்லை. ஆமோஸ் கூறியபடி அவர் நீதியுள்ளவரே. ஆனல் அவருடைய இரக்கத்தினுள்ளேயே நீதி இடம்பெறுகின்றது. ஏகதேசம் கி.மு. 740ம் ஆண்டு காலத்தில் பணியாற்றிய ஓசியா, அழிவின் மத்தியிலும் புத்துயிர் தோன்றும் என்று எதிர்பார்த்தார். அவரது எதிர்பார்ப்பின்படியே வட பகுதி அழிக்கப்பட்டுப் போனபோதிலும் யூதா தப்பினது. அது இன்னமும் ஒன்றரை நூற்றுண்டு காலம் இருந்தது. யூதாவின் அழிவு உண்மையான யூதேயத்தின் (Judaism) ஆரம்பத்திற்குக் காரணமாயிற்று. ஆகவே அழிவிலே புத்துயிர் ஆரம்பிக்கும் என்னும் ஓசியாவின் எதிர்பார்ப்பு அவமாகிப்போகவில்லை என்க.

## யூதாவின் நிலை

யூதாவின் மக்களும் பல தெய்வ வணக்கத்தின் மத்தியில் வாழ்ந்தபோதிலும், இஸ்ரவேல் நாட்டைப்போல் அந்த

அளவு சீர்கெட்டுப்போகவில்லை. இதர மக்களது சமூகப் பழக்கங்கள், சமய நிகழ்ச்சிகள் ஆகியவற்றைத் தாங்களும் பின்பற்றும் சோதனை யூதா மக்களுக்கும் இருந்தது. ஆனால் எருசலேம், தாவீதின் நினைவு, தேவாலயம், உடன்படிக்கைப் பெட்டி ஆகியவை அவர்கள் நடுவிலிருந்தமை யார் தடையாக விடுத்தது எனலாம். இங்கும் ஏசாயா, மீகா போன்றவர்களின் எதிர்ப்புக் குரல் பெருமளவில் தீமையைத் தடுத்து நிறுத்தினது எனலாம்.

கி.மு. 721ல் சமாரியாவின் அழிவு முதல் 586ல் யூதாவும் எருசலேமும் அழிக்கப்படுவது வரையிலும் யூதா ஒரு குறு நாடாக இருந்துவந்தது. முதலில் அசீரியருக்கும், பின்னர் பாபிலோனியருக்கும் கீழ்ப்பட்டு இருந்தது.

### ஏசாயா (கி.மு. 742–701), மீகா (கி.மு. 715–700)

எட்டாம் நூற்றாண்டின் இறுதியில் ஏசாயா தோன்றினார் (ஏசா. 6). கடவுளின் தூய்மைபற்றிய உணர்ச்சியினால் அவர் ஆட்கொள்ளப்பட்டு உந்தப்பட்டு இறைவாக்கறிவிக்க இறங்கினார். கறைப்பட்டுப்போன ஒரு சமூகத்துக்குப் பரிசுத்த கடவுளின் பயங்கரமான தண்டனை உண்டு; ஆனால் எருசலேம் அழிக்கப்பட்டாலும் கடவுளின் அருளினாலே ஒரு புதிய ஆரம்பம் ஏற்படும்; முழுவதும் அழிந்துபோவதில்லை. கடவுளின்மேல் பற்றுறுதியுள்ள ஒரு சிலர் மீந்திருப்பார்கள். மீந்திருக்கும் உண்மையுள்ள சிலர் மூலமாக தமது மக்களுக்கும், உலகம் முழுவதுக்குமே கடவுள் பெரிய காரியங்களைச் செய்வார் (ஏசா. 37:31பி.) என்று அவர் கூறினார். இந்தப் புதிய இஸ்ரவேலரை அரசு புரிய ஒரு புதிய தாவீது எழும்புவார் என்ற சிந்தனை முதலில் ஏசாயாவினால் கூறப்படுகின்றது (ஏசா. 11). ஏசாயா கூறும் மீதியிருக்கும் உண்மையுள்ளவர்கள், பொற்காலம், மேசியா ஆகியன எருசலேமில் நிகழ்வனவாக அவர் கூறினார். ஆனால், பிற்காலத்தில் இவை கிறிஸ்துவிலும், திருச்சபையிலும் நிறைவேறியதாக அறியப்பட்டது.

ஏசாயாவினால் ஏவப்பட்ட எசேக்கியா அரசன், தென்னாடாகிய யூதாவில் சில சமய சீர்திருத்தங்களில் ஈடுபட்டான் (2 இரா. 18:4). இவன் காலம் கி.மு. 716 முதல் 687 வரை

ஆகும். ஆனல் அவனுக்குப்பின் அரசுபுரிந்த மனசே (கி.மு. 687) அவற்றை ரத்து செய்தான். அவனது காலத்தில் (2 இரா. 21:3பி.) பாகாலின் பலிபீடங்கள் பெருகி, நரபலி, சகுனம் பார்த்தல், குறி கேட்பது, அஞ்சனம் பார்ப்பது ஆகியவை வளர்ந்தன. இக்காலத்தில் மீகா எழும்பி, நீதி வழங்கி, இரக்கத்தைக் கடைப்பிடித்து, கடவுளோடு தாழ்மை யாக நடப்பதே அவருக்கு விருப்பமானது என்று அறிவித்தார் (மீகா 6:8). ஆனல் அது செவிடன் காதில் சங்கு ஊதியது போலாயிற்று.

### யோசியா காலத்துச் சீர்திருத்தம் (கி.மு. 641–610)

கி.மு. 621ல் யோசியா அரசனின் காலத்தில் தேவாலயத் தைச் செப்பனிடும்போது நியாயப்பிரமாணப் புத்தகம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. இது இறைவாக்காளர் குழுவின ரால் முன்பே எழுதப்பட்டு தேவாலயத்தில் வைக்கப் பட்டதாகும். இதுவே நாம் முன்னர் D என்று கூறிய நூலாகும். இதன் பெரும்பாகம் உபாகமத்தில் இருக்கின்றது. இது இறைவாக்காளர் அறிவித்த இறைவனின் தன்மை, அவரது நோக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் எழுதப் பட்டது.

இறைவாக்காளரின் மறைமுகமான முயற்சி பலனளித்தது. நியாயப்பிரமாண நூலினை வாசிக்கக் கேட்ட அரசன் நாட்டிலே பெரும் சீர்திருத்தம் ஏற்பட ஆவன செய்தான். அந்நூலின் பெரும்பகுதி உபா. 12–26 வரை அடங்கியுள்ள பாகம் என்று திட்டமாகக் கூறப்படுகின்றது. இறைவாக் காளருக்கு இறைவன் அருளிய நுண்ணறிவின் அடிப்படையில் சமயத்திலும், நாட்டின் சட்டத்திலும் நிறைவேற்றக்கூடிய ஒரு சீர்திருத்தத் திட்டமாக அது அமைந்திருந்தது. அந்தத் திட்டத்தில் மனித நலன், கடவுளின் மக்கள் என்ற முறையில் இஸ்ரவேலரின் பொறுப்பு, வழிபாட்டில் சீர்திருத்தம் ஆகியவை, கடவுளைப்பற்றி அவர்கள் பெற்றுக்கொண்ட அனுபவபூர்வமான அறிவின் எதிரொலியாயிருந்தன.

இந்தச் சீர்திருத்த இயக்கத்தின் அறிக்கையில் நாட்டில் நிலவிய தீமைகளின் ஒரு சித்திரம் கிடக்கின்றது. நாடெங்கும் அந்நிய தெய்வ வழிபாட்டிடங்கள், தேவாலயத்தினுள் பல

தெய்வ வணக்கம், தேவாலயத்தினுள் தேவதாசிகளுக்கு இருப்பிடம், சந்திர, சூரிய, நட்சத்திர வணக்கம், பலவித மூடநம்பிக்கைகள், நரபலி ஆகியவை நாட்டிலே மலிந்து கிடக்க யாவே வழிபாடு நலிந்துபோயிற்று. அரசர்களின் ஆதரவில் புரோகிதர்கள் தூபம் வார்க்கக் கடவுளின் மக்களின் அதிகாரபூர்வமான சமய நெறியாக இது அமைந்துவிட்டது. யாவேக்குக் கீழ்ப்படிதல் என்பது இதுவே என்று சாதாரண மக்களும் சிந்தித்தனர்.

யோசியாவின் சீர்திருத்த முயற்சியினால் நாட்டு மக்கள் இந்தப் பிழையை உணர்ந்து, தங்களை மறுபடியும் யாவே வணக்கத்துக்கு அர்ப்பணம் செய்தபடியால், இந்தச் சமயச் சீரழிவின் பெரும்பாகம் அகற்றப்பட்டுவிட்டது. பாகால் வழிபாட்டிடங்கள் அழிக்கப்பட்டன. தேவாலயத் தொழுகையே முக்கியப்படுத்தப்பட்டது. புரோகிதர்கள் வரிசை புதுப்பிக்கப்பட்டது. விக்கிரகங்கள் நிக்ரகம் செய்யப்பட்டன. அந்நிய தெய்வ வழிபாட்டின் பழக்கவழக்கங்களும் அழிக்கப்பட்டன.

இதைவிட மிக முக்கியமான நிகழ்ச்சி என்னவெனில், இஸ்ரவேலரது வரலாறு புதுப்பித்து எழுதப்பட்ட செயலாகும். மோசேயோடே உடன்படிக்கை செய்த யாவேயை உண்மையாக வழிபட்ட காலத்தில் நாட்டிலே செழிப்பிருந்தது, அவரை மறந்தபோது அவர்கள் தண்டிக்கப்பட்டனர் என்னும் தத்துவத்தின் அடிப்படையில் இது எழுதப்பட்டது. இந்த வரலாறு இஸ்ரவேலர் கானானில் புகுந்தது முதல், அரசு இரண்டாகப் பிரிவது வரையிலுமுள்ள நிகழ்ச்சிகளை சம்பந்தப்படுத்தியதாகும். வருங்காலத்திலும் கடவுளின் மக்கள் யாவேக்கு உண்மையாயிருந்தால் மாத்திரமே அவர்களுக்கு நல்ல ஒரு வருங்காலம் உண்டு என்று அறிவுறுத்தும்படியும் இவ்வாறு எழுதினார்கள். இவை யோசுவா முதல் 2 இராஜாக்கள் வரையிலுமுள்ள நூல்களாம். இவற்றில் இறைவாக்காளரின் உபதேசம் அடிப்படையாயிருப்பதனால் இவைகளுக்கு 'முந்திய இறைவாக்கு நூல்கள்' (*Former Prophets*) என்று பெயர்.

## எரேமியா

யோசியாவின் சீர்திருத்தங்களால் நிலைவரமான பலன்கள் எதுவும் ஏற்படவில்லை என்று எரேமியாவின் நூலில் விளங்கு

கின்றது. எருசலேமின் வீழ்ச்சிக்கு முன்னர் இஸ்ரவேலரது வரலாற்றிலே மிகப் பெரிய இறைவாக்காளரில் கடைசி ஆவார் எரேமியா. சீர்திருத்தங்களை முதலில் ஆவலோடு வரவேற்றபோதிலும் ஆழமான பலன்கள் ஏற்படாதது கண்டு அவர் ஏமாற்றமுற்றார். பாகால் வழிபாட்டிடங்கள் பெயரளவில் உடைக்கப்பட்டபோதிலும், மக்களது சிந்தனைகளில் பெரிதான மாற்றங்கள் ஏற்படவில்லை என்று அவர் உணர்ந்தார். மக்களின் அன்றாட வாழ்க்கை யாவேக்கு அருவருப்பாக இருந்ததை அவர் கவனித்தார்.

பாபிலோனியர் அசீரியரை மேற்கொள்ளவே அசீரியருக்குக் கீழிருந்த யூதா பாபிலோனுக்குக் கீழ்ப்பட்டது. யோசியாவுக்குப்பின் அரசு புரிந்தவர்கள் திறமையற்றவர்களாயிருந்தனர். பாபிலோனுக்கு விரோதமாகக் கலகம் செய்யாமல், பாபிலோனுக்கு அடிமைப்படுவதே யாவேயின் சித்தம் என்று எரேமியா வற்புறுத்தினார். எருசலேம் புனிதமான பட்டணம், தேவாலயம் புனிதமானது, ஆகையால் அவை அழிக்கப்படுவதில்லை என்று சிந்திப்பது தவறு என்று அவர் அறிந்தார். நேபுகாத்நேச்சார், யூதா மக்களில் உயர்குடிப் பிறந்தோர், திறமைசாலிகள் போன்றவர்களை கி.மு. 597ல் நாடு கடத்தினார். ஒருவேளை கானானிய நாட்டின் வழிபாடுகளின் சோதனைகளில்லாத பாபிலோன் நாட்டிலே யூதேயா மக்கள் மெய் இறை வழிபாட்டின் தேவையையும் சிறப்பையும் உணருவார்கள் என எரேமியா எதிர்பார்த்திருக்கக்கூடும்.

பாபிலோனுக்கு விரோதமாகக் கலகம் செய்யாதிருங்கள் என்ற எரேமியாவின் போதகத்தை நாட்டுக்கு விரோதமானதாகக் கருதி அவரைப் பிடித்து, அடித்துச் சிறைப்படுத்திசாகட்டும் என்று குழியிலிட்டனர். ஆயினும் அவர் விடுதலை செய்யப்பட்டு கி.மு. 586ல் எருசலேமும், தேவாலயமும் பாபிலோனியரால் அழிக்கப்படுவதைக் கண்டார். அரசன் கண்கள் பிடுங்கப்பட்டு, மக்களில் பெரும் எண்ணிக்கையினர் நாடு கடத்தப்பட்டு, அரண்மனையும், உயர்ந்த கட்டிடங்களும், அலங்கமும் இடிக்கப்பட்டன. இவ்வாறு யூதாவின் மேல் கடவுளின் நியாயத்தீர்ப்பு நிறைவேறிற்று. ஆயினும் அவரது இரக்கம் அழிந்துவிடவில்லை. ஒரு புதிய வாய்ப்பு இஸ்ரவேல் மக்களுக்கு அளிக்கப்படுகின்றது.

# ஒரு புதிய வாய்ப்பும் தோல்வியும்

சுமார் 1500 ஆண்டுகளுக்கு முன்னர் பாபிலோனுக்கு நூறு மைல் தூரத்திலுள்ள ஊர் என்ற இடத்திலிருந்து வாக்குத்தத்த நாட்டைத் தேடி ஆபிரகாம் சென்றார். இப்போது நாடிழந்த இஸ்ரவேலர் பாபிலோனில் சிறைபட்டுக் கிடக்கின்றனர். இவ்விதச் சூழ்நிலையில் எந்த இனத்தவரும் தாங்கள் வழிபட்ட இறைவன் தங்களைப் பாதுகாப்பதற்கு வல்லவரல்லர் என்று சிந்தித்து அவரை மறந்துவிடுவர். இஸ்ரவேலரிலும் பலர் அவ்விதம் மறந்துவிட்டனர் என்பது உண்மையே. ஆயினும் யாவேயை மறந்துவிடாத ஒரு சிலர் இருந்தனர். இஸ்ரவேலரது சமய வரலாறு அவர்களால் தொடருகின்றது.

இஸ்ரவேலரைப்போல் வேறு பல சிறு நாடுகளின் மக்களும் பாபிலோனுக்குச் சிறை கொண்டுபோகப்பட்டனர். இவர்களில் பலர் வரலாற்றிலிருந்தே மறைந்துவிட்டனர். ஆயினும் மிகச் சிறிய இஸ்ரவேலர் அழிந்துபோகாதது இறைவாக்காளர்கள் அவர்களது வரலாற்றிற்கு அளித்த விளக்கமே ஒரே காரணமாகும். மக்களுக்கு நேரிட்ட கொடிய நிகழ்ச்சிகள் யாவேயின் வழியைப் பின்பற்ருதபடியால் ஏற்பட்ட நியாயமான தண்டனை என்று அவர்கள் கூறியிருந்தனர். யாவே மக்களைக் கைவிடவில்லை, ஆனல் மக்கள் யாவேயைக் கைவிட்டுவிட்டனர் என்று அவர்கள் போதித்திருந்தனர்.

### எசேக்கியேல் (கி.மு. 593–573), பெயர் அறியப்படாத இறைவாக்காளர்

சிறையிருப்பில் கொண்டுவரப்பட்ட மக்கள் பலர் இந்த உண்மையினை இறைவாக்காளர் வாயிலாகக் கேட்டிருந்தனர். இதோடு, சிறையிருப்பிலும் இறைவாக்காளர் இருவர் யாவேயின் தூதுவராகப் பணியாற்றினபடியால் இஸ்ரவேலரது

சமயம் அழிந்துபோகாமல் அவர்களது வரலாற்றிலே ஒரு புதிய ஆரம்பம் ஏற்பட்டது. இவர்களில் ஒருவர் எசேக்கியேல், மற்றவர் பெயர் அறியப்படாதவர். இவரது இறைவாக்குரைகள், ஏசாயா 40–55 வரையுள்ள அதிகாரங்களில் அடங்கியுள்ளன (ஏசாயா நூலில் பல இறைவாக்காளர்களின் உரைகள் இடம்பெற்றுள்ளன என்றும், அவர்களில் ஏசாயா ஒருவரின் பெயர் மாத்திரமே நமக்குத் தெரியும் என்றும் திறனாய்வாளர்கள் கூறுகின்றனர்). இவரை இரண்டாம் ஏசாயா எனலாம் (கி.மு. 540).

கி.மு. 597ல் முதல் தடவையாகச் சிறை கொண்டு போகப்பட்டவர்களில் எசேக்கியேல் ஒருவர். எரேமியாவைப் போலவே, இவரும் இஸ்ரவேல் மக்களின் அரசின் அழிவு உடன்படிக்கையைப் பாதுகாக்கத் தவறிய மக்களுக்குக் கிடைத்த நியாயமான தண்டனை என்று கூறினார். எனினும், மக்களது அறிவீனத்தினால் கடவுளின் சித்தம் அவமாவதில்லை. இஸ்ரவேல் அரசு திரும்பவும் நிறுவப்படும்; சிறையிருப்பின் அனுபவத்தினால் சிந்தனை மாற்றம் ஏற்பட்டு மக்கள் தங்கள் நாட்டிற்குத் திரும்புவார்கள்; எருசலேமும் தேவாலயமும் திரும்பக் கட்டப்படும்; மக்கள் யாவேக்குக் கீழ்ப்படிந்து உண்மையான வழிபாட்டில் ஈடுபடுவார்கள் என்று எசேக்கியேல் (அதி. 37) உயிரற்ற எலும்புகள் உயிரடையும் காட்சியின் மூலம் உறுதிப்படுத்தினார்.

### சிறையிருப்பின் வாழ்க்கை

இஸ்ரவேலர் அந்நிய நாட்டிலிருந்தபோதிலும் அவர்களுக்குப் பொருளாதார நெருக்கடி இல்லை. அக்காலத்தில் பேரரசுகள் கைதிகளை இரக்கத்தோடு நடத்தின. யூதர்கள் தாங்கள் எந்தெந்த மாவட்டங்களிலிருந்து வந்தார்களோ அதின்படியே குடியிருக்க அனுமதிக்கப்பட்டனர். சிலர் வியாபாரம் செய்து பொருள் ஈட்டினர். ஆயினும் பலர் பாபிலோனிலே தாங்கள் அந்நியர் என்பதனை மறக்கவில்லை. இக்காலத்துச் சங்கீதங்கள் (சங். 137) இந்த உண்மைக்கு ஆதாரமளிக்கின்றன.

சிறையெடுத்த பேரரசு தங்களை அனுதாபத்தோடு நடத்தியதாலும், விடுதலையின் நம்பிக்கை அணைந்துபோகாது இறைவாக்காளர்கள் தூண்டிக்கொண்டிருந்தபடியாலும், இஸ்ர

வேலர் தங்களது சமய நம்பிக்கைகளேயும் அறநெறியையும் மறந்துவிடவில்லே. தாங்கள் வழிபடுவதற்கு தேவாலயம் இல்லாதபடியால் தங்களது அன்ருட வாழ்க்கையில் அறநெறியினைத் தீவிரமாகக் கடைப்பிடிக்க முற்பட்டனர். தங்களேச் சூழ இருந்த பல தெய்வ வணக்க பாபிலோனிய மக்கள் நடுவில் இஸ்ரவேலரது அறநெறிச் சிறப்பு விளங்கிற்று. இதிலிருந்து தான் பிற்காலச் சுயநீதியுள்ள பரிசேயர்கள் தோன்றினர் என்று கூறப்படுகின்றது.

ஒரு தேவாலயத்துக்குப் பதிலாக பல ஜெபாலயங்கள் எழுந்தன. நியாயப்பிரமாணத்தைப் படிப்பதும் விளக்குவதும் பைத்தியம்போலாகிவிட்டது. விருத்தசேதனம் யூதர்களுக்கும் பாபிலோனியருக்குமுள்ள சிறப்பான வித்தியாசமாயிற்று. ஓய்வு நாள் ஆசரிப்பு, சடங்காசாரங்கள் ஆகியவை கண்டிப்பாகக் கடைப்பிடிக்கப்பட்டன. உண்மையான யூதர்கள் இதர மக்களோடு உறவுகொள்ளாமல், சில உணவுப் பொருட்களேத் தவிர்த்து, ஏழாம் நாளே மற்றெல்லா நாட்களேயும்விட வித்தியாசமான முறையில், பிறர் பார்த்துப் பாராட்டும் முறையில் கடைப்பிடிக்கத் தொடங்கிவிட்டனர். இந்த மறுமலர்ச்சியின் நோக்கம் உயரியதேயாயினும், தங்களுக்கும் தங்கள் சமயத்துக்கும் இதர மக்களுக்கும் பிறரது சமயங்களுக்கும் பெரும் வித்தியாசம் உண்டு என்று காண்பிக்க முயன்று, குறுகிய மனப்பான்மையுள்ள நாட்டுப்பற்றுப் பித்தர்களேப் போல் மக்கள் மாறிவிட்டனர்.

## இரண்டாம் ஏசாயா

இந்தக் குறுகிய மனப்பான்மையை ஆதரிக்காத மக்கள் இருந்தனர் என்பது, இரண்டாம் ஏசாயா என்று அறிஞர் அழைக்கப்படும், பெயரறியாத இறைவாக்காளர் ஒருவரது திருப்பணியில் தெளிவாகின்றது. பழைய ஏற்பாட்டின் மற்றெல்லா இறைவாக்காளர்களேயும்விட இஸ்ரவேலரது இலட்சியம், இறைவனின் தன்மை, வரலாற்றின் இலக்கு ஆகியவைபற்றிய மிகவும் ஆழமான நுண்ணறிவுடைய சிந்தனேயாளராக இவர் இருந்தார். இவர் சிறையிருப்பின் இறுதிக் கட்டத்தில் இறைவாக்குரைத்தார். இவரது உரை நம்பிக்கையும், இறைவனின் இரக்கம் சீக்கிரம் கிடைக்கும் என்ற வாக்குத்தத்தமும் உள்ள

தாயுமிருந்தது. மக்கள் தங்கள் பாவங்களுக்கான தண்டனை அனுபவித்தாயிற்று. இறைவன் அவர்களை மன்னித்துவிட்டார். சீக்கிரம் பாபிலோனியப் பேரரசு விழுந்துபோக கோரேஸ் அரசனின்கீழ் பாரசீக அரசு கைதிகளுக்கு விடுதலையளிக்கும். தங்களது தோல்வியின் மத்தியிலும், இறைவனைப் பற்றிய மெய்யறிவினை உலகிற்கு அளிக்கும் கருவி இஸ்ரவேலர் என்பது கடவுளின் சித்தமாயிருக்கின்றபடியால் இவ்வாறு நிகழும்.

யாவேயின் தலையீட்டினாலே விடுதலையடையும் மக்கள் தங்கள் தாய்நாடு திரும்பும் காட்சியை இறைவாக்காளர் காண்கின்றார். அவர்கள் அங்கே சென்று உண்மையான இறைவழிபாட்டினை மறுபடியும் புதுப்பித்து நடத்துவர். உலகின் நாடுகளெல்லாம் இந்தத் தொழுகையினிடம் வருவார்கள். யாவே ஒரே இறைவன். அவரையன்றி வேறு தெய்வங்கள் இல்லை. மற்றெந்தத் தெய்வமும் மனிதனது கற்பனையும் மூடநம்பிக்கையுமாகும். பாபிலோனியா, பாரசீகம் ஆகிய அரசுகள் இறைவனது திருநோக்கத்தினை நிறைவேற்றும் கருவிகள் என்ற ஆழமான உண்மையைப் போதித்த சிறப்பு இவரையே சாரும்.

### விடுதலை

சிறையிருப்பு ஏகதேசம் ஐம்பது ஆண்டுகள் நீடித்தது. கி.மு. 538ல் கோரேஸ் என்ற பாரசீக அரசன் பாபிலோனியப் பேரரசு முழுவதையும் கைப்பற்றினான். அவன் சிறுபான்மை மக்களுள்ள சிற்றரசுகளுக்கு அவர்கள் விரும்பினால் விடுதலையளிக்க எண்ணினான். இதுபற்றிய அவனது விளம்பரம் இறைவனின் கரம் என்று திருமறை கூறுகின்றது (எஸ்ரா 1:1–4).

எனினும் விடுதலையை வாய்ப்பாகச் சிந்தித்து எல்லா யூதர்களும் பெருந்தொகையாகப் புறப்பட்டுச் சென்றதாகத் தெரியவில்லை. நாடு பெருமளவில் அழிந்து கிடந்தபடியாலும், அங்கு வாழ்க்கை நடத்துவது மிகவும் கடினமாகிவிட்டபடியாலும் திரும்பிச் செல்வதில் பலர் ஆர்வம் காண்பிக்கவில்லை.

**ஆகாய், சகரியா, நெகேமியா, மல்கியா (கி.மு. 520–500)**

[விடுதலை பெற்ற இஸ்ரவேலர் நாடு திரும்பியதுபற்றிய ஆரம்பக் கட்ட வரலாறு தெளிவில்லை. எஸ்ரு 1:8ன்படி சேஸ்பாத்சார் என்பவரின் தலைமையில் ஒரு கூட்டத்தினர் பாபிலோனிலிருந்து பலஸ்தீனுவுக்கு வந்தனர். பதினுறு ஆண்டுகளுக்குப் பின்னர் எஸ்ரு 2:2ன்படி, எஸ்ருவின் தலைமையில் திரும்பவும் ஒரு கூட்டத்தினர் பாபிலோனிலிருந்து பலஸ்தீனுவுக்குத் திரும்பிவந்தனர். செருபாபேல் பலிபீடத்தைக் கட்டுவித்து அனுதினமும் பலிசெலுத்துவதற்கான ஒழுங்குகளைச் செய்தார். மேலும், தேவாலய வேலையை ஆரம்பிக்க] மக்களை ஏவி எழுப்பி, அஸ்திவாரமிட்டு வேலையைத் தொடங்கினுர்.

இக்காலத்தில் செருபாபேலுக்குத் துணையாக ஆகாய், சகரியா என்னும் இறைவாக்காளர் எழும்பி எருசலேம் தேவாலயத்தைக் கட்டுவதற்கு மக்களை ஏவினர். தேவாலயம் பழுதுபார்க்கப்பட்டது. எருசலேமின் சுவர்கள் கட்டப்படாதபடியால் சத்துருக்கள் எளிதில் உள்ளே வரக்கூடிய வாய்ப்பு இருந்தது. பலஸ்தீனுவிலே எருசலேமைச் சூழ மாத்திரம் ஏகதேசம் 20,000 யூதர்கள் வாழ்ந்து வந்தனர். மல்கியா போன்றவர்களது நூல்களில், மக்களின் நம்பிக்கைகள் நிறைவேருத ஒரு காட்சியே கிடக்கின்றது. தேவாலயம் புதுப்பிக்கப்பட்டபோதிலும், மக்கள் நம்பிக்கையும் ஆர்வமும் இழந்துவிட்டவர்களாகவே காணப்பட்டனர். அவர்கள் மேய்ப்பனற்ற ஆடுகள்போலிருந்தனர். பழைய சமய ஒழுங்கீனங்கள் இல்லை. ஆனுல் வாழ்க்கை மகிழ்ச்சியற்றுப் போயிற்று.

இக்கட்டத்தில் நெகேமியா எழும்பி புத்துயிர் அளித்தார். அவர் பாரசீக அரண்மனையிலே உயர் பதவி வகித்தபோதிலும், யூத தேசியப் பற்றுள்ளவராயிருந்தார். எருசலேம் மதிலிழந்து கிடந்தபடியால் சத்துருக்கள் வந்து கொள்ளையிடுவதையும் மக்கள் பாதுகாப்பின்றி வாழ்வதையும் அவர் அறிந்தார். ஆகவே அரசியல் நோக்கத்தோடும், மக்கள் பாதுகாப்புணர்ச்சியோடே வாழவேண்டும் என்ற ஆர்வத்தோடும் எருசலேமின் மதிலைக் கட்ட அவர் திட்டமிட்டார்.

அரசனின் அனுமதியும் ஆணையும் பெற்று கி.மு. 450 கால கட்டத்தில் எருசலேமின் ஆளுனராக நெகேமியா வந்தார். இவர் மிகவும் திறமையும் மன உறுதியுமுள்ளவர். மக்களை உற்சாகப்படுத்தி ஏவி எழுப்பி எருசலேம் நகரின் அலங்கங்களை கட்டிவிட்டார். எல்லா எதிர்ப்பையும் இவர் வெற்றிகரமாக மேற்கொண்டார்.

## புதிய அமைப்பு

எருசலேமின் அலங்கங்கள் கட்டப்பட்டது சத்துருக்களை மாத்திரமல்ல, அந்நிய தெய்வ வணக்கம், மூட நம்பிக்கைகள் முதலியவைகளையும் எருசலேமினுள் புகாவண்ணம் தடுக்கும் செயலாகிவிட்டது. அது யூத மக்களின் மறுமலர்ச்சிக்கு எடுத்துக்காட்டும் ஆதாரமுமாயிருந்தது. ஒரு புதிய தேசிய உணர்ச்சி தோன்றிவிட்டது. இதர கலாச்சாரத்தினரோடு கலந்துவிடுவது ஆபத்து என்ற சிந்தனை உறுதிபெற்றது. ஆகவே கடவுளுக்குப் பயந்து வாழும் மக்கள் நிறைந்த, அதாவது கடவுளின் பிரமாணத்தின்படி இயங்கும் ஓர் அரசாக அவர்கள் இயங்கத்தொடங்கினர்.

புரோகிதர்களான எழுத்தாளர்கள் இந்தப் புதிய அமைப்பின் சட்டமாக ஏற்கெனவே படிப்படியாக வளர்ந்திருந்த மோசேயின் நியாயப்பிரமாணத்தைத் தொகுத்து ஒன்றுபடுத்தினர். இது கடவுளின் புதிய மக்களின் அன்றாட வாழ்க்கையின் அறநெறியாக அமைந்தது. படைப்பு, முற்பிதாக்கள் வரலாறு, எகிப்திலிருந்து விடுதலை, கானானைச் சொந்தமாக்குதல் முதலியவற்றைக்கொண்ட ஐஞ்சுருளாகிய திருமறையின் முதல் ஐந்து நூல்களில் இந்தத் தொகுப்பு அடங்கியிருக்கிறது. மோசேயின் நியாயப்பிரமாணம், இறைவாக்காளர்மூலம் வந்த இறைவெளிப்பாடான சமயக் கருத்துக்கள் ஆகியவை இதில் இடம்பெற்றுள்ளன. மேலும், சமய, சமூக வாழ்க்கைச் சட்டங்களும் இதில் இடம்பெற்றுள்ளன.

இக்கட்டத்தில் எஸ்றா தோன்றி நெகேமியா ஆரம்பித்திருந்த பணியினைப் பூரணப்படுத்தினார். நாளாகமம், நெகேமியா, எஸ்றா ஆகிய நூல்கள் இவராலேயே தொகுக்கப்பட்டன என்றும், ஐஞ்சுருள் இஸ்ரவேலரின் அரசியலமைப்பு (constitution) என அதிகாரபூர்வமாக நிறுவியவரும் இவரே

என்றும் அறிஞர்கள் பலர் கருதுகின்றனர். ஆகவே, தேவால யத்தை நடுவாகக்கொண்டு புரோகிதரால் அரசு செலுத் தப்பட்டு, நியாயப்பிரமாணத்தை அறநெறியாகக்கொண்டு, யாவே வழிபாட்டிற்குத் தங்களை அர்ப்பணம்செய்து இஸ்ர வேலரின் வாழ்க்கை மறுபடியும் மலரத்தொடங்கிற்று.

## புதிய வாய்ப்பு

அழிவிலிருந்து உயிர்பெற்றெழுந்ததுபோல் இஸ்ரவேலரது அரசு திரும்பவும், ஆனால் வேறு முறையில் அமைக்கப்பட்டது. இஸ்ரவேல் மக்களை இறைவன் யாவே தெரிந்துகொண்ட நோக்கத்தினை அவர்கள் நிறைவேற்றுவதற்கு இது இரண்டாம் வாய்ப்பாக அளிக்கப்பட்டது. பழைய பல ஆபத்துக்கள், சோதனைகள் இப்பொழுது இல்லை. இதர நாகரீகங்களின் இழுப்புகள், பல தெய்வ வணக்கத்தின் சோதனைகள், நரபலி, தேவதாசிகள், மூட நம்பிக்கைகள் போன்ற பிரச்சி னைகள் இப்போது இல்லை. இறைவாக்காளர்களின் தளராத பணியினால் இறைவனைப்பற்றிய உயரிய கருத்துக்கள் உரம் கொண்டன. யாவே ஒருவரே அனைத்தையும் படைத்த இறைவன் என்பது ஆணித்தரமாகப் பதிந்துவிட்டது. இஸ்ர வேலரது இலட்சியம் உலகப்பிரகாரமான ஓர் அரசினை நிறுவி அதனை விரிவுபடுத்தி அரசு புரிவதுமல்ல என்பதும் தெளிவாகி விட்டது. சமயத்திற்கும் அன்றாட வாழ்க்கைக்கும் இசை விருக்கவேண்டும் என்ற இறைவாக்காளரின் போதனையை மக்கள் முற்றிலும் மறந்துவிடவில்லை. இவ்விதமாக மறு மலர்ச்சிக்குச் சாதகமான நல்ல சூழ்நிலை இருந்தபோதிலும் இரண்டாம் வாய்ப்பினையும் இஸ்ரவேலர் செவ்வனே உபயோ கிக்காமல், இறைவன் யாவேயின் திருநோக்கத்தை நிறை வேற்றத் தவறிவிட்டனர்.

## புதிய ஆபத்துக்கள்

சிறையிருப்பின் அனுபவத்தில் ஏற்பட்ட புத்துணர்ச்சிகளிலே ஒன்று இஸ்ரவேலர் இறைவன் யாவேயினால் தெரிந்துகொள்ளப் பட்டவர்கள் என்ற உண்மை அவர்களது வாழ்க்கைகளிலே விளங்கவேண்டும் என்பதாகும். யூதன் மற்றவர்களைவிட வித்தியாசமானவன். இந்த நல்லுணர்ச்சி தவறான முறை யிலே செயல்படத் தொடங்கிற்று.

நியாயப்பிரமாணத்தின் தனிச் சட்டங்களை நிறைவேற்றும் முயற்சியில் இஸ்ரவேலர் தவறிவிட்டனர். (உ—ம்) ஓய்வுநாளைத் தூய்மையாய் ஆசரிப்பது எவ்வாறு என்ற கேள்விக்குப் பதிலாக ஓய்வுநாளில் செய்யத்தகுந்தவை, தகாதவை எவை என்பதுபற்றி அநேக உபசட்டங்கள் தோன்றின. இப்படியே ஒவ்வொரு பிரமாணமும்பற்றி நூற்றுக்கணக்கான உப சட்டங்கள் எழுதப்பட்டு, முழுவதும் மிகவும் கடினமான ஒரு பிரமாண மார்க்கமாக யூத சமயத்தை மாற்றியமைத்து விட்டன.

### பரிசேயர்கள்

நியாயப்பிரமாணத்தை நிறைவேற்ற இயலாதபடி மக்கள் திகைத்தனர். நூற்றுக்கணக்கான விதிகளைப் படிப்பதும் மனத்திலே பதிப்பதும் அவ்வப்போது நினைவுகூர்ந்து நிறை வேற்றுவதும் என்பது பெரும்பாலரான யூதரால் இயலாத செயலாகிவிட்டது. எனினும், மிகவும் கருத்தாக நியாயப் பிரமாணத்தைக் கற்று எழுத்தின்படி அதற்குக் கீழ்ப்படியும் ஒரு புனிதர் கூட்டம் தோன்றினர். இவர்களுக்குப் பரிசேயர் என்பது பெயர். இவர்கள் சாதாரண மக்களைவிட நுட்பமாக பிரமாணங்களை நிறைவேற்றியபடியால் ஆவிக்குரிய பெருமை, தங்களைப்பற்றிய உயரிய சிந்தனை, தங்கள் உயரிய சமய வாழ்க்கையை விளம்பரம் செய்தல் ஆகிய தீமைகளுக்கு அடிமைப்பட்டனர். இறைவாக்காளர் கூறிய அன்பு, தாழ்மை, இரக்கம், நீதி இவைகளை எழுத்துக்கெழுத்து பிரமாணத்தை நிறைவேற்றுவதே உண்மையான சமய வாழ்க்கையின் எடுத்துக்காட்டு என்ற தப்பிதமான சிந்தனை எழுந்தது.

எனவே சடங்காசார சமய வாழ்க்கை தோன்றி, எழுத்தின் படி பிரமாணத்துக்குக் கீழ்ப்படிவதே கடவுளுக்குக் கீழ்ப்படிவ தாகும் என்ற தவறான உபதேசம் வலுப்பெற்றது. இதனால் வாழ்க்கையின் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் தகுந்த சட்டங்கள் உருவாக்குவதில் சமயக் குரவர்கள் மிகவும் கவனம் செலுத்தி வந்தனர். பிற்காலத்தில் இவ்விதச் சடங்காசார சமய வாழ்க்கையினை இயேசு வன்மையாகக் கண்டித்தது இவண் நினைவுகூரத்தகும்.

இதோடு, எஸ்ரு, நெகேமியா காலத்தில் தனித் தேசிய உணர்ச்சி வலுப்பெற்றது. இஸ்ரவேலர் இதர மக்களோடு இரத்த சம்பந்தமான உறவுகொள்வது தவறு என்ற சிந்தனை வளர்ந்தது. சிறையிருப்புக் காலத்தில் பாபிலோனிய மக்களோடு கலவாதிருந்ததுபோலவே, திரும்பிவந்த பின்னரும், இதர மக்களோடு கலவாதிருக்கும்படி அவர்கள் தூண்டப்பட்டனர். யூதரல்லாதாரோடு ஏற்கெனவே திருமண உறவு கொண்டவர்கள் அதனை ரத்துச் செய்யும்படி வற்புறுத்தப்பட்டனர். யூதரல்லாதோரைத் திருமணம் செய்வது தடை செய்யப்பட்டது. இதற்கு ஆதாரமாகத் தங்களது முற்பிதாக்களின் வரலாற்றையும் மாற்றி எழுதி, அவர்களும் பிறரோடு கலவாதிருந்தனர் என்றமைத்தனர். ஆனால் திருமறையின் இதர பாகங்கள் இக்கூற்று தவறு என்பதனைத் தெளிவுறுத்துகின்றன (ஆதி. 38; நியா. 14). அது மிகவும் ஆபத்தான ஒரு நயமாயிருந்தபடியால் எதிர் குரல் இறைவாக்காளர்களால் எழுப்பப்பட்டது.

## ரூத், யோனு நூல்கள்

இஸ்ரவேலர் இறைவனால் அழைக்கப்பட்டது அவர்களுக்குக் கிடைத்த தனிச் சலுகையும் சிலாக்கியமுமல்ல, அது ஒரு சிறப்பான உத்தரவாதமாகும் என்றும், யாவே யூதருக்கும் யூதரல்லாதவர்களுக்கும் இறைவனாயிருக்கின்றார் என்றும் இறைவாக்காளர் குரல் இந்நூல்கள் வழி தொனித்தது.

ரூத்தின் கதையில் இறுதிப் பாகத்தில் அதின் நோக்கம் அமைந்திருக்கின்றது. இஸ்ரவேலரின் பாராட்டுக்குரிய அரசன் தாவீது; ஆயினும் அவர் மோவாபியப் பெண்ணான ரூத்துக்கும் இஸ்ரவேலனான போவாசுக்கும் உள்ள பின் சந்ததியிலே தோன்றியவராவர். எனவே இதர மக்களோடு கலவாதிருத்தல் என்ற உபதேசத்திற்கு இடமில்லை. தாவீதரசனுக்கு முன்பே முக்கிய இடத்திலேயே இரத்த உறவு இதர மக்களோடு ஏற்படலாயிற்று. எனவே, இஸ்ரவேலரால் வெறுக்கப்படும் இதர மக்களுக்கும் யாவே இறைவனாயிருக்கின்றார். அவர்களோடு இரத்த உறவுகொள்வதை அவர் கண்டிக்கவில்லை என்று இந்நூல் அறிவுறுத்துகிறது.

யோனுவின் நூலும் இவ்வித நோக்கத்தோடு எழுதப்பட்ட ஒன்ருகும். யோனு இதர மக்களைப் பழித்து, தனித்தியங்கும் திருக்கூட்டமாக வாழ முனைந்த இஸ்ரவேலரின் பிரதிநிதி ஆவான். ஆகையினுல் அவன் இதர மக்களுக்கு யாவேயின் செய்தியினைக் கூற மறுக்கின்ருன். மீன் வயிற்றுக்குள் சென்ற பின்னரும் தன் கருத்தினை மாற்றிக்கொள்ளாத யோனு போலவே, சிறையிருப்பிற்குச் சென்று திரும்பிய பின்னரும் இஸ்ரவேலர் தங்களது தவருன சிந்தனையை மாற்றிக்கொள்ள வில்லை. இறுதியில் யாவேயின் இரக்கம் யூதருக்கும் யூதரல் லாதாருக்குமுரியது என்பதனை யோனு கற்றுக்கொள்ளுகின் ருன். எனினும் யோனுவின் நூலினுல் மக்களிடையில் பெரிய சிந்தனை மாற்றங்கள் ஏற்பட்டதுபோல் தோன்றவில்லை. ஆனுல் தங்களது அழைப்பைப்பற்றிய இஸ்ரவேலரது குறுகிய மனப்பான்மையிலிருந்து ஒரு நன்மை விளைந்தது. சென்ற காலங்களில் இதர மக்களோடு உறவுகொள்ளுதல் என்பது சமய, ஒழுக்க சீரழிவுக்குக் காரணமாயிருந்தது. இந்தப் பெரிய தீமை இப்போது தவிர்க்கப்பட்டுவிட்டது.

### யோபு, சங்கீதங்கள், நீதிமொழிகள், பிரசங்கி

எனினும், இலக்கியத்துறையில் இக்காலம் சிறப்புமிக்கதாக இருந்தது. யோபு, நீதிமொழிகள், பிரசங்கி ஆகிய நூல்கள் இக்காலத்தில் எழுதப்பட்டன. இவை இறைவாக்காளரின் உபதேசத்தை அன்ருட வாழ்க்கைக்குரிய, சட்டதிட்டங்க ளாக அல்ல, நல்லாலோசனைகளாகவும், ஒழுக்க வழிகாட்டி களாகவும் அமைந்துள்ளன. இக்காலத்திலேயே சங்கீத புத்தகம் உருப்பெற்றது. புதிய சங்கீதங்களோடு, தாவீதரசன் காலம் முதலாக எழுதப்பட்ட சங்கீதங்கள் தொகுக்கப் பட்டன. இவை பல சந்தர்ப்பங்களிலும் மக்களின் உணர்ச்சி கள் எப்படிப்பட்டவைகளாயிருந்தன என்று காண்பிக்கின்றன. இஸ்ரவேலரது வரலாற்றின் வெற்றி, தோல்விகளின் எதிரொலிகள் பல சங்கீதங்களில் விளங்குகின்றன. இறை வாக்காளர்களின் எழுதப்பட்ட உரைகளும் இக்காலத்திலே தொகுக்கப்பட்டு நூல் வடிவமாக அமைக்கப்பட்டன. சமயத் துறையில் சடங்காசாரம் வளர்ந்தபோதிலும், அரசியல் துறை யில் அலசடி நிலவியபோதிலும் இலக்கியத்துறையில் இக்காலம் சிறப்புமிக்கதேயாம்.

### அரசியல் நிகழ்ச்சிகள்

கி.மு. 331ல் மகா அலெக்சாந்தர் என்னும் கிரேக்க அரசன் பாரசீகப் பேரரசினைக் கைப்பற்றினான். எனவே பலஸ்தீனா அவனது அரசிற்குள் வந்தது. அலெக்சாந்தர் காலத்திலும் அதற்குப் பின்னரும் கிரேக்க கலாச்சாரமும் மொழியும் எங்கும் காட்டுத் தீப்போல் பரவின. பட்டணங்கள்தோறும் அறிவுக்கூடங்கள், அரங்கசாலைகள், ஆலயங்கள் போன்றன அமைக்கப்பட்டன.

யூத மக்களும் இந்தக் கலாச்சார முற்றுகைக்கு விதிவிலக்கா யிருக்கவில்லை. கி.மு. 167ல் அந்தியோகஸ் எப்பிபானஸ் என்பவன் பலவந்தமாக கிரேக்க கலாச்சாரத்தை யூதர்கள் மேல் திணிக்க முயற்சி செய்தான். மக்கபீயர் என்பவர்களின் தலைமையில் பரிசேயரின் தூண்டுதலால் மக்கள் இதனை வன்மை யாக எதிர்த்தனர். இதன் பலனாகப் பலஸ்தீனா சில காலம் தனி நாடாக இயங்கிற்று. ஆனால் மக்கபீயர் வம்சத்தார் இறைவாக்காளர் அளித்த சமய, ஒழுக்க உயர்வினைப் பிரபலப் படுத்திப் பாதுகாப்பதற்குப் பதிலாக, தங்களது பதவியினை உறுதிப்படுத்துவதில் ஈடுபட்டனர். எனவே, மக்களின் வேண்டுகோளின்படி, ஏற்கெனவே கிரேக்கப் பேரரசினை அடக்கி அரசு புரிந்த ரோமர்கள் பலஸ்தீனாவில் தலையிட்டனர். இதுமுதல் யூதேயா ரோமரின் கீழ் ஒரு மாநிலமாகச் செயல்பட்டது.

### தானியேலின் நூல்

அந்தியோகஸ் யூதேயாவில் பலாத்காரமாகக் கிரேக்க கலாச்சாரத்தைப் புகுத்த முயற்சித்தான். விருத்தசேதனம், பலி, ஓய்வுநாள் ஆசரிப்பு ஆகியவற்றை அவன் தடை செய் தான். யூத சமய ஏடுகளை வெளியரங்கமாகத் தீக்கிரையாக்கி னான். எருசலேம் தேவாலயத்தில் சியூஸ் (Zeus) என்ற கிரேக்க கடவுளுக்கு ஒரு பலிபீடத்தை அவன் கட்டுவித்தான். அதின் மேல் யூதருக்கு அருவருப்பான பன்றியை அவன் பலியிட்டான். அதன் இறைச்சியை உண்ணும்படி யூத மக்களையும் சமயப் புரோகிதர்களையும் அவன் கட்டாயப்படுத்தினான்.

தானியேலின் நூல் இக்காலத்தில் எழுதப்பட்டது. தானி யேல், சாத்ராக், மேஷாக், ஆபேத்நெகோ என்பவர்கள்

அந்நிய தெய்வங்களைப் பணிய மறுத்து உயிரைப் பணயம் வைத்ததுபோல் யூதர்கள் அந்தியோகஸின் முயற்சிகளை முறியடிக்க இந்நூல் ஏவிற்று. இந்நூலின் ஆக்கியோன் இதனை அடையாள மொழியிலே எழுதியுள்ளார்.

## தோல்வி

இவ்வாறு இஸ்ரவேலருக்கு அளிக்கப்பட்ட புதிய வாய்ப்பு எதிர்பார்த்த பலனைத் தரவில்லை. யூதரல்லாத இதர மக்கள் மெய்யான இறைவனிடம் வருவதற்கு வழிகாட்டும் ஒளியா யிருப்பதே இஸ்ரவேலருக்கு இறைவன் அளித்த இலட்சியம். அதை நிறைவேற்றும் நோக்கத்தோடேயே அவர்களுக்குப் பிறிதொரு வாய்ப்பளிக்கப்பட்டு நாடும் தேவாலயமும் சமய வழிபாடுகளும் மீண்டும் கொடுக்கப்பட்டன. ஆனால் ஆபிரகாம் மூலம் அளிக்கப்பட்ட இந்தப் பரந்த அனைத்துலக இலட்சி யத்தை அவர்கள் மறந்துவிட்டனர். இதற்கு நேர்மாறாக குறுகிய மனப்பான்மையுள்ள சமயப் பித்தராக அவர்கள் மாறிவிட்டனர். இதனால் திரும்பவும் அரசியல் கலகங்களில் ஈடுபட்டனர். இறைவன் அவர்களைத் தெரிந்துகொண்ட நோக்கம் இஸ்ரவேலரின் வரலாற்றிலே மங்கிவிடுகின்றது.

எனினும் இஸ்ரவேல் மக்களும், யாவே விதித்த நோக்கமும் அழிந்துவிடவில்லை. நெருக்கடிகள் நிறைந்த இஸ்ரவேலரது வரலாறும் நின்றுவிடவில்லை. ஏனெனில் அவர்களது வரலாறு முழுவதும் ‘வாக்குத்தத்தமும் அதின் நிறைவேறுதலும்’ என்ற அடிப்படையில் அமைந்துள்ளது. இயேசுவின் திருஅவதாரம் வரையிலும் இந்த வாக்குத்தத்தம் அழியாமல் எவ்வாறு நிறை வேறுதலை எதிர்பார்த்து நின்றது என்பதனைத் தொடர்ந்து கவனிப்போம்.

# வாக்குத்தத்தமும் நிறைவேறுதலும்

### வரலாற்றுச் சுருக்கம்

இஸ்ரவேல் மக்களின் இரண்டாயிரம் ஆண்டு வரலாற்றினை மிகவும் சுருக்கமாக முந்தின அதிகாரங்களிலே குறிப்பிட்டோம். இந்த வரலாற்றிலே தாவீது, சாலொமோன் என்பவர்களது காலங்களைத் தவிர சிறப்புமிக்க வேறு ஒன்றும் இல்லை எனலாம். முன்னொரு நாள் மொசெப்பெத்தோமியாவிலிருந்து புறப்பட்ட ஆபிரகாம் வாக்குத்தத்த நாடென்று அழைக்கப்படும் கானானுக்கு வந்தார். இப்பொழுது அவரது பின்சந்ததியார் அவர் விட்டு வந்த நாட்டிற்குச் சிறைபிடித்துக்கொண்டு போகப்பட்டனர். எனினும், கோரேஸ் என்னும் பாரசீக அரசனால் அவர்களுக்கு விடுதலை வந்தது.

### இஸ்ரவேலர் சமயத்தின் சிறப்பு

விடுதலைபெற்ற மக்கள் தங்கள் தாய்நாட்டிலே தங்களது வாழ்க்கையைக் கட்டி எழுப்ப பிறிதொரு வாய்ப்பு அளிக்கப்பட்டது. ஆனால், அங்கும் அவர்கள் அந்நியப் பேரரசுகளுக்கு அடிமைப்பட்டனர். பிறருக்குப் பளுவான வரி செலுத்துவதினாலும், உள்நாட்டுக் கலகங்களாலும், அரசு புரிகிறவர்களின் ஒடுக்குதலினாலும் யூத மக்களது தனி வாழ்க்கையே அழிந்துபோய்விடுமோ என்ற நிலை அடைந்துவிட்டது. முதலில் எகிப்திலே பார்வோனுக்கும் பின்பு பாபிலோனிலே நேபுகாத்நேச்சாருக்கும் இப்போது சீரியனான அந்தியோகசுக்கும் அவர்கள் அடிமைப்பட்டுவிட்டார்கள். இவ்விதம் சிறுமைப்படுத்தப்பட்ட ஒரு மக்களின் வரலாற்றிலே என்ன சிறப்பு இருக்கப்போகின்றது என்று மக்கள் எண்ணுவதற்கு இடமாயிற்று.

எனினும், இத்தனை நெருக்கடிகளின் நடுவிலும் ஒரு தடவை கூட இஸ்ரவேலர் தங்களது சமயத்தையும் நம்பிக்கையையும்

முற்றிலும் விட்டுவிடவில்லை என்பது ஆச்சரியமே. எந்த நெருக்கடியிலும் யாராவது ஓர் இறைவாக்காளர் எழும்பி அந்தக் கொடிய நிகழ்ச்சிக்கு யாவே சமயத்தின் வெளிச்சத்தில் விளக்கம் தந்தனர். எந்த நிகழ்ச்சியிலும் மீட்பாகவோ, நியாயத்தீர்ப்பாகவோ யாவேயின் கரம் ஈடுபட்டிருப்பதனை அவர்கள் காண்பித்தனர். எனவே, கொடிய நிகழ்ச்சிகளின் நடுவிலும் இறைவன்பேரிலுள்ள நம்பிக்கையில் இஸ்ரவேலர் தளர்ந்துவிடவில்லை. இது இஸ்ரவேலரது சமயத்தின் பெரும் சிறப்பாகும். இதற்கு ஒரு காரணம் அவர்களது சமயம் ஒரு எண்ணத்தின் விளைவாயிராமல் வரலாற்று நிகழ்ச்சிகளின் உண்மையில் அடிப்படை பெற்றிருந்தமையாகும். எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையும், பாபிலோனின் சிறை யிருப்பிலிருந்து விடுதலையும் ஒப்பற்ற சர்வ வல்லவரான யாவே என்னும் இறைவனின் ஒப்பற்ற செயல்கள் என அவர்கள் விசுவாசித்தனர்.

### யாவே

மோசேயின் காலத்தில் யாவே என்னும் பெயரால் அறியப் பட்டு, அவர்கள் அவரை வழிபட்டபோது பெற்றிருந்த அறிவுக்கும் இப்போது இறைவாக்காளர் வாயிலாக வந்துள்ள இறையறிவுக்கும் பெரிய வித்தியாசமுண்டு. போரிலும், இடி முழக்கத்திலும், அக்கினிப் பிழம்பிலும் மாத்திரம் விளங்கும் ஒருவராயல்ல, அனைத்தையும் படைத்தவராயும் எல்லா மக்க ளுக்கும் ஆண்டவராகவும் அவரை இப்பொழுது அறிந்த னர். அவர் மனித வரலாற்றின் நிகழ்ச்சிகளில் ஆர்வமற்று அவைகளை விட்டுப் பிரிந்து தூர நிற்பவரல்லர். அவர் வரலாற்றின் உயிருள்ள நாயகன், வரலாற்றில் அவர் தலையிட்டு மக்களது தீமையையும் மடமையையும் மட்டுப் படுத்துகின்றவர். அவர் தமது நீதியையும் இரக்கத்தையும் வரலாற்று நிகழ்ச்சிகளிலே விளங்கச் செய்கின்றவர்.

இஸ்ரவேலரது வரலாற்றில் யாவேயின் நோக்கம் முழு மனுக்குலத்தையும் மீட்பதாகும். அந்த நோக்கத்தை நிறை வேற்றும் பெலவீனமான, தகுதியற்ற கருவி இஸ்ரவேலரே. இவ்வித நோக்கம் இருக்கிறபடியினாலே ஒரு குறுநாட்டினராகிய தாங்கள் பல கொடிய யுத்தங்களையும் உள்நாட்டுக் குழப்பங்

லையும் தாண்டி வந்துவிட்டதாக அவர்கள் உறுதியாக நம்பினர். மனுக்குலத்தைத் திரும்பவும் தம்மண்டை இழுத்துக் கொள்ளும் தமது சித்தத்தை நிறைவேற்றுவதற்காகவே அடிமைத்தனத்திலிருந்தும், சிறைவாழ்க்கையிலிருந்தும் இறைவன் அவர்களை மீட்கின்றார். எனினும், இஸ்ரவேலரில் பெரும்பான்மையினர் அடிக்கடி இந்த உயரிய இலட்சியத்தை மறந்துவிட்டனர். ஆகவே, இறைவாக்காளர்களும் அவர்களை ஒட்டி நின்ற சிலருமாகிய சிறுபான்மையினரே இந்த இலட்சியத்தின் காட்சி மங்கிவிடாதபடி காத்துநின்றனர். அவர்களது அக அர்ப்பணத்தின்மூலம் இறைவன் மக்களோடு பேசி செயல்பட்டார். இஸ்ரவேலரது வரலாற்றின் ஒரு கட்டத்திலாயினும் இந்த இலட்சியக் காட்சி முற்றிலும் அழிந்துவிடவில்லை. இதைப் பாதுகாக்கும் ஒரு சிறு குழுவினர் எப்பொழுதும் இருந்தனர்.

## இறைவனின் வாக்குத்தத்தம்

ஆகவே, தாங்கள் தெரிந்துகொள்ளப்பட்ட மக்கள் என்பதும், தங்கள் வரலாற்றின் நாயகன் இறைவன் யாவே என்பதும், அவரே தங்களை ஆசீர்வதித்தும், தண்டித்தும், விடுவித்தும் வழிநடத்துகிறவர் என்பதும் இஸ்ரவேலர் அறிந்திருந்தனர்.

பெரிய இறைவாக்காளர்கள் இறைவனின் வாக்குத்தத்தத்தை அறிவித்திருந்தனர். அதாவது, இஸ்ரவேல் மக்கள் அவரது பிரமாணங்களைத் தங்கள் வாழ்க்கைகளில் நிறைவேற்றினால் இறைவனின் ஆசி அவர்கள்மேல் தங்கியிருக்கும் என்பதே அந்த வாக்குத்தத்தம். அந்த ஆசீர்வாதம் உலகப் பிரகாரமான செல்வமும் செழிப்புமாகும் என்றே மக்கள் பெரும்பாலும் கருதினார்கள். ஆனால், இறைவாக்காளர்கள் அன்றாட வாழ்க்கையில் கடவுளின் சித்தத்தை நிறைவேற்றுவதையே அதிகமாக வற்புறுத்துகின்றனர். மறுமையின் வாழ்க்கை என்ற ஒன்றினைப்பற்றிய சிந்தனை பழைய ஏற்பாட்டில் மிகவும் குறைவு எனலாம். ஏனெனில், எபிரேய சிந்தனையில் தனி மனித இயல்பு (individualism) அதிகமாக வற்புறுத்தப்படவில்லை. எப்பொழுதும் சமூகமே (society) ஒருமமாக (unit) முழு இஸ்ரவேலரைப்பற்றியே பேசப்பட்டு

சமூகத்தின் ஒரு பாகமாகவே தனி மனிதனைப்பற்றிக் கூறப்படுகின்றது. விடுதலையைப்பற்றி எதிர்பார்ப்பும் இஸ்ரவேல் மக்களது முழுச் சமூகத்தின் விடுதலையைப்பற்றியதாகவே இருந்ததேயன்றி, தனி மனிதனுக்கு வரும் ஓர் அனுபவமாக அதிகமாக வற்புறுத்தப்படவில்லை. ஆகவே, அந்நிய தெய்வ வணக்கத்தாரிடையில் நிலவிய மரித்தோர் வழிபாட்டில் அருவருப்பு, அன்றாட இவ்வுலக வாழ்க்கையின் முக்கியத்துவம் பற்றிய உபதேசம், தனி மனிதனுக்கு அதிக இடம் இல்லாமை ஆகிய காரணங்களினால் மறுமையின் வாழ்வினைப்பற்றிய சிந்தனை இஸ்ரவேலில் எழவில்லை என்று உல்லியம் நீல் என்னும் அறிஞர் கூறுகின்றார்.

இறைவாக்காளர்கள் தங்களது உரைகளில் ஆசீர்வாதம், தண்டனை என்று கூறும்போது அது நாட்டிற்கும் மனித அனுபவத்திற்கும் (human experience) நேரிடுகின்றனவாகவே கருதப்பட்டது. தங்கள் நாடு ஆரம்ப காலத்திலே செல்வச் செழிப்புள்ளதாயிருந்ததாக அவர்களது வரலாறு கூறிற்று. ஆரம்ப காலத்திலேயே கானானில் தங்களுக்கிருந்த சத்துருக்கள் பலரை அவர்கள் அழித்தனர், அரசை தாவீது ஏற்படுத்தினார். அது யாவே அவர்களோடு செய்த உடன்படிக்கையின்படி பெரும்பாலும் மக்கள் வாழ்ந்தபடியினால் ஏற்பட்ட விளைவாகும். அப்படியே நாடு சீர்குலைந்தபோது மக்கள் உடன்படிக்கையை மறந்து மனம்போல் வாழ்ந்ததனாலேயே ஏற்பட்டது என்று காண்பிப்பது எளிதாயிருந்தது.

வரலாறுபற்றிய ஒரு தத்துவம் என்ற முறையில் இது முற்றிலும் தப்பிதமானது என்றுகூற இயலாது. இஸ்ரவேலரது வரலாற்றின் பிந்திய கால சமய, ஒழுக்க, சமூக நீதி சீரழிவோடு ஒப்பிடும்போது ஆரம்ப வரலாற்றுக் காலத்தில் மக்களது வாழ்க்கை மேம்பட்டிருந்தது என்று கூற இடமிருக்கின்றது. சாலொமோன் காலம் முதல் இஸ்ரவேல் மக்கள் இதர மக்களின் வழிகளைப் பின்பற்றத் தொடங்கியபோது, வனாந்தர வாழ்க்கையிலிருந்து பெற்றுக்கொண்ட ஆற்றலினை இழந்து, தங்களைப் பாதுகாக்கும் சக்தியற்றவர்களாகி விட்டனர்.

எனவே, நாடு தாழ்வடையும்போது தாவீதின் காலமே பொற்காலம் என்று பின்நோக்கிப் பார்ப்பது வழக்கமாகி

விட்டது. அவரது காலத்தில்தான் ஆசரிப்புக்கூடாரம் அமைக்கப்பட்டு உடன்படிக்கைப் பெட்டி பாதுகாக்கப்பட்டது. இவை இரண்டும் புதிய புனித எருசலேம் நகரில் யாவேயைச் சேவிக்க இஸ்ரவேலரின் சிறப்பு அழைப்பின் சின்னங்களாயிருந்தன. தாவிதரசனின் காலத்தில் நாடு யாவேக்குக் கீழ்ப்படிந்து வாழ்ந்தபோது செழிப்பும், வளர்ச்சியும் பெற்றுப் பெரிதாயிற்று.

### கர்த்தருடைய நாள்

இஸ்ரவேல் நாட்டினுள்ளும் அந்நிய தெய்வ வணக்கம் புகுந்து, அநீதி பெருகி, யாவே வணக்கம் நெறிதவறி நிற்க அசீரியர் நாட்டின்மேல் படையெடுக்கும் ஆபத்து எழும்பி வந்தது. இவ்வித இக்கட்டான கட்டத்திலே மக்கள் மறுபடியும் யாவே வழிபாட்டில் உண்மையாக ஈடுபடத் திரும்புவார்கள், புதிய ஒரு பொற்காலம் ஆரம்பிக்கும், அது தாவீதின் காலத்தைவிடவும் சிறப்பானதாயிருக்கும் என்று இறைவாக்காளர்கள் எதிர்பார்த்தனர். இஸ்ரவேலர் எல்லாரிலும் மேலானவர்கள் என்று யாவே உலகிற்குக் காண்பிக்கும் காலம் வரும் என்று பொதுவாக மக்கள் நம்பினார்கள். அப்பொழுது இஸ்ரவேலரின் சத்துருக்கள் அடக்கப்பட்டு, இதர மக்கள் அவர்களுக்கு அடிமைப்பட, இஸ்ரவேல் உலகம் முழுவதையும் ஆளுகைசெய்யும் 'யாவேயின் நாள்' வரும் என்று அவர்கள் எதிர்நோக்கினார்கள்.

### இறைவாக்காளரின் விளக்கம்

பெரிய இறைவாக்காளர்களோவெனில் யாவேயின் நாள் என்று ஒன்று வரும், ஆனால் அது இஸ்ரவேலரின் வெற்றியின் காலமன்று, அது யாவேயின் நீதி வெற்றிபெறும் நாள், அப்பொழுது இஸ்ரவேலில் எங்கும் தீமை அழிக்கப்படும், யாவேக்குக் கீழ்ப்படிந்தவர்களுக்குப் பிரதிபலன் அளிக்கப்படும், அதைக் காண்போர் இறைவனின் செயலின் மாறாத் தன்மையை அறிந்துகொள்வார்கள் என்று கூறினார்கள். கர்த்தருடைய நாள் வரும்போது இஸ்ரவேலுக்கு அழிவு ஏற்படும் என்று ஆமோஸ் இறைவாக்காளர் கூறினார். யாவேயிடம் உண்மையான பக்தியுள்ள ஒரு சிறுபான்மையினர் (remnant) மாத்திரம் மீந்திருப்பர் என்று ஏசாயா நம்பினார்.

பெரும்பாலாரான இறைவாக்காளருக்கும் பொதுவான ஓர் அனுபவமிருந்தது. அது யாதெனில், அவர்கள் தங்களது காலத்து நிகழ்ச்சிகளிலே இறைவனின் கரத்தை மிகவும் திட்டமாகக் கண்டபடியால் கர்த்தருடைய நாள் வந்துவிட்டதாகவே கருதினுர்கள். தீமையை நன்மை மேற்கொள்ளும் என்னும் அவர்களது உறுதியான விசுவாசம் மிகவும் ஆழமானதாயிருந்தபடியால் கர்த்தருடைய நாள் வரத் தாமதிப்பதில்லை என்று அவர்கள் எண்ணினர். இஸ்ரவேல் அடைந்திருந்த இழிநிலையிலிருந்து உடனடியாகச் சுத்திகரிக்கப்படவேண்டும், தூய்மையான யாவே வழிபாடு உடனடியாகப் புதுப்பிக்கப்படவேண்டும், இவை நிச்சயமாக நிகழவிருக்கின்றன என்று இறைவாக்காளர்கள் உறுதிகொண்டபடியினுலே, அவை நிகழ்ந்துவிட்டன என்பதுபோல் அவர்கள் பேசினுர்கள். அது எப்படி நிகழும் என்பதுபற்றி அவர்களுக்குத் திட்டமான அறிவில்லாதிருந்தது. அது அரசியல் நிகழ்ச்சிகள் மூலமாக, வல்லரசுகள் கைமாறுவதனுல் நிகழலாம். எவ்விதமும் அந்த நாள் வந்துவிடும் என்று அவர்கள் எதிர்பார்த்தனர். இவ்வாறு இறைவனின் நியாயத்தீர்ப்பு வரும்போது தீயனவும், தீய மனிதரும் அழிக்கப்பட்டு ஒரு புது யுகம் ஆரம்பமாகும். அது சமாதானமும் நிறைவும் நிலவும் ஒரு காலமாயிருக்கும். அக்காலத்தில் சத்தியமும் இரக்கமும் முன்நிற்கும். இறைவனை அறியும் அறிவினுல் மக்கள் இதயம் தூண்டப்பட்டு ஒருவரையொருவர் நம்பும் அன்புநிறைந்த புதிய சகோதரத்துவம் தோன்றும். தண்டிக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்ட இஸ்ரவேல் மக்கள் இறைவழிபாட்டின் மைய இடமாக மாறிவிடுவர். உலகின் மக்கள் இறைவனின் நெறிகளை அறிய அங்கே கூடி வருவார்கள்.

## புது யுகம்

இந்தப் புது யுகத்தை இறைவன் தாமே ஆரம்பித்து வைப்பார் என்று சில சமயங்களிலும், இப்பணிக்காக அவரால் பிரத்தியேகப்படுத்தப்படும் ஒருவர் இதனைச் செய்வார் என்று வேறு சமயங்களிலும் நம்பப்பட்டது. இவர் யார் என்பது பற்றிப் பல கருத்துக்கள் நிலவின. ஆனுல், அவர் வரும்போது தாவீதின் காலத்து மகிமையைத் திரும்பவும் இஸ்ரவேலில்

நிலைநாட்டுவார் என்று அவர்கள் அனைவரும் கூறினர். அவர் இறைவனால் அபிஷேகம் செய்யப்பட்ட மேசியா ஆவார்.

இவ்விதமான இறைவாக்குகளைக் (Prophecies) கேட்டவர்களாக, தங்களுக்கு நேரிட்ட சிறையிருப்பிலிருந்து தாங்கள் பிழைக்கவேண்டுமாயின் யாவேயின் பிரமாணத்துக்குக் கீழ்ப் படியவேண்டும் என்பதை உணர்ந்தவர்களாக, யூதர்கள் சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தனர். நியாயப்பிரமாணத்தை நங்கூரமாகக்கொண்டு தாங்கள் யாவேயின் மக்கள் என்று உணர்ந்து வாழும் ஒரு சமூகத்தைக் கட்டி எழுப்ப அவர்கள் உறுதிகொண்டனர்.

## ஏமாற்றம்

இந்த நோக்கத்தை மிகவும் தீவிரமாகவும் கடினமாகவும் அவர்கள் நிறைவேற்றினதைப்பற்றி ஏற்கெனவே நாம் கூறியுள்ளோம். ஆனால், இப்பொழுது அவர்களுக்கு இருதலைக் கொள்ளி நிலை (dilemma) ஏற்பட்டது. மக்கள் நியாயப் பிரமாணத்துக்குக் கட்டுப்பட்டு வாழ்ந்தனர், இதர சமய வழக்கங்கள் அழிக்கப்பட்டுவிட்டன; ஒழுக்கக்கேடு நசுக்கப் பட்டு, உண்மையான சமய வாழ்க்கை உயிர்பெற்றுவிட்டது; ஆனால் வாக்குத்தத்தம் நிறைவேறவில்லை. தீமை அழிக்கப் பட்டு சமாதானமும் சுபிட்சமும் நிலவும் பொற்காலம் வரவில்லை. நேர்மாறாக அவர்கள் துன்பம் அனுபவித்தனர், அவர்களது சத்துருக்கள் பெருகினர். இதர மக்களின் அரசுகள் செழித்தோங்கின. யாவேயின் மக்களோ பாறைகள் நிறைந்த குறுநாட்டிலே அன்றாட வாழ்க்கையைக் குறை வின்றி நடத்த இயலாது திகைத்தனர்.

இந்தச் சந்தர்ப்பத்துக்குரிய ஒரு செய்தி பாபிலோனிய சிறையிருப்பின் காலத்தில் இரண்டாம் ஏசாயாவினால் கூறப்பட்டது. இவ்வித ஏமாற்ற நிலை துரிதமாக ஏற்படும் என்ற நுண்ணறிவு அவருக்கு ஏற்பட்டது. இஸ்ரவேல், கடவுளின் துன்புறும் ஒரு தாசனாக வாழ்வதே அவர்களது பணி, அந்தத் துன்பத்தின் மூலமாகவே மீட்பு அவர்கள்மூலம் பிறருக்கு வரும் என்று ஏசாயா போதித்தார் (ஏசா. 53). மக்கள் இதற்குச் செவி சாய்க்கவில்லை. இயேசுகிறிஸ்து இதனைத் தம் வாழ்க்கையில் நிறைவேற்றினார்.

### புது விளக்கம்

யாவே இறைவனுல் தங்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குத்தத்தம் அவர்கள் எதிர்பார்த்த முறையில் நிறைவேறவில்லை. ஆயினும், இறைவாக்காளரின் வாக்குப் பொய் என்று நம்ப அவர்களால் இயலவில்லை. யாவே தமது வல்லமையைச் சென்ற காலத்திலே விளங்கச் செய்ததுபோல் இப்போதும் செயலாற்ருதிருப்பதெப்படி? மனிதனது பாவத்தினுல் அவரது இலட்சியம் அவமாகிப்போகாதபடி அவர் செயலாற்ற வேண்டுமே என்று சிந்தித்தனர்.

எனவே, வாக்குத்தத்தங்கள் நிறைவேருததற்குப் புதிய காரணம் கூறப்பட்டது. உலகம் தீமையினுலும் கறையினுலும் நிறைந்து நீதி, இரக்கம், உண்மை, சமாதானம் போன்றவை நிலைக்க முடியாதபடி ஆகிவிட்டன. இதனுலேயே புது யுகம் தோன்றும் என்ற இறைவாக்காளரின் காட்சி நனவாகவில்லை. எனினும், நவயுகம் தோன்றியாகவேண்டும் அல்லது மனிதரது தீமையைவிட யாவேயின் நன்மை வல்லமையுள்ளது என்று மக்கள் அறிய முடியாது. இதனுல் யோவேல், சகரியா, தானியேல் என்பவரது நூல்களில் இந்த உலகத்திலேயே நிலையான ஒரு விடுதலையில் நம்பிக்கை என்பது மாறி, இந்த உலகிலிருந்து இறுதியான ஒரு விடுதலையின் நம்பிக்கை தோன்றியது.

### நவயுகத்தின் சிறப்பு

இந்தப் பூமி, மனுக்குலம், அதன் தீமைகள் அனைத்தும் அழிக்கப்படும். யாவேயின் நாளில் இந்த யுகம் மறுரூபமடைவதோடு, இவ்வுலகமும் அதன் கொடிய தீமைகளும் சடுதியாய் அழிக்கப்பட்டுப் புது சிருஷ்டி தோற்றுவிக்கப்படும். யாவேயின் சத்துருக்கள் சமூலமாக அழிக்கப்படுவர். அவரது உண்மையுள்ள அடியார் அற்புதமாக விடுதலை பெற்றுப் பூரண சுயாதீனமுள்ளவர்களாய் அவருக்குக் கீழ்ப்படிந்திருப்பர்.

எனினும், இந்த இறுதிகாலம் அல்லது நவயுகம்பற்றிப் பலவிதமான காட்சிகள் சித்திரிக்கப்பட்டன. அவை ஒன்றிற்கொன்று முரண்பட்டவைகளாக இருந்தன. இவற்றில் பல விளங்குவதற்குக் கடினமானவை. ஏனெனில், அவற்றில் அடையாள மொழியும் கவிதைப்போக்கும் இருக்கின்றன.

தானியேலின் நூல், தரிசன நூல் ஆகியவைகளும், 'மறைக்கப் பட்ட நூல்கள்' (*Apocrypha*) என்றழைக்கப்படும் நூல்களில் சிலவும் இத்தகையனவாம். இவைகள் வரலாற்றின் இறுதி, இறுதிக்கால சம்பவங்கள் ஆகியவைபற்றிக் கூறுகின்றன.

## இருவித மனப்போக்குகள்

எனவே, பழைய ஏற்பாட்டு காலத்தின் இறுதியில் இருவித மனப்போக்குகளை நாம் சிந்திக்கின்றோம். இவற்றில் ஒரு சார்பு அதிகாரபூர்வமான சமயமாகும். இது புரோகிதர்களால் ஆளப்பட்டது. இதன்படி கடவுள் நியாயப்பிரமாணத்தில் மீட்புக்குரிய அனைத்தையும் தமது மக்களுக்கு அளித்துள்ளார். அதற்குக் கீழ்ப்படியும் அளவுக்குத் தக்கதாக யூதர்கள் தங்களைக் கடவுளின் மக்களெனக் காண்பித்தனர். அவர்களது வழி சரியானது என்பதனை உலகம் உணரும் காலம்வரும். கடவுளின் திருஉள்ளத்துக்கு ஏற்ற காலத்தில் மேசியா வருவார்; தீமை அழிக்கப்படும், நவயுகம் ஆரம்பமாகும். அதுவரையிலும் உலகம் தரும் எந்த எதிர்ப்பையும் அவர்கள் சகிக்கவேண்டும். ரோமர் கொடுமைப்படுத்தினாலும் வருங்காலம் யாவேயின் கரத்திலேயே இருக்கின்றது என அவர்கள் அறியவேண்டும்.

இதன் மறுசார்பு அதிகாரபூர்வமல்லாதபடி மறைக்கப் பட்ட நூல்கள் எழுதியவர்களின் பொறுமையற்ற மனப் போக்காகும். சடுதியாகப் பழைய யுகம் அழிக்கப்பட்டு கடவுளின் மேசியா தோன்றி நவயுகத்தை நிறுவுவார். தானி. 7:13ல் 'மனுஷகுமாரன் சாயலான ஒருவர்' நவ யுகத்தின் அடையாளம் என்றும், இவர் பலாத்காரத்தின் அடிப்படையை அழித்துக் கடவுளுக்குப் பிரியமான முறையில் அரசை நிறுவுவார் எனவும் கூறப்பட்டுள்ளது. இவரது அரசு அழியாத் தன்மையுள்ளது. இரு ஏற்பாடுகளுக்கும் இடைப் பட்ட காலத்தில் இச்சிந்தனை வலுப்பெற்றது. வருங்காலத் தைப்பற்றிய எதிர்பார்ப்பின் மையமாக மனுஷகுமாரன் என்பவர் இடம்பெற்றார். இந்த நவயுகத்திற்கு இறையாட்சி யெனப் பெயரளித்தனர். அதாவது இறைவனின் அரசு அல்லது இராஜரீகம் அனைத்தின்மேலும் நிலவும் என்பது இதன் பொருள்.

இவை தவிர நவயுகத்தில் இஸ்ரவேலரின் பழைய அரச மகிமை புதுப்பிக்கப்படும் எனவும், புதிய தாவீது அரசன் தோன்றி ரோமை அரசன் ஆதிக்கத்திலிருந்து மக்களை விடுவிப்பார் என்றும் கூறப்பட்டது. ரோமை அரசுக்கு விரோதமாக மக்கள் கலகம் செய்யும்போதெல்லாம் தாவீதின் குமாரனான மேசியாவின் வருகை அண்மையிலிருக்கின்றது என மக்கள் பலர் நம்பினர்.

### கி.மு. இறுதி நூற்றாண்டில் நிலை

இந்நூற்றாண்டில் ரோமருக்கும் யூதருக்கும் நல்லுறவு குலைந்தது. கடினமான வரி ரோமரால் யூதர்களுக்கு விதிக்கப்பட்டது. இவ்வரியை ரோமர் ஆயக்காரருக்கு குத்தகையாய்க் கொடுத்தனர். அவர்கள் அளவுக்கு மிஞ்சி வரி வசூலித்தனர். வேலையில்லாத் திண்டாட்டம் கொடியதாயிற்று. நிலங்கள் நீரின்றிப் பயிர்கள் கரிந்துபோயின. விவசாயிகள் கடன்காரருக்கு அடிமைப்பட்டனர். மக்கள் உணவுப் பற்றாக்குறையினால் பதறினர். உள்நாட்டுக் குழப்பம், உணவுப் பற்றாக்குறை ஆகியவற்றினால் உடல், மனக்கோளாறுகள் மிகுந்தன. நற்செய்தி நூல்களில் இச்செய்திகளைக் காணலாம்.

மேலும், யூதரது சமயத்தைப் புரிந்துகொள்ள ரோமரால் இயலவில்லை. அவர்களது சமயத் தூய்மை, ஆவிக்குரிய பெருமை, சமயப்பித்து ஆகியவைகளை ரோமர் வெறுத்து அவர்களை ஒடுக்கினர். எனவே, கலகங்களும் அடக்குமுறைகளும் அதிகரித்தன. கொலைகள், சிலுவையில் அறைதல், மக்களை வெட்டிக்கொல்லுதல், கொள்ளையிடுதல் போன்றவை அன்றாட நிகழ்ச்சிகளாயின. இதனாலேயே யூதருக்கும் ரோமருக்கும் தீராப் பகையும் வெறுப்பும் ஏற்பட்டன. பொதுவாக ரோமர் சமய சகிப்புள்ளவர்கள். ஆனால், யூதர்கள் வாழ்க்கை முழுவதும் சமயத்தின் ஆதிக்கத்தில் இருப்பதை ரோமரால் புரிந்துகொள்ள இயலவில்லை.

விடுதலையடைய மக்கள் கலகம் செய்வது ரோமருக்குப் புதிதன்று. ஆனால், தேவாலயப் பணத்தை எடுத்து மக்களுக்குப் பயன்தரும் கால்வாய் வெட்டுவதை யூதர்கள் எதிர்த்தது அவர்களுக்குப் புதிதாயிருந்தது. அப்படியே பேரரசனின் சிலையினை வணங்க மறுத்து அதற்காக உயிரையும்

ஆறக்க யூதர்கள் தயங்கவில்லை என்பதை ரோமரால் புரிந்து கொள்ள இயலவில்லை. புரிய இயலாததை அழிக்க அவர்கள் முயற்சித்தனர். யூதர்கள் தங்களை ஆளுகைசெய்த ரோமரை நாய்களென்று கருதி பேசியது நல்லுறவைக் கெடுத்தது.

இதனால் எசேனியர் (Essenes) என்ற சந்நியாசப் போக்குள்ளவர்கள் மக்கள் நடுவிலிருந்து பிரிந்துசென்றனர். சதுசேயர்கள் யூதரையும், ரோமரையும் சமரசம்செய்ய முயன்றனர். இதனால் யூதர்கள் சதுசேயர்களை வெறுத்தனர். இந்நிலையில் யூத மக்கள் பலரும் ஒருவித எதிர்பார்ப்புடனிருந்தனர். இறைவாக்காளரின் கூற்றுகள் உண்மையாயின், இறைவன் தன் வாக்குகளை நிறைவேற்றுவாராயின், அவரது வல்ல கரம் செயல்படவேண்டிய சமயம் இது என அவர்கள் கருதினர். ஒரு சிலர் புதிய தாவீது அரசனை எதிர்பார்த்தனர். பக்தியுள்ளவர்கள் இறையாட்சி தாமதியாமல் உடனே வர மன்றாடினர்.

## முழுக்கு முனிவர் யோவான்

திபேரியு பேரரசன் ஆளுகைசெய்த பதினைந்தாம் ஆண்டில், அதாவது கி.பி. 26ல் பொந்தியு பிலாத்து யூதேயாவில் ஆளுநரானார். இக்காலத்தில் (லூ. 3:1) சகரியாவின் மகன் யோவான் தோன்றி இறைவாக்காளரின் குரலெழுப்பினார். அவர் இறைவாக்காளரின் உடையணிந்து பல்லாண்டுகள் இறைவனின் குரலெழுப்பினார். நியாயத்தீர்ப்பின் நாள் வந்து விட்டது என்றும், இறைவன் பழைய யுகத்தை முடித்து நவ யுகத்தை நிறுவப்போகின்றார் எனவும், மேசியாவின் வருகை சமீபமாயிற்று என்றும் கூறினார்.

மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் ஒரு சிறு குழுவினரான யூதர்கள் எருசலேமில் ஒரு மேல்வீட்டு அறையிலிருந்து இறங்கி வந்து மேசியா வந்துவிட்டாரெனப் பறைசாற்றினர். கடவுள் தமது மக்களைக் கைவிடவில்லை. பழைய யுகம் முடிந்து நவயுகமான இறையாட்சி முறையே தொடங்கிவிட்டது. இறைவாக்காளரும் முழுக்கு முனிவர் யோவானும் முன்னறிவித்தவை நிறைவேறத் தொடங்கிவிட்டன. இறைவனின் மாபெரும் விடுதலை வந்துவிட்டது என அவர்கள் கூறினர்.

நாசரேத்தூர் இயேசு தமது வாழ்க்கையினாலும் வல்ல செயல்களினாலும் இறைவனின் மேசியாவாக தமது பாடுகள், மரணம், உயிர்த்தெழுதல் மூலம் தீய சக்திகளை வென்றார். விசுவாசத்தின் மூலம் அவரது வெற்றியில் பங்குபெறும் புதிய சமூகம் ஒன்றை அவர் அமைத்துவிட்டார். மனந்திரும்பி இப்புது சமூகத்தினுள் திருமுழுக்கின் மூலம் பிரவேசிக்கின்றவர்கள் நவயுகத்தில் பங்குபெறுகின்றார்கள். கடவுளின் சித்தப்படி காலம் நிறைவேறியபொழுது இவைகள் நிகழ்ந்து விட்டன. முன்னோர் சிறிதளவாய்க் கண்ட இறைவனின் நோக்கம் இப்போது நிறைவேறிற்று.

எனினும், பொதுவான எதிர்பார்ப்பிற்கு நேர்வித்தியாசமான நிறைவேறுதலாய் இது காணப்பட்டது. ஆகையினால், இயேசுவின் அடியார் நற்செய்தி நவின்றபொழுது அவர்களது நாட்டு மக்களில் ஒரு சிலரே முதலில் செவிசாய்த்ததில் ஆச்சரியமில்லை. இந்த நற்செய்தியினை இயேசு தமது வாழ்க்கை, போதனை ஆகியவைமூலம் எவ்வாறு விளக்கினார் என்பதனை அடுத்த அதிகாரத்தில் கவனிப்போம்.

# உலகில் இறையாட்சி

நற்செய்தி நூல்கள் நான்கும் இயேசுவின் வாழ்க்கை, போதனை, செயல்கள் ஆகியவற்றின் அறிக்கைகளாக அமைந்திருக்கின்றன. அவற்றின் ஆக்கியோர் ஒருவருமே இயேசுவைப்பற்றிய முழு விவரங்களையும் தாங்கள் எழுதிவிட்டதாகக் கூறவில்லை. முதலில் எழுதப்பட்டது மார்க்குவின் நற்செய்தி நூல் என்றும், பின்னர் மத்தேயுவும் லூக்காவும், இறுதியில் யோவானும் எழுதப்பட்டன என்றும் ஆராய்ச்சியாளர்கள் முடிவு செய்துள்ளனர். இவற்றில் இயேசுவே மேசியா, உலக மீட்பர், மாம்சத்தில் வெளிப்பட்ட இறைவன் என்னும் கூற்று மையப்பொருளாக அமைந்துள்ளது. இக்கால ஆராய்ச்சி முறைப்படி நற்செய்தி நூல்களையும் நாம் பாகுபடுத்திப் படித்தால் இயேசுவைப்பற்றி நாம் அறிவதென்ன?

### அமைதியான முப்பதாண்டுகள்

தமது திருப்பணியினை இயேசு ஆரம்பிப்பதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்னரே முழுக்கு முனிவர் யோவான் இறைவாக்காளரின் வரிசையில் தோன்றினர். மனந்திரும்புதல் பற்றிய அவரது அருளுரை பலஸ்தீன நாடெங்கும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்திற்று. மேசியாவின் வருகை மிகவும் அருகிலிருப்பதாக அவர் அறிவித்தார். இந்தக் கட்டத்தில் முப்பது வயது பருவமுள்ள இயேசு காட்சியளிக்கின்ருர்.

இந்த முப்பது ஆண்டு வாழ்க்கைபற்றி நமக்கு ஒரு சில குறிப்புகள் மாத்திரமே கிடைத்துள்ளன. நற்செய்தி நூல்களின் ஆக்கியோர் தற்கால வாழ்க்கை வரலாற்று ஆசிரியர்களைப்போலிருந்தால் அவர்கள் பெத்லெகேமிலும், நாசரேத்தூரிலும், சுற்று வட்டாரத்திலும் சென்று விசாரணை நடத்தி அந்த முப்பதாண்டுகால வாழ்க்கை வரலாற்றினை நிரம்ப எழுதியிருப்பார்கள். ஆனல், நாம் சிந்திக்கும் முறையான இயேசுவின் வாழ்க்கை வரலாற்றில் அவர்களுக்கு அக்கறை

இல்லாதபடியால் இந்த முப்பது ஆண்டுகள்பற்றி அதிகத் தகவல்களை அவர்கள் நமக்குத் தரவில்லை.

கலிலேயாவிலுள்ள நாசரேத்தூரில் இயேசு இக்காலத்தில் இருந்தார். பன்னிரு வயதிலே அவர் தேவாலயத்திற்குப் பஸ்காப் பண்டிகைக்குச் சென்றபோது தமது திருமறை அறிவினால் யூத சமய அறிஞரை அவர் ஆச்சரியப்படச் செய்த தாகக் கூறப்படுகின்றது. இதிலிருந்து நாம் ஏதாகிலும் யூகிக்கலாமேயாயின், இளமையிலே தமக்கும் இறைவனுக்கும் ஒரு சிறப்புறவு இருப்பதனை இயேசு உணர்ந்திருந்தார் என்று கூறலாம். அது எத்தகையது, எந்நோக்குள்ளது என்பன வெல்லாம் காலம் செல்லச் செல்ல அவருக்குத் தெளிவுபட் டிருக்கலாம்.

மேலும், பிற்காலத்தில் அவரது உபதேசத்தில் பழைய ஏற்பாடு மிகவும் ஆழமான பொருளில் உபயோகிக்கப்படு வதைப் பார்க்கும்போது யூத முறைமையின்படி செவ்வனே இவர் யூதத் திருமறையினை இளமையில் கற்றிருந்தார் என லாம். மேசியா என்று ஒருவர் வருவார் என்று எங்கும் எதிர் பார்த்து இருந்தபடியால், கடவுள் தம்மையே அப்பணிக்காகத் தெரிந்திருக்கக்கூடுமோ என்ற சிந்தனையும் அவருக்குள் எழுந் திருக்கலாம் என்று உல்லியம் நீல் என்பார் கூறுகின்றார்.

இந்தக் காலத்திலே நாசரேத்தூரில் நல்ல ஒரு தச்சனாக அவர் வேலை செய்து குடும்பத்திற்கு உதவினார். பாரம் பரியத்திலே அவர் செய்த கலப்பைகள் மற்றவர்கள் செய்த வற்றைவிடச் சிறப்புமிக்கவையாயிருந்தன என்றும், அதனால் பலர் அவரைத் தேடி வந்தனர் என்றும் கூறப்படுகின்றது. பாரம்பரியத்திற்கு நாம் அதிக இடமளிப்பதில்லை. ஆனால், பிற்காலத்தில் தமது திருப்பணியில் எல்லாவற்றையும் நன்றா கச் செய்த இயேசு, இளமையிலேயே அந்தச் சிறப்புள்ளவரா யிருந்தார் என்று கூறுவது தவறல்லவே.

## திருமுழுக்கு

யோவான் மனந்திரும்புதலுக்கு அடையாளமாகத் திரு முழுக்களித்தார். இயேசுவும் அவரால் திருமுழுக்குப் பெற் றார். ஆனால் இயேசுவின் திருமுழுக்குக்கும் பிறர் பெற்ற திருமுழுக்குக்கும் வித்தியாசம் உண்டு என்று பொருள்

பட ஆக்கியோர்கள் எழுதியுள்ளனர். தாம் தமது மக்களின் பிரதிநிதியாகத் தெரிந்துகொள்ளப்பட்டதை உள்ளூர அறிந்து அதனை வெளிப்படையாக அறிக்கையிடவே இயேசு திருமுழுக்குப் பெற்ருர்.

மேசியா வரும்போது யூத மக்களின் பிரதிநிதியாக அவர் செயலாற்றுவார் என்ற எதிர்பார்ப்பு மக்களிடையில் இருந்தது. திருமுழுக்கின்போது அவரது அனுபவம் தாமே அந்த மக்களின் பிரதிநிதி என்பதனை அவருக்கு உறுதிப்படுத்திற்று. அவர் எப்படிப்பட்ட மேசியாவாயிருப்பார் என்பதும் திருமுழுக்கின்போது அவருக்கு அருளிச்செய்யப்பட்டது. இந்தக் கட்டத்தில் நினைவுபடுத்தப்படும் இரு திருமறை வாக்கியங்களும் மிகவும் முக்கியமானவை. சங். 2:7ல், 'நீர் என் குமாரன்' என்பது மேசியாவின் வல்லமையைக் குறிக்கும் பாகம். ஏசா. 42:1ல், 'என் ஆத்துமாவுக்குப் பிரியமானவர்' என்பது கடவுளின் தாசனைக் குறிக்கும் பாகம். இங்கே ஆக்கியோன், இஸ்ரவேலர் தங்களை உயர்த்துவதினலல்ல, தங்களைப் பிறருக்காகச் சேவை செய்ய அர்ப்பணிப்பதினுலேயே பிறரை உண்மையான இறைவனைப்பற்றிய அறிவுக்குள் கொண்டுவர இயலும் என்பது இதின் பொருள். ஆகவே, இரு பாகங்களையும் ஒன்றிணைத்துத் தெய்வீக வல்லமையின் நிறைவினுல் அவர் பாடனுபவிக்கும் அல்லது பிறர் நிமித்தம் துன்புறும் தாசனின் பாதையில் தம் கடமையை நிறைவேற்றும்படி தம்மை அர்ப்பணம் செய்கின்ருர்.

இயேசுவின் திருமுழுக்கிற்கும் வனந்தரத்தில் நடைபெற்ற சோதனைகளுக்கும் உறவு உண்டு. இயேசு தமது சோதனைகளில் மேசியாப் பணியினைச் செய்வதற்குத் தவருன, எளிதான முறைகளை ஒவ்வொன்ருக நிராகரித்துவிடுகின்ருர். துன்பத்தின் பாதையையே தெரிந்துகொண்டு வனந்தரத்திலிருந்து அவர் மக்கள் மத்தியில் வருகின்ருர்.

## இயேசுவின் திருப்பணி

முழுக்கு முனிவர் யோவானைத் தொடர்ந்து இயேசுவின் பணி ஆரம்பமாயிற்று. யோவான் நியாயத்தீர்ப்பையும், பழைய யுகம் அழிந்து இறையாட்சி வர மிகவும் சமீபித்திருப்பதையும் அறிவித்தார். இயேசுவே, கடவுளின் இரக்கத்தை அறிவித்து

இறையாட்சி தொடங்கிவிட்டது எனக் கூறினர். மேசியாவின் வருகைக்கு முக்கிய அடையாளமாகத் தீயன தோல்வியுற்று யாவேயின் வல்லமை விளங்குமென்ற எதிர்பார்ப்பு யூத மக்களிடையில் நிலவியது. சாத்தானும் அவனது சகாக்களும் மக்களை ஏமாற்றி மனித இதயங்களிலே தீய சிந்தனைகளை எழுப்புகின்றனர். நோய், துன்பங்கள் எல்லாம் இத்தீயோனால் வருகின்றன என்று நம்பப்பட்டது. ஆகவே, நோய், மரணம் போன்றவற்றை மடங்கடித்துவிட்டால் அது சாத்தானின்மேல் வெற்றியாகும். அவனைவிட வல்லவர் ஒருவர் இருக்கின்றார் என்பதற்கு அது அடையாளமாகிவிடும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இயேசுவின் திருப்பணியில் குருடருக்குப் பார்வையும், செவிடருக்குக் கேட்கும் ஆற்றலும் அளிக்கப்பட்டு, பிசாசுகள் துரத்தப்பட்டு, நோயும் நோவும் அகற்றப்பட்டு எண்ணிறந்த மக்கள் விடுதலையடைந்தனர். அவர் ஒரு வார்த்தை கூறினால், அவர் தொட்டுவிட்டால் மக்கள் ஆரோக்கியம் அடைந்து விடுகின்றனர். இதனை ஒருவராலும் மறுக்க இயலாது.

இவ்வித நிகழ்ச்சிகளின் ஒரே விளக்கம், இறைவன் வல்லமையான முறையில் மக்கள் நடுவில் செயலாற்றுகின்றார் என்பதை இயேசு அறிந்திருந்தார். மக்களது தகுதியினாலல்ல, கடவுளின் பேரருளினாலே மக்களுக்கு விடுதலை வந்துவிட்டது. கலிலேய மக்களுக்கு இப்புதிய இறைவாக்காளரான இயேசுவின் வல்ல செயல்கள் ஆச்சரியத்தை அளித்தன. ஆனால் முழுக்கு முனிவர் யோவான் போன்றவர்களின் உள்ளத்திலே இது கேள்வியையும் எழுப்பிற்று. ஏனெனில், இயேசுவின் பல செயல்கள் மேசியாவின் செயல்களாயிருந்த போதிலும், அவர்கள் எதிர்பார்த்ததுபோல அவர் கொடிய நியாயத்தீர்ப்பு செய்யும் மேசியாவாக வரவில்லை. ஆகையினால் 'வருகிறவர் நீர்தானா? அல்லது வேறொருவரை நாங்கள் எதிர்பார்க்கவேண்டுமோ?' என்ற கேள்வியை யோவான் தனது சீடர் மூலம் அனுப்புகின்றார். வருகிற மேசியா அவர்தான் என்பதற்கு அத்தாட்சிகளாகத் தமது வல்லமையான செயல்களையே இயேசு பதிலாகச் சுட்டி அனுப்புகிறார் (லூ. 11: 19–22). அவர் பெயல்சபூலினால் இவைகளைச் செய்கின்றார் என்று சத்துருக்கள் கூறியபோது, 'சாத்தான் தனக்குத்

தானே விரோதமாய்ப் பிரிந்திருந்தால் அவன் இராஜ்யம் எப்படி நிலைநிற்கும்?' . . . 'நான் பேய்களைக் கடவுளுடைய விரலினால் துரத்துகிறபடியால் கடவுளுடைய இராஜ்யம் உங்களிடம் வந்தாயிற்று' என்று கூறினார் (லூ. 11:18–20).

## நற்செய்தி

யூத மக்கள் சிலர் இயேசுவின் பணியினைத் தவறான முறையில் விளக்க முற்பட்டபோதிலும், இயேசு தமது சுகமளிக்கும் பணி இறையாட்சி ஆரம்பித்துவிட்டதின் அடையாளம் என்றே எண்ணினார். இவைகளில் தம் மூலமாகக் கடவுள் உலகில் செயலாற்றுகின்றார் என்று அவர் அறிந்திருந்தார். மக்கள் நோயும் நோவும் அனுபவிப்பது கடவுளின் சித்தமன்று, அவர்கள் அவற்றினின்று விடுதலையடைந்து முழுமையான வாழ்க்கை நடத்தவேண்டும், கடவுள் அவர்கள் எப்படி இருக்கவேண்டும் என்று சித்தம் கொள்கின்றாரோ, அந்த வாழ்க்கையை அவர்கள் பெற்றுக்கொள்ளவேண்டும். இப்பணி தம் மூலமாக நடைபெறுகின்றது என்பது இயேசுவின் திடமான உறுதி.

ஆகவே, இயேசு போதகம் அளித்ததுமாத்திரமன்று, மக்களின் உடலையும் உள்ளத்தையும்பற்றி இறைவன் அக்கறையுள்ளவராயிருந்ததனால் மக்களுக்கு ஆரோக்கியமும் அளித்தார். எனவே, இறையாட்சியை நடுவாகக்கொண்ட இயேசுவின் உபதேசம் நற்செய்தி என்றழைக்கப்படுகின்றது. எளிய, துன்புறுத்தப்பட்ட கலிலேய மக்களுக்கு கடவுள் நியாயத்தீர்ப்பினாலல்ல, இரக்கத்தினால் தங்களைச் சந்தித்து, உடலிலும், உள்ளத்திலும், ஆவியிலும் தங்களை விடுவிக்கின்றார் என்பதைவிட வேறு நற்செய்தி இல்லை. உண்மையில் இயேசு அவர்களுக்கு ஒரு புது வாழ்வை அளித்தார். இது தீர்மானத்தின் நேரம்; கடவுள் மக்களுக்கு மன்னிப்பளித்து, வாழ்க்கையில் புதிய ஒரு ஆரம்பத்தை அளிக்கின்றார். தங்கள் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டுத் தம்மிடம் திரும்பினவர்களுக்குப் புதிய தன்மையுள்ள ஒரு வாழ்க்கையை, கடவுளோடு ஆழமான ஓர் உறவு, மிகவும் நிறைவான திருப்தியளிக்கும் வாழ்க்கையை இயேசு அளித்தார்.

### புது வாழ்வு, நானே வாசல்

இப் புது வாழ்வினுள் இயேசுவின்மூலமே பிரவேசிக்க இயலும். அவரது வார்த்தைகளைக் கேட்டு அவைகளின்படி நடப்பதின்மூலம் அதாவது, அவருக்கு அடியாராவதின்மூலம் கடவுளின் அரசின்கீழ் வாழ்வது என்றால் என்ன என்று மக்கள் அறிவார்கள். இவ்வாறு கடவுளின் அரசை வாழ்க்கையில் ஏற்றுக்கொள்வதும் அவருக்குக் கீழ்ப்படிந்து அவரைச் சேவிப்பதும் வாழ்க்கையில் அதிமுக்கியமானது என்று உவமைகள், எடுத்துக்காட்டுகள்மூலம் இயேசு வற்புறுத்தினர். அவரது போதனைகளின் தொகுப்பாகிய மாமலைப் பொழிவில் (Sermon on the Mount) இறையாட்சியினுள் வாழ்பவர்களுக்குரிய அறநெறிப் பிரமாணங்களைத் தராமல், கடவுளுக்குத் தங்களை முற்றிலும் அர்ப்பணம்செய்து வாழ்வதின் பல உதாரணங்களையே எடுத்துக்கூறுகின்றார். அது இயேசுவில் கடவுள் செயல்படும் வாழ்க்கை போன்றதே. மாமலைப் பொழிவு இயேசுவின் வாழ்க்கையின் சித்திரம் எனலாம். கடவுள் பேரிலும் மனிதர் பேரிலும் அன்புகூருவதே இவ்வாழ்க்கையின் மையமாகும்.

### அடியார் குழுவினர்

ஆரம்பத்தில் இயேசுவின் போதகத்தில் உள்ள அதிகாரம், புதுமை முதலியவற்றைக் கண்டு மக்கள் கும்பல் கும்பலாக வந்து அவர் பேசுகின்றவற்றைக் கேட்டனர். ஆயினும் அவரையும் அவரது உபதேசத்தையும் பின்பற்றுவது எளிதன்று என்று அவர்கள் சீக்கிரம் உணர்ந்துவிட்டனர். இயேசுவும் இதனை உணர்ந்தார். மக்கள் பலர் அற்புதங்களைப் பார்த்து மகிழ வந்தனரேயன்றி, தம்மைப் பின்பற்றிச் சேவிக்க வரவில்லை என்பதனை அவர் அறிந்தார்.

ஆரம்பம் முதல் இயேசு ஒரு சிறிய அடியார் குழுவினைத் தெரிந்தெடுத்திருந்தார். பலவிதத்தொழில்களில்ஈடுபட்டிருந்த அவர்கள் அவரது அழைப்பைக் கேட்டபோது பின்பற்றத் தகுந்தவர் என்றுணர்ந்து தங்கள் அலுவல்களை விட்டுவிட்டு அவரைப் பின்சென்றனர். பொதுமக்கள் இயேசுவின் பணி பற்றிப் பலவிதமாகப் பேசிக்கொண்டபோதிலும், இந்த

அடியார் குழுவினர் இறையாட்சியினைச் சிறிதளவு புரிந்து கொள்ளத் தொடங்கினர்.

ஆகவே, தமது பொதுப்பணியிலிருந்து ஓரளவு விலகி, அடியார் குழுவினருக்கு உபதேசிப்பதில் இயேசு கவனம் செலுத்தினர். அவர்கள் மிகவும் சாதாரண மக்கள். ஆனல், இயேசுவைப் பின்பற்ற துணிச்சலோடே முன்வந்தவர்கள். அவர்கள் இயேசுவின் அருகிலிருந்து போதகத்தைக் கேட்கவும், அற்புதங்களைப் பார்க்கவும், அவர் ஜெபிப்பதைக் கவனிக்கவும், மிகவும் நெருங்கிய முறையில் அவரோடே உரையாடவும், அவரை அறியவும் வாய்ப்புப் பெற்றனர். அவரது பொது வாழ்வையும் தனி வாழ்வையும் அவர்கள் அறியும் தருணம் பெற்றிருந்தனர். இறைவனேடுள்ள தமது உறவுபற்றி அவர் பேசுவதை அவர்கள் கேட்டனர். மக்களின் பாவங்களை மன்னிக்கத் தமக்கு அதிகாரம் உண்டு என்றும், இஸ்ரவேலரது சமயக்குரவர்கள், புரோகிதர்களைவிட தாம் வித்தியாசமானவர் என்றும், நியாயப்பிரமாணமும் இறை வாக்காளர் உரைகளும் தமது வாழ்க்கையில் நிறைவேறுதல் பெற்றுவிட்டன எனவும் அவர் கூறினர்.

### இவர் யார்?

மக்கள் என்னை யார் என்று சொல்லுகின்றூர்கள் என்று இயேசு தமது அடியாரிடம் வினவுகின்றூர். சிலர் அவரை முழுக்கு முனிவர் யோவான் என்றும், சிலர் எலியா அல்லது இறைவாக்காளர்களில் ஒருவர் என்றும் கூறுவதாக அவர்கள் பதிலிறுத்தனர். என்னை யார் என்று நீங்கள் சொல்லுகிறீர்கள் என்று இயேசு தமது அடியாரைப் பார்த்துக் கேட்டார். நீர் மேசியா என்று பேதுரு பதில் கூறினர் (மா. 8:29).

இந்த அறிக்கை மிகவும் சாதாரணமானதாக நமக்குத் தோன்றலாம். ஆனல், மாண்புமிக்க, மனிதரில் ஒப்பற்ற ஒருவரை விவரிக்க முதல் நூற்றூண்டு யூதர்களுக்கிருந்த உன்னத பதம் மேசியா என்பதாகும். சங். 2; ஏசா. 9:11 ஆகிய இடங்களில் மேசியா என்பவர் மோசே, தாவீது என்பவர்களைவிடப் பெரியவர் என்றும், இஸ்ரவேலரது சமய வரலாற்றின் எல்லா நம்பிக்கைகளின் நிறைவேறுதலானவராக யாவேயினல் அபிஷேகம் செய்யப்பட்டவர் என்றும் கூறப்பட்டிருக்கின்றது. ஆகவே, இந்த இயேசு ஒப்பற்ற ஒரு

முறையில் பூமியிலே இறைவனின் பிரதிநிதியாயிருக்கின்ருர் என்பது பேதுருவின் அறிக்கையின் பொருள்.

## மேசியா

இந்த அறிக்கையின் பொருளின் ஆழத்தைப் பேதுரு அறிந்திருந்தாரா என்பது கேள்விக்குரிய ஒன்ருயிருப்பினும், இயேசு இந்த அறிக்கையை அதிக முக்கியமானதாகக் கருதினுர். ஏனெனில், தமது பணிபற்றி அவருக்கு ஒருபோதுமே சந்தேகம் ஏற்பட்டதாக நாம் அறிகிறதில்லை. அவரால் ஆரோக்கியமடைந்தவர்கள் பலர் அவரிடம் விசுவாசம் வைத்தனர். ஆனுல், பேதுருவின் இந்த அறிக்கை அந்த விசுவாசத்தைவிடச் சிறப்புள்ளது. ஏனெனில், இது அவரையும் அவரது பணியினேயும்பற்றிய நுண்ணறிவினுல் ஏற்பட்டது என்று இயேசு அறிந்தார்.

பொதுவாக மேசியா என்று தம்மை மக்கள் அழைப்பதை இயேசு விரும்பவில்லை. ஏனெனில், மேசியாவைப்பற்றிப் பலவிதச் சித்திரங்கள் நிலவின. சாதாரண மக்கள் மேசியா என்ருல், நாட்டிலே செல்வமும் அமைதியும் நிலவச்செய்பவர் என்று எதிர்பார்த்தனர். சிலர் அவர் அரசியல் விடுதலேயளிக்கும் தலேவன் என்றும், வேறு சிலர் அவர் ஒரு நியாயாதிபதியாயிருப்பார் என்றும் எதிர்பார்த்தனர். ஆனுல், இயேசுவின் சிந்தனேயில் மேசியா என்பதற்கு இவ்விதப் பொருள் எதுவுமில்லே. பாடனுபவிக்கும் ஒருவரைக் குறிக்கும் பதமாக அவர் அதனேக் கருதினுர்.

## மனுஷகுமாரன்

ஆகையினுல், 'மனுஷகுமாரன்' என்ற ஒரு பட்டத்தை அவர் தம்மைக் குறிப்பிட உபயோகிக்கின்ருர். தானி. 7:13ன் அடிப்படையில் ஒரு புதிய சமூகத்தின் தலேவன் என்ற பொருளில் இயேசு இதனே உபயோகித்தார் என்பது நிச்சயம். அந்தச் சமூகம் இறையாட்சியினே முறையே ஏற்றுக்கொண்ட மக்களின் சமூகம். அதன் அரசனும் தலேவனும் இயேசுகிறிஸ்துவே.

தம்மைப் பின்பற்றுகிறவர்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டுத் தம்மைப் பின்செல்லவேண்டும் என்று இயேசு கூறியதன் காரணம் இதுவேயாகும். அவரைப் பின்பற்றுவது

என்பது மனுஷகுமாரனின் இந்த அரசின்கீழ் வருவதாகும். இவ்விதமான இறையாட்சியைப்பற்றிய செய்தியினைப் பொதுவாக மக்கள் வரவேற்கவில்லை என்பதனை இயேசு உணர்ந்தார். மேலும், தாழ்த்தப்படுதல், மரணம் ஆகியவற்றின் மூலமாகவே இந்த அரசினை நிறுவ இயலும் என்று இயேசு அறிந்தார். எனவே, பேதுருவின் அறிக்கைமுதல், மிகவும் கடினமான பாதையில் அவரது திருப்பணி திரும்புகின்றது. தமக்கு முன்பாகச் சிலுவை மரணம் இருப்பதைத் தெளிவாக அறிந்தவராகவே அவர் செல்கின்றார். தமது மரணத்தின் மூலமாகவே இறையாட்சி நிறுவப்படும் என்பதனைத் தமது அடியாருக்கு அவர் போதிக்கின்றார். தோல்வியினை வெற்றியாகவும், மரணத்தை ஜீவனாகவும் மாற்ற கடவுள் வல்லவர் என்ற உறுதியோடு அவர் கொல்கதா பாதையில் நடந்தார். ஏனெனில், கொல்கதாவுக்குப் பின்னர் மனுஷகுமாரனின் வெற்றியுள்ள அரசு இருப்பதைத் அவர் உறுதியாக அறிந்தார்.

எனவே, மேசியா, மனிதகுமாரன், பாடனுபவிக்கும் கடவுளின் தாசன் என்ற இந்த மூன்று கருத்துக்களையும் ஒப்பற்ற முறையில் ஒன்றிணைத்துத் தமது பணியினை இயேசு விளக்கினார். இறையாட்சி தொடங்கிவிட்டபோதிலும் தமது மரணத்தின் மூலமாக அது வல்லமையோடே வரலாற்றினுள் புகுந்துவிடும் என்று அவர் கூறினார் (மா. 9:1). அவர் தமது மரணத்தின்மூலம் யூதர்களை மாத்திரமன்று, உலக மக்கள் அனைவரையுமே தம்மிடம் இழுத்துக்கொள்ளப்போவதாகக் கூறினார் (யோ. 12:32).

## எதிர்ப்பு

ரோமை அரசல்ல, யூத மக்களின் சபையே இந்த உபதேசத்தையும் திருப்பணியையும் எதிர்த்தது. எதிர்த்தவர்களில் முக்கிய இடம் வகிப்பவர்கள் பரிசேயர். ஆரம்பத்தில் இவர்கள், இயேசுவின் அநுதாபிகள்போல் காட்சியளித்தனர். ஏனெனில், யூத மக்களில் கடவுளிடத்தில் பற்றுறுதியுள்ளவர்கள் பரிசேயர் குழுவினர். ஆனால், இந்த இயேசு சாதாரணமான மனிதனல்லர், அவர் யூத மதத்தையே அழித்துவிடக்கூடிய ஆற்றலுள்ள ஒருவர் என்று அவர்கள் சீக்கிரம் அறிந்துவிட்டனர். ஆகையினால் அவர்கள் அவரை இறுதிவரையிலும் எதிர்த்தனர்.

## உலகில் இறையாட்சி

எதிர்ப்பினுல் மதிமயங்காத இயேசு இறையாட்சி இவ்வுலகிலே தொடங்கிவிட்டது என்று உபதேசித்தார். கடவுள் இரக்கமும் வல்லமையுமுள்ளவராக இயேசுவில், உலகில் செயல்படுகின்ருர். மேசியாவைப்பற்றிய எதிர்பார்ப்பின்படி இயேசுவில் தீயன அழிக்கப்படுகின்றன. மனிதகுமாரனுக இயேசு தாமே ஒரு புதிய சமூகத்தினை நிறுவுகின்ருர். அதில் கடவுளின் ஆளுகையின்கீழ் வாழத் தீர்மானம் செய்கின்ற அனைவரும் இந்த உலகின் தீமைகளிலிருந்தும், தங்களது பாவங்களிலிருந்தும், மரணமாகிய இறுதி சத்துருவினிடமிருந்தும் விடுவிக்கப்படுவர். அவர்கள் ஒரே நேரத்தில் இந்த உலகின் உத்தமக் குடி உரிமையாளராக (citizens)வும் இறையாட்சியின்கீழ் வாழ்க்கையின் ஒரு புதிய தன்மையில் வாழ்வார்கள்.

## இயேசுவும் நியாயப்பிரமாணமும்

யூத நியாயப்பிரமாணத்தின் அடிப்படையை இயேசு ஏற்றுக்கொண்டார். ஏனெனில், நியாயப்பிரமாணம் இஸ்ரவேலருக்கும் யாவேக்குமுள்ள உடன்படிக்கையின் வெளிப்பாடாயிருந்தது. அது அவர்களது உத்தரவாதத்தின் அளவுகோலாயிருந்தது. மோசேயின் நியாயப்பிரமாணம், இறைவாக்காளர்களின் உபதேசம் ஆகியவை நல்லவை என்று இயேசு ஒப்புக்கொண்டார்.

ஆனுல், நியாயப்பிரமாணத்தின் பாதுகாவலர்களான பரிசேயர்கள் அதனைச் சிறு சிறு சட்டங்களாக்கி எழுத்தின்படி அவற்றை நிறைவேற்ற மக்களுக்குப் போதித்து அதின் தாற்பரியத்தை அல்லது ஆவியை விட்டுவிட்டபடியால் இயேசு அவர்களை வன்மையாக எதிர்த்தார். ஏனெனில், மக்களின் சமய வாழ்க்கை செயற்கையானதும், சடங்கு சார்ந்ததும் ஆழமற்றதுமாகிவிட்டது.

சாதாரண மக்கள், கடவுளுக்குக் கீழ்ப்படிவது என்ருல் இவ்விதமான சில நியாயப்பிரமாணத்தின் கடமைகளை நிறைவேற்றுவது மாத்திரமே என்று கருதினர். இதனுல் இரக்கம், ஒருவருக்கொருவர் அன்பு பாராட்டுவது போன்றவற்றை அவர்கள் விட்டுவிட்டனர். ஆகவே, இயேசு நியாயப்பிரமாணத்தை ஆவியின்படி மீறுகின்றவராக அல்ல, அதன்

உண்மையான தன்மையை எடுத்துக் காண்பிக்கின்றவராக செயல்படுகின்றார். நியாயப்பிரமாணத்தின் நோக்கத்தை மக்கள் அறியச்செய்வதே அவரது சித்தமாயிருந்தது. (உ-ம்) கொலைசெய்யாதிருப்பாயாக என்ற பிரமாணம் கொலைக்கு ஒப்பாக இதயத்திலுறையும் பகைமை நிலையினைக் கண்டிப்பதாகும் என்று பொருள்பட இயேசு கூறினார். அப்படியே பிரமாணங்களை அன்பின் கட்டளையினுள் அடக்கிக் கூறும்போது முதன்மையானவைகளுக்கு முதலிடம் கொடுக்க இயேசு வற்புறுத்துகின்றார். பரிசேயர் அற்பமானவைகளை முக்கியப்படுத்தினதற்கு இது கண்டனமாயிருந்தது. யூதப் பிரமாணத்தில் 613 சட்டங்கள் இருந்ததாகக் கணக்கிடப்பட்டிருக்கின்றது. இவை அனைத்தும் ஒன்றுபோல் முக்கியமானவை என்று பரிசேயர் வற்புறுத்தினர். ஆனால், இயேசுவோ அன்பின் பிரமாணமே முதன்மையானது என்றார்.

## அவர்மேல் குற்றச்சாட்டுகள்

இயேசு மற்றுமுள்ள எல்லா இறைவாக்காளர்களைவிடவும் தனக்குச் சிறப்பு அதிகாரம் இருக்கின்றது என்றார். மோசேயும், இறைவாக்காளர்களும் கூறிய பலவற்றை மாற்றி "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார் அவர். ஓய்வுநாட் பிரமாணத்தின் தவறான விளக்கத்தை மீறி, ஆயக்காரரோடும் பாவிகளோடும் உறவுகொண்டு நியாயப்பிரமாணத்தை அற்பமாகக் கருதினதுபோல் தோன்றினது. எல்லாவற்றிற்கும் மேலாக மனிதரின் பாவங்களை மன்னிப்பதற்குத் தனக்கு இறைவனின் உரிமை இருப்பதாக அவர் கூறினார். இவ்வித பயங்கரமான குற்றங்களைச் செய்த இயேசு பைத்தியக்காரன் அல்லது சாத்தானின் கையாள் என்று சமயத்தலைவர்கள் கருதினர். எனவே, அவர் யாராயிருப்பினும் அகற்றப்பட வேண்டும் என்ற துணிவுக்கு வந்துவிட்டனர்.

# இயேசுவின் மரணமும் உயிர்த்தெழுதலும்

இயேசுவுக்கு ஏற்பட்ட எதிர்ப்பு படிப்படியாக வளர்ந்து உச்சநிலே எட்டியது. கி.பி. 27ம் ஆண்டு வசந்த காலத்தில் அவர் எருசலேமினுள்ளே பஸ்காப் பண்டிகை நாட்களிலே சென்ருர். யூதர் எதிர்பாராத ஒரு பொருளிலே, தாம் மேசியா என்பதனைக் காண்பித்துத் தீய சக்திகளே முறியடிக்க அவர் சென்ருர். பேதுரு அவரிடத்திலே மேசியா துன்பப் படலாகாது என்று கூறியபோது அது சாத்தானின் குரல் என்று அதனே அவர் கண்டித்துவிட்டார். ஆகவே தான் சமாதானத்தின் அரசன் என்பதனைக் காண்பிக்கும் நோக்கத் தோடே அவர் கழுதையின்மேல் ஏறி எருசலேமினுள் பவனி யாக வருகின்ருர் (சக. 9:9).

### தேவாலயமும் பலியும்

இயேசு தேவாலயத்தினுள் பிரவேசிக்கவும் பெரிய அமளி ஏற்படுகின்றது. இந்தத் தேவாலயம் ஏரோதுவினுல் கட்டப் பட்டது. தாவீதரசன் காலம் முதல் தேவாலயம் யூத சமய வாழ்க்கையின் மையமாயிருந்தது. அங்கே மக்களின் பாவ நிவாரணத்திற்காக மிருகபலி செலுத்தப்பட்டது. மனித னுக்கும் கடவுளுக்குமிடையில் பாவத்தினுல் ஏற்பட்ட பிளவைக் கடந்துசெல்லும் ஒரு முறையாகப் பலி உபயோகிக் கப்பட்டது. ஆண்டிலே ஒருநாள் பிரதான ஆசாரியன் மகா பரிசுத்த தலத்தினுள் பிரவேசித்து நாட்டின், மக்களின் பாவங் களுக்காக வேண்டிக்கொண்டான். குற்றம் செய்த பாவி களின் இரத்தத்துக்குப் பதிலாக மிருகத்தின் இரத்தத்தைச் சிந்துவது ஏதோ ஓர் இரகசியமான முறையில் கடவுளால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது என அவர்கள் நம்பினர்.

இறைவாக்காளர் எடுத்துரைத்த நீதி, தாழ்மை, இரக்கம் ஆகியவை மிகவும் உயரிய இலட்சியங்கள். அவற்றினே நிறை

வேற்ற மனிதனால் இயலாது என்பதனை மக்கள் உணர்ந்திருந் தனர். மனிதன் பாவியாயிருக்கிறபடியால் அவன் எவ்வளவு தான் விரும்பினாலும் அவனால் கடவுளுக்குக் கீழ்ப்படிய இயலாது. ஆகவே, பரிசுத்தக் கடவுளுக்கும் பாவ மனிதனுக்கு மிடையில் நல்லுறவு ஏற்படவேண்டுமாயின் பாவத்தை அகற்ற அவரே ஏதாவது ஒரு முறையினை அளிக்கவேண்டும் என்ற உண்மையைப் பலி உறுதிப்படுத்திற்று. பலி யாவேக்குப் பிரியமான ஒரு முறை என்று இஸ்ரவேலர் நம்பினர்.

எனினும், தூய அறநெறி வாழ்க்கையிலிருந்து தப்புவதற்கு ஒரு முறையாக மிருக பலி ஆகிவிட்டது. மக்கள் பலி செலுத்தும்போது உண்மையான அறநெறி வாழ்க்கையின் தேவை வற்புறுத்தப்படவில்லை. இயேசுவின் காலத்தில் பலி பலுகிப் பெருகிவிட்டது. பஸ்காப் பண்டிகைக் காலத்தில் பலி செலுத்தவும், காணிக்கை செலுத்தவும் தூர இடங்களி லிருந்தும் யூதர்கள் திரளாக வந்து கூடிவிட்டனர்.

### சீரழிவு

யூதரல்லாதவர்கள் தேவாலயத்திலே யாவேயைப் பணிந்து கொள்ள ஒதுக்கப்பட்ட ஓரிடம் இருந்தது. அவர்கள் அதைக் கடந்து சென்றால் உயிரிழக்க நேரிடும். ஆயினும், தேவாலயத் தின் ஓர் ஓரத்திலாயினும் இடம் அளித்தமை ஒரு நல்ல அடையாளமாயிருந்தது. மேலும், யூதரல்லாதவர்கள், நியா யப்பிரமாணத்தை ஏற்றுக்கொண்டு யூத சமயத்தைத் தழுவவும் வாய்ப்பிருந்தது. யூதரல்லாதவர்களும் கடவுளின் மக்கள், அவர்களுக்கு ஒளியாயிருப்பது யூத மக்களை யாவே தெரிந்துகொண்டதின் நோக்கமாகும் என்பதனை அடையாள முறையில் இது தெரிவித்தது.

ஆனால், செயலளவில் இந்த இதர மக்களுக்குரிய பாகத்திலே பலிக்குரிய உயிரினங்களும், காசு மாற்றும் கடைகளும் நிரம்பி விட்டன. ஆகையினால் காசுக்காரருடைய ஆசனங்களைஇயேசு கவிழ்க்கும் செயல் புரோகித சமயத்தை எதிர்ப்பதாகும். ஏனெனில், சடங்காசாரச் சமயம் கடவுளுக்கும் இதர மக்க ளுக்குமிடையில் தடையாக நின்றது. இயேசுவின் இச்செயல் யூத சமயத்தின் புரோகித அம்சத்தைக் கண்டிப்பதாயிருந்தது. இதனால் பரிசேயர்கள் சதுசேயரோடு சேர்ந்து அவரைக் கொலைசெய்ய முடிவுசெய்தனர்.

## புதிய இஸ்ரவேல்

தம் காலத்து யூத சமயம் உண்மையான யாவே வழிபாட்டிலிருந்து மிகவும் வேறுபட்டதை இயேசு கண்டார். எனவே, ஒரு புதிய இஸ்ரவேலின் கருவாக பன்னிரு அடியாரைத் தெரிந்துகொண்டார். இவர்கள் வனாந்தரத்தில் யாவேயோடு உடன்படிக்கை செய்த இஸ்ரவேலின் பன்னிரு கோத்திரங்களின் பிரதிநிதிகளாவர். மனிதகுமாரனின் அரசின்கீழ் வாழும் கடவுளின் புதிய மக்களின் ஆரம்பம் இதுவேயாம். மரணத்தின் மூலமாகவே இந்தப் புதிய சமூகத்தை நிறுவ இயலும் என இயேசு அறிந்தார். ஆகையினால் மரணத்திற்குப் பின்னர் வெற்றி இருக்கிறது என்ற உறுதியினால் தம்மோடு மரணம் அனுபவிக்க தமது அடியாரை அவர் அழைத்தார். இறுதியில் அவர்களில் ஒருவன் சத்துருவின் கரங்களில் அவரைப் பிடித்துக்கொடுக்கவே எஞ்சிய பதினொரு பேரும் உயிர்தப்ப ஓடிவிட்டனர். ஆனால், உண்மையான இஸ்ரவேலின் பிரதிநிதியாக, கடவுளின் மக்கள் முழுவதையும் அடையாள ரூபமாக (symbolically) தம்மில் கொண்ட மேசியாவாகிய இயேசு, பிறர் வாழ தம் உயிர் கொடுத்தார்.

ஒரு புதிய இஸ்ரவேலை நிறுவும் தமது நோக்கத்தை இயேசு தாமே தமது அடியாருக்குக் கூறியிருந்தார். இறுதியாகப் பஸ்கா உண்ணும்போது அதனை ஆழமான பொருளுள்ள ஒரு நிகழ்ச்சியாக மாற்றி அமைத்து இவ்வாறு கூறினார். தம்மைப் பிறருக்காகச் சுயமாக அளிப்பதில் ஈடுபடும் தமது உடலுக்கு அடையாளமாக அவர் அப்பத்தை தமது அடியாருக்கு அளித்தார். தமது மரணத்தின்மூலம் ஒரு புதிய உடன்படிக்கையை உருவாக்குவதை அவர் அறிவித்துத் திராட்ச இரசத்தை அவர்களுக்கு அளித்தார்.

ஆறு (கி.மு. 590) நூற்றாண்டுகளுக்கு முன்னர் இதே வார்த்தைகளை எரேமியா உபயோகப்படுத்தியிருந்தார். உடன்படிக்கையைக் கடைப்பிடிக்கத் தவறிய மக்கள் சடங்காசார பிரமாணங்களை விட்டுவிட்டு கடவுளின் மன்னிப்பினால் அவரோடு உள்ளான உறவுகொள்வதை அவர் குறிப்பிட்டார் (எரே. *31:31,32*). இதயத்தாலும் மனத்தாலும் மக்கள் அவரை அறிந்து அவரைச் சேவிப்பார்கள். இந்த நவயுகத்திற்குப் புதிய உடன்படிக்கை அடையாளமாம். மோசேயின்

நியாயப்பிரமாணத்தின் ஆளுகை முடிந்து கடவுளின் மக்களுக்குப் புதிய விடுதலை வரும்.

இப்பொருளிலேயே இயேசு இந்த வார்த்தைகளை உபயோகித்தார். தமது மரணம் கடவுளின் அரசு முழுமையாய் உலகில் தோன்றும் வாசல். இதன் வழி இறையாட்சியின் கீழ்வரும் மக்கள் அவரோடு பூரணமாக இசைந்து வாழ்வர். இந்த விடுதலை மேசியாவின் மூலம் இஸ்ரவேலருக்கு மாத்திரமல்ல, உலகம் முழுவதற்கும் கிடைக்கிறது. சத்துருக்கள், பாவம், மரணம் ஆகியவற்றிலிருந்து இது மக்களுக்கு விடுதலையளிக்கும். லூ. 9:39ல் தமக்கு வர இருக்கும் முடிவை எகிப்திலிருந்து அடைந்த விடுதலைக்கு ஒப்பிட்டு இயேசு பேசுகின்றார்.

## இயேசுவின் மரணம்

சிலுவைக்கு நேராகச் செல்லும் இயேசு தோல்வி மனப்பான்மையோடோ அல்லது எதேர்ச்சையாக சத்துருக்களின் கரங்களில் சிக்கினவராகவோ செல்லவில்லை. தமக்கு நேரிடுவது கடவுளின் சித்தம் என்று அறிந்தவராகவே அவர் செல்லுகின்றார். கடவுளுக்கு முழுமையாகக் கீழ்ப்படிவது என்பது, தம்மை வெறுத்தலும் சுய தியாகமுமாகும் என்றறிந்தவராக அவர் செல்லுகின்றார். இஸ்ரவேல் கடவுளின் மகிமைக்காக முழுமையாகத் தம்மை அர்ப்பணம் செய்து வேதனையும் துன்பமும் ஏற்றுக்கொள்வதினால் அவர் உலகைக் கடவுளின் பாதத்திற்குக் கொண்டுவர இயலும். இஸ்ரவேல் தானாக இதைச் செய்யும் ஆற்றல் பெறவில்லை. ஆகவே இஸ்ரவேலரது சார்பில் மேசியா இரக்கம், அன்பு, தம்மை முற்றிலும் மறத்தல் என்பனவற்றால் ஏவப்பட்டுச் சிலுவைக்கு நேராகச் செல்லுகின்றார்.

இயேசுவின் மரணத்தை முழுமையாக விளக்க ஒருவராலும் இயலாது. ஈராயிரம் ஆண்டுகளாக அறிஞர்கள் முயன்று பல விளக்கங்களைத் தந்துள்ளனர். எனினும் தமது மரணத்தைப் பற்றி இயேசு என்ன சிந்தித்தார், செய்தார் என்பதே முக்கியம்.

தமது மரணத்தைப்பற்றி மா. 10:45ல் 'மீட்கும் பொருள்' என்றும், மா. 10:38ல் 'நான் குடிக்கும் பாத்திரம்'

எனவும் இயேசு தாமே கூறினதாகப் படிக்கின்றோம். தாம் பிறருக்காக ஆற்றும் ஒரு செயல் எனவும், அது மக்கள் சார்பில் கடவுளுக்குத் தம்மைச் சுயமாக அளிப்பதாகும் என்பது இதன் பொருள். இச்செயலால் கடவுளின் அரசு இவ்வுலகில் வல்லமையோடு வருகின்றது எனவும், மக்களின் பாவத்தை மேசியா தம்மேல் ஏற்றுக்கொள்வதினால் மன்னிப்பின்மூலம் புது வாழ்வு ஏற்படுகிறது என்றும் அவர் கூறுகிறார்.

இயேசுவைச் சிலுவையில் அறையும் நிகழ்ச்சி மனிதத் தன்மையின் கொடுமையையும் பலவீனத்தையும் காட்டிக்கொடுக்கின்றது. யூதாஸ் மறுதலித்தல், பிலாத்து பேதலித்தல், சமயத் தலைவர்களின் பித்து, மக்கள் கூட்டத்தின் மன இளக்கம், சீடர்களின் கோழைத்தனம் என்பன எக்காலத்தும் மன்பதையின் கொடிய தோல்வியைக் குறிப்பிடுகின்றன. இவற்றினை மன அமைதியோடும் சாந்தத்தோடும் தயக்கமின்றி எதிர்க்கும் இயேசு தமது நீதிபதிகளைக் குற்றவாளிகளாகத் தீர்த்துத் தம் அடியாரை வெட்கப்படுத்துகின்றார். மாலையில் இயேசு இறந்துபோக, கல்லறையில் உடல் வைக்கப்படுகின்றது. யூத சமயத்துக்கும் ரோமை அரசுக்கும் தொந்தரவளித்த இயேசு கொலைசெய்யப்பட்டார். அவரது அடியார்கள் பயத்தினாலும் தோல்வியினாலும் ஒளிந்துக்கொண்டனர்.

## உயிர்த்தெழுதல்

உயிர்த்தெழுதலின் முக்கிய சாட்சி கிறிஸ்தவ திருச்சபையாகும். பெரிய வெள்ளியன்று தங்களது நம்பிக்கையெல்லாம் அவமானதை இயேசுவின் அடியார்கள் கண்டனர். அவரது மரணம் சாத்தானின் வெற்றிபோல் தோன்றிற்று. எனினும், சில நாட்களுக்குள் அந்த அடியார்கள் புத்துயிரும் புது நம்பிக்கையும் பெற்றுச் சில வாரங்களில் தைரியத்தோடு வெளிவந்தனர். தோல்வியெனத் தோன்றியது உண்மையில் வெற்றி எனவும், கடவுள் சாத்தானைவிட வன்மை மிக்கவர் எனவும் எருசலேமின் தெருக்களில் அவர்கள் கூறி அறிவித்தனர். ஏனெனில் கடவுள் மேசியாவை உயிரோடெழுப்பினார். இயேசுவின் உயிர்த்தெழுதலை மையமாகக்கொண்ட இந்த விசுவாசத்தில் கிறிஸ்தவ நற்செய்தியைக்கொண்டு ரோமைப்

பேராக முழுவதையும் மாற்றியமைக்க அவர்கள் புறப்பட்டுச் சென்றனர்.

நற்செய்தி நூல்கள் எழுதப்படும் முன்னர் கடிதங்களை எழுதிய பவுலடியார் தமது நற்செய்திப் பணியின் பிரசங்கத்தில் இயேசுவின் உயிர்த்தெழுதல் நடுவெனக் கூறுகின்றார் (1 கொ. 15; கி.பி. 54). தாம் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவைச் சந்தித்தது உயிர்த்தெழுதல் காட்சிகளில் ஒன்றெனவும் அவர் கருதுகின்றார்.

உயிர்த்தெழுதல் பற்றிய அறிக்கைகளில் நற்செய்தி நூல்களிடையில் வித்தியாசங்கள் இருக்கின்றன. இது இயல்பானதே. ஏனெனில் முற்றிலும் எதிர்பாராததும் சாதாரணமாக நம்புவதற்கு இயலாததுமான முறையில் கல்லறை வெறுமையானபடியால் அதனை எழுதுவதில் சிரமம் இருந்தது. சிலருக்கு உடலைச் சுற்றியிருந்த துணிகள் கிடந்ததே போதுமான அத்தாட்சியாயிற்று (யோ. 20:5பி.). உயிர்த்தெழுதல் காட்சிகளைப் படிக்கும்போது சந்தித்தவர்களுக்கே நம்புவது கடினமாயிருந்தது எனவும், படிப்படியாக அவர்கள் அதை உண்மையென ஏற்றுக்கொண்டனர் எனவும், உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் நிலைக்கும் மாம்சத்தில் வாழ்ந்த இயேசுவுக்கும் வித்தியாசம் இருந்ததென அறிகிறோம். இயேசுவின் உயிர்த்தெழுதல் உண்மையற்ற ஒன்றாய் இருந்திருப்பின் அதிகாரிகள் அதனை எளிதில் அடக்கியிருப்பர். உயிர்த்தெழுதல் வரலாறு சார்ந்த உண்மை நிகழ்ச்சியானபடியால் அச்செய்தியினை அடக்க அவர்களால் இயலவில்லை. எம்மாவூர் பயணத்தில் உயிர்த்தெழுந்த இயேசு தம்மை வெளிப்படுத்துதல், தோமாவுக்குத் தம்மைக் காண்பித்தல் போன்றவை வெறும் கதைகள் என்பதைவிட உண்மையான நிகழ்ச்சிகள் என்பதே ஏற்றுக்கொள்ள எளிதாயிருக்கின்றன (லூ. 24:13பி.; யோ. 20: 24பி.).

திருச்சபையின் மையம் உயிர்த்தெழுந்த கிறிஸ்து. அவர் திருச்சபையினுள் நீங்காது பிரசன்னமாயிருக்கிறார். அவரது அடியார் அவர் மாம்சத்திலிருந்ததைவிட இப்பொழுது அதிக உறவு அவரோடு அனுபவிக்கின்றனர். இது திருச்சபையின் அனுபவம் சார்ந்த விசுவாசமாகும். இந்த அனுபவம் உயிர்த்தெழுதல் பற்றிய ஒரு கட்டுக்கதையின்மேல் கட்டி எழுப்பப்

பட்டது எனக் கூறுவது பொருந்தாது. மக்கள் முதலில் ஒரு பொய்யைக் கூறிவிட்டு அதன்மேல் வைத்த தங்கள் விசுவாசத்திற்காக உயிர்கொடுக்க முன் வருவர் என்பது ஏற்றுக்கொள்ளக் கூடியதன்று.

இயேசு உயிர்த்தெழுந்தார் என்பது பலருக்கும் ஏற்றுக்கொள்ளக் கடினமாயிருக்கின்றது என்பது உண்மையே. அப். 17:32ல் அத்தேனருக்கு இது இகழ்ச்சியாயிருந்தது. இன்றும் விஞ்ஞான மனப்போக்குள்ளவர்கள் பலருக்கு இது ஏற்றுக்கொள்ளக் கடினமாயிருக்கின்றது. எனினும் புதிய ஏற்பாடு தரும் சான்றுகளைக் கவனமாகப் பரிசோதித்து, இயேசுவின் ஆள் தத்துவத்தை நேருக்கு நேர் சந்தித்து, திருச்சபையின் பிற்கால வரலாற்றையும் கவனிக்குங்கால் 'மரணத்தினல் அவர் கட்டிவைக்கப்படுவது அசாத்தியம்' என்று (அப். 2:24) கூற ஏவப்படுகின்ருேம்.

# புதிய இஸ்ரவேல்

முந்திய அதிகாரத்தில் நாம் விவரித்த நற்செய்தியின் வரலாற்றின் தொடர்ச்சி லூக்கா எழுதிய அப்போஸ்தலர் நடபடி நூலில் காணக்கிடக்கின்றது. இதனை எழுதிய லூக்கா, தரப்படும் நிகழ்ச்சிகள் பலவற்றில் நேரடியாகச் சம்பந்தப் பட்டவர். அவர் கவனமாகவும் நிரையாகவும் எழுதியுள்ளார். திருச்சபையின் வரலாற்றின் முதல் முப்பது ஆண்டுகளின் சரித்திரத்தை 28 சிறிய அதிகாரங்களில் இவர் தந்துள்ளார். யூத சமய பின்னணியில் ஒரு சிறிய இயக்கமாகத் தோன்றி கிறிஸ்தவம் இதர மக்களிடையே வேரூன்றி ரோமைப் பேரரசின் தலைநகரினுள் புகுந்து அன்றறியப்பட்ட உலகைக் கிறிஸ்துவுக்குச் சொந்தமாக்க எவ்வாறு முனைந்தது என்று இந்நூலில் அவர் கூறியுள்ளார்.

இவ்வரலாற்றினைப் பல முக்கிய ஆட்களை மையமாகக் கொண்டு அவர் எழுதியுள்ளார். புதைபொருள் ஆராய்ச்சியோடு சம்பந்தப்படுத்திப் படிக்குங்கால் லூக்காவின் வரலாறு மிகவும் உண்மையானது என்பது தெளிவாகின்றது. கிறிஸ்தவத்தின் முதல் தலைமுறையில் வெளி உலகில் நிலவிய வாழ்க்கை, சிந்தனை ஆகியவை இந்நூலில் சரியாகத் தரப்படுகின்றன.

### உயிர்த்தெழுதலுக்குப்பின்

உயிர்த்தெழுதலைத் தொடர்ந்த நாட்கள் இயேசுவின் அடியாரின் அறிவும், பற்றுறுதியும் வளர்ந்த காலமாகும். சந்தேகத்தோடும் நம்புவதற்கு கடினமாகவும் இருந்தவை ஆச்சரியமும் வெற்றியுமான உறுதியாகிவிட்டன. தங்களது குருவானவர் உயிரோடு தங்கள் நடுவில் இருக்கிறார் என்ற சிந்தை உறுதியானபோது தமது மரணத்தைப்பற்றியும் வருங் காலத்தைப்பற்றியும் அவர் கூறியிருந்த பல காரியங்கள்

தெளிவாயின. மனிதகுமாரனாகிய தாம் இறையாட்சியை வல்லமையோடு நிறுவும்படி பாடனுபவிக்கவேண்டும் என அவர் கூறியதின் கருத்தை அவர்கள் இப்போது அறிந்தனர்.

ஒரு புதிய வல்லமை தங்கள் மத்தியில் வந்திருப்பதை இப்போது அவர்கள் தங்களுக்குள் உணர்ந்தனர். அவர்கள் பயம் நீங்கி புதிய வல்லமையினால் ஒன்றுக்கும் அஞ்சாத தைரிய முள்ளவர்களானார்கள். சாத்தானின் வல்லமை அழிக்கப் படாவிடினும் மேற்கொள்ளப்பட்டுச் சிதைக்கப்பட்டாயிற்று. இயேசுவை மரணத்திலிருந்து உயிரோடெழுப்பிய வல்லமை யான செயலில் உலகம் சாத்தானின் கரத்திலல்ல, தமது கரத்தில் இருப்பதாகக் கடவுள் நிரூபித்துவிட்டார்.

## பரமேறுதல்

பரமேறுதல்பற்றிய அறிக்கைகள் வார்த்தைகளினால் விவரிக்க இயலாத ஓர் உண்மையைத் தெரிவிக்க முயற்சிக்கின்றன. உயிர்த்தெழுதலைத் தொடர்ந்த சில வாரங்களில் உயிர்த்தெழுந்த இயேசு தமது அடியார்களை உறுதிப்படுத்தும் பணியின் முதற்பாகம் நிறைவேறிற்று. இப்பகுதியில் உயிர்த் தெழுந்த கிறிஸ்து தாமே அவர்களுக்குக் காட்சி அளிக்க வேண்டியதாயிற்று. எனினும் இந்தத் தரிசனங்கள் சீக்கிரமாக நின்றுபோகப் புதிய முன்னேற்றம் ஏற்படுகின்றது. எனவே மேசியா இப்போது கடவுளோடுகூட இருக்கிறார் என்று அவர்கள் உறுதிகொண்டனர். அவர் பரமேறினார் என்று அவர்கள் கூறியதின் பொருள், மரணத்தின்மேல் வெற்றிகொண்ட கிறிஸ்து கடவுளோடு பரிபூரண உறவுகொண்டிருக்கிறார் என்றும்; காலம், இடம் என்ற வரையறைகளிலிருந்து அவர் விடுதலையடைந்து தங்களோடு கூடவே இருக்கின்றார் என்றும் பொருள்பட எழுதினர்.

பெந்தெகொஸ்தே நாள் வருமுன்னர் யூதாசின் இடம் நிரப்பப்படுகின்றது. மத்தியாவைப்பற்றி வேறே ஒன்றும் கூறப்படவில்லை. எனினும் 12 என்ற எண் பூர்த்தியாக்கப்பட வேண்டும் என்றும் இயேசுவின் ஊனுடல் திருப்பணிக் காலத்து அவரோடிருந்து அவரைப்பற்றிய நேரடியான அறிவிலிருந்து அவரைப்பற்றிப் பேசக்கூடிய ஒருவரே தேவையென்றும் உணர்ந்தனர். இவ்வாறு திருச்சபையின் ஆரம்பகாலத்தி

லேயே வரலாறு சார்ந்த சாட்சி தேவை என்று வற்புறுத்தப் படுவது மிகவும் முக்கியமானதாகும் (அப். 1:15பி.).

## பெந்தெகொஸ்தே நாள்

பஸ்கா பண்டிகைக்குப் பின்னர் ஐம்பதாவது நாள் பெந்தெ கொஸ்தே பண்டிகையாகும். இதில் அறுப்பின் முதற் பலனைக் கடவுளுக்குப் படைத்தனர். இது மோசேக்கு நியாயப்பிர மாணம் கொடுக்கப்பட்டதோடும் சம்பந்தப்பட்டதாகும். இப் போது இயேசுவின் மரணத்துக்குப்பின் 50வது நாளில் உலகிற் குத் திருச்சபை நற்செய்தி அளிக்கும் பணியின் ஆரம்பத்துக் குரிய அனுபவத்தின் நாளாய் இது அமைகிறது. ஒரு பொருளில் இதுவே திருச்சபையின் பிறந்த நாள் எனலாம். கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை ஏற்றுக்கொண்டவர்கள் அடைந்த நிச்சயம், மகிழ்ச்சி, புதுவாழ்வு, மறுரூபம் ஆகியவை இந்நிகழ்ச்சியில் சம்பந்தப்படுகின்றன.

இந்நாளில் ஏற்பட்ட அனுபவத்தை 'வேகமாக அடிக்கிற பலத்த காற்று,' 'வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கம்,' 'அக்கினி மயமான நாவுகள்போலப் பிரிந்திருக்கும் நாவுகள்' போன்றனவற்றுல் விவரிக்கின்றனர். இவை கடவுளின் பிரசன் னத்திற்குப் பழைய ஏற்பாட்டு அடையாளங்கள். இவற்றைத் துணைகொண்டு, தங்களுக்கு நேரிட்டவை தெய்வீகமான நிகழ்ச்சிகளென விளக்குகின்றனர். கடவுளின் ஆவி அவர்கள் மேல் வந்திறங்கினது என்றும் அவர்கள் கூறினர். உயிர்த் தெழுதலின் முடிவாக இது தரப்படுகின்றது. இயேசு வின் வல்லமை சிலுவையில் முடியவில்லை. பரமேறுதலால் அது பிறிதொரு உலகினுள் சென்றுவிடவில்லை. அது அவர்கள் மத்தியில் உயிருள்ளதாய் நிலவி அவர்களை உயர்த்தி மேலான அனுபவங்களுக்குள் வழிநடத்தியது. இப்பொழுது அவர்கள் உண்மையில் புது மனிதர்கள். கிறிஸ்து வாக்களித்த இறை யாட்சியின் வாழ்க்கை இதுவேயாம்.

அப். 2:1–13 வரை தரப்படும் பாகத்தில் இரண்டு அம்சங் கள் இருக்கின்றன. இந்த அனுபவத்தில் சம்பந்தப்பட்டவர் கள் இறைவாக்காளர் பலரைப்போல் பரவசமடைகின்றனர். இது ஓர் அக அனுபவத்தின் புற அடையாளமாகும். பார்ப்ப வர்களுக்கு மது அருந்தியவர்கள்போல் அவர்கள் காட்சியளித்

தனர். அவர்கள் அன்னிய பாஷைகள் பேசினுர்கள் என்பது இரண்டாம் அம்சமாகும். பரிசுத்த ஆவியானவரின் செயலினுல் ஒருவர் பேசியதை அந்த மொழி அறியாதவர்கள் அதனைக் கேட்டபோது புரிந்துகொள்ளுகின்றனர்.

ஆவியானவர் அருளப்பட்டபோது மக்களிடையில் நிலவிய தடுப்புச் சுவர்கள் மேற்கொள்ளப்பட்டன என்பதே பன்மொழி ஆற்றல் என்பதின் பொருளாகும். பழைய ஏற்பாட்டில் பாபேல் கோபுரம் கட்டிய மக்களின் பெருமையினுலும் கடவுளுக்குச் சமமாகும் ஆர்வத்தினுலும் குழப்பம் ஏற்பட்டு இசைவற்று மொழி வேற்றுமை உண்டாயிற்று. இப்போது பரிசுத்த ஆவியானவரின் வருகையினுல் பாபேல் மாற்றி அமைக்கப் படுகிறது. உடைந்துபோன இசைவை இப்போது உயிர்த்தெழுந்த கிறிஸ்து தமது ஆவியின்மூலம் செயலாற்றி மறுபடியும் புதுப்பிக்கின்றுர். இனம், நிறம், மொழி முதலிய வேற்றுமைகள் அகற்றப்படுகின்றன. ஆகவே பெந்தெகொஸ்தே நாள், புதிய இஸ்ரவேலின் பிறந்த நாள் எனலாம்.

## புது இஸ்ரவேல்

ஆவியானவரின் பிரசன்னத்துக்கு பரவச நிகழ்ச்சிகள் எடுத்துக்காட்டுகள் என முதலில் கருதப்பட்டது. ஏனெனில் வாழ்க்கையின் ஒரு புதிய தன்மையான ஓர் அகநிலைமை ஏற்பட்டுவிட்டது. கிரமமாக ஒரு விடுதலை உணர்ச்சி முக்கிய இடம்பெற்றது. புதிய இஸ்ரவேலின் அங்கத்தினர் தாங்கள் சுயாதீனர் என உணர்ந்தனர். பாவத்திலிருந்தும் உலகம், வருங்காலம், தீமையின் சக்தி, மரணத்தின் ஆதிக்கம் ஆகியவற்றிலிருந்தும் தாங்கள் விடுவிக்கப்பட்டதை அவர்கள் உணர்ந்தனர். அதோடு நியாயப்பிரமாணத்திலிருந்தும் விடுதலை அடைந்ததாக உணர்ந்தனர்.

இந்த விடுதலை உணர்ச்சியிலிருந்து அளவற்ற மகிழ்ச்சியும் வைராக்கியமும் எழுந்தன. புது இஸ்ரவேலில் அங்கமாயிருந்தவர்கள் பிறரையும் அதனுள் கொண்டுவந்தனர். பவுலடியார் ஆவியின் கனி, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயாளம், நற்குணம், உண்மை, சாந்தம், இச்சையடக்கம் எனக் கூறும்போது ஆரம்பகாலக் கிறிஸ்தவர்களில் செயலளவில் தாம் கண்டதையே கூறுகின்றுர்.

பெந்தெகொஸ்தே நாளின் அனுபவத்தின் முக்கிய விளைவு, நற்செய்தியை எருசலேமின் தெருக்களிலும் பிற இடங்களிலும் கூறி அறிவிப்பதாகும். ஒரு புதிய செய்தியும் புதிய ஆற்றலும் இருக்கின்றபடியால் அவற்றைப் பிறரோடு பகிர்ந்துகொள்ளுகின்றனர். இவ்விதம் நற்செய்தி பரப்பும் முயற்சியில் நற்செய்தியினை ஆழமாகப் புரிந்துகொள்ளும் வாய்ப்பையும் பெறுகின்றனர்.

இவ்வித நற்செய்தி அறிவிப்பினால் சேர்க்கப்பட்டவர்கள் நசரேய சமயத்தார் என்றும், 'அந்த மார்க்கத்தைப் பின்பற்றுகிறவர்கள்' என்றும் அழைக்கப்பட்டனர். இவர்களில் யூதர்கள் தேவாலயத்தையும், நியாயப்பிரமாணத்தையும் முற்றிலும் விட்டுவிடவில்லை. ஒரு வீட்டின் மேலறையில் அவர்கள் கூடி ஜெபித்தனர். மேசியா வந்துவிட்டதாக விசுவாசித்தனர். பெரும்பாலாரான யூதர்கள் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை. எனினும் ஒரு சிறு கூட்டத்தினர் இந்த நம்பிக்கைகள் உண்மையென உறுதிகொண்டனர்.

### சித்தாந்தங்களின் ஆரம்பம்

அப். 2,3 அதிகாரங்களில் ஆரம்பகால நற்செய்தி அறிவிப்பின் சுருக்கம், தன்மை ஆகியவற்றைக் காண்கின்றோம். இவற்றில் பழைய ஏற்பாடு சிறப்பான முறையில் உபயோகிக்கப்படுகின்றது. இறைவாக்காளர்கள் கூறிய கர்த்தருடைய நாள் வந்துவிட்டது. யோவேல் கூறியதின்படி கடவுளின் ஆவி ஊற்றப்பட்டுவிட்டது. ஏனெனில் மேசியா வந்துவிட்டார். அவர் நாசரேத்தூர் இயேசுவேயாம். அவரை அவரது மக்கள் கொடூரமாகக் கொலைசெய்துவிட்டனர்.

எனினும் இது கடவுளின் திட்டத்தில் உட்பட்டதே. ஏனெனில் மேசியா துன்பப்படுவார் எனப் பழைய ஏற்பாடு கூறியுள்ளது. அதோடு கடவுள் தமது மேசியாவை உயிரோடெழுப்பி தமக்கு சமமாக்குவார் என்றும் கூறப்பட்டது. இது இப்போது நிறைவேறிற்று. இயேசு, மேசியாவும் ஆண்டவருமாயிருக்கிறார். தங்கள் பாவங்களை அறிக்கை செய்து திருமுழுக்கின் மூலமாய் அவரது அரசின்கீழ் வந்தவர்கள் பாவமன்னிப்பும் பரிசுத்த ஆவியின் ஈவும் பெற்றனர். இக்காலத்தில் ஒழுங்கான சித்தாந்த அமைப்பு ஏற்படாவிடினும்

அதன் ஆரம்பங்களை நாம் காண்கின்றோம். சிந்தனையைவிட அனுபவமே ஓங்கி நின்றது. இவ்வித நற்செய்தி அறிவிப்பைக் கேட்டு இதனை ஏற்றுக்கொண்டவர்கள் இப்புதிய கூட்டுறவில் ஏற்றுக்கொள்ளப்பட்டனர். எனினும் யூதரானவர்கள் பூரண மாகத் தேவாலயத்திலிருந்து பிரியவில்லை. அவர்கள் வீடுகளில் கூடி அப்பம் பிட்டு, பொதுவாழ்வின் அடையாளமாய்த் தங்கள் உடைமைகளைப் பிறரோடு பகிர்ந்துகொண்டனர்.

இந்தப் புதிய சமூகம் மக்கள் பலரைக் கவரத் தொடங்கி யது. அற்புதங்கள் தொடர்ந்து நிகழ்ந்தன. அவர்களது தைரியமும் மகிழ்ச்சியான சமய வாழ்க்கையும் பிறரது கவனத்தை இழுத்தன. மேசியா கொள்கைகளை எதிர்த்து அரசுக்கு ஆதரவாயிருந்த சதுசேயர் முதலில் இவர்களை எதிர்க் கத் தொடங்கினர். கமாலியேலின் ஆலோசனையின்படி பரிசேயர், இந்த இயக்கம் மனிதரால் ஏற்பட்டதேயாயின் தானாக அழியட்டும்; இறைவனின் கரம் அதிலிருந்தால் அதனைத் தடுக்க இயலாது என்றனர்.

### திருச்சபை

திருச்சபை வரலாற்றின் முதல் கட்டம் இவ்வாறு முடிவடை கின்றது. நசரேய மார்க்கத்தார் பழைய ஏற்பாட்டுப் பொருளி லேயே தங்களைத் திருச்சபை என்றனர். அதாவது இஸ்ரவேல் தெரிந்தழைக்கப்பட்ட மக்களாய் இருந்ததுபோல் தாங்களும் கடவுளால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் என்றனர். திருச் சபை என்ற பெயரைத் தங்களுக்கு எடுத்துக்கொண்டபோது பழைய இஸ்ரவேலோடுள்ள தங்கள் உறவை அவர்கள் உறுதிப் படுத்தினர். எனினும் இரண்டும் ஒன்றன்று என்பதும் தெளிவாயிற்று.

# அனைத்துலகத் திருச்சபை

திருச்சபை படிப்படியாக யூதேயத்திலிருந்து பிரிந்து வெளி வந்தது. யூதர்கள் பலஸ்தீனுவிலும், ரோமைப் பேரரசின் பட்டணங்களிலும் பரவி வாழ்ந்து வந்தனர். அங்கெல்லாம் ஜெபாலயம் அமைத்து வழிபாடு நடத்தினர். யூதரது ஓரிறை வழிபாடு, தூய வாழ்க்கை, சிதைவற்ற குடும்பம் போன்றவை யூதரல்லாதாரை வசீகரித்தன. கிறிஸ்தவ சமயம் நாடெங்கும் பரவத்தொடங்கியபோது புதிய கிறிஸ்தவ சமூகத்தில் இரு சாரார் இடம்பெற்றனர். அப்போஸ்தலர் பரம்பரையில் வந்த யூதக் கிறிஸ்தவர்கள் இவர்களில் ஒரு சாரார் ஆவர். இவர்கள் திருச்சபை புதிய இஸ்ரவேலாக இருப்பினும் நியாயப் பிரமாணத்தையும் தேவாலயத்தையும் விட்டு வெளியேற விரும்பவில்லை; நற்செய்தியானது, உடன்படிக்கையின் உரிமை யாளரான யூதருக்கே உரியதென்றனர்.

மறு சாரார் வெளிநாடுகளிலிருந்து வந்து எருசலேமில் வாழும் யூதர்கள். இவர்கள் கிரேக்க மொழி பேசிய யூதக் கிறிஸ்தவர்கள். உதவிக்காரராக இவர்களில் ஏழுபேர் தெரிந்துகொள்ளப்பட்டனர். இவர்களுக்கு ஸ்தேவான் தலைவ ராக இருந்தார். இவர் யூத ரபிமாரோடு வாக்குவாதம் செய்து தெய்வதூஷண குற்றத்திற்காக சனகதரீம் சங்கத்தின் முன்னர் நியாயம் விசாரிக்கப்பட்டார்.

### ஸ்தேவான்

ஸ்தேவானின் பணி நேரடியாக யூத சமயத் தலைவர்களை அசைத்தது. அப். 7ம் அதிகாரத்தில் தரப்படும் அவரது உரை அறிவு சார்ந்த முறையில் யூத விசுவாசத்தின் பல பாகங்களை இவர் எதிர்த்தார். பழைய இஸ்ரவேலர் தங்கள் கடமையில் தவறவே கடவுள் தமக்காக ஒரு புதிய மக்கள் கூட்டத்தைத் தெரிந்துகொண்டார் எனப் பேசினர்.

ஸ்தேவான் கல்லெறியப்பட்டு உயிர்நீத்தார். முதல் கிறிஸ்தவ இரத்தசாட்சியாகிய இவர் தம் ஆண்டவரைப்போல் சத்துருக்களின் பாவத்தை மன்னிக்க வேண்டினார். இதனைக்கேட்ட சத்துருக்களில் ஒருவர், தர்சு பட்டணத்து சவுல் என்னும் வாலிபன். 'ஸ்தேவான் ஜெபிக்காவிடில் திருச்சபைக்குப் பவுல் கிடைத்திரார்' என புனித அகுஸ்தீன் கூறினார்.

### துன்புறுத்தல்

இதுவரையிலும் நிலவிய அமைதி நீங்கியதும் கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்பட்டனர். கிறிஸ்தவரில் தீவிரவாதிகள் அல்லாதவர்களும் யூத சமய அமைப்பை ஓரளவு மதித்தவர்களுமானவர்கள் துன்புறுத்தப்படவில்லை. ஆனால், தீவிரவாதிகளாக ஸ்தேவானுக்கு ஆதரவாயிருந்தவர்களை சனகதரீம் வன்மையாக எதிர்த்தது. இந்தத் துன்புறுத்தலில் தர்சு பட்டணத்துச் சவுல் என்பவன் தீவிரமாக ஈடுபட்டான். ஸ்தேவானின் ஆதரவாளர்களை எருசலேமிலிருந்து துரத்தி பலஸ்தீனா எங்கும் சிதறடித்தனர். இது திருச்சபைக்கு ஆசீர்வாதமாயிற்று. ஏனெனில், துன்புறுத்தப்பட்டவர்கள் தாங்கள் சென்றவிடமெல்லாம் மக்களைக் கிறிஸ்தவர்களாக்கினார்கள்.

### கிறிஸ்தவம் வளருதல்

இவ்வாறு கிறிஸ்தவம் வியாபிக்கத் தொடங்கியது. நற்செய்தி திருச்சபையை உலகினுள் உந்தித்தள்ளும் ஆற்றலுடையது. எனினும், தலைவர்களில் ஒரு சாரார் மிகவும் கவனமாகப் படிப்படியாக முன்னேறினர். ஆனால், பிலிப்பு போன்றவர்கள் ஒரு காலத்தில் வெறுக்கப்பட்ட சமாரியர் மத்தியில் ஊழியம்செய்தனர். பிலிப்புவின் ஊழியத்தில், யூதரல்லாதவர்கள் ஞானஸ்நானம் பெறுவது முன்னேற்றத்தின் ஒரு படி உயர்வாகும் (அப். 8:26பி.).

பேதுருவும்கூட, இதர மக்கள் புதிய சமூகத்தில் இடம் பெறுவது இறைவனின் திருச்சித்தம் என உறுதியுடன் நம்பினார். அப். 10ம் அதிகாரத்தில் தரப்படும் நிகழ்ச்சி, அதாவது ரோமை நூற்றுக்கதிபதி கொர்நேலியுவைத் திருமுழுக்காட்டியது பேதுருவின் நம்பிக்கையை திடமாக உறுதிப்படுத்துகின்றது. நற்செய்தி, சீப்புரு தீவில் முக்கியமாக

யூதர் நடுவிலும் சிரியாவில் அந்தியோகியாவிலே முதல் தடவை இதர மக்கள் நடுவிலும் பரவுகின்றது. எதிர்பார்த்ததற்கு வேறாக யூதரல்லாதார் அநேகர் இப் புதிய சமயத்தைத் தழுவினர். யூதரல்லாதாரின் முதல் சபை அந்தியோகியாவில் நிறுவப்பட்டது. நசரேய மார்க்கத்தாருக்குக் கிறிஸ்தவர்கள் என்ற பெயர் இங்கேயே முதல் தடவையாக வழங்கப் பட்டது.

இந்த வேளையில் எருசலேம் சபை நெருக்கப்பட, தலைமைத்துவம் அப்போஸ்தலரிடமிருந்து இயேசுவின் சகோதரனான யாக்கோபுக்கும் தொடர்ந்து அந்தியோகியா சபைக்கும் மாறுகின்றது. இப்பொழுது திருச்சபை வரலாற்றில் தர்சு பட்டணத்துப் பவுல் மையமாகின்றார். பவுல் என்பார் இளமையிலேயே யூதத் திருமறையைக் கற்றுப் புலமைபெற்ற ஒருவராவர். எருசலேமில் மறை அறிஞர் கமாலியேல் என்பவ ரிடம் கற்று ரபி ஆனார். ஸ்தேவான் கல்லெறியப்படும் நிகழ்ச்சியில் இந்த வாலிபனும் உடைகளைக் காவல் செய்வதில் பங்குபெறுகின்றார். இயேசுவின் மார்க்கம் யூத சமயத்துக்குச் சவாலாயிருப்பதை இவர் உணர்ந்தார். யூதருக்கு இன்றி யமையாததான நியாயப்பிரமாணத்தை அது அழிக்க நிற்பது போல் காணப்பட்டது.

எனவே, வாக்குவாதத்தாலும் பலாத்காரத்தாலும் இப்புதிய இயக்கத்தினை அடக்கும்படி இவர் முனைகின்றார். ஸ்தேவானின் மரணத்தைத் தொடர்ந்து திருச்சபைக்கு ஏற்பட்ட மிகக் கொடிய துன்புறுத்தலில் இவர் பங்குகொண்டார். இயேசுவின் மார்க்கத்தைப் பின்பற்றினோரைச் சிறையிலிடவும், கொலை செய்யவும் இவர் துணைநின்றார். இத்தகைய செயலில் முன் நின்ற பவுல், தமஸ்குவிலுள்ள இயேசுவின் மார்க்கத்தாரை துன்புறுத்தச் செல்லும் வழியிலே அற்புத நிகழ்ச்சி நேரிட்டது.

இந்த நிகழ்ச்சி எத்தகையது என்பதைப் பவுல்தான் கூற வேண்டும். அவர் கிறிஸ்தவர்களைப் பிடித்தடக்குவதற்குப் பதிலாக அவர் கிறிஸ்துவால் பிடிக்கப்படுகின்றார் (பிலி. 3:12). உயிர்த்தெழுந்த கிறிஸ்து அப்போஸ்தலருக்கு எப்படிக் காணப் பட்டாரோ அதுபோலவே தமக்குக் காட்சி அளித்ததாக அவர் கூறுகின்றார் (1 கொ. 15:8; அப். 9:22,26). இப்பொழுது இயேசுவை கடவுளின் மேசியா என அவர் காண்கின்றார்.

அதுமுதல் அவர் கிறிஸ்துவுக்குள்ளான மனிதனாகித் தம்மை முழுவதும் அவரது பணியில் ஒப்படைக்கின்றார்.

இந்த மனமாற்ற அனுபவம் ஒரு நீண்டநாளான போராட்டத்தின் முடிவு எனலாம். ஸ்தேவான் போன்றவர்களுடைய வாழ்க்கை, நியாயப்பிரமாணத்தை நிறைவேற்ற முயற்சிப்பதில் தோல்வி ஆகியவை பவுலின் மனதில் போராட்டத்தை உருவாக்கின. இந்த அகநிலைக்கு மூடுதிரையாக நசரேய மார்க்கத்தாரைத் துன்புறுத்துவதில் தீவிரமாக ஈடுபட்டார். இந்த நிலையில் தமஸ்குவுக்குச் செல்லும் வழியில் கிறிஸ்து அவரைச் சந்தித்துத் திசை திருப்பினார்.

பல ஆண்டுகள் ஆயத்தத்தின் பின்னர் அந்தியோகியாவிலிருந்து அனுப்பப்பட்டு நற்செய்தி பரப்பும் தொண்டில் முனைப்பாகப் பவுல் ஈடுபட்டார். மத்தியதரைக் கடலை ஒட்டிய நாடெங்கும் பல சபைகளை அவர் நிறுவினார். அவற்றோடு கடிதத் தொடர்புகொண்டு பிரச்சினைகளில் உதவிசெய்து குறைகளைக் கண்டித்து கிறிஸ்துவுக்குள் நிலைத்திருக்கும்படி உற்சாகப்படுத்தினார்.

பவுலின் நற்செய்தி பரப்பும் பணிக்கு யூதராலும் அரசின் ஸ்தல அதிகாரிகளாலும் பல தெய்வ வணக்கத்தாராலும் கடினமான எதிர்ப்பு ஏற்பட்டது. எனினும், பவுலும் அவர் நண்பர்களும் அயராது உழைத்து சபைகளை ஸ்தாபித்தனர். எருசலேம் சபை யூதரல்லாதவர்களை ஏற்றுக்கொள்ளத் தயங்கினபோது அதனையும் ஞானமாக அவர் மேற்கொண்டார்.

இம்முயற்சிகளின் விளைவாக யூதர்களும், சமாரியரும், இதர மக்களும், அடிமைகளும் இணைந்த புது சமூகமொன்று தோன்றிற்று. இச்சமூகம் இயேசுவை மையமாகக்கொண்டு புதிய வாழ்க்கை முறையில் ஈடுபட்டது. வருங்காலத்தைக் குறித்த ஒரு புது நம்பிக்கையும் இவர்களுக்கிருந்தது. கிறிஸ்தவம் சாதாரண மக்களுக்கு பயத்திலிருந்தும், மரணத்திலிருந்தும் விடுதலையளித்தது. சிந்தனையாளருக்குச் சிறந்த தத்துவம் கற்பித்த வாழ்க்கையின் உயரிய இலட்சியம் கிறிஸ்தவத்தில் கிடைத்தது. ஏற்கெனவே யூத சமயத்தால் இழுப்புண்ட இதர மக்களுக்கு, யூத சமயத்தின் சிறந்த அம்சங்கள் கிறிஸ்தவத்தில் காணக்கிடந்தன.

இவ்வாறு அனைத்துலக (Universalism) நிலையோடு கிறிஸ்தவ சமயம் பல தெய்வ வணக்கம் நிறைந்த உலகினுள் புகுந்தது. ரோமைப் பேரரசு எங்கும் அமைதியைப் பாதுகாத்து பெரு வழிகளை அமைத்திருந்தபடியால் நற்செய்திப் பரப்பாளருக்கு அவை துணைநின்றன. பெரும்பாலும் கிரேக்க மொழி எல்லா இடங்களிலும் பேசப்பட்டது பெருந்துணையாயிற்று. திருச் சபையின் வளர்ச்சியின் வரலாற்றில் பவுலின் காலம் வரை மாத்திரம் திருமறை கூறுகின்றது. திருச்சபையின் அஸ்தி வாரம் பவுலின் பணியில் உறுதியாக இடப்பட்டதோடு அதன் செய்தி உலகனைத்துக்குமுரியது என்பது தெளிவாயிற்று. அப்போஸ்தலர் நடபடிகள் முடிவடையும்போது பவுல் ரோமைப் பேரரசின் தலைநகரமாகிய ரோமாபுரியிலிருந் தார். அங்கிருந்து நற்செய்தி உலகெங்கும் பரவிற்று.

திருச்சபையின் வரலாறு தொடர்ந்து முன்னேறும் வரலாறு. திருச்சபையின் மூலமாக இறையாட்சி மக்கள் வாழ்க்கைகளில் பரவி வளர்ந்துவருகின்றது. ஏனினும், இதன் முழுமை வருங்காலத்திற்கும், மறுமைக்குமுரியது. இறைவன் தாமே தமக்குச் சித்தமான வேளையில் இதனைப் பூரணமாக நிறுவுவார் என்பது திருமறையின் போதனை.

பாகம் 4

# புத்தறிவு

# திருமறையும் தூய ஆவியரால் ஏவப்படுதலும்

திருமறை தூய ஆவியரால் ஏவப்பட்டு எழுதப்பட்ட நூல் என்பதனைக் கிறிஸ்தவர்கள் எல்லாரும் ஒப்புக்கொள்வர். இதனாலேயே திருமறை இதர நூல்களைவிட மிகவும் வித்தியாச மானதென்று நாம் கூறுகின்றோம். ஆயினும் தூய ஆவியரின் ஏவுதல் என்றால் என்ன என்பதுபற்றிக் கருத்து வேற்றுமை நிலவுகின்றது.

### எழுத்தின்படி ஏவுதல் (Verbal Inspiration)

சிலர் திருமறையின் ஒவ்வொரு வார்த்தையும் தூய ஆவிய ரால் ஏவப்பட்டு எழுதப்பட்டது என்று கூறுவர். ஒவ்வொரு வார்த்தையிலும் நாம் புரிந்துகொண்டாலும் இல்லாவிட்டா லும் தெய்வீக வெளிப்பாடு இருக்கின்றது என்பது இக்கூற்று. இதன்படி திருமறையில் தூய ஆவியரின் ஏவுதல் ஆரம்பம் முதல் இறுதிவரை ஒன்றுபோல் இருக்கின்றது என்பது பொருள். 'இத்தகையோரின் கூற்றுப்படி, கடவுள் மனிதனின் சிந்தனைசக்தியில் தலையிட்டு அது செயலாற்றாதபடி தடுத்து, தமது கருத்துக்களும் சொற்களும் மட்டுமே வெளிப்படச் செய் கின்றார். இதற்கேற்ப ஆவியினால் ஏவப்பட்ட மனிதர் ஓர் இயந்திரம்போலாவார். எவ்வாறு தட்டெழுத்துப்பொறி, தட்டுவோர் கையில் அமைகின்றதோ அப்படியே தேவ ஆவி யால் தூண்டப்பெற்றவரும் அமைகின்றார்' (ஆ.தே. மனுவேல், 'இறையியல் அணிந்துரை', பக். 86). இதன்படி ஆதியாகமத்தின் வம்ச வரலாறுகளும் லேவியராகமம், எண்ணாகமத்தின் சட்டங் களும் பெயர்களும், மலைப் பிரசங்கமும் சம அளவு ஏவுதலால் எழுதப்பட்டவை. இவைகளில் எந்தவித தவறுகளும் இல்லை. வாக்கியங்களின் அமைப்பும், நிறுத்தக்குறியீடுகளும் (punctuations) கூட ஏவுதலில் பங்கு பெறுகின்றன என்பது

இக்கூற்றின் ஒரு பாகமாகும். மூல ஏடுகள் மாத்திரம் தூய ஆவியரால் ஏவப்பட்டு எழுதப்பட்டனவா அல்லது மொழி பெயர்ப்புகளும் அவ்வாறு ஏவப்பட்டு எழுதப்பட்டனவா? அப்படியானல் மொழிபெயர்ப்புக்களில் எது சரியானது என்ற கேள்விகளெல்லாம் இதிலிருந்து எழுகின்றன.

மேலும், திருமறையின் எல்லா வார்த்தைகளும் தூய ஆவியரின் ஏவுதலால் எழுதப்பட்டவை என்று கூறுகின்றவர்களுங் கூட செயலளவில் இந்தக் கொள்கையைக் கடைபிடிப்பதில்லே. சங்கீத புத்தகத்துக்கு அளிக்கும் முக்கியத்துவம் அல்லது புதிய ஏற்பாட்டு நூல்களுக்கு அளிக்கும் சிறப்பு, லேவியராகமம், எண்ணுகமம், உன்னதப்பாட்டு போன்றவைகளுக்கு செயலளவில் அளிக்கப்படவில்லே. சில முரண்பாடுகளே ஒப்புரவு செய்யத் தேவைப்படும்போது எழுத்தின்படி பொருள் கொள்ளுவதை விட்டுவிட்டுத் தொடர் உருவகமான (allegorical) பொருள் தருகின்றனர். உன்னதப்பாட்டு ஆகமத்தை இறைவனுக்கும் ஆத்துமாவுக்குமுள்ள உறவின் நூல் என்று தொடர் உருவக முறையில் பொருள் தருகின்றனரேயன்றி அதனே இவர்கள் எழுத்தின்படி விளக்குவதில்லே. எனவே, திருமறை தூய ஆவியரால் ஏவப்பட்டு எழுதப்பட்டது என்னும் பொதுவான கூற்றைக் கிறிஸ்தவர்கள் எல்லாரும் ஏற்றுக் கொண்டபோதிலும், திருமறை எழுத்துக்களெல்லாம் எழுதியவர்கள், தூய ஆவியர் கரத்தில் வெறும் எழுதுகோலாயிருந்து எழுதினர் என்ற கருத்தை ஏற்றுக்கொள்ளுவதில் பிரச்சினேகள் பல இருக்கின்றன என்பது தெளிவு. எனினும், 'எழுத்தின்படி ஏவுதல்' என்ற நம்பிக்கையுள்ளவர்களில் பலர் ஆர்வமுள்ள விசுவாசிகள் என்பதனே நாம் மறுப்பதில்லே.

இக்கூற்றிற்கு ஆதாரமாகத் தரப்படும் திருமறை வாக்கியம் 2 தீமோ. 3:16 ஆகும். 'வேத வாக்கியம் ஒவ்வொன்றும் தேவ ஏவுதலினுல் அருளப்பட்டிருக்கின்றது.' இந்த வாக்கியத்தில் தேவ ஏவுதல் என்ருல் என்ன என்ருே அல்லது அது எப்படி வருகின்றது என்ருே அல்லது அதை எப்படிப் பெற்றுக் கொள்ளுகின்ருர்கள் என்ருே விளக்கம் தரப்படவில்லே. மேலும், இந்த வாக்கியத்தை ஆக்கியோர் எழுதும்போது புதிய ஏற்பாடு உருப்பெறவில்லே. ஆகவே பலவித குறைகளுள்ள, புதிய ஏற்பாட்டிற்கு ஆயத்தமான பழைய ஏற்பாட்

டையே இது குறிப்பிடுகின்றது. எழுத்தின்படியும் கால அமைப்பின்படியும் இந்த வாக்கியத்திற்குப் பொருள் கூறினுல் இது புதிய ஏற்பாட்டைக் குறிப்பிடாது. எனவே, இந்த வாக்கியத்தின் அடிப்படையில் தூய ஆவியரின் ஏவுதல்பற்றிய மேற்கூறிய கொள்கையை உருவாக்குவது பொருத்தமாகா தன்றே!

### வார்த்தைகளல்ல, எழுதிய மக்களே ஏவப்பட்டனர்

பிறிதொரு சாரார் கூறுவது என்னவெனில், திருமறையின் வார்த்தைகளல்ல, அவற்றினை எழுதியவர்கள் தூய ஆவியரால் ஏவப்பட்டனர். இறைவன் அவர்களோடு ஆள்சார்ந்த முறையில் செயலாற்றினுர் (personal action). அவர்களை இயந்திரம் போல் அவர் இயக்கவில்லை. தமது அடியாரது மனத்திலே அவர் சத்தியங்களை அருளுகின்றுர். ஆனுல் அவர்கள் அவற்றினைத் தாங்களாகவே சிந்தித்துத் தங்களுக்குச் சொந்தமாக்கிக்கொள்ளுகின்றனர். எனவே, எழுதப்படும் வார்த்தைகளையல்ல, எழுதப்படும் அனுபவத்தையே ஆக்கியோர்கள் இறைவனிடமிருந்து பெற்றுக்கொள்ளுகின்றனர். கடவுளையும் அவர் சித்தத்தையும்பற்றிக் கூடுதலாக அறிவடைவதற்கு அவர்கள் ஏவப்படுகின்றனர். ஆனுல் இந்த அறிவை ஏட்டுவடிவத்தில் அமைத்துத் தர அவர்கள் தங்களது வார்த்தைகளை உபயோகிக்கின்றனர். பெற்றுக்கொண்ட புதிய அனுபவத்தை அவரவர் காலத்துக் கருத்தோவியங்கள் (thought-forms) மூலமாகவும் இலக்கிய முறைப்படியும் எழுதுகின்றனர். திருமறையின் மக்கள் ஒப்பற்ற முறையில் அடைந்த இறை அனுபவமே (experience of God) இறைவெளிப்பாட்டின் அடிப்படையான உண்மை (basic reality in revelation). இதனை மனுக்குலத்தின் பின்வரும் சந்ததிகளுக்கு எடுத்தளிக்கும் ஆற்றலில் அவர்களில் விளங்கிய தூய ஆவியரின் ஏவுதல் அமைந்திருக்கின்றது. ஆகவே, திருமறையில் காணக்கிடக்கும் சில தவறுகள், அமங்கலங்கள் ஆகியவைகள் இறைவன் செய்த தவறுகளல்ல. அவைகள் அவர் தம்மைப் 'பங்கு பங்காகவும், வகை வகையாகவும்' வெளிப்படுத்தும் இயக்கத்தில் அந்தந்தக் காலத்தில் வாழ்ந்த மக்களின் வரையறைகளேயாம் (limitations).

எனவே, திருமறையின் ஒவ்வொரு வார்த்தையுமல்ல, வார்த்தைகளை எழுதியவர்களே ஏவப்பட்டனர் என்பது இக்கூற்று. இதன் அடிப்படையில் தூய ஆவியரால் தூண்டப்பட்டு பலவடியார் எழுதிய நூல் பிறருக்கு எவ்வாறு அதிகாரம் வாய்ந்ததாயிருக்கின்றது என்று கேட்டால், 'தெய்வத்தால் தூண்டப்பெற்றவர் வரைந்துள்ள நூலை வாசிக்கும் போது நாமும் தூண்டுதல் பெறுவோம் என்பர். அவரது முன்மாதிரியைப் பின்பற்றத் தூண்டப்படுவோம். அவர் நுகர்ந்த ஆன்ம அனுபவங்களின் கவர்ச்சியால் ஈர்க்கப்படுவோம். நாமும் அத்தகைய அனுபவங்களைப் பெறுவோம் என்பர்' என ஆ. தே. மனுவேல் கூறுகின்றார்.

இக்கூற்றில் பல பிரச்சினைகள் எழுகின்றன. இதன்படி, வாசிக்கின்றவர்களைத் தூண்டும் ஒரு நூல் என்பதனால் திருமறை தூய ஆவியரால் ஏவப்பட்டு எழுதப்பட்ட நூல் என அறிகிறோம். வாசிக்கும்போது நம்மை உணர்ச்சிவசப்படுத்திச் செயலாற்றுவதற்குத் தூண்டும் வேறு அநேக நூல்களும் இருக்கின்றன. எனவே, திருமறை அவ்வித நூல்களுக்குச் சமமானதாகிவிடுகிறது. மேலும் திருமறையின் நூல்களை எழுதியவர்களின் அனுபவத்தையே ஆதாரமாகக்கொண்டால், அவர்கள் உண்மையில் ஏவப்பட்டு எழுதினார்கள் என்பதற்கு என்ன ஆதாரம் இருக்கின்றது? அவர்களது அனுபவம் தவறாக இருக்கலாம் என்றும் விவாதிக்கலாமே. அதுமாத்திரமல்ல, தூய ஆவியரால் தூண்டப்பட்டு இக்காலத்தும் மக்கள் நூல்கள் எழுதுகின்றனர். ஜான் பனியன் எழுதிய 'மோட்சப் பிரயாணம்', சாது சுந்தர்சிங் எழுதிய 'ஆத்மீக வாழ்க்கைத் தியானங்கள்' போன்றவை திருமறையோடு சம அளவு ஏவுதலின் அதிகாரமுள்ளவையாகுமோ என்றும் கேட்கப்படுகின்றது. ஆகவே, எழுதியவர்களின் அனுபவத்தை முக்கியப்படுத்தும் போது திருமறையின் ஒப்பற்ற நிலைக்கு இழுக்கு ஏற்பட்டு, வேறு பல சிறந்த நூல்களில் இதுவும் ஒன்றெனும் நிலை ஏற்பட்டுவிடுகிறது.

## நடுநிலைக் கருத்து

எனவே, பண்டிதர் ஆலன் ரிச்சர்ட்சன் என்பவர் கூறுவதாவது: திருமறை உலகிற்குக் கடவுளின் செய்தி என்பதில்

அதன் ஒப்புயர்வற்ற நிலே இருக்கின்றது. கடவுளேப்பற்றியோ கடவுளேப்பற்றிய மனித அனுபவத்தைப்பற்றியோ கூறுவதி லல்ல, கடவுள் தாமே இந்நூலில் மனிதரோடு பேசுகின்ருரா என்பதே முக்கியம். எனவே, இப்பொருளில் திருமறையின் சிறப்பு அதன் உயரிய இறையியலிலோ அறநெறியிலோ அல்ல, அது இறைவனிடமிருந்து உலகுக்கு வரும் ஒரு செய்தியினேக் கூறுவதிலிருக்கின்றது. இந்த முறையில் திருமறை உலகின் மற்றெல்லா இலக்கியங்களேவிடவும் வித்தியாசமானது. வேறு அநேக நூல்களில் சிறந்த அறிவு, உயரிய அறநெறி போன் றவை இருக்கின்றன என்பதை நாம் மறுக்க இயலாது. ஆனுல் திருமறை மாத்திரமே இறைவன் செய்தவற்றையும் கூறியன வற்றையும் அறிவிப்பதில் தனது சிறப்பு இருக்கின்றது என விளம்புகின்றது. கடந்த காலத்தில் திருமறையின் நூல்களே எழுதினவர்களோடு மாத்திரமன்று, நிகழ்காலத்தில் அதனேப் படிக்கின்றவர்களோடும் இறைவன் பேசுகின்ருர். அவ்வாறு அவர் பேசும்போது அவர்களில் விசுவாசமும் கீழ்ப்படிதலும் பிறந்துவிடுகின்றன. இந்த முறையில் வேறெந்த நூலும் உயிருள்ளதாகத் தன்னேப்பற்றிக் கூறுவதில்லே. வேறு நூல்கள் மூலமாகவும் இறைவன் மனிதரோடு பேசக்கூடும். ஆனுல், திருமறையின் மூலமாக ஈராயிரம் ஆண்டுகளாக அவர் மனித ரோடு பேசிவருவதுபோல் வேறெந்த நூல் மூலமாகவும் பேசவில்லே எனலாம்; இன்றும் அதன்மூலம் அவர் பேசு கின்ருர்.

எனவே, திருமறை தூய ஆவியரால் ஏவப்பட்டு எழுதப் பட்டது எனக் கூறும்போது அறிவு, ஆவிக்குரிய போதனே, அறநெறி என்னும் துறைகளில் இதர நூல்களேவிட அது சிறப் புள்ளது என்பதன்று; ஆனுல் அது வாசிக்கின்றவர்களுக்கு ஒரு செய்தியினே அளிக்கின்றது என்பது பொருள். இந்த ஆற்ற லில் விளங்குவது தூய ஆவியரின் ஏவுதலாகும். ஆள்சார்ந்த முறையில் அது எனக்கு ஒரு செய்தியாயிருக்கின்றது என்பதில் அதன் ஏவுதலும் அதிகாரமும் இருக்கின்றன. மக்கள் அச் செய்திக்கு விசுவாசத்தோடு கீழ்ப்படிந்து, வாழ்க்கையினே அதற்கேற்ப அமைக்கின்றனர்.

உலகுக்கு திருமறை இறைவனின் செய்தி என்பதனுல் அவரே திருமறையின் அதிகாரமாயிருக்கிருர் என்பது பொருள்.

கிறிஸ்துவர்கள் திருமறையையோ அதின் செய்தியையோ வழிபடுவதில்லை. திருமறைக்கும் அதின் செய்திக்கும் ஆண்டவராயிருக்கிற இறைவனையே அவர்கள் வழிபடுகின்றனர். எனவே, திருமறையின் அதிகாரம் அவரிலிருந்தே வருகிறது. திருமறை அவருக்கே சாட்சி பகருகின்றது. இறைவன் என நாம் கூறும்போது இயேசுகிறிஸ்துவை இறைவனிலிருந்து நாம் வேறுபடுத்துவதில்லை. ஆகவே, திருமறையின் அதிகாரம் இயேசுகிறிஸ்துவில் தம்மை வெளிப்படுத்திய இறைவனிலிருந்து வருகின்றது எனலாம். இயேசுகிறிஸ்துவில் மனுக்குலத்தை மீட்கும் நோக்கத்தோடேயே கடவுள் தம்மை வெளிப்படுத்தியுள்ளார்.

ஆகவே, திருமறையின் ஏவுதலும் அதிகாரமும் மீட்போடு தொடர்புடையனவாம். கிறிஸ்துவின் மூலம் இறைவன் உலகை மீட்கின்றார். அவர்மூலமாக மக்கள் பாவத்திலிருந்து விடுவிக்கப்பட்டு இறைவனோடு நல்லுறவு அனுபவிக்கின்றனர். இந்த மீட்புக்குத் திருமறை சாட்சியாகும்.

இக்கூற்றை ஏற்றுக்கொள்ளுகின்றவர்கள் திருமறையில் இக்கால விஞ்ஞான அறிவுக்குப் பொருந்தாத சிலவற்றைக் காணும்போது ஆச்சரியப்படுவதில்லை. ஏனெனில், வாழ்க்கைக்குக் கடவுளின் செய்தியாயிருக்கும் திருமறையின் எல்லாப் பாகங்களும், எல்லாத் துறைகளிலும், எல்லாக் காலத்திலும் பின்பற்றக்கூடியனவாயிருக்கவேண்டும் என இவர்கள் எதிர் பார்ப்பதில்லை. ஏனெனில், திருமறை நூல்கள் ஒரே காலத்தில் ஒருவரையொருவர் அறிந்த ஒரு சிலரால் ஒரே சூழ்நிலையில் எழுதப்பட்டவை அன்று. ஏகதேசம் ஆயிரம் ஆண்டுகளுக்குக் கூடுதலான காலமாக வளர்ந்த ஒரு நூலகம் போன்ற திருமறை, இன்றும் மக்களுக்குத் தேவையான செய்தியாய் இருப்பதே, அது தூய ஆவியரால் ஏவப்பட்டது என்பதற்கு எடுத்துக்காட்டாம்.

## முடிவுரை

மேற்கூறியவற்றிலிருந்து நான்கு உண்மைகளைக் காணலாம்:

(அ) வரலாற்றில் இறைவனின் செயலை அறிந்து எழுதும்படி அவரால் ஆற்றல் பெற்ற மக்கள் ஏவப்பட்டு எழுதினர்.

(ஆ) இந்த ஏவுதல் எழுதின மக்களுக்கு மாத்திரம் அருளப் படாமல், பல நூற்றுண்டுகளாக வளர்ந்து உருப்பெற்ற திரு மறையின் நீண்ட வரலாறு காலமுழுவதிலும் நிலவுகின்றது.

(இ) தூய ஆவியரால் ஏவப்பட்டு இதனை எழுதியவர்கள், எழுத்துக்கு எழுத்து தாம் பிழையின்றி எழுதியதாகக் கூற வில்லை.

(ஈ) எழுதியவர்கள் மாத்திரமன்று, எழுதப்பட்டவைகளைப் படிக்குங்கால் அவற்றில் இறைவனின் செயல் கண்டு அவர் தங்களோடு பேசுவதை உணருகின்றவர்களும் இந்த ஏவுதலைப் பெற்றுக்கொள்ளுகின்றனர்.

இம்முறையில் தூய ஆவியரால் ஏவப்பட்ட நூல் என திருமறையைப் புரிந்துகொண்டால், அதன் உயர்வை நாம் உணர இயலும்.

# திருமறையும் இறைவழி வெளிப்பாடும்

## இந்து சமயச் சிந்தனைகள்

இந்திய நாட்டின் முக்கியச் சமயம் இந்து சமயமாகும். இந்து சமயம் யாது என்று கருத்து வரையறை செய்வது எளி தன்று. பல தத்துவ அமைப்புகளும், பக்தி வழிபாடுகளும் இந்து சமயத்தில் இடம் பெறுகின்றன. ஆனால் வெளிப்பாடு என்னும் பொருளோடு சம்பந்தப்பட்ட நான்கு பொது உண்மைகள் இந்து சமயத்திலிருக்கின்றன. அவையாவன:

(அ) பரம்பொருள் அதன் உள்ளியல்பில் அறியக்கூடாதது. இறைவன் அல்லது பரம்பொருள் உண்டு. ஆனால் ஒருவரும் அதனை முழுமையாக அறியவோ விளக்கவோ இயலாது. இதுவே பரம்பொருள் என்று கூற இயலாது. பரம்பொருள் இதுவன்று, இதுவன்று என்று கூறலாம். பரம்பொருள் கல்லன்று, மரமன்று, மலையன்று, சூரியனன்று என்று கூறலாமேயன்றி, இதுதான் மெய்ப்பொருள் அல்லது பரம் பொருள் என்று உறுதியாகக் கூற இயலாது.

(ஆ) பரம்பொருளின் தன்மையைப்பற்றிய ஒரு விளக்கமும் பூரணமானதன்று. ஒவ்வொரு சமயத்திலும் இதுபற்றி உண்மையும் உண்மையற்றதுமான உபதேசங்கள் இருக் கின்றன. எனவே ஒரு தனிப்பட்ட சமயத்தில் முழு இறை வெளிப்பாடு இருக்கின்றது என்று கூறுவது சரியன்று.

(இ) எனவே எல்லாச் சமயங்களிலும் பரம்பொருளைப்பற்றிக் கிடக்கும் அறிவினை எடுத்துக்கொள்வதே அறிவுடைமையாகும். இப்படிச் செய்யும்போது மெய்ப்பொருள்பற்றி அதிக அறிவடையலாம்.

(ஈ) ஆகவே அவரவரது சமுதாயச் சூழ்நிலைக்கேற்ற வாழ்க்கை நெறியினை மக்கள் பின்பற்றலாம். இதனால் பிறரது

நம்பிக்கையையும், வாழ்க்கை முறையினையும் பழிக்கவேண்டிய தில்லை. ஒரு சமயத்தைவிட்டுப் பிறிதொரு சமயத்தைத் தழுவத் தேவையுமில்லை.

இவ்விதக் கருத்துக்கள் நிலவும் சூழ்நிலையில் திருமறையில் அறியக்கிடக்கும் இறைவழி வெளிப்பாட்டினைச் சிந்திப்பது பயன் தரும்.

## ஏவுதலும் வெளிப்பாடும்

திருமறை தூய ஆவியரால் ஏவப்பட்ட மக்களால் எழுதப் பட்ட புனிதமான நூல் என்று நாம் கூறியுள்ளோம். இதனால் திருமறையின் ஒவ்வொரு எழுத்தும், அதின் உறுப்பும் தூய ஆவியானவரால் கூறப்பட எழுதப்பட்டன என்பது பொரு ளன்று. மொத்தமாக நோக்கின், திருமறை தூய ஆவியரின் ஏவுதலால் மக்கள் எழுதிய நூல்களின் இசைவிணைப்பு எனலாம்.

தூய ஆவியர் ஒரு சிறந்த நோக்கத்தோடேயே மக்களை ஏவுகின்றார். அந்த நோக்கமே வெளிப்பாடு (revelation) ஆகும். ஏவப்படுவதின் மூலம் வெளிப்பாட்டின் கருவிகளாக மக்கள் அமைகின்றனர். வெளிப்பாடு என்பது, 'மறைவு நீக்கல், மறைவு நீக்கி வெளியாக்கல், ஒளிப்பிடத்தினின்று கொண்டுவருதல் எனப் பொருள்படும்' என்று அறிவர் சாமுவேல் அமிர்தம் என்பார் கூறுகின்றார் ('திருமறைச் சொற் பொருள்,' பக். 337). ஆகவே, திருமறை இவ்வாறு திரை நீக்கி வெளிப்படுத்தும் பொருள் இறைவனாவார். இறை வாக்காளரின் பணி, எபிரேய சட்ட அமைப்பு, நற்செய்தி நூல்கள், புதிய ஏற்பாட்டுக் கடிதங்கள் மற்றும் திருமறையின் இதர பாகங்கள் அனைத்தும் இறைவனையும் அவர் உலகை அரசுபுரிவதையும் வெளிப்படுத்துகின்றன.

## தம்மை வெளிப்படுத்தும் இறைவன்

திருமறையின் அடிப்படை உண்மைகளில் ஒன்று, இறைவன் தம்மைத்தாமே வெளிப்படுத்துகின்றார் என்பது. இதர பல சமயங்களிலும் மனிதன் தனது முயற்சியினால் இதை உணர்வதாகக் கூறப்படுகின்றது. ஆனால் திருமறையின்படி கடவுளை ஒருவனும் காண இயலாது (1 தீமோ. 6:16). 'அவர்

உயர்ந்தவர், உன்னதத்தில் வாசமாயிருக்கிறவர்' (எசா. 33:5). தாம் தெரிந்துகொண்ட இஸ்ரவேல் மக்களது வரலாற்றிலே தம்மை அவர் வெளிப்படுத்துகின்றார். இந்த வெளிப்படுத்தல் ஒரு முழு சித்தாந்தமாக ஒரே தடவையில் தரப்படவில்லை. அவர் இஸ்ரவேலரது வரலாற்றில் நிகழ்ந்த பல சம்பவங்களில் ஈடுபாடுகொண்டு தம்மை வெளிப்படுத்துகின்றார். (உ—ம்) வல்லரசான எகிப்தின் ஆதிக்கத்திலிருந்து அடிமைகளான இஸ்ரவேலர் விடுதலையடைகின்றனர். இந் நிகழ்ச்சியில் இறைவன் ஈடுபட்டு மீட்கிறவராகத் தம்மை வெளிப்படுத்தினார் என்பதே திருப்திகரமான விளக்கமாக எபிரேயருக்கு விளங்கிற்று. மீட்பவரே படைக்கின்றவர் என்ற உணர்வும் அவர்களுக்கு ஏற்படுகின்றது.

## பொதுவான வெளிப்பாடு

இறைவன் கிறிஸ்தவ மறையில் மாத்திரமே தம்மை வெளிப்படுத்தியுள்ளாரா, இதர சமயங்களிலும், இயற்கையிலும் தம்மை வெளிப்படுத்தவில்லையா என்ற கேள்வி கேட்கப்படுகின்றது. இக்கேள்விக்கு முழு அளவில் விடைதர இது ஏற்ற இடமன்று. எனினும் ஒரு சில கருத்துக்களை இவண் கூறுவது நன்மை பயக்கும். பழைய ஏற்பாட்டு வரலாற்றிலும், இயேசுகிறிஸ்துவிலும் இறைவன் தம்மை வெளிப்படுத்தியிருப்பதற்கு வெளியேயும் அவர் தம்மை வெளிப்படுத்தியுள்ளார் என்பதற்கு சங். 19; 29; 104; ரோ. 1:19 ஆகிய திருமறைப் பாகங்களை ஆதாரமாக எடுத்துக் கூறுவார் உளர். இறைவன் எந்த இடத்திலும், யாருக்கும் தம்மை வெளிப்படுத்தும் ஆற்றலுள்ளவர் என்பதைத் திருமறை மறுப்பதில்லை. ஏனெனில், அவர் பட்சபாதமுள்ளவரல்லர். இதர சமய நூல்களிலும் மற்றும் பல பக்தர்களது வாழ்க்கை வரலாறுகளிலும் அறியக்கிடக்கும் மன்பதையின் நல்வாழ்விற்குரியவை அவரால் அருளப்பட்டவை என்று கூறுவாரும் உளர்.

எனினும் மேலே தரப்படும் திருமறைப் பாகங்கள் இயேசு கிறிஸ்துவுக்கு வெளியேயும் இறைவனைப்பற்றிய மெய்யறிவு இருக்கின்றது என்ற கூற்றிற்கு ஆதரவளிப்பதில்லை என்பதனை மாத்திரம் இவண் சுட்டவேண்டும். சங். 19, வானங்களையும்

இயற்கையின் ஒழுங்குகளையும் ஆராய்கிறவன் இறைவனைப் பற்றிய அறிவை அடைவான் என்று பொருள் தருவதில்லை. அறிவர் சா. அமிர்தம் கூறுவதுபோல், 'கடவுளையும் அவரது சிருஷ்டிப்பின் கிரியைகளையும் சங்கீத ஆக்கியோன் முன்னே அறிந்திருந்தபடியால், கடவுளின் மகிமை மேற்கூறிய வானத்திலும் ஆகாய மண்டலத்திலும்கூட காண்கின்றோம் என்று மகிழ்ச்சி கொள்ளுகிறார் அவர். சரித்திரத்தில் வெளிப்பட்ட கடவுளின் மகிமைக்கு சுய இயற்கையும் சான்று என்னும் கருத்து மட்டும்தான் மேற்கூறிய சங்கீதங்களினின்று வெளியாகிறது என்க' ('திருமறைச் சொற்பொருள்,' பக். 340). அப்படியே ரோ. 1:19ல் இயற்கையின் மூலமாகக் கடவுள் அறிவு ஏற்பட்டிருக்கிறது என்று பவுலடியார் கூறுகின்றார் எனப் பொருள் கூறலாகாது. மக்கள் படைப்பில் வெளிப்படும் இறைவனின் மகிமையை அறியாமல் படைப்புப் பொருட்களை வழிபட்டனர். அதன் விளைவாக அவர்களது வாழ்க்கை முறையும் வேறுபட்டுவிட்டது. இதன் மூலமாக இயற்கை, கடவுளை வெளிப்படுத்தக்கூடியதாயிருந்தபோதிலும் அவர்கள் அதனை ஏற்றுக்கொள்ள ஆற்றலற்றுவிட்டனர் என்பதே பவுலடியாரின் பொருள் என்க. எனவே, பல தத்துவ அறிஞர் கூறும் பொது வெளிப்பாடு (general revelation) அல்லது இயற்கை வெளிப்பாடு (natural revelation) என்பதுபற்றித் திருமறை பொதுவாக அக்கறைப்படுவதில்லை எனலாம். இவ்வாறு நாம் கூறுவதனால் திருமறைக்கு வெளியே இறைவெளிப்பாடு இல்லை என்று நாம் சாதிப்பதில்லை; இயற்கையிலும் இறைவன் மிளிர்கின்றார் என்பதனையும் நாம் மறுக்கவில்லை.

### வரலாறு இறைவெளிப்படுத்தலின் அரங்கு
### (History is the arena of God's revelation)

எனவே, திருமறையில் இறைவெளிப்பாடு வரலாறு வழி வருகின்றது. வரலாறு வெளிப்படுத்தல் நிகழும் அரங்காகும். எகிப்திலிருந்து விடுதலை, கற்பனைகளை அளித்தல், கானானைச் சுதந்தரித்தல், நியாயாதிபதிகளின் செயல்கள், அரசர்களின் ஆட்சி, இறைவாக்காளர்களின் பணி, அரசின் பிரிவும் சிதைவும், சிறையிருப்பு, சிறை மீட்பு ஆகியவை இறைவனின்

செயல்களே. இவைகளின் மூலமாகக் கடவுள் தம்மையும், தமது சித்தத்தையும், தாம் உலகை அரசுபுரிவதையும், மக்களிடம் தாம் எதிர்பார்ப்பதையும் வெளிப்படுத்தியுள்ளார்.

இவ்வதிகாரத்தின் ஆரம்ப பாகத்தில், திருமறை இறைவெளிப்பாட்டு நூல் என்று கூறினோம். ஆனால் இவண் வரலாற்றின்மூலம் வெளிப்பாடு ஏற்படுகின்றது என்று கூறியுள்ளோம். இவ்விரு கூற்றுகளும் தம்மில் முரண்பாடுள்ளவைபோல் காட்சியளிக்கக்கூடும். திருமறையும் இறைவெளிப்பாடு, வரலாறும் இறைவெளிப்பாடு என்று இணைக்க இயலா இரு உண்மைகள் கூறப்படுவதுபோல் தோன்றலாம். உண்மையில் இவண் முரண்பாடு இல்லை. திருமறையில், நாம் படிக்கிறபடி, இறைவன் வரலாற்று நிகழ்ச்சிகள் மூலமாகத் தம்மை வெளிப்படுத்துகின்றார். இந்த வெளிப்பாடு எழுத்து வடிவத்தில் திருமறையில் தரப்படுகின்றது. எனவே திருமறை வரலாற்றில் நிகழும் இறைவனின் வெளிப்பாட்டின் அறிக்கையாகும், இப்படி கூறுவதனால் திருமறை இறைவெளிப்பாடன்று என்றாகிவிடுவதில்லை. ஏனெனில், திருமறை இறைவெளிப்பாட்டின் உயிர் துடிப்புள்ள அறிக்கை அல்லது காட்சி (recorded testimony to the revelation of God). இறைவன் தம்மை வெளிப்படுத்துவதற்கு உபயோகித்த வரலாற்று நிகழ்ச்சிகளை இப்போது நாம் திருமறையில்தான் படிக்கின்றோம். அந்நிகழ்ச்சிகளைப் படிக்கும்போது இறைவன் திருமறையில் தம்மை வெளிப்படுத்துவதை விசுவாசத்தின் மூலம் அறிகின்றோம். வெளிப்பாட்டின் எழுதப்பட்ட சாட்சியாகிய திருமறையில் விசுவாசத்தின்மூலம் இறைவனை அல்லது இயேசு கிறிஸ்துவை நாம் சந்திக்கிறபடியால், திருமறை கடவுளின் வெளிப்பாட்டின் நூல் எனலாம்.

## இறைவாக்காளர் மூலம் வெளிப்பாடு

இஸ்ரவேல் மக்களது குருட்டாட்டத்தினாலும், கீழ்ப்படியாமையினாலும் (ஏசா. 1:2பி.) இந்த வெளிப்படுத்தலின் நோக்கம் நிறைவேறவில்லை. ஏனெனில், வெளிப்படுத்தலைப் பெற்றுக்கொள்ளும் மக்கள் அதற்குக் கீழ்ப்படிந்து இதர மக்களுக்கும் அதனை அளிக்க எதிர்பார்க்கப்பட்டனர். ஆகையால்

இறைவன் இறைவாக்காளர் என்ற சிறு குழுவினரை எழுப்பி, அவர்கள் மூலம் தமது செயல்களை மக்களுக்கு விளக்கித் தமது சார்பில் அவர்களோடு பேசும்படி செயல்பட்டார் (ஆமோஸ் *3:7*; ஓசி. *6:5*). இந்த இறைவாக்காளர்கள் இறைவனின் வெளிப்படுத்தும் கருவிகளாயிருந்தனர். எனவே, இறைவாக்காளரின் வாழ்க்கைகளிலும், நாட்டின் வரலாற்றிலும் நிகழும் சம்பவங்கள் மூலமாக கடவுளின் வார்த்தை அல்லது செய்தி அவர்களுக்கு வெளிப்படவே அதனை அவர்கள் மக்களுக்கு எடுத்துரைத்தனர். வெளிப்படுத்தல் இங்கே ஆளுக்கு ஆள் உரையாடல்போன்ற உறவில் ஏற்படுகின்றது. திருமறையில் இறைவாக்காளர்களின் நூல்களில் இந்த வெளிப்பாடு வரையப்பட்டுள்ளது.

## இயேசுகிறிஸ்துவில் முழு வெளிப்பாடு

எபி. *1:1*ன்படி, பூர்வகாலத்தில் பங்கு பங்காகவும், வகை வகையாகவும், இறைவாக்காளர்கள் மூலம் தம்மை வெளிப்படுத்திய இறைவன், இயேசுகிறிஸ்துவில் தம்மை முழுமையாக வெளிப்படுத்தியுள்ளார். இதனுல் பழைய ஏற்பாட்டில் கூறப்படும் இறைவெளிப்பாடு முழுமையடைகின்றது. *1* தீமோ. *3:16*; யோ. *1:14* போன்ற வாக்கியங்கள் கூறுவதுபோல், ஊனுடலில் வெளிப்பட்ட இறைவன் இயேசு இறைவெளிப்பாட்டின் உன்னத சிகரமாயிருக்கின்முர். கடவுள் தம்மை வெளிப்படுத்தும் செயல்களின் ஒப்பற்ற செயலும் உச்சகட்டமும் இயேசுகிறிஸ்துவேயாம். அவரில் இறைவனின் தன்மை, மனிதனுக்கும் வரலாற்றுக்கும் அவரது நோக்கம் ஆகியவை வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன. கடவுள் நமது தந்தை (மத். *6:9*), அவர் அனைத்தையும் படைத்துப் பராமரிப்பவர் (மத். *6:30*), அவர் பாவ மனிதனைத் தேடிவருகின்றவர் (லூ. *15*), அவர் தமது உயிரைத் தந்து அவனை மீட்டுக்கொள்கின்முர். எனவே, இயேசுவைக் கண்டவன் இறைவனையே கண்டுவிட்டான் (யோ. *14:9*) என்று கூறலாம்.

## வெளிப்பாட்டின் நோக்கம்

வெளிப்படுத்தல் என்பது இறைவன் தம்மை ஆள்சார்ந்த முறையில் மனிதருக்கு அருளிச்செய்வதாகும் ('Revelation is

God's personal communication of Himself to men'—*Theological Word Book of the Bible*—Richardson, p. 198). எனவே, மக்களோடு ஒரு சிறப்புறவு ஏற்படுத்துவது அதன் நோக்கமாகும். 'நான் உங்கள் கடவுளாயிருப்பேன். நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள்' (லேவி. 26:12). ஏசா. 6ம் அதிகாரத்தில் விளங்குவதுபோல், அது மனிதருக்கு ஓர் அழைப்பினை விடுக்கின்றது. வெளிப்படுத்தும் இறைவன் இயேசுவில் மனிதனாக வந்து தம்மை வெளிப்படுத்தி இந்த அழைப்பை விடுக்கின்றார்.

திருமறையின்படி விசுவாசத்தின் மூலம் மனிதன் இந்த இறைவெளிப்பாட்டினைத் தன் வாழ்க்கையில் ஏற்றுக்கொள்ள இயலும். இந்த விசுவாசமும் இறைவனின் செயலாகும். யோ. 6:44ன்படி என்னை அனுப்பின பிதா இழுத்துக்கொண்டாலொழிய ஒருவனும் என்னிடத்தில் வர இயலாது என்று இயேசு கூறுகின்றார். ஏனெனில் 1 கொ. 2:14ன்படி கடவுளின் வெளிப்படுத்தலை அறிந்து ஏற்றுக்கொள்ளும் ஆற்றல் பாவ மனிதனுக்குள் இயல்பாக இல்லை.

இவ்வாறு விசுவாசத்தின்மூலம் வெளிப்பாட்டை ஏற்றுக்கொண்டால், ஏற்றுக்கொண்டவர்களின் வாழ்க்கை, வழிபாடு, அறநெறி ஆகியவை மறுரூபமுற்று வெளிப்பாட்டிற்கு ஏற்ப அமைகின்றன. பழைய ஏற்பாட்டில் வெளிப்பாடு உடன்படிக்கை மூலம் யூத சபையை உருவாக்கியதுபோல், புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவின் மரணத்தின்மூலம் ஏற்பட்ட புதிய உடன்படிக்கை வழி கீழ்ப்படியும் திருச்சபையை உருவாக்குகின்றது. 'திருச்சபையின் வாழ்க்கை, அதன் கூட்டுறவு, அங்கத்தினரின் நடத்தை யாவும் கிறிஸ்து பெருமானில் கடவுள் மனிதரைச் சந்தித்து ஆள்தத்துவ முறையில் தந்த வெளிப்பாட்டின் மறுமொழியாக அமைகிறது' ('இறையியல் அணிந்துரை,' பக். 62).

எனவே இந்து சமயம் பரம்பொருளை அறிய முடியாது என்று கூறுவதுபோலன்று, பரம்பொருளே தம்மை வெளிப்படுத்துகின்றார், அதனை ஏற்றுக்கொள்ளும் ஆற்றலை அவர் அளிக்கின்றார். ஏற்றுக்கொள்பவர்கள் அதற்கேற்ப வாழும்போது, அந்த வெளிப்படுத்தல் உண்மையானது என்பது உறுதிப்படுகின்றது எனத் திருமறை கூறுகின்றது.

# திருமறையின் ஒப்புயர்வற்ற சிறப்பு

இதுகாறும் திருமறையினைப்பற்றிய அநேக உண்மைகளை நாம் சிந்தித்துவிட்டோம். புதைபொருள் ஆராய்ச்சியினால் திருமறையின் வரலாற்றின் வாய்மை உறுதிப்படுகின்றது. விஞ்ஞான வளர்ச்சியினால் திருமறையின் அடிப்படை உண்மைகள் உறுதிப்படுகின்றன. திருமறை உருப்பெற்ற வரலாறு இது இறைத்தன்மை நிறைந்தது என்பதற்கு எடுத்துக்காட்டு, என்று இந்நூலின் முதல் இரு பாகங்களிலும் கவனித்தோம்.

இதன் மூன்றாம் பாகத்தில் திறனாய்வின் வெளிச்சத்தில் திருமறையின் பொருளடக்கத்தை விவரிக்க முயன்றோம். அதனைத் தொடர்ந்து தூய ஆவியரால் ஏவப்படுதல் என்பதனையும், அந்த ஏவுதலினால் திருமறையில் விளங்கும் இறைவழி வெளிப்பாட்டின் தன்மை யாது என்பதனையும் ஆராய்ந்தோம். மேற்கூறிய எல்லா அறிவுகளிலுமிருந்து திருமறையின் சிறப்பு தான் என்ன என்ற கேள்வி எழுகின்றமையால் இவ்வதிகாரத்தில் அதனைக் கூறுவோம்.

### இஸ்ரவேலரது ஆரம்பகால சமயத்தின் சிறப்பு

நீண்டகாலத் திறனாய்வின் விளைவாகப் பழைய ஏற்பாட்டிலே ஓர் ஒப்பற்ற சமயத்தைப்பற்றிக் கூறப்பட்டிருக்கின்றது என அறிஞர்கள் முடிவு செய்துள்ளனர். முன்னர் நாம் படித்ததுபோல புதைபொருள்களைத் தோண்டியெடுத்து ஆராய்ச்சி செய்தவர்கள் இஸ்ரவேலரது நாட்டில் வாழ்ந்த வேற்று மக்களது சமயங்களைப்பற்றிப் பல உண்மைகளைக் கண்டுபிடித்துள்ளனர். அவற்றோடு ஒப்பிடுங்கால் இஸ்ரவேலரது சமயம் அவைகளைவிட மிகச் சிறப்புள்ளதாயிருந்தது என்பது உறுதியே. அப்படியே பாபிலோன், மோவாப் என்னும் நாடுகளின் சமயங்களைவிட இஸ்ரவேலரின் ஆரம்ப சமயம்கூட சிறந்தது எனலாம். பாபிலோனிய மார்துக், மோவாபிய

கேமோஸ், கானானிய பாகால் என்னும் தெய்வங்கள் இஸ்ரவேலரின் யாவேயைவிட முற்றிலும் வித்தியாசமான முறையில் தாழ்வாக விவரிக்கப்பட்டுள்ளன. அவற்றோடு ஒப்பிடும்போது யாவேபற்றிய ஆரம்பச் சிந்தனைகள்கூட மிக உயர்வானவை என்றறிகின்றோம்,

### திருமறையில் இறைவனைப்பற்றிய சிந்தனைச் சிறப்பு

பலஸ்தீன நாட்டிலே வலிமை மிக்க மக்கள் பலரது நடுவில் எபிரேயர் ஒரு சிறிய கூட்டமாக வாசம்பண்ணினர். இதர மக்கள் இயற்கையின் சக்திகளை உருவேற்றி தெய்வங்களாகக் கொண்டு அவற்றினை வழிபட்டனர். மேலும் ஆயிரக்கணக்கான தெய்வங்களிருப்பதாக அவர்கள் நம்பினர். அவற்றை மிருகங்களாகவும், பறவைகளாகவும், இராட்சதர்களாகவும், ஆண்களாகவும், பெண்களாகவும், திருமணம் செய்கின்றவர்களாகவும் கற்பனை செய்து பல தெய்வ வணக்கத்தில் (Polytheism) மக்கள் ஈடுபட்டிருந்தனர்.

அதே வேளையில் எபிரேய மக்களிடையில் மோசேயின் காலம் முதல் சிறப்பான ஒரே கடவுள் வழிபாடு (Monotheism) நிலவியதாகத் திட்டமாக அறிகின்றோம். அந்த யாவே என்னும் இறைவனைத் தாங்கள் கற்பனை செய்துகொண்டதாகவோ, கண்டுபிடித்துக்கொண்டதாகவோ அவர்கள் கூறவில்லை. அந்த இறைவன், சூரியன், சந்திரன், நட்சத்திரம் இவைகளோடு ஒப்பிடப்படக்கூடியவரல்லர். ஏனெனில் அவரே இவையனைத்தையும் படைத்தவர். அவர் மனிதர், மிருகங்கள், பறவைகளைப்போன்றவருமல்லர். அவருடைய சாயல் என்று கற்பனை செய்து எந்த சொரூபத்தையும் உருவாக்குவது தடை செய்யப்பட்டிருந்தது. தாங்கள் வழிபட்ட யாவே ஒருவரே மெய்க் கடவுள், அவர் தங்களைச் சிறப்பான முறையிலே தமது மக்களாயிருக்கும்படி தெரிந்துகொண்டார், தகுதியற்ற தங்களை அவர் அவ்வாறு தெரிந்துகொள்ள ஒரு நோக்கம் உண்டு என அவர்கள் விசுவாசித்தனர். தாங்கள் வழிபட்ட இறைவன் ஒப்புயர்வற்ற ஒரே இறைவனானபடியால் அவரது பெயரைக் கூறுவதும் கண்ணியக் குறைவு என்று சிந்தித்துப் பிந்திய காலத்தில் அவரது பெயரைக் கூறுவதை மக்கள் வழக்கிலே விட்டுவிட்டனர். ஆகவே மத்திய கிழக்கில் அறியப்

பட்டிருந்த எல்லாச் சமயங்களைவிடவும் முற்றிலும் தன்மையில் வித்தியாசமானதாக எபிரேயரது சமயம் விளங்கியது சிறப்பாகும்.

### பழைய வரலாறுகளுக்குப் புதுமை அளிக்கும் சிறப்பு

எனினும், இதர சமயங்களிலிருந்து அவர்கள் எடுத்துக் கொண்ட அம்சங்கள் இஸ்ரவேலரது சமயத்தில் இருக்கின்றன. ஆனால் தாங்கள் எடுத்துக்கொண்ட அம்சங்களை அல்லது கருத்தோவியங்களை அவர்கள் முற்றிலும் மாற்றியமைத்து புதிய பொருளேற்றி உபயோகித்தனர். படைப்பு, தண்ணீர் பெருக்குப்பற்றிய கதைகள் மொசெப்பெத்தோமிய பின்னணியத்திலிருந்து எடுக்கப்பட்டவை என்று பொதுவாக அறிஞர்களால் ஒப்புக்கொள்ளப்படுகின்றது. ஆனால் பாபிலோனியக் கதைகளிலே பல தெய்வ வழிபாடும், முதிர்ச்சியற்ற அண்டப்பிறப்புக் கோட்பாடும் (primitive Cosmogony) இருந்தன. இஸ்ரவேலரது சிந்தனையிலோ இந்த அண்டப் பிறப்புக் கோட்பாட்டில் மாற்றமில்லை.

### இயேசுகிறிஸ்துவின் திருஅவதாரத்தின் சிறப்பு

இறைவன் தம்மை இயேசுகிறிஸ்துவில் வெளிப்படுத்தியுள்ளார் (எபி. *1:1,2*). இந்த வெளிப்பாடு ஒப்புயர்வற்றது. இந்து சமயத்தில் தரப்படும் திருஅவதாரச் சித்தாந்தம் கிறிஸ்துவின் திருஅவதாரத்தைவிட மிகவும் வித்தியாசமானது. இந்து சமயத்தில், குறிப்பிட்ட குறுகிய ஒரு நோக்கத்தினை நிறைவேற்ற இறைவன் அவதாரம் எடுப்பார் எனவும், அவ்வாறு வெளிப்படும்போது முழு மனிதத்தன்மை ஏற்று காட்சியளிக்கத் தேவையில்லை எனவும் அறிகின்றோம். ஆனால் திருமறை தருவது இறைவனின் ஒரே ஒப்பற்ற திருஅவதாரம். அதின் நோக்கம் அனைத்துலக மீட்பு. அவ்வாறு திருஅவதாரமாக இறைவன் வெளிப்பட்டபோது பாவமற முழு மனிதத் தன்மையை அவர் ஏற்றுக்கொள்கிறார் (யோ. *1:14*). எனவே, இது முழுமையான ஒரே திருஅவதாரமாகும். இயேசுகிறிஸ்துவின் சீரிய ஆள்தன்மையுள்ள ஒருவரை திருமறைக்கு வெளியே எங்கும் நாம் சந்திப்பதில்லை.

**இயேசுகிறிஸ்துவின் ஆள்தன்மையின் சிறப்பு என்ன?**

(அ) அவரது உரைகளின் உயர்வு: ஒப்பற்ற கவிதைத்திறனை இயேசுவின் உரைகளில் காண்கின்றோம். கூர்ந்து கவனித்தல், ஆழமான உணர்ச்சி, பொருத்தமான, படிப்போர் மறந்திடாத வார்த்தைகள் என்பவை கவிதையின் சிறப்புகள் என்பர். இயேசுவின் உரைகளில் இவை நிரம்பக் கிடக்கின்றன. (உ-ம்) மலைப் பிரசங்கம் மத். 23ம் அதிகாரத்தில் தம்மிடம் எழுப்பப்படும் கேள்விகளுக்கு இயேசு பதிலளித்து உரையாடும் முறை மிகவும் உயரியது.

(ஆ) வாழ்க்கையின்மேல் அவருக்கு இருந்த கட்டுப்பாடு ஒப்பற்றது: அவர் வாழ்க்கையில் சமநிலை இழந்து செயல்பட்டதாக நாம் படிப்பதில்லை. யூத சமயத் தலைவர்களால் அவருக்குக் கடினமான எதிர்ப்பு இருந்தது. எனினும், தவிர்க்க இயலாத சூழ்நிலையை அகற்ற முயற்சிக்காமல், ஒரு பூரண வாழ்க்கை நடத்த முற்பட்டு வெற்றி கண்டார். தன் வாழ்க்கையில் நிகழும் எந்தச் சம்பவத்தையும் திடனாகச் சந்தித்து அது தன்னை அடிமைப்படுத்த இடமளிக்காமல் அதைத் தனக்குக் கீழடக்கும் சிறப்பாற்றல் இயேசுவில் ஒப்பற்ற முறையில் காணக்கிடக்கின்றது. இவ்வாறு தனது சிலுவை மரணத்தையும் ஆக்கல் முறையில் ஏற்றுக்கொண்டு அதன் மூலம் மனுக்குலத்திற்கு மீட்பு அருளிச் செய்கின்றார்.

(இ) ஆழமான உண்மைகளை மிகவும் எளிய முறையில் கூறுவதில் இயேசு ஒப்பற்றவர்: இறையாட்சியைப்பற்றிய அவரது உவமைகள் மிகவும் எளியவை. எனினும் இறைக்க இறைக்க வற்றா ஊற்றைப்போல் அவற்றிலிருந்து தலைமுறைதோறும் இறையாட்சிப்பற்றிப் புதுப்புது விளக்கங்களைப் பெறுகின்றோம். எளியோரும் அரியனவற்றைப் புரிந்துகொள்ளும்படி சிறிய வாக்கியங்களில் தமது உபதேசத்தை அவர் அளித்தார். (உ-ம்) இரு வீடுகளின் உவமை, உப்பு, ஒளி, நிலங்கள், வலை, முத்து முதலியன.

(ஈ) சமரசமற்ற உயர்வான ஒழுக்க வாழ்க்கையைப் போதித்துச் சாதனை வழி நின்றதில் இயேசு ஒப்பற்றவர்: ஒழுக்கத்தின் விரோதிகளை அவர் வன்மையாகக் கன்டித்தார். 'மாயக்காரரே, குருடரான வழிகாட்டிகளே, மதிகேடரே' என்று அன்போடு கண்டிப்பதற்கு அவர் தயங்கவில்லை. 'உங்கள்

சத்துருக்களைச் சிநேகியுங்கள்’ என்று நிபந்தனையற்ற ஓர் அன்பின் கட்டளையினை உபதேசித்து அவர் கடைப்பிடித்தார். இயேசுவில் விளங்கிய இந்த அன்பு வெறுமையான ஓர் உணர்ச்சியன்று. அது முற்றிலும் வித்தியாசமான, சத்துருவின் நலனில் ஆர்வமுற்று, அதனைப் பேணி பாதுகாப்பதற்குத் தன் உயிரையே அர்ப்பணம் செய்யும் அடியும் முடியுமில்லா ஆழமான அன்பாகும்.

(உ) இயேசு வாழ்க்கையின் ஒப்பற்ற இச்சிறப்பிற்குக் காரணம், இயேசுவுக்கும் இறைவனுக்குமிருந்த ஒப்பற்ற உறவு என்பது திருமறையின் கருத்து: அவரது அருளுரைகளைக் கேட்டவுடனேயே மக்கள் அதிலே ஒரு சிறப்பு அதிகாரம் உறைந்திருப்பதனை உணர்ந்தனர். அதிகாரத்தோடே மோசேயின் கட்டளைகள் பலவற்றிற்கு அவர் புது விளக்கம் அளிக்கின்றார். இந்த அதிகாரத்துக்கு ஒரே விளக்கம் அவருக்கும் இறைவனுக்குமுள்ள ஒப்பற்ற உறவு என்பதாகும். தந்தையாகிய இறைவனின் திருச்சித்தத்தை மாத்திரமே தான் செயல்படுத்துவதாக இயேசு குறிப்பிட்டார் (யோ. 4:32–34; 5:19; 12:49). இயேசுதாமே தமக்கும் பிதாவுக்கும் சிறப்புறவு இருக்கின்றபடியால் தம்மைக் கண்டவன் பிதாவையே கண்டான் என்று கூறினார்.

(ஊ) துன்பத்தைப்பற்றிய ஒரு புதிய மனப்போக்கு இயேசுவில் வெளிப்படுகின்றது: மனிதன் துன்பம் அனுபவிக்கும்போது அவனது சிந்தனைகளெல்லாம் தன் துன்பத்தைப்பற்றியே அமைவதனால் பிறரைப்பற்றிச் சிந்திக்கத் துணிவதில்லை. துன்பம் வரும்போது பலர் அதிர்ச்சியடைந்து இளக்கரித்து விடுகின்றனர். சிலர் கோபமும் எரிச்சலுமடைகின்றனர். வேறு சிலர் மௌனமாகத் துன்பத்தைச் சகிக்கின்றனர். ஆனால் இயேசுவோ துன்பம் வரும்போது அதை வரவேற்கின்றார், அதற்கு இடமளிக்கின்றார், அது தன்னை வேதனைப்படுத்த அனுமதிக்கின்றார். அவர் துன்பவேளையில் வாழ்க்கையின் சமநிலையினை இழக்கவில்லை. சிலுவையில் தொங்கும்போதும் தன்னைப்பற்றிச் சிந்திக்காமல் பிறருக்கு மன்னிப்பளிக்கும்படி தந்தையிடம் வேண்டுகின்றார். துன்பத்துக்கு ஒரு நோக்கம் உண்டு. குற்றமற்றவர்கள் அனுபவிக்கும் துன்பம் பிறருக்கு வாழ்வளிக்கும் ஆற்றலுள்ளது என்ற உறுதியினாலேயே சிலுவை

மரணத்தை ஏற்றுக்கொண்டு அதன்மூலம் உலகத்தை மீட்கின்றார் (மா. 10:45).

இத்தகைய இயேசுவின் ஒப்பற்ற ஆள்தன்மையை விவரிக்கின்றபடியால், திருமறையும் உலக இலக்கியங்கள் மத்தியில் ஒப்புயர்வற்ற இடம்பெற்றுள்ளது.

### திருமறை மனித வாழ்க்கையைப்பற்றிக் கூறும் சிறந்த நூல்

திருமறை ஒப்பற்ற மனித நூல். திருமறையின் முக்கிய ஆள் கடவுள். அது மறுமையைப்பற்றிக் கூறும் ஒரு நூல் என்பது உண்மை. ஆனால், திருமறையின் பெரும்பாகமும் இந்த உலகைப்பற்றியும், இதிலே மனித வாழ்க்கையைப்பற்றியுமே பேசுகின்றது. ஆதி. 1:1ல் 'ஆதியிலே கடவுள்' என்று தொடங்கின உடனே உலகைப்பற்றிக் கூறவே ஆக்கியோன் விரைகின்றார். உலகில் மனிதன் வாழ்க்கையில் பாவம் இடம் பெறுதல், பாவம் பெருகுதல், பாவியை மீட்க இறைவனின் திட்டம் அமுல் செய்யப்படுதல் போன்றவை, மனித வாழ்க்கையில் திருமறையின் ஒப்பற்ற ஆர்வத்தைக் காண்பிக்கின்றன. திருமறையின் மையமாகிய இயேசுவும் மனித வாழ்க்கையிலே அளவு கடந்த ஆர்வம் காண்பித்தார்.

இவ்வாறு திருமறை மனித வாழ்க்கையைப்பற்றிப் பேசி ஒரு புது அனுபவத்திற்கு மக்களை அழைக்கின்றபடியாலும் இது ஒரு மனித நூல் எனலாம். இந்த அனுபவம் யாதெனில் எல்லா மனிதருக்கும் தேவையான, கடவுளோடுள்ள உறவின் அனுபவம் அல்லது கடவுளின் பிரசன்ன அனுபவம் என்பதாகும். திருமறையிலும் திருமறை மூலமாகவும் மக்கள் கடவுளின் குரலைக்கேட்டு அவரது சித்தத்தை அறியப் பழகுகின்றனர். அதோடு மனிதனின் பல தன்மைகளையும் திருமறை கூறுகின்றது. ஏற்கெனவே கூறியதுபோல் திருமறை மிக முக்கியமாகக் கூறுவது கடவுள். ஆனால் அதோடு தொடர்ந்து திருமறை கடவுளுக்கும் மனிதனுக்கும், கடவுளுக்கும் திருமறையைப் படிக்கின்ற மனிதனுக்குமுள்ள உறவைக் கூறுவதாகும். இது மனிதருக்குரிய, மனிதருக்காக எழுதப்பட்ட ஒரு நூல் என்பது உண்மையே.

ஆகவே, மனிதன் மெய்வாழ்வு வாழ்வதற்குக் கடவுளோடுள்ள நல்லுறவு அவனுக்குத் தேவை. இந்த உறவை மக்கள்

பெற்றுக்கொள்ளும்படி இறைவன் அவர்களோடு ஈடுபடும் பாலம் அல்லது கருவி திருமறையாம். திருமறையில் இறைவனின் குரல் தொனிக்கின்றது. ஆனால் அதன்மூலம் எனக்கு வரும் கடவுளின் வார்த்தை, எழுதப்பட்டிருக்கும் வாக்கியமன்று, திருமறைமூலம் என் இருதயத்தில் அவர் வெளிப்படுத்தும் செய்தியேயாகும். இவ்வாறு எனக்காக இறைவனிடமிருந்துவரும் செய்தி திருமறையைப் படிக்கும் நேரத்தில் எனக்கு வருகின்றது. வேறெந்த நூலைப் படிக்கும்போதும் இவ்விதமாகச் சிறப்பான செய்தி ஒருவருக்கும் இதே முறையில் வருவதில்லை. ஆகவே இறைவன் மக்களோடு ஈடுபடக் கருவியாக இருப்பதும் திருமறையின் சிறப்பேயாம்.

# திருமறையின் ஒருமைப்பாடு

## (THE UNITY OF THE BIBLE)

முந்தின அதிகாரத்தில் திருமறையின் சிறப்பினைக் கவனித்தோம். திருமறை இறைவனையும் அவரை வெளிப்படுத்திய இயேசுகிறிஸ்துவையும்பற்றிக் கூறுகின்றவற்றில் ஒப்புயர்வற்ற நூல் எனக் கூறினோம். அதே வேளையில் மனிதனின் முழு வாழ்க்கையில் அக்கறைமிக்க நூல் திருமறை எனவும் குறிப்பிட்டோம். இத்தகைய சிறப்புள்ள திருமறை பல நூற்றாண்டுகளாக வளர்ந்த நூல்களின் தொகுப்பென நாம் நன்கறிவோம். ஆயிரத்துக்குமேலான ஆண்டுகளாக வளர்ந்த இந்நூலில் ஒருமைப்பாடு விளங்குகின்றதா என்பது கேள்விக்குரியதே.

### ஒருமைப்பாடு முக்கியமானது

முப்பத்தொன்பது நூல்களைக்கொண்ட பழைய ஏற்பாடு எனவும், இருபத்தேழு நூல்களைக்கொண்ட புதிய ஏற்பாடு எனவும், திருமறை அமைக்கப்பட்டுள்ளது. இவை இரண்டிலும் ஏற்பாடு என்ற பொதுச்சொல் இருப்பதிலேயே ஒருமைப்பாடு மேலாம்பரமாக விளங்குகின்றது. காலத்தாலும் எழுதப்பட்ட வரலாற்றாலும் திருமறைக்குள் பல வித்தியாசங்கள் இருக்கின்றன. நியாயப்பிரமாண நூல்கள், இறைவாக்கு நூல்கள் ஆகிய இவைகளிடையில் கருத்து வித்தியாசமுண்டு. ஆசாரியப் பணியும், இறைவாக்காளர் பணியும் தனிச் சிறப்புள்ளவை. அவ்வாறே நற்செய்தி நூல்கள் விரிவாகக் கூறாத அநேக சத்தியங்களைப் பவுலடியாரின் கடிதங்களில் காண்கின்றோம். இந்த வித்தியாசங்கள் திருமறையின் ஒருமைப்பாட்டினை மறுப்பதாகக் கருதுவது தவறாகும். ஒரு பொருளில், இவைகள் ஒன்றிற்கொன்றுள்ள உறவினைக் காணுங்கால் இவை திருமறையின் ஒருமைப்பாட்டையே

உறுதிப்படுத்துகின்றன என்றறியலாம். எனவே, திருமறையின் ஒருமைப்பாடு எத்தகையது என அறிவது இன்றியமையாதது.

## வேற்றுமையில் ஒருமை (Unity in Diversity)

திருமறையின் சிறப்புகளில், வேற்றுமையில் ஒருமைப்பாடு என்பது ஒன்றாகும். இதன் நூல்களின் ஆசிரியர்கள் பலர் ஒருவரையொருவர் அறியாதவர்; தாங்கள் எழுதுகின்றவை பிற்காலத்தில் திருச்சபையின் விசுவாச அடிப்படையாக அமையும் என்று தெரியாது எழுதியவர்கள். அவரவர் தங்களது காலத்தின் சந்தர்ப்பச் சூழலில் அருளப்பட்ட இறைவழி வெளிப்பாட்டை எழுத்து வடிவில் எழுதி வைத்தனர். எனவே, காலத்திற்கேற்ப, கருத்துக்களில் தாழ்வும் உயர்வும் காணக்கிடக்கின்றன. (உ–ம்) பழைய ஏற்பாட்டில் கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல்; புதிய ஏற்பாட்டில், சத்துருவைச் சிநேகித்தல்; பழைய ஏற்பாட்டில் பலவித பலிகள்; புதிய ஏற்பாட்டில் இயேசு என்ற ஒரே பலி. எனவே, திருமறையின் ஒருமைப்பாடு வேற்றுமைகளின் மத்தியில் நிலவும் ஒன்று என்க.

## தேங்கி நிற்காத செயலூக்கமுள்ள ஒருமைப்பாடு (Not Static but Dynamic Unity)

திருமறையின் ஒருமைப்பாடு தேங்கி நிற்கும் ஒன்றன்று. அதாவது உயிரற்ற, முன்னேற்றமில்லாத, வளர்ச்சியற்ற ஒருமைப்பாட்டைத் திருமறையில் நாம் சந்திப்பதில்லை. இது செயலூக்கமுள்ள ஒருமைப்பாடாகும். இந்த ஏடுகளில் படிப் படியான வளர்ச்சி இருக்கின்றது. பழைய ஏற்பாட்டைவிட புதிய ஏற்பாட்டில் அதிக சிந்தனை உயர்வு விளங்குகின்றது. எனினும், இது இறைவனைப்பற்றியோ அல்லது மனித வாழ்க்கையினைப்பற்றியோ மனிதனின் சொந்தச் சிந்தனை அல்லது அறிவின் வளர்ச்சியன்று. மனிதனின் இயல்பான, ஆவிக்குரிய வளர்ச்சியென ஒன்றை நாம் திருமறையில் சந்திப்ப தில்லை.

கடவுள் தமது அடியார்மூலம் தம்மையும் மனித வாழ்க்கையையும், பல நிகழ்ச்சிகள், அனுபவங்கள்மூலம் எவ்வாறு அருளிச்செய்தார் என்பதைக்கூறுவதில் திருமறையில் வளர்ச்சி

இருக்கின்றது. வரலாற்று நிகழ்ச்சிகளில் தம்மை வெளிப் படுத்தும் இறைவனை மனிதன் அறியும் அறிவிலும் முன்னேற்றம் இருக்கின்றது. ஆரம்பக்கால அறிவு குறைவுள்ளதாகவும், புதிய ஏற்பாட்டுக் கால அறிவு நிறைவுள்ளதாகவும் காணப் படுகின்றது. ஒரு பொருளில் புதிய ஏற்பாட்டிற்குப் பின்னரும் இந்த அறிவு வளர்ந்துள்ளது எனலாம். இந்த வித்தியாசங்கள் அல்லது முன்னேற்றம் அல்லது வளர்ச்சி இறைவனிலல்ல, தம்மை வெளிப்படுத்தும் அவரை அறியும் அறிவிலேயே இருக் கின்றது.

### பழைய ஏற்பாட்டில் ஒருமைப்பாடு

பழைய ஏற்பாடு உருப்பெற்ற வரலாற்றினைப் படிக்குங்கால், பலவித இலக்கியங்கள் பல பருவங்களில் உருப்பெற்றுப் பழைய ஏற்பாடாக அமைந்துள்ளன என அறிகின்றோம். வரலாறு, கதை, பாடல்கள், உபதேசங்கள், பிரமாணங்கள் போன்றவை ஒன்றிற்கொன்று வித்தியாசமான இலக்கியத் தன்மை உள்ள வைகளாம். ஒரு காலத்தில் பழைய ஏற்பாட்டு இறையியல் (Theology of the Old Testament) என்று கூறுவதே தவறெனக் கருதப்பட்டது. எனினும், சமீப காலத்தில் பழைய ஏற்பாட் டில் நிலவும் ஒருமைப்பாட்டினை உணர்ந்தவர்கள் பழைய ஏற்பாட்டு இறையியல்பற்றி எழுதுகின்றனர். உண்மையில் பழைய ஏற்பாட்டில் நியாயப்பிரமாணத்துக்கும் இறை வாக்குக்குமிடையில் முரண்பாடு இல்லை. ஏனெனில், இறை வாக்காளரின் சிந்தனைகளின் அடிப்படையிலேயே நியாயப் பிரமாணங்கள் எழுதப்பட்டுள்ளன. உயிரற்ற வெறும் பிரமாணத்தைக் கைக்கொள்ளும் மனப்போக்கு மாத்திரமே இறைவாக்காளரின் போதனைக்கு முரண்பட்டதாகும். படைப்பு முதல் மல்கியா வரையுள்ள வரலாற்றின் ஆரம்பக் கட்டத்தில் போதிய தொடர்ச்சிகள் இல்லாவிடினும், பொது வாகக்கூறின், தொடர்பான வரலாறு இவண் காணக்கிடக் கின்றது. 'எகிப்தின் விடுதலையும் வனந்தரப் பயணமும்' பிற்கால இறைவாக்காளர்களால் குறிப்பிடப்படுகின்றன. ஏனெனில், பழைய ஏற்பாடு முழுவதையும் ஒன்றிணைக்கும் முக்கிய நிகழ்ச்சி இதுவே.

ஆதி. 11ம் அதிகாரத்தில் யாவே ஆபிரகாமை அழைத்தமை கூறப்படுகின்றது. அவர் மூலமாக எழும்பும்

இஸ்ரவேலர்மூலம் உலகின் மக்கள் அனைவரும் ஆசீர்வதிக்கப் படுவர் என்பதே அந்த அழைப்பின் நோக்கம். பழைய ஏற்பாடு முழுவதிலும் இந்த இலட்சியத்தின் ஒருமைப்பாடு நிலவுகின்றது. இந்த இலட்சியத்தை நிறைவேற்றுவதற்கு இஸ்ரவேலருக்கு நியாயப்பிரமாணமும், தனி நாடும் தரப்படுகின்றன. இஸ்ரவேலரது வரலாறு முழுவதும் எந்த அளவு இந்நோக்கம் நிறைவேற்றப்பட்டது என்ற கோணத்தில் பழைய ஏற்பாடு முழுவதும் அமைந்திருக்கின்றது. நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படிந்து யாவேயின் சித்தம் நிறைவேறியபோது நாடு அமைதியும் செழிப்புமுற்றது. இந்நோக்கத்தினை மறந்து பிரமாணங்களை மீறினபோது அவர்கள் அந்நியருக்கு அடிமைப் பட்டனர். எனினும், அந்த இலட்சியம் அழியாதபடி அவர்கள் புறஜாதியாருக்கு ஒளியாயிருக்கும்படி யாவே அவர்களைத் திரும்பவும் மீட்கிறார். எனவே, பழைய ஏற்பாட்டு வரலாறு முழுவதையும் இணைத்து ஒருமைப்பாட்டினை அளிப்பதில் இஸ்ரவேலரின் அழைப்பின் இலட்சியம் இடம்பெறுகின்றது.

### பழைய ஏற்பாடும் இயேசுவும்

பழைய ஏற்பாட்டின் ஒருமைப்பாடு இஸ்ரவேலரின் அழைப்பின் இலட்சியத்தில் இருப்பதுபோல, அந்த இலட்சியத்தின் நிறைவேறுதலிலும் ஒருமைப்பாடு இருக்கின்றது. பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேலரது வரலாற்றில் கடவுளின் மீட்கும் செயல் தரப்படுகின்றது. புதிய ஏற்பாட்டில் அதைத் தொடர்ந்து இயேசுகிறிஸ்துவில் கடவுளின் மீட்பின் திட்டத்தின் நிறைவேறுதலும் புதிய இஸ்ரவேலாகிய திருச்சபையின் ஆரம்பமும் தரப்படுகின்றன. எனவே, யூதரது திருமறையாகிய பழைய ஏற்பாடு இயேசுகிறிஸ்துவுக்கு நேராக வழிநடத்துகின்றது எனலாம். இதனால் திருமறை முழுவதும் புனித வரலாறு என்றழைக்கப்படுகின்றது. அதாவது இறைவனின் மீட்பின் செயலை இரு ஏற்பாடுகளும் கூறுகின்றன என்பதாகும்.

அப்படியே பழைய ஏற்பாட்டின் திறவுகோல் இயேசுகிறிஸ்து எனலாம். லூ. 24:32ல் எம்மாவு கிராமத்துக்குச் சென்றவர்கள், 'வழியிலே அவர் நம்மோடு பேசி, வேதாகமங்களை நமக்கு விளக்கிக் காட்டினபொழுது நமது இருதயம் நமக்

குள்ளே கொழுந்துவிட்டு எரியவில்லையா' என்பதில் இந்த உண்மை விளங்குகின்றது. யோ. 5:39ல் இயேசு, 'வேதாகமங்களை ஆராய்ந்து பார்க்கிறீர்கள்; ஏனெனில், அவைகளில் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்கள். என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறவைகள் அவைகளே' என்கிறார். இந்த இடங்களில் இயேசுகிறிஸ்துவின் வெளிச்சத்தில் பழைய ஏற்பாட்டினைப் புரிந்துகொள்ளவேண்டும் என்பது விளங்குகின்றது.

பழைய ஏற்பாட்டின் கருகலான அநேக பாகங்கள் இயேசுகிறிஸ்துவின்மூலம் தெளிவான பொருள் பெறுவதை நாம் காணலாம். அப். 8:30–35ல் பாடனுபவிக்கும் தாசனின் சித்திரம் மந்திரிக்கு விளங்கவில்லை. பிலிப்பு அதனை இயேசுவில் நிறைவேறிய ஒன்றாக விளக்கியபோது அதன் பொருள் தெளிவுபடுகின்றது. அப்படியே ஆமோஸ் தீர்க்கன் கூறும் கர்த்தருடைய நாள், ஏசாயாவின் சமாதானப் பிரபு, எரேமியாவின் புதிய உடன்படிக்கை, எசேக்கியேலின் புத்துயிர்பெறும் இஸ்ரவேல் ஆகியவற்றின் பொருளின் திறவுகோல் இயேசுகிறிஸ்துவே. இவ்வாறு இயேசுகிறிஸ்துவுக்குச் சாட்சி பகருவதிலும் அவரில் பொருள் பெறுவதிலும் பழைய ஏற்பாட்டில் ஒருமைப்பாடு விளங்குகின்றது.

## புதிய ஏற்பாட்டில் ஒருமைப்பாடு

புதிய ஏற்பாடு முழுவதும் இயேசுகிறிஸ்து, அவரது திருச்சபை என்னும் இரு மையப் பொருட்களை அடிப்படையாகக்கொண்டு எழுதப்பட்டுள்ளது. திருச்சபை கிறிஸ்துவின் சரீரமாயிருக்க, இரண்டும் பிரிக்க இயலா தொடர்புடையவை. சமநோக்கு நற்செய்தி நூல்களில் இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கைபற்றிய கூடுதல் விவரங்களும், யோவானின் நற்செய்தி நூலில் அவ்வாழ்க்கைபற்றிய தியான சிந்தனைகளும் காணப்படுகின்றன. அப்போஸ்தலர் நடபடிகளில் உயிர்த்தெழுந்த கிறிஸ்து செயல்படுவதை திருச்சபையின் ஆரம்ப வரலாறு விளக்குகின்றது. திருமுகங்களில் பெரும்பாலானவை பவுலடியாரால் எழுதப்பட்டவை. இவற்றில் கிறிஸ்து, திருச்சபை, திருச்சபையில் மக்கள் வாழ்க்கை, முழு உலகிற்கும் இறைவனின் திட்டம் ஆகிய ஒன்றோடொன்று தொடர்புள்ள உண்மைகள் விளக்கப்

படுகின்றன. தரிசன நூல் புதிய ஏற்பாட்டிற்கும் திருமறை முழுவதிற்கும் இறுதி நூலாய்க் கிறிஸ்துவை நியாயாதிபதியும் அரசனுமாகக் காண்பிக்கின்றது. எனவே, பழைய ஏற்பாட்டை விட புதிய ஏற்பாட்டின் ஒருமைப்பாடு எளிதில் விளங்கு கின்றது. இதன் நூல்கள் அனைத்தும் பெரும்பாலும் ஒரு நூற்றுண்டு காலத்திற்குள்ளேயே எழுதப்பட்டன.

## இரு ஏற்பாடுகளிடையில் ஒருமைப்பாடு

ஏற்பாடுகள் இரண்டாயிருப்பினும் திருமறை ஒன்றேயாகும். இரு ஏற்பாடுகளிடையில் நிலவும் ஒருமைப்பாட்டினைப் பல கோணங்களிலிருந்து விளக்கலாம்.

## நிறைவேறுதலின் ஒருமைப்பாடு

பொதுவாக புதிய ஏற்பாடு, பழைய ஏற்பாட்டின் நிறை வேறுதல் எனப்படுகிறது. ஆரம்பக் கிறிஸ்தவர்கள் தங்களது வாழ்க்கைக் காலத்தில் அவர்கள் அறிந்த திருமறையான பழைய ஏற்பாடு நிறைவேறுவதாகக் கூறினர். அநேக பழைய ஏற்பாட்டு வாக்கியங்கள் இயேசுவின் வாழ்க்கையிலும் திருச் சபையின் வரலாற்றிலும் நிறைவேறியதாக புதிய ஏற்பாட்டில் காணக்கிடக்கின்றன. எனினும், தனிப்பட்ட வாக்கியங்களின் நிறைவேறுதலைவிடவும் மிகவும் ஆழமான பொருளில் நிறை வேறுதலைச் சிந்திப்பது அவசியம்.

இதனை விளக்கும் முன்னர் ஓர் ஆபத்தை இவண் குறிப் பிடுவது நலம். பழைய ஏற்பாட்டினைப் புதிய ஏற்பாட்டோடு ஒருமைப்படுத்தி விளக்குவதில் முற்படிவக் கோட்பாடு (typology) என ஒரு முறை இரண்டாம் நூற்றுண்டு முதல் பல அறிஞரால் உபயோகிக்கப்பட்டுள்ளது. முற்படிவக்கோட்பாடு என்பது புதிய ஏற்பாட்டின் செய்திகள் யாவும் இன மாதிரி களாகப் பழைய ஏற்பாட்டிலேயே குறித்துக் காட்டப்பட் டுள்ளன என்று கருதுங் கோட்பாடு என அகராதி வரையறுக் கின்றது. இதன்படி புதிய ஏற்பாட்டின் அநேக நிகழ்ச்சிகள் பழைய ஏற்பாட்டில் நிழலாட்டமாய்க் காணக்கிடக்கின்றன என்பதாகும். வரையறைப்பட்ட முற்படிவக் கோட்பாட்டிற்கு இடமுண்டு. ஆனல், சில விளக்க உரையாளர்கள் எழுதும்

ஆனால் வரையறையற்ற கற்பனை சார்ந்த முற்படிவக் கோட்பாட்டிற்கு இடமில்லை.

கற்பனை சார்ந்த முற்படிவ முறைக்கு சில எடுத்துக் காட்டுகளை இங்கு கவனிப்போம். பழைய ஏற்பாட்டுக் கிணறுகள் புதிய ஏற்பாட்டு ஜீவ தண்ணீருக்கு அடையாள மானவை. ஆபிரகாமைச் சந்தித்த (ஆதி. 18:2) மூன்று தூதர்கள் திரியேகத்துவத்தின் முன்னடையாளமானவர்கள். ஆபிரகாமின் வீட்டாரின் எண்ணிக்கையாகிய 318 (ஆதி. 14:14) சிலுவையைக் குறிக்கிறது. ஏனெனில், முன்று என்பதற்குரிய கிரேக்க அடையாளம் T போன்றது. இயேசுவின் பெயரின் முதல் இரு எழுத்துக்களும் குறிப்பிட்ட எண்களைக் கூட்டினால் கிடைக்கும் தொகை 18. ஆகவே, 318 என்பது சிலுவையைக் குறிக்கும். 1 இரா. 3:16ல் சாலொமோனின் தீர்ப்பு கிறிஸ்துவின் நியாயத்தீர்ப்பைக் குறிக்கும். ஆதி. 14:18ல் மெல்கிசேதேக்கு ஆபிரகாமுக்கு அப்பமும் திராட்சரசமும் படைப்பது கிறிஸ்து தமது சரீரத்தையும் இரத்தத்தையும் அர்ப்பணம் செய்வதைக் குறிக்கும். இவைபோல் பல எடுத்துக் காட்டுகளைக் கூறலாம். அருளுரையாளர் பலர் இம்முறையைக் கையாண்டு மக்களை வியப்படையச் செய்யக்கூடும். ஆழமான ஆவிக்குரிய உண்மைகளை இவற்றினின்று விளக்கவும்கூடும். எனினும், இது ஒப்புக்கொள்ளக்கூடிய திருமறை விளக்க முறையாகாது.

ஆனால், வரையறைப்பட்ட முற்படிவ முறைக்கு இடமிருக்கின்றது. அதாவது, நற்செய்தி வரலாற்றின் பெரும் நிகழ்ச்சிகளுக்கு நிழலாட்டமான பல முற்படிவங்கள் பழைய ஏற்பாட்டில் இருக்கின்றன என்பது பொதுவான கருத்தாகும். இது புதிய ஏற்பாட்டில் சிறப்பாக நற்செய்தி நூல்களின் ஆக்கியோரின் போக்கிற்குப் பொருத்தமானதே. பழைய ஏற்பாட்டுப் பலி கிறிஸ்துவில் நிறைவேறுகிறது. மேசியா, இறையாட்சி போன்றவை புதிய ஏற்பாட்டில் நிறைவேறுதலும் முழுப் பொருளும் பெறுகின்றன. இயேசுவின் சிலுவை மரணத்தைப் புரிந்துகொள்ள ஏசா. 53ன் துணை தேவை. இயேசுவை மனிதகுமாரன் என்றழைப்பதை விளக்குவதற்கு தானி. 7:13ன் துணை தேவை. இரண்டாம் ஆதாம் என்னும் புதிய ஏற்பாட்டுக் கருத்தைப் புரிந்துகொள்ள முதல் ஆதாம்

பற்றிய அறிவு இன்றியமையாதது. இப்பொருளிலேயே பழைய ஏற்பாட்டில் புதிய ஏற்பாட்டு நிகழ்ச்சிகள், கருத்துக் களின் நிழலாட்டங்கள் இருக்கின்றன என்று கருதுவதே பொருத்தமானது. இயேசுகூட இந்த அடிப்படையிலேயே பன்னிரு கோத்திரப் பிதாக்கள்போல் பன்னிரு அடியாரைத் தெரிந்துகொள்ளுகிறுர்.

நிறைவேறுதல் என்பதனுல் புதிய ஏற்பாடு பழைய ஏற்பாட்டைத் தேவையற்றதாக்கிவிட்டது என்பது பொரு ளாகாது. திருச்சபை வரலாற்றில் பழைய ஏற்பாட்டை அகற்றிவிடச் சிலர் முயற்சித்ததுண்டு. பழைய ஏற்பாட்டின் இடத்தில் இதர சமயங்களிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட கிறிஸ்துவுக்கு ஆயத்தமானவை என்று கருதப்படும் இலக்கிய பாகங்களை வைக்கவும் சிலர் முயற்சித்ததுண்டு. இது தவருன ஒரு கருத்தாகும். ஏனெனில், பழைய ஏற்பாடு புதிய ஏற்பாட்டில் நிறைவேறியபோது, அதனை அகற்றிவிடாமல் அதன் உண்மையை உறுதிப்படுத்தி அதன் உண்மையான முக்கியத்துவத்தைத் தெளிவுபடுத்திற்று. மேலும், நிறை வேற்றப்படுவது நிறைவேற்றுவதை ஓரளவு விளக்கமாகக் காண்பிக்கிறது. (உ—ம்) ஓசியா தன் மனைவியின்பேரில் வைத்த அன்பில் கடவுளின் தன்மையைக் காண்கின்றுன். ஓசியாவின் இந்த அன்பில் கிறிஸ்துவின் அன்பின் நிழலாட்டத்தைக் காண் கின்றோம். எனினும், ஓசியாவின் அன்பு நிழலாட்டமாக மாத்திரமல்ல, கிறிஸ்துவின் அன்பை ஓரளவு விளக்கும் ஒன்றுக அமைந்திருக்கிறது. அவ்வாறே ஆபிரகாமின் விசுவாசம் புதிய ஏற்பாட்டு விசுவாசத்தின் முன்னேடி மாத்திரமன்று, அதனை விளக்கும் தன்மையுள்ளதாகவும் இருக்கின்றது. ஏழைகள், தேவையிலிருப்போர் ஆகியோரைப்பற்றிய மோசேயின் பிரமா ணங்கள், பல சங்கீதங்களில் விளங்கும் பொறுமை, ஏசாயாவில் பாடனுபவிக்கும் தாசனைப்பற்றிய பாகங்கள் ஆகியவை கிறிஸ்துவின் வெளிச்சத்தில் புதிய முறையில் பொருள்பெறு கின்றன. இந்த அளவில் பழைய ஏற்பாட்டில் முற்படிவங்களைக் கண்டால் தவறில்லை எனலாம்.

## வெளிப்பாட்டின் ஒருமைப்பாடு

பழைய ஏற்பாட்டின் ஒருமைப்பாட்டினைச் சிந்திக்குங்கால் இயேசுகிறிஸ்துவுக்கு சாட்சி பகருவதில் ஒருமைப்பாடிருப்பதை

நாம் குறிப்பிட்டோம். இரு ஏற்பாடுகளும் கடவுள் தம்மை உலகுக்கு வெளிப்படுத்தியதின் ஒரே அறிக்கை எனலாம். இந்த வெளிப்பாட்டின் உச்சக்கட்டம் இயேசுகிறிஸ்துவேயாகும். அவரே இரு ஏற்பாடுகளையும் ஒன்ருய் இணைக்கும் மையம் எனலாம். பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசனங்களும் நியாயப் பிரமாணமும் சுட்டிக் காண்பிக்கும் கிறிஸ்துவையும் அவரது திருச்சபையையுமே புதிய ஏற்பாடு கூறுகின்றது. இயேசு தம் பணியினை விளக்குவதற்கு பழைய ஏற்பாட்டு உருவகங்களை உபயோகிக்கின்ருர். (உ-ம்) மனுஷகுமாரன், தேவகுமாரன், மேசியா. தமது ஊழியத்தின் ஆரம்பத்தில் தமது இலட்சியத்தைப் பிரகடனம் செய்ய ஏசா. 61:1,2 ஆகிய வாக்கியங்களையே இயேசு உபயோகிக்கின்ருர். எனவே, இறைவனின் பூரண வெளிப்பாடாகிய இயேசுகிறிஸ்துவில் திருமறையின் அடிப்படையான ஒருமைப்பாடு இருக்கின்றது எனலாம்.

## உபதேச ஒருமைப்பாடு

பழைய ஏற்பாட்டைவிட புதிய ஏற்பாடு முக்கியமானது என்பதில் சந்தேகமில்லை. ஆனல், புதிய ஏற்பாட்டின் அநேக கருத்துக்களையும், புதிய ஏற்பாட்டிற்கு அடிப்படையான, ஆனல் விவரமாகத் தரப்படாத அநேக உபதேசங்களையும் பழைய ஏற்பாட்டில் காண்கின்ருேம். (உ-ம்) படைப்பைப் பற்றி புதிய ஏற்பாட்டில் விவரமான உபதேசம் இல்லை. ஆனல், பழைய ஏற்பாடு கூடுதல் விவரங்களைத் தருகின்றது. அவ்வாறே மனிதன், பாவம், தெரிந்துகொள்ளுதல், உடன்படிக்கை, நியாயப்பிரமாணம், பலி போன்ற புதிய ஏற்பாட்டிற்கு அடிப்படையான அநேக உபதேசங்கள் பழைய ஏற்பாட்டிலேயே காணக்கிடக்கின்றன. எனவே, உபதேச அடிப்படையில் திருமறை முழுவதும் ஒருமைப்பாடு நிலவுகின்றது காண்க.

## முடிவுரை

திருச்சபையின் வழிபாட்டில் இரு ஏற்பாடுகளிலுமிருந்து திருமறைப் பாடங்கள் படிக்கப்படுகின்றன. அருளுரையாளர்கள் பழைய ஏற்பாட்டுப் பொருள்களைப்பற்றி (themes) பேசும்போது புதிய ஏற்பாட்டுச் சிந்தனையோடு உறவுபடுத்திப் பேசுகின்றனர். அப்படியே புதிய ஏற்பாட்டின் அநேக சத்தி

யங்களை விளக்குவதற்குப் பழைய ஏற்பாட்டை துணைகொள்கின்றனர். இவை திருமறை முழுவதிலும் நிலவுகின்ற ஒருமைப்பாட்டையே சுட்டிக் காண்பிக்கின்றன. இவ்வாறு ஒருமைப்பாடுள்ள திருமறை எந்த அளவு திருச்சபைக்கும் நமது விசுவாசத்திற்கும் அதிகாரமுள்ளது என்பதனைத் தொடர்ந்து கவனிப்போம்.

# திருமறையும் திருச்சபையும்

கிறிஸ்தவ விசுவாசத்திற்குத் திருமறை ஆதாரம். ஒரு பொருளில் திருச்சபையே திருமறையைப் பிறப்பித்தது என லாம். திருமறையின் நூல்களைக் காலாகாலத்தில் சேர்த்து, அது இன்றிருக்கும் நிலையை அளித்தது திருச்சபையின் ஆலோ சனை மன்றங்களேயாம். பழைய ஏற்பாட்டு ஆகமங்கள், புதிய ஏற்பாட்டு நூல்கள் இவை அனைத்தும் ஒரு சமூகத்தின் (திருச் சபையின்) சமய அனுபவத்தில் நிலைத்துப் பின்னரே எழுதப் பட்டன. எனினும், திருமறையைப்பற்றிய திருச்சபையின் மனப்போக்கில் வித்தியாசங்கள் பல இருக்கின்றன.

### ரோமன் கத்தோலிக்கச் சபையும் திருமறையும்

ரோமன் கத்தோலிக்கத் திருச்சபையைப் பொறுத்தவரை யில் விசுவாசத்துக்கும் அறநெறிக்கும் முடிவான தீர்ப்பைத் தருவது திருமறைமாத்திரமே என்று ஏற்றுக்கொள்ளுவதில்லை. 'பேரவையில் போப் ஆண்டவர் மூலம் திருச்சபை பேசும்போது திருச்சபைக்கே முடிவான தீர்ப்புச் செய்யும் அதிகாரம் இருக் கின்றது என்பது அவர்களது கருத்து' ('This is the prerogative of the Church speaking through the Pope in council'— William Neil: *The Rediscovery of the Bible*, p. 98). எனினும், ரோமன் கத்தோலிக்கச் சபையின் வழிபாட்டிலும் கொள்கைகளிலும் திருமறை மத்திப இடம்பெறுகின்றது.

ஒரு காலத்தில் எல்லா மக்களும் அவரவர் தத்தம் மொழி யிலே திருமறையைப் படிக்கும் வாய்ப்பினை அளிக்க ரோமன் கத்தோலிக்கச் சபை தயங்கினதற்குக் காரணம் உண்டு. திரு மறையின் சரியான விளக்கத்தை அளிக்கும் அருள், திருச் சபைக்கு மாத்திரமே உண்டு. ஒவ்வொரு மனிதனும் தனக் குச் சரியாகத் தோன்றுவதுபோல் விளக்கம் தர இடமளித் தால் திரிபுக்கொள்கைகள் ஏற்பட்டுவிடும் என்பதே இதற்குரிய

காரணம். சீர்திருத்தக் காலத்திற்குப் பின்னர் திருச்சபையில் ஏற்பட்டிருக்கும் திரிபுக் கொள்கைகள் (heresies), திருச்சபை உட்பிரிவுகள் (sects) போன்றவற்றைக் கவனிக்கும்போது ரோமன் கத்தோலிக்கச் சபையின் இந்த மனநிலையில் உண்மை இருக்கின்றது எனலாம்.

மேலும், திருமறைத் திறனாய்வுபற்றியும் (Biblical criticism) ரோமன் கத்தோலிக்கச் சபை மிகவும் விழிப்பாயிருக்கின்றது. பெரும்பாலும் அவர்களது நிலை திருமறையை எழுத்தின்படி விசுவாசிக்கிறவர்களின் (fundamentalists) போக்குப்போலவே இருக்கின்றது. எனினும், இக்காலத்தில் அவரவர் மொழியில் திருமறையை மக்கள் படிக்க வாய்ப்பளிக்கவேண்டும்; திருமறைத் திறனாய்வு திறம்படச் செய்து, அது தரும் முடிவுகளை ஏற்றுக்கொள்ளவேண்டும்; திருமறை முழுவதையும் அப்படியே எழுத்தின்படி விசுவாசிக்க இயலாது என்ற சிந்தனை ரோமன் கத்தோலிக்கச் சபையிலும் வலுப்பெற்று, திருச்சபை அங்கீகாரத்தோடே மக்கள் இக்கோணத்தில் திருமறை பயிலும் வாய்ப்புப் பெற்றுள்ளனர்.

இது நிற்க, ரோமன் சபை திருமறையைப்போல் திருச்சபையின் பாரம்பரியங்களுக்கும் (traditions) முக்கியத்துவம் அளிக்கின்றது. அவற்றின் அடிப்படையிலும் திருச்சபை, பேரவைத் தீர்மானங்களின் அடிப்படையிலும் புதிய கொள்கைளை உருவாக்க ரோமன் கத்தோலிக்க சபை தயங்குவதில்லை. ரோமன் திருச்சபையில் மரியாளுக்கு அளிக்கும் முதலிடம் இவ்விதமாக பாரம்பரியங்களிலும், திருச்சபை மாமன்றங்களிலும், தீர்மானங்களிலும் பெருமளவில் அடிப்படை பெற்றுள்ளதாகும்.

### சீர்திருத்தச் சபைகளும் திருமறையும்

திருமறையைப்பற்றிச் சீர்திருத்தச் சபைகளின் முக்கியக் கருத்துக்கள் இரண்டு உள:

1. விசுவாசம், ஒழுக்கம் (Faith and Morality) ஆகியவற்றைப் பொறுத்தவரையில் திருமறையின் தீர்ப்பே முடிவானது: ரோமன் கத்தோலிக்கச் சபையினரைப் பொறுத்தவரையில் திருமறையைப்போலவே திருச்சபையின் அங்கீகாரம்பெற்றப் பேரவையின் தீர்மானங்கள், திருச்சபைப் பிதாக்களின் நூல்கள் ஆகியவை அடங்கிய பாரம்பரியங்கள் முக்கியமானவை என

ஏற்கெனவே கூறியுள்ளோம். இவற்றின் துணைகொண்டும் அவர்கள் கொள்கைகளை உருவாக்குகின்றனர். ஆனால் சீர் திருத்தச் சபைகள் திருமறையின் முழு ஆதரவின்றி விசுவாசத் தையும் வாழ்க்கை நெறியையும்பற்றிய கொள்கைகளை ஏற்றுக் கொள்ளுவதில்லை. திருமறையின் மொத்தமான உபதேசத் திற்கு இசைவானவைகளையே ஏற்றுக்கொள்ளுகின்றனர். இந்தக் காரியத்தில் ரோமன் கத்தோலிக்கச் சபை திருமறை யைத் திருச்சபைக்கு அடிமைப்படுத்திவிட்டதாகச் சீர்திருத்தச் சபையினர் கருதுகின்றனர்.

**2. தனி மனிதனுக்குத் திருமறையினைப் படிக்கவும் பரிசுத்த ஆவியானவரின் பேருதவியினால் விளக்கவும் உரிமையுண்டு:** திருமறை கடவுளின் வார்த்தையாக அவரை வெளிப்படுத்தித் திருச்சபையினரின் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக இறைவ னால் அருளப்பட்டிருக்கின்றது. அவரது ஆவியர் திருமறை யைச் சபையினருக்கு விளங்கச்செய்கின்றவர் என்று திருமறை கூறுகின்றது. ஆகையால் இறைவனின் மக்கள் திருமறை யைப் பயிலும்போதும் விளக்கும்போதும் அவர் துணைநின்று வழிநடத்துகின்றார். ஆகவே, தனி மனிதனின் இந்த உரிமையை அவனுக்கு அளிக்கவேண்டும். மார்ட்டின் லுத்தர் போன்ற சீர்திருத்தப் பெரியார் தோன்றுவதற்கு இது காரண மாயிற்று. எனினும் தனி மனிதன் தனித்தவனாக அல்ல, திருமறையைத் தனக்குத் தந்த திருச்சபையின் அங்கமாகவே அதனைப் புரிந்துகொள்ளவும் விளக்கவும் முற்படவேண்டும். எனவே, திருச்சபையினுள் திருமறை விளக்கத்தின் உண்மை களை அறிந்தவனாகவே தனி மனிதன் திருமறையை அணுக வேண்டும்.

செயலளவில் சீர்திருத்தச் சபையினரும் திரிபுக் கொள்கை யினைப் பழிப்பதற்கு அனுகூலமாகத் திருச்சபை திருமறையின் சரியான விளக்கமென்று கூறியதையே ஒப்புக்கொள்ளுகின்ற னர். இவ்வாறு கூறும்போது செயலளவில் தனி மனிதனின் உரிமை வரையறுக்கப்படுகின்றது. இவ்விதக் கட்டங்களில் திருமறை திருச்சபைக்குக் கீழ்ப்பட்டுவிடுவதுபோல் தோன்று கிறது. மேலும் தனி மனிதனுக்குப் படிக்கவும் விளக்கவும் உரிமை அளிப்பதின் தீய விளைவாகப் பலவித விநோதமான கொள்கைகளும் சபை உட்பிரிவுகளும் தோன்றியுள்ளன.

(உ—ம்) பல பிரிவினரான பெந்தெகொஸ்தே சபைகள், ஏழாம் நாள் ஆசரிப்புக்காரர்கள், யெகோவா சாட்சிகள் முதலியன. எனவே, தனி மனிதனுக்கு விளக்க உரிமை இருப்பினும், திருமறையின் நூல்கள் எழுதப்பட்ட காலம், சூழல், அவற்றின் வரலாறு, திருச்சபையின் திருமறை அனுபவம்பற்றிய நீண்ட பாரம்பரியம் ஆகியவற்றை அறியாதபடி விளக்கம் தருவதில் பேராபத்து இருக்கின்றது என்பதனை ஒப்புக்கொள்ளவேண்டும்.

### கடவுளின் வார்த்தையே முக்கியம்

இவ்வாறு திருச்சபையின் இரு பெரும் பிரிவினரிடையில் திருமறையைப்பற்றி நிலவும் வற்புறுத்தல் வேற்றுமைக்குப் பதில் என்னவெனில், திருச்சபையும் திருமறையும் அல்ல, கடவுளின் வார்த்தையே முக்கியமானது என்பதாகும்.

இறைவன் பலமுறைகளில் மக்களோடு பேசுகின்றார். இயற்கையின் எழில், நியதிகள், கவிஞர்கள், சித்திரக்காரர்கள், இசை மேதைகள், விஞ்ஞானிகள், தத்துவர்கள் போன்றவர்களின் ஆக்கப் பணி, சீர்திருத்தவாதிகளின் மனச்சான்று, வரலாற்று நிகழ்ச்சிகள் ஆகியவைகள் மூலமாக அவர் பேசுகின்றார். எல்லாச் சமயங்களிலும் கடவுள் மக்களிடம் அவரவரது சந்தர்ப்பச் சூழலில் பேசுகின்றார் எனலாம். ஆனால் இஸ்ரவேலரின் வரலாற்றில் இறைவாக்காளர்கள், ஞானியர், கவிஞர்கள் என்பார் தங்களது மக்களின் வரலாற்றையும் தங்கள் வாழ்க்கைகளின் அனுபவத்தையும் விளக்குமிடங்களில் இறைவனது வார்த்தை உயர்வான முறையில் தொனிக்கின்றது.

ஆமோஸ், ஏசாயா, எரேமியா போன்ற இறைவாக்காளருக்கு மிகவும் உயரிய முறையில் கடவுளின் வார்த்தை வந்ததைக் கவனிக்கும்போது அது அவர்களின் சுய சிந்தனையின் பலனன்று, அது மனிதரது கொடிய நிலைக்கு வருந்தி இறைவனிடமிருந்து வந்த வார்த்தை என்பது உறுதிப்படுகின்றது. எபிரேயர் நிருப ஆக்கியோன் கூறுவதுபோல் பூர்வகாலத்தில் பங்கு பங்காகவும், வகைவகையாகவும் இறைவாக்காளர்கள், ஞானியர், கவிஞர்கள் ஆகியோர் மூலமாகத் தமது வார்த்தையை அருளிச்செய்தார். இதில் மனுக்குலத்திற்குத் தமது சித்தத்தை அவர் வெளிப்படுத்தினார்.

ஆனால், எபிரேயர் திருமுக ஆசிரியர் கூறுவதுபோல் "இந்த கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார்" அல்லது புனிதர் யோவானின் நற்செய்தி நூல் உரைப்படி வார்த்தையானவர் மாம்சமானார். இறைவாக்காளர்கள் மூலம் சிறிதளவாக வெளிப்படுத்தப்பட்ட இறைவனின் சித்தமும் நோக்கமும் வரலாற்றில் குறிப்பிட்ட கட்டத்தில் ஒரு மனித வாழ்க்கையில் செவ்வனே முழுமையாக வெளிப்படுத்தப்பட்டது.

இவ்வாறு கடவுள் தம்மை வெளிப்படுத்தும் வரலாற்றின் உன்னதக் கட்டமாக, அவரது வார்த்தையாக அல்லது செய்தியாக இயேசு காட்சியளிக்கின்றார். "இயேசு செய்தவை, அவர் பேசியவை, அவர் எப்படி இருந்தாரோ, எப்படி இருக்கிறாரோ இவை அனைத்தும் மனிதனுக்குக் கடவுளின் வார்த்தையாக இருக்கின்றது" ("What Jesus did and said and was and is, constitute the word of God to man"—William Neil, p. 100). இந்த வார்த்தையின் அறிக்கையே திருமறை; இதன் பாதுகாவலன் திருச்சபை. ஆனால் திருச்சபையும் திருமறையுமல்ல முதன்மையானவை; கிறிஸ்துவாகிய கடவுளின் வார்த்தையே முதன்மையானவர். திருச்சபையும் திருமறையும் ஒன்றுபோல் கிறிஸ்துவுக்குச் சாட்சியிட்டு அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கின்றன என உல்லியம் நீல் கூறுகின்றார்.

### திருச்சபையும் திருமறையும், திருமறையும் திருச்சபையும்

வரலாற்று அடிப்படையில் படிக்குங்கால், பழைய ஏற்பாட்டுத் திருச்சபை என்றழைக்கப்படும் யூத மக்களின் வாழ்க்கையும் சமய அனுபவமுமே யூதத் திருமறையின் ஆகமங்களை எழுதுவதற்குக் காரணமாயிருந்தன. காலாகாலத்தில் கடவுள் தங்கள் வரலாற்றில் செயலாற்றி மக்கள் என்றழைக்கப்படத் தகுதியற்றத் தங்களை ஒரு மக்கள் தொகுதியாக்கி, ஒரு நாட்டின் அமைத்ததை இஸ்ரவேலர் உணர்ந்து தங்கள் வரலாறு முழுவதையும் கடவுளின் செய்கை (act of God) என்ற அடிப்படையில் எழுதினார். நியாயப்பிரமாணம் அவர்களுக்கு இறைவனின் திருச்சித்தத்தின் வெளிப்பாடாக அருளப்பட்ட வாழ்க்கை நெறியாயிருந்தது. இறைவாக்காளரின் ஆகமங்களும், ஞான நூல்களும் அவர்களுக்கு வரவிருக்கும்

விடுதலையின் வாக்குத்தத்தங்களாயிருந்தன. ஆகவே பழைய ஏற்பாட்டில் மக்களும் திருமறை நூல்களும் ஒருவரை விட்டு ஒருவர் பிரிக்கப்பட இயலாத அளவு இணைந்து நின்றனர்.

இவ்வாறே புதிய ஏற்பாட்டினைப் பொறுத்த அளவில் ஆதிச் சபையினர், கிறிஸ்து உலக மீட்பர் எனப் பிறருக்கு அறிவித்தனர். இதனைக் கேட்டு ஏற்றுக்கொண்டோரை விசுவாசத்திலும் உபதேசத்திலும் கூட்டுறவிலும் உறுதிப்படுத்துவதற்கு இயேசுவின் உபதேசங்கள், வாழ்க்கை நிகழ்ச்சிகள், பவுல் போன்றவர்களின் கடிதங்கள், இதர இலக்கியங்கள் எழுதப்படவும் சேர்த்து இணைக்கப்படவும் நிகழ்ந்தன. இந்தப் பணியினைச் செய்தவர்கள் யூதரது ஒப்புக்கொள்ளப்பட்ட சமயத் திருமறை நூல்களில் கிறிஸ்துவின் வருகைக்கான ஆயத்தம் இருப்பதைக் கண்டனர். எனவே பழைய, புதிய ஏற்பாட்டு நூல்கள் இணைக்கப்பட்டுத் திருமறை உருவெடுத்தது. திருச்சபையின் விசுவாசம் பரிசுத்த ஆவியானவருக்குள் திருமறையினைத் தந்தது. திருமறையின்மூலம் திருச்சபையின் விசுவாசம் போஷிக்கப்பட்டுப் பலப்படுகின்றது.

இக்காரணத்தினால் திருச்சபையின் வாழ்க்கையோடு சம்பந்தமில்லாத ஒருவிதமான திருமறை கிறிஸ்தவத்தைப்பற்றிப் பேச இடமில்லை. தனிக் கிறிஸ்தவர்களின் நற்செய்தி பணியின் மூலம் பலர் தாங்களாகவே திருமறையில் கிறிஸ்துவைச் சந்தித்து அவரை ஆண்டவரும் மீட்பருமாய் அறிந்து ஏற்றுக்கொண்டு திருச்சபையில் சேர்ந்தனர், இன்னும் சேருகின்றனர் என்பது உண்மை. இதனால் திருச்சபையின்றி திருமறை செயலாற்றும் என்று சிந்தித்து இரண்டையும் பிரிப்பது தவறு. மீட்பின் அனுபவம் தனி மனிதனுக்கும் இறைவனுக்குமிடையில் திருமறை அடிப்படையில் ஏற்படும் ஒன்றாய் மாத்திரம் இராமல், அது திருச்சபையினுள் இறைவனுக்குக் கீழ்ப்படிந்து தொழுகையினாலும் அவரது எழுதப்பட்ட வார்த்தையாகிய திருமறையினாலும் போஷிக்கப்படுவதாகும்.

எனினும், கடவுளின் வார்த்தையின் வெளிச்சத்தில் திருச்சபை எப்பொழுதும் சீர்திருத்தவும், புதுப்பிக்கவும்பட வேண்டும். ஏனெனில், கடவுளின் வார்த்தை தேங்கி நிற்கும் ஒன்றன்று; அது செயலூக்கமுள்ளது. திருச்சபை கடவுளுடைய வார்த்தையினால் நியாயந்தீர்க்கப்படுகிறபடியால்

அதன் அமைப்புகளும் வாழ்க்கையும் எப்பொழுதும் புதுப்பிக்கப்படவேண்டும். கடவுளின் வார்த்தையால் புதுப்பிக்கப்படும் அனுபவம் திருச்சபைக்கு இல்லையேல் திருச்சபை தேக்கநிலை அடைந்து காலத்துக்குப் பொருந்தாத ஒரு நிறுவனமாகிவிடும். கடவுளின் வார்த்தையினுல் புதுப்பிக்கப்படும் திருச்சபை உயிருள்ள ஓர் இயக்கமாக உலகிற்கு இன்றியமையாத ஒன்றுகச் செயலாற்றுகின்றது. திருச்சபைக்கு இந்த அனுபவம் இன்றியமையாதது. ஏனெனில், திருச்சபை திருமறையைத் தந்தபோதிலும், அது திருமறைக்குக் கீழேயே செயலாற்றுகின்றது.

இந்திய நாட்டில் இயங்கும் திருச்சபையின் அமைப்புகள், தொழுகை முறைகள், நிறுவனங்கள், வாழ்க்கை முறைகள் ஆகியவை பெருமளவில் மேனுட்டிலிருந்து இறக்குமதியானவை. கடவுளின் வார்த்தை இன்றைய ஜனநாயக, இந்தியச் சூழ்நிலையில் இவைகளை எவ்வாறு புதுப்பிக்கவோ மாற்றியமைக்கவோ வழிநடத்துகிருர் என அறிந்து செயலாற்ற இந்தியத் திருச்சபை முன்வரவேண்டும். தமிழ் நாட்டில் மொழிப்பற்று உயர்ந்து நிற்கும் இந்நாட்களில் திருச்சபை தனது பணியை, இம் மொழிப்பற்றினை மனத்திற் கொண்டு செய்ய ஆவியானவர் கடவுளின் வார்த்தைமூலம் தூண்டுகின்ருரா என்றறியவேண்டும். தென் இந்தியாவில் இயங்கும் சபைகள் இன்னமும் நிறுவனத் திருப்பணிக்கு அளவுக்கு மிஞ்சி முக்கிய இடம் அளிக்கவேண்டுமா என கடவுளின் வார்த்தையின் வெளிச்சத்தில் சிந்திக்கவேண்டும். இவ்வாறு திருமறையை ஒரு நிகழ்காலச் செய்தி தரும் நூலென உபயோகித்தால் திருச்சபை மக்கள் வாழ்க்கையில் அது இன்றியமையாத இடம்பெற்றுவிடுகின்றது.

மேலும் ஒரு பொருளில் திருச்சபையினுள்ளேயே திருமறையைச் சரிவர அறிய இயலும் எனத் துணிவுடன் கூறலாம். கிறிஸ்தவரல்லாதவர்கள் திருச்சபையின் கூட்டுறவுக்கு வெளியே நின்று திருமறையின் அறநெறியினைப் பயின்று, அதனைப் பாராட்டக்கூடும்; இலக்கிய மேதைகள் அதன் இலக்கியச் சிறப்பை உணர்ந்து சிலாகித்துக் கூறலாம்; வரலாற்ருசிரியர்கள் அதன் வரலாற்று உண்மைகளை உயர்வாக எடுத்தியம்பலாம். புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள்

அதன் பல சிறப்புகளைக் காண்பிக்கலாம். ஆனால், திருமறையின் ஆழமான உண்மையைத் திருச்சபையினுள் அதன் அங்கமாகிய கிறிஸ்தவனே உணர்ந்து அனுபவிக்க இயலும். ஏனெனில், இது அவனுக்காக விசுவாசத்திலிருந்து விசுவாசத்துக்கு எழுதப்பட்ட நூல். அதாவது, இதனை எழுதியவர்கள், இயேசுவைத் தங்களது வாழ்க்கைக்கும் உலகின் வரலாற்றிற்கும் ஆண்டவரும் மீட்பருமாவார் என்னும் அனுபவம் சார்ந்த விசுவாசமுள்ளவர்களாய், இதனைப் படிக்கின்றவர்கள் இந்த விசுவாசத்தினை அடையவேண்டும் என்ற நோக்கத்தோடு எழுதினர்.

பாகம் 5

# திருமறை விளக்கம்

# இறையியல் நோக்கு

## திருமறையின் வரலாறு

திருமறை பெருமளவில் ஒரு வரலாற்று நூல் என்றும், அதன் வரலாறு பொதுவாக நம்பத்தக்கது என்பதற்கு அகச் சான்றுகள் புறச்சான்றுகள் இருக்கின்றன என்றும் நாம் முன்னர் கவனித்தோம். ஆனால், திருமறையின் வரலாறு தனி வரலாறு என்பதற்காக எழுதப்படாமல், ஒரு தனிப்பட்ட கோணத்திலிருந்தும் எழுதியவர்களின் சில அடிப்படை நம்பிக்கைகளின் சார்பிலும் எழுதப்பட்டது என்பது மிகவும் முக்கியமான உண்மையாகும். நிகழ்ச்சிகளில் ஆர்வம் கொண்டல்ல, நிகழ்ச்சிகளின் பொருளில் ஆர்வம் கொண்டே நிகழ்ச்சிகளை அவர்கள் எழுதுகின்றனர். ஆகவே, சம்பவமும் (events), அதன் பொருளும் (meaning) சேர்த்துத் தரப்படுகின்றன.

## வரலாற்றில் இறையியல்

ஆகவே, திருமறையை ஒரு வரலாற்று நூல் என்ற கோணத்திலல்ல, ஓர் இறையியல் நூல் அல்லது இறைவனைப் பற்றிய ஒரு நூல் என்ற முறையில் படிக்கவேண்டும். இதில் காணப்படும் வரலாறு, விஞ்ஞானம் போன்றவை ஆக்கியோரின் இறையியல் நோக்கத்துக்குத் தேவைப்பட்ட அளவு உபயோகப்படுத்தப்பட்டுள்ளன. ஒரு பொருளில் வரலாறு எழுதும் எந்த ஆக்கியோனும், ஏதாவது ஒரு கோணத்திலிருந்துதான் எழுதுகின்றான். திருமறை வரலாறு மிகவும் தெளிவான முறையில் இறையியல் நோக்கோடு எழுதப்பட்டுள்ளது. திருமறையில் தரப்படும் நிகழ்ச்சிகள் மனிதர் நடுவில் செயலாற்றும் இறைவனின் கரத்தைக் காண்பிக்கின்றபடியால் மாத்திரமே அவை எழுதப்பட்டன.

ஊர் என்ற கல்தேயர் நாட்டிலிருந்து ஆபிரகாமும், அவனைச் சேர்ந்தவர்களும் புறப்பட்ட செயல், அக்கால நாடோடி மக்களின் வாழ்க்கை முறையினைக் கவனிக்குங்கால், இடம்பெயர்ந்து செல்வது ஒரு சாதாரண நிகழ்ச்சியாகும். ஆனல், ஆதியாகமம், எபிரேயர் திருமுகம் ஆகியவற்றின் ஆக்கியோரின் பார்வையில் (எபி. 11:8எ.) கடவுளின் அழைப்பினைப் பெற்றவர்களாகவே ஆபிரகாமும், அவனைச் சேர்ந்தவர்களும் புறப்பட்டுப் பயணமாகின்றனர். யோசேப்பின் சகோதரர் உணவுதேடி எகிப்துக்குச் செல்வது அக்காலப் பொருளாதார வாழ்க்கையில் சாதாரண நிகழ்ச்சியாகும். ஆனல், அதனை எழுதியவர்களின் பார்வையில் ஆபிரகாமின் பின்சந்ததியாருக்கு உணவூட்டி அவர்களைப் பாதுகாப்பதற்குக் கடவுளின் திட்டத்தின் ஒரு பாகமாக அது அமைந்திருந்தது (ஆதி. 45:5). இஸ்ரவேலர் எகிப்திலிருந்து தப்பி ஓடுதல், கடவுள் தமது மக்களின் சார்பில் தலையிட்டு ஆச்சரியமாக அவர்களை விடுவிக்கும் செயலாக விவரிக்கப்படுகின்றது.

இவ்வாறே கானன் முற்றுகை, நியாயாதிபதிகளின் சேவை, பிற்கால அரசர்களின் வரலாறுகள் ஆகியவைகளும் இறையியல் நோக்கத்தோடேயே எழுதப்பட்டிருக்கின்றன.

## இறைவாக்காளரின் போதனை

யோசுவா, நியாயாதிபதிகள், 1,2 சாமுவேல், 1,2 இராஜாக்கள் ஆகிய நூல்களை 'முந்தின இறைவாக்காளர் ஆகமங்கள்' என்று எபிரேய மக்கள் பெயரிட்டதாக நாம் கூறியுள்ளோம். ஏனெனில், இறைவாக்காளர் ஆமோஸ் போன்றவர்களின் உபதேசத்தின் அடிப்படையில் இந்நூல்கள் எழுதப்பட்டன. அதாவது, மக்கள் கடவுளின் பிரமாணத்துக்குக் கீழ்ப்படிந்தபோது சீரும் சிறப்பும் பெற்றனர்; அவருக்குக் கீழ்ப்படியாதபோது தண்டிக்கப்பட்டார்கள் என்பதாகும். மேற்கூறிய நூல்களின் வரலாறு இந்தக் கருத்தின் அடிப்படையில் எழுதப்பட்டிருப்பதனை நாம் எளிதில் காணலாம்.

இதன் பலனாக இந்த நூல்களில் அடங்கியிருக்கும் வரலாற்றிற்கும், இதர வரலாறுகளுக்கும் பெரிய வித்தியாசம் காணப்படுகின்றது. சாதாரணமாக வரலாற்றாசிரியர்களுக்கு முக்கியமானவைகளாகத் தோன்றுபவை, இவர்களுக்கு முக்கியமாகத்

தோன்றவில்லே. ஆகையினுல் நிகழ்ச்சிகளின் காலம், யுத்தங்கள் ஆகியவைகள் நாம் எதிர்பார்க்கும் முறையில் விவரிக்கப்படவில்லே. ஆகாப்–நாபோத் தோட்டக்கதை சாதாரண வரலாற்ருசிரியனுக்கு முக்கியமானதன்று. ஆனுல், நமது ஆக்கியோனுக்கோ அது அதிமுக்கிய நிகழ்ச்சியாகவும் கடவுளின் (1 இரா. 21) நீதியைப் புறக்கணித்த அரசனின் வீழ்ச்சிக்குக் காரணமாகவும் அமைகின்றது. ஆகாபின் தந்தை உம்ரி இஸ்ரவேலிலே மிகவும் புகழ்பெற்ற அரசன். நூற்றைம்பது ஆண்டுகளுக்குப் பின்னர் அசீரிய ஏடுகளில் பலஸ்தீனு உம்ரியின் நாடு என்று குறிப்பிடப்படுகின்றது. ஆனுல், நமது ஆக்கியோன் அன்னவருக்கு ஆறு வாக்கியங்களும் (1 இரா. 16:23–28), அவன் மகன் ஆகாபுக்கோவெனில் ஆறு அதிகாரங்களும் இடமளிக்கின்ருர் (1 இரா. 16:29—22:40). வரலாற்ருசிரியர்கள் பார்வையில் உம்ரி மிகவும் முக்கியம் வாய்ந்தவர்; ஆகாப் மிகவும் சாதாரண ஓர் அரசன். எனினும், அவன் யாவே வணக்கத்துக்கு எதிர்த்து நின்றபடியாலும், பாகாலின் இறைவாக்காளர் எலியாவோடே போராடின படியினுலும் நமது ஆக்கியோனுக்கு அவன் மிக முக்கியமானவனுவான்.

### வரலாற்றின் பொருள்

எனவே, திருமறை வரலாற்றின் பொருளேக்கூறும் ஒரு நூல். இஸ்ரவேலரின் வனுந்தரப் பயணம் முதல், இயேசு கிறிஸ்துவின் காலம் வரை அவர்களது வரலாற்றில் நிகழ்ந்தவை உலகில் எந்தச் சிறிய நாட்டின் மக்களுக்கும் நேரிடக்கூடியவைகளே. இஸ்ரவேலரது வரலாற்றின் அரசியல், பொருளாதார நிலே போலவே மற்ற நாடுகளிலும் நிலேமை இருந்தது. ஆனுல், இஸ்ரவேலில் மோசே முதல் அநேக பெருந் தலேவர்கள் தொடர்பாக எழும்பி அவர்களது வரலாற்றை உருவாக்குவது கடவுளின் இரக்கமும் நீதியுமாகும் என்று காண்பிக்கப்படுகின்றது.

புதிய ஏற்பாட்டிலும் இந்த இறையியல் போக்கினுல் ஆக்கியோன்கள் சில சம்பவங்களேத் தெரிந்துகொள்ளுகின்றனர், சிலவற்றை விட்டுவிடுகின்றனர். நற்செய்தி நூல்களே எழுதியவர்கள் இயேசுவின் வாழ்க்கையைப்பற்றிய ஒரு முழு

வரலாற்றை எழுதுவதற்காகத் தங்கள் நூல்களை எழுதவில்லை. அவர்கள் எழுதும் வரலாறு மிகவும் உண்மையானது என்பதை நாம் மறுப்பதில்லை. ஆனால், வரலாறு எழுதும்போது நற்செய்தி பரப்பும் நோக்கத்தோடேயே எழுதுகின்றனர். அதாவது இயேசு, வாழ்க்கைக்கும் வரலாற்றிற்கும் ஆண்டவரும் மீட்பருமாயிருக்கிறார் என்பதை அறிவிப்பதற்காக அவை எழுதப்பட்டன. இதனாலேயே இயேசுவின் இளமைப் பருவத்தைப்பற்றி அவர்கள் எழுதவில்லை எனலாம். அப்படியே இயேசுவின் வீட்டு வாழ்க்கை, உணவு, உடை, தோற்றம் முதலியவைகளும் நற்செய்தி பரப்பும் பணிக்குச் சிறப்பான முக்கியத்துவமுள்ளவைகளல்ல. அவற்றினையும் அவர்கள் விவரமாக எழுதவில்லை. இயேசுவின் உவமைகள், அற்புதங்கள், பிறப்பு, திருமுழுக்கு, பாடு, மரணம், உயிர்த்தெழுதல் ஆகியவற்றில் இறைவன் வல்லமையாகச் செயலாற்றி உலகைச் சந்தித்தார் என்று காண்பிப்பதே ஆக்கியோன்களின் நோக்கமாயிருந்தது.

மா. *4:35*ல், புயல் காற்றடித்த அந்த இரவில் என்ன நடந்தது என்பதுபற்றி பலர் கருத்து வித்தியாசங்கள் தெரிவிக்கக்கூடும். ஆனால், எழுதியவருக்கும், நற்செய்தி பரப்பும் தொண்டர் ஒவ்வொருவருக்கும் சங். **107:23**பி. பகுதியில் கூறப்படுவதுபோல் புயலை அமர்த்தும் சிருஷ்டிகரின் வல்லமை மேசியாவில் விளங்கிற்று என்பதும், அதே வல்லமையால் மனிதரது வாழ்க்கையின் புயல்களும் அமர்த்தப்படலாம் என்பதும் உறுதியாகும். அவ்வாறே மறுரூப மலை நிகழ்ச்சியில் இயேசுவின் மேசியா தத்துவம் (Messiahship) அவரது அடியார் முன்னிலையில் உறுதிப்பட்டது என்பதும், நியாயப் பிரமாணமும் தீர்க்கதரிசனமும் இயேசுவில் நிறைவேற்றப் பட்டு புதிய உடன்படிக்கை அருளப்படுகின்றது என்பதும் எழுதியவரின் உறுதியான விசுவாசம். மத்தேயு சுவிசேடகன் பழைய ஏற்பாட்டு வாக்கியங்களின் நிறைவேறுதல்கள் என அநேக நிகழ்ச்சிகளைக் குறிப்பிடுவதும் இந்த இறையியல் உண்மையினாலேயே எனலாம்.

இவ்வாறே பெந்தெகொஸ்தே நாளின் நிகழ்ச்சியின் அறிக்கையிலும், சம்பவமும் விளக்கமும் இணைந்து நிற்பதைக் காணலாம். இயேசுவின் ஊனுடல் வாழ்க்கை நிறைவேறிய

பின்னர் அவரது அடியார் ஒன்றுகூடி ஜெபித்து இவற்றின் பொருள் என்ன என்று தீவிரமாகச் சிந்திக்க முற்படுகின்றனர். அவரது வாழ்க்கை, போதனை, மரணம், உயிர்த்தெழுதல் ஆகியவற்றைத் தீர்க்கதரிசனங்களோடு இணைத்துப் படிக்கும் போது, ஓர் ஆழமான இறை அனுபவம் அவர்களுக்கு ஏற்படுகின்றது. இதுவே அப்போஸ்தலர் 2ம் அதிகாரத்தில் விவரிக்கப்படுகின்றது (அப். 2:1 முதல்). இதிலிருந்து நற்செய்தி பரப்பும் பணியில் அவர்கள் தீவிரமாக உலக அரங்கினுள் இறங்குகின்றனர். அவர்களுக்குக் கிடைத்த தூய ஆவியரின் ஆற்றலால், புதுமொழியாகிய அன்பின் மொழியால் அவர்கள் மக்களைக் கடவுளோடு ஒப்புரவாக்கும் பணியில் இறங்குகின்றனர்.

ஆகவே, திருமறையில் வரலாறு முக்கிய இடம்பெறுகின்றது என்பது உண்மையேயாயினும், அதே வேளையில் அது இறையியலுக்குக் கீழ்ப்பட்டே எழுதப்படுகின்றது என்பதை மறத்தலாகாது. ஏனெனில், கடவுளின் செயல்களை வரலாற்று அரங்கில் தெளிவாகக் காண இயலும் என்பது, வரலாற்றை எழுதியவரின் ஆணித்தரமான விசுவாசமாகும்.

## இறையியல் சார்புள்ள விஞ்ஞானம்

எப்படி திருமறை ஒரு வெறும் வரலாற்று நூலல்லவோ, அப்படியே இது ஒரு விஞ்ஞான நூலுமன்று. ஆகவே, திருமறையில் காணக்கிடக்கும் விஞ்ஞானமும் சமய, ஒழுக்க நோக்கத்துடன் எழுதப்பட்டதாகும். ஆதியாகமம் முதல் அதிகாரங்கள், அனைத்தின் தோற்றுவாயைக் கூறும் விஞ்ஞான அதிகாரம்போல் காட்சியளிக்கின்றன. வரலாற்றை வரலாறு என்பதற்காகவே எழுதாததுபோல, விஞ்ஞானமும் விஞ்ஞானம் என்பதற்காக எழுதப்படவில்லை. ஆகையால், திருமறை விஞ்ஞானம் சரியானது என்று செயற்கையான முறைகளை உபயோகித்து, இக்கால விஞ்ஞான அறிவோடு அதை ஒப்புரவாக்க முயற்சிக்கத் தேவையில்லை.

மனிதனது மீட்புக்கான கடவுளின் திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு ஒரு முகவுரையாகவே ஆதியாகமத்தின் ஆரம்ப அதிகாரங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அகிலத்தில் மனிதனின் இடம் என்ன, கடவுளோடு அவனுக்குள்ள சரியான

உறவு என்ன என்பதை விளக்குவதற்குப் படைப்பின் சித்திரம் ஆரம்பத்தில் வைக்கப்படுகின்றது. புதிய ஏற்பாட்டையும், அதில் விளங்கும் மீட்பின் செயலையும் புரிந்துகொள்வதற்கும் இது இன்றியமையாத பின்னணியுமாகும்.

இத்தகைய திருமறைக்கு திருச்சபையில் அளிக்கப்படும் இடம் மிக முக்கியமானது. ஏனெனில், சிறப்புள்ள திருமறையினை மக்கள் உபயோகிக்கும் முறையிலிருந்து சிறப்பற்ற திரிபுக் கொள்கைகள் தோன்றி திருச்சபையிலே பிரிவினைகள் ஏற்பட்டுவிடுகின்றன. எனவே, திருமறையும் திருச்சபையும் பற்றி ஆராய்வோம்.

# திருமறை விளக்கத்தின் சில அடிப்படைத் தத்துவங்கள்

பெரும்பாலும் கிறிஸ்தவ மக்கள் எல்லோரிடத்திலும் திருமறைப் பிரதிகள் இருக்கின்றன. பலர் அதனை நாள் தோறும் வாசிக்கின்றனர். திருமறை முழுவதையும் பல முறைகள் வாசித்து முடித்தவர்கள் அநேகர் இருக்கின்றனர். திருமறையின் பல முக்கிய அதிகாரங்களை மனப்பாராயணம் செய்து பிழையின்றி அவற்றினைக் கூறக் கூடியவர்கள் உளர். எனினும், இவர்களெல்லாரும் தாங்கள் படிப்பனவற்றை எளிதில் புரிந்துகொள்ளுவதில்லை. ஆகவே, திருமறையைச் செவ்வனே விளங்குவதற்கு அனுகூலமாக அடிப்படையான சில உண்மைகளைப்பற்றிய அறிவு தேவை.

### தவறான முறைகள்

திருமறையைப் படிப்பதற்குச் சரியான முறையின் சில தத்துவங்களைக் கூறுமுன்னர் இக்காலத்தில் நிலவும் தவறான, குறைவுள்ள சில முறைகளைச் சுட்டுவது நலம்.

### திருமறையை மந்திர சக்தியுள்ள ஓர் ஏடுபோல் உபயோகித்தல்

நம் நாட்டில் தம்மிலே ஆற்றலுள்ளவைகளென பல பொருட்கள் விற்கப்படுகின்றன. சிறப்பாக தாயித்துகளை உடலில் ஏதாவது ஒரு பாகத்தில் அணிந்துகொண்டால் தீய சக்திகள் தீண்டுவதில்லை என்ற எண்ணம் சாதாரணப் பொது மக்கள் மத்தியில் மலிந்து கிடக்கின்றது. மந்திர சக்தியுள்ளவை எனக் கூறப்படும் கோல்கள், மந்திரங்கள் எழுதப்பட்ட தகடுகள் ஆகியவைகளும் இவ்வித ஆற்றலுள்ளவை என்ற நம்பிக்கை இருக்கின்றது.

கிறிஸ்தவர்களில் பலர் இவைகளை உபயோகிப்பது மாத்திரமன்றி திருமறையையும் இவைபோன்று உபயோகிக்கின்றனர். இதன் மிகவும் சாதாரண முறை, திருமறையைத் தலைக்கு அண்மையில் அல்லது தலையணைக்கு அடியில் வைத்துக்கொள்ளுவது. சிறப்பாக நோய்க் காலத்தில், மன அமைதி இழந்துவிட்டபோது, பிசாசு பிடித்தல் என்றழைக்கப்படும் மன நோய் காலத்தில் மக்கள் இவ்வாறு செய்கின்றனர். கிறிஸ்தவரல்லாதவர்கள் சிலர் இவ்வாறு செய்து ஆரோக்கியமடைந்து கிறிஸ்தவர்களாகின வரலாறுகளும் உள. திருமறையை இவ்வாறு உபயோகித்து யாராவது பயனடைந்திருந்தால், தலைக்கு அண்மையில் அது இருந்ததனாலல்ல, சம்பந்தப்பட்ட மக்களின் விசுவாசத்தாலும் இறைவனின் பேரருளினாலுமே நிகழ்ந்தது எனலாம். இந்த முறை மிகவும் குறைவான ஒரு உபயோகமாகும்.

அப்படியே, திருமறையைத் திறந்ததும் வலதுகைப் பெருவிரலுக்கோ மற்றும் எதாவது விரலுக்கோ முதலில் கிடைத்த வாக்கியம் நமது சந்தர்ப்பத்துக்குக் கடவுளின் வார்த்தை என்று எடுத்துக்கொள்வது. இதுவும் சில வேளைகளில் பயனளிக்கலாம். ஆனால், இது ஒரு கிறிஸ்தவ முறையாகாது. திருமறையை அறிவுசார்ந்த முறையில் படித்து, அது தரும் செய்திக்குக் கீழ்ப்படிவதே சிறப்பானதாகும்.

## திருமறையை ஓர் இலக்கிய நூல்போல் படிப்பது

திருமறை, இலக்கியச் சிறப்புள்ள நூல்களைக்கொண்ட ஒரு நூலகம் போன்றது என்பதனை ஒருவரும் மறுக்க இயலாது. வரலாற்று நூல்கள், கவிதைகள், கதைகள், முதுமொழிகள் பல இதில் அடங்கியுள்ளன என்பதனை நாம் முன்னர் சுட்டியுள்ளோம். பதினேழாம் நூற்றாண்டில் மொழிபெயர்க்கப்பட்ட ஆங்கிலத் திருமறை இலக்கியச் சிறப்புமிக்கது. திருமறை மேனாட்டு இலக்கியத்தில் அதிக செல்வாக்குப் பெற்றுள்ளது. தங்களது ஆங்கில மொழிப் புலமையை வளர்க்கப் பயனுள்ள முறையில் திருமறையைப் பலர் பயிலலாம்.

எனினும், இலக்கியம் என்ற அளவில் மக்கள் இந்நூல்களைப் படிக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு இவை எழுதப்படவில்லை. காலாகாலத்தில் இவற்றினைச் சேர்த்து இறுதியில்

முழுத் திருமறை ஆக்கினவர்களும் இலக்கியம் என்பதற்காக அவ்வாறு செய்யவில்லை. திருமறை கடவுளையும் மனிதனையும் உலகையும்பற்றிக் கூறும் சமய நூலாகும். எனவே, இதனை வெறும் இலக்கியமாகப் பயிலுவது அதன் நோக்கத்திற்கு இசைந்ததன்று.

### திருமறையை ஒரு தொடர்கதைபோல் வாசிப்பது

ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தல் வரை ஒரே தொடர்பாகத் திருமறையை வாசிப்பது கிறிஸ்தவர் பலரின் பழக்கமாகும். அநேகர் இதனை ஒரு பெரிய புராணக் கதைகள் கொண்ட நூல்போல வாசிக்கின்றனர். இப்படி வாசிப்பதில் ஒரு பயனுமில்லை என்று நாம் கூறவில்லை. ஏதோ சில உயர்வான பாகங்கள் மனத்தையும் ஆவியையும் கவர்ந்துவிடுகின்றன என்பது உண்மையே. பெயர் அட்டவணைகள், லேவியராகமத்தின் பலிகள், இராஜாக்களின் நூலின் வரலாறு நாளாகமத்தில் திரும்பவும் கூறப்படுதல், மல்கியாவுக்கும் மத்தேயுவுக்குமிடையில் கால இடைவெளி, தானியேல், தரிசன நூல் ஆகியவற்றின் காட்சிகள் என்பனவற்றைச் சந்திக்கும்போது இது ஒரு தொடர்கதை போன்றதன்று எனவும், பலதரப்பட்ட இலக்கியங்களைக்கொண்டது எனவும் அறிந்துகொள்வர்.

திருமறை முழுவதிலும் ஒரு பொருள் ஒருமைப்பாடு இருக்கின்றது என்பதனை நாம் மறுப்பதில்லை. திருமறையைப் படிக்கின்றவர்கள் இதனை அறிந்திருப்பது இன்றியமையாததே. இந்தப் பொருள் ஒருமைப்பாடில்லையேல் இது திருமறையாகாது. எனினும், அதன் 66 ஆகமங்களும் ஆயிரம் ஆண்டு காலமாக எழுதப்பட்டவை என்பதும் உண்மையே. அவைகள் எழுதப்பட்ட காலம், சூழ்நிலை போன்றவற்றைச் சிறிதளவாயினும் அறிந்து அவற்றைப் படித்தால் திருமறையினைப் புரிந்துகொள்வது சிறிதளவாயினும் எளிதாயிருக்கும்.

### கண் கண்ட பாகத்தை எடுத்து வாசிப்பது

பலர் காலையிலோ, மாலையிலோ, எங்காவது புறப்பட்டுச் செல்லும்போதோ, நற்சமயங்களிலோ, ஆபத்துக் காலங்களிலோ கடவுளின் செய்தியை அறியக் கண்மூடித்தனமாகக்

கண்ட இடத்தை எடுத்து வாசிப்பதுண்டு. திருமறை இப்படிப் பட்ட உபயோகத்திற்காகத் தரப்பட்ட ஒரு நூல் அன்று. இவ்விதம் வாசிக்கும் ஒருவருக்கு ஆசீர்வாத வாக்கியங்களும், சாப வாக்கியங்களும், பெயர் அட்டவணைகள் போன்றனவும் கிடைக்கலாம். பழமொழியாய்க் கூறப்படும் கதைபோல 'யூதாஸ் நான்றுகொண்டு செத்தான்' என்ற வாக்கியம் கிடைத்தவன் ஒரு நல்ல வாக்கியத்திற்காக திரும்பவும் திறந்து படிக்கவே 'நீயும்போய் அந்தப்படி செய்' என்ற வாக்கியம் கிடைக்க, மூன்றாவது முறை திறந்தபோது 'நீ செய்வதைச் சீக்கிரமாய் செய்' என்ற வாக்கியம் கிடைத்ததுபோல் பலர் இம்முறையில் ஏமாற்றமும் மன வேதனையும் அடையக்கூடும்.

இவ்வாறே தனிப்பட்ட வாக்கியங்களை அவற்றின் சந்தர்ப் பத்தைவிட்டு எடுத்துப் பொருள் கூறுவதும் ஆபத்தாகும். பிசாசுகூட தன் தீய நோக்கத்தை நிறைவேற்றத் திருமறை வாக்கியங்களைக்கொண்டு இயேசுவைச் சோதித்தான். மக்களை எக்காலத்திலும் அவன் சோதிக்கின்றான். உனக்குண்டானவை களை விற்று தரித்திரருக்குக் கொடு என்று செல்வந்தனான வாலிபனுக்கு இயேசு கட்டளையிட்டார். இதனை, சந்தர்ப் பத்தை மறந்து, அனைவருக்கும் அருளப்படும் பொதுக் கட்டளை எனப் பொருள் கூறுவது பொருந்தாது.

வேறு சிலர் உலகில் நிகழும் பல நிகழ்ச்சிகள் திருமறையில் முன் கூறப்பட்டிருக்கின்றன என நிரூபிக்கும்படி வாக்கியங் களை அவற்றின் சந்தர்ப்பத்திலிருந்து வேரறுத்து பொருள் தருவது தவறாகும். (உ–ம்) மனிதன் சந்திரமண்டலத்துக்குச் சென்றது திருமறையில் முன்னறிவிக்கப்பட்டிருக்கின்றது என்று காண்பிக்கும்படி 'நீ நட்சத்திரங்களுக்குள்ளே உன் கூட்டைக் கட்டினாலும் அங்கிருந்தும் உன்னை விழப்பண்ணுவேன்' (ஒப. 4) என்ற வாக்கியத்தை ஆதாரமாக்குவது தவறான முறையாகும். இவ்வாறே தானியேலின் நூல், தரிசன நூல் ஆகியவற்றின் பல பாகங்களும் தவறாக உபயோகிக்கப் படுகின்றன.

### திருமறையை ஒரு விஞ்ஞான நூல்போல் உபயோகிப்பது

'திருமறையும் விஞ்ஞானமும்' என்னும் அதிகாரத்தில் இதனைப்பற்றிய கூடுதல் உண்மைகள் தரப்படுகின்றன. பலர்

திருமறையின் கூற்றுகள் விஞ்ஞான உண்மைகளுக்கு ஒத்திருக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றனர். திருமறையும் விஞ்ஞானமும் வித்தியாசமான நோக்கங்களுடையவை என்பதை இவர்கள் மறந்துவிடுகின்றனர். விஞ்ஞானம் அகிலம் எவ்வாறு செயலாற்றுகின்றது, உயிர் எவ்வாறு விருத்தியாகின்றது, இயற்கையின் இயல்பூக்கங்களில் (Processes of nature) அமைந்திருக்கும் விதிகள் எவை என்று படிக்கின்றது. திருமறையோவெனில் அகிலம் ஏன் படைக்கப்பட்டது, மனித வாழ்க்கையின் இலட்சியம் யாது என்பனவற்றைக் கூறுகின்றது. விஞ்ஞானம் ஆராயும் சடப்பொருள்களையும் உயிரினங்களையும் இயக்கும் சருவவல்லவரான இறைவனிலேயே அனைத்தும் சார்ந்திருக்கின்றன என்று காண்பிப்பதே திருமறையின் நோக்கமாகும். எனவே, விஞ்ஞானம் போதிக்கும் உண்மைகளைத் திருமறையில் தேடாமல் சமய நோக்கோடு திருமறையைப் படிப்பது நலம்.

## திருமறை படிப்போர் அறியவேண்டிய சில முற்கோள்கள் (Presuppositions)

### 1. இது ஒரு மொழிபெயர்ப்பு

நாம் முன்னர் கூறியதுபோல திருமறையில் பழைய ஏற்பாடு எபிரேய மூலமொழியிலும் புதிய ஏற்பாடு கிரேக்க மூலமொழியிலும் எழுதப்பட்டிருந்தன. இதர மொழிகளில் நாம் படிக்கின்ற திருமறை, மொழிபெயர்ப்பேயாம். எவ்வளவு சிறப்பான மொழிபெயர்ப்பாயினும் அது மூலமொழி ஏட்டிற்குச் சமமாகாது. ஒரே மொழியில் பல மொழிபெயர்ப்புகளில் திருமறை வெளியிடப்படுவதைக் காண்கின்றோம். ஏனெனில், புதிய மூல ஏடுகள் கிடைப்பதனாலும், திருமறைத் திறனாய்வு பல மூல சொற்களின் இயல் பொருளைக் கண்டுபிடிப்பதனாலும், மொழியின் பல சொற்கள் காலஞ்செல்லுந்தோறும் பொருள் இழந்து வேறு பொருள் ஏற்பதினாலும், அந்தந்தக் காலத்து மக்கள் புரிந்துகொள்ள எளிதான மொழியில் திருமறை அமைவது நலமானபடியினாலும் புதிய மொழிபெயர்ப்புகள் தேவை. ஆகவே, நாம் உபயோகிக்கும் திருமறை ஒரு மொழிபெயர்ப்பேயாம் என்பதனை அறிந்திருக்கவேண்டும்.

## 2. மனித மொழியில் கடவுளின் செய்தி

குழந்தை ஒன்று கடற்கரை மணலில் ஒரு துவாரத்தை உண்டுபண்ணி சமுத்திரத்தின் தண்ணீர் முழுவதையும் அதனுள் வார்க்க முயற்சிப்பதுபோலவே மனித சிந்தனை கடவுளை அறிய முயற்சிப்பதும் இருக்கின்றது எனப் புனிதர் அகுஸ்தீன் கூறியுள்ளார். ஆயினும், கடவுள் மனிதனுடைய மனத்தோடு ஈடுபாடுகொண்டு அதன்மூலம் தனது சித்தத்தைத் தெரிவிக்க முற்படுகின்றார். அதனைப் பெற்றுக்கொண்டவர்கள் மனிதரது அன்றாட மொழியில் அதனை எழுதினார்கள். அந்தச் செய்தி அழியாத் தன்மை உள்ளதேயாயினும் அதனை அறிவிக்க உபயோகிக்கும் மொழி குறைவுள்ள மனித மொழியே யாகும். ஆகவே செய்தியிலிருந்து அதனை எடுத்தியம்பும் மொழியாகிய கருவியைப் பிரித்தறியவேண்டும். கருவி அழியாத் தன்மை யுள்ளதன்று. செய்தியே அழியாத் தன்மையுள்ளது. எப்பொழுதும் புதியதாகவே இருக்கின்றபடியால் அது வைக்கப்படும் மனித மொழியாகிய துருத்தியும் அடிக்கடி புதுப்பிக்கப்படவேண்டும்.

மேலும் பரத்தின் மகிமையை இகத்தில் மனித மொழியில் விளக்குவது எளிதன்று. ஆகவே பொன் தளம்போட்ட வீதி, முத்துக்களாலான வாசல், கிரீடங்கள் போன்ற சித்திரங்கள் உபயோகிக்கப்படுகின்றன. அழிவுக்குரியதொன்றும் தேவனுடைய இராச்சியத்தில் பிரவேசிப்பதில்லை என்று திருமறை கூறுகின்றபடியால் பொன்னும் முத்தும் அங்கே இடம்பெறுவதில்லை. இவை, விவரிக்க இயலாதவைகளை விவரிக்கும் முயற்சியில் உபயோகிக்கப்படும் சித்திரங்களேயாம். எனவே நாம் இறைவனின் குறைவற்ற செய்தியைக் குறைவுள்ள மனித மொழியில் படிக்கின்றோம் என்ற உணர்வோடு திருமறையை அணுகவேண்டும்.

## 3. கிரமமான வெளிப்படுத்தல்

திருமறை இறைவன் தம்மை மனிதருக்கு வெளிப்படுத்தின வரலாற்றினைத் தரும் நூல். இந்த வெளிப்படுத்தலின் வரலாறு இயேசுகிறிஸ்துவில் உச்சநிலை அடைகின்றது. பழைய ஏற்பாட்டு வெளிப்படுத்தல் கிரமமாக இயேசுகிறிஸ்துவுக்கு நேராகச் செல்லுகின்றது. ஆகையால் திருமறையின்

ஏதாவது ஒரு நூலில் கடவுளைப்பற்றிய முழு அறிவையும் காண இயலாது அல்லது சில இடங்களில் கடவுளைப்பற்றிக் கூறப்படும் அரைகுறையான அறிவைக் குறைகூறவும் தேவையில்லை. ஏனெனில், திருமறை முழுவதிலுமிருந்தே இறைவன் தம்மை வெளிப்படுத்தியதின் முழுமையான ஒரு அறிவு ஏற்படுகின்றது.

பழைய ஏற்பாட்டில் 'கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல்' என்பதனையும், புதிய ஏற்பாட்டில் 'வலது கன்னத்தில் அறைகிறவனுக்கு மறு கன்னத்தையும் திருப்பிக்காட்டு' என்பதனையும் இந்தக் கிரமமான வெளிப்படுத்தலின் அடிப்படையிலும் அக்கால சமூக நிலையைப்பற்றிய அறிவோடும் புரிந்துகொள்ள வேண்டும். அக்காலத்தில் ஒரு கிராமத்திலுள்ள ஒரு மனிதனுக்கு அடுத்த கிராமத்திலுள்ள ஒருவன் தீங்கிழைத்தால் இந்தக் கிராம மக்கள் புறப்பட்டுச்சென்று அந்தக் கிராமம் முழுவதையுமே அழிக்க முற்பட்டனர். இவ்வித நிலையின் முன்னேற்றமாக அடித்தவனை மாத்திரம் அடி, பல்லை உடைத்தவன் பல்லை மாத்திரம் உடை என மோசேயின்மூலம் உரைக்கப்பட்டது. அது அக்காலத்தில் அவர்களுக்குக் கடவுளின் வார்த்தையாக இருந்தது. இயேசுகிறிஸ்து இதனை அழித்துவிட்டுப் புதிய பிரமாணத்தை அளிக்கின்றார்.

கிரமமான வெளிப்படுத்தல் என்பதனால் இறைவனிலும் கிரமமான வளர்ச்சி இருக்கின்றது என்பது பொருளாகாது. அவர் தம்மில் எப்பொழுதுமே முழுமையானவர். அவர் வெளிப்படுத்துவதனால் அவரது முழுமை குறைவடைவதுமில்லை. வெளிப்படுத்தும் அவரை அறிந்துகொள்ளும் அறிவே குறைவுள்ளது. அந்த அறிவில் கிரமமான வளர்ச்சி இருக்கின்றது. வெளிப்படுத்தலை ஏற்றுக்கொள்ளும் மக்களின் நிலைக்கு ஏற்ப அதனை ஏற்றுக்கொள்வது வரையறுக்கப்படுகின்றது. இயேசுகிறிஸ்துவில் இறைவன் தம்மை முழுமையாக வெளிப்படுத்தியிருக்கின்றார் என்பது நமது விசுவாசம். ஆயினும் இந்த வெளிப்படுத்தலை நாம் முழுமையாகப் புரிந்துகொண்டோம் என்று கூற இயலாது.

இக்காரணத்தால் பழைய ஏற்பாட்டை கிறிஸ்துவாகிய திறவுகோல்கொண்டே திறந்து புரிந்துகொள்ளவேண்டும். ஏனெனில், கிறிஸ்து இல்லையேல் பழைய ஏற்பாடு நிறைவேறு

தல் அடைவது இல்லை. பழைய ஏற்பாடு கிறிஸ்துவுக்கு ஆயத்தம் என்ற அறிவினாலே கிறிஸ்தவ சமயக் குரவர்கள் தங்களது புனித நூலின் ஒரு பாகமாகப் பழைய ஏற்பாட்டினை ஏற்றுக்கொண்டனர். எனினும், பழைய ஏற்பாட்டிலுள்ள அநேக வார்த்தைகள் அப்படியே புதிய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்துவில் நிறைவேறியுள்ளன என்ற சிந்தனையை விழிப்போடு ஏற்றுக்கொள்ளவேண்டும். பொதுவாகக் கூறின் பழைய ஏற்பாட்டின் சமயச் சிந்தனைகள், எதிர்பார்ப்புகள் ஆகியவை இயேசுவில் நிறைவேறியுள்ளன எனலாம்.

### 4. திருமறை ஒரு சமய நூல்

திருமறையின் தனி நூல்களில் பலவிதமான அறிவு கிடக்கின்றது. வரலாறு, விஞ்ஞானம், புவியியல், இயற்கை இயல், விலங்கியல், சுகாதாரம், மருத்துவம் ஆகிய பல துறைகளில் திருமறை பல செய்திகளைத் தருகின்றது. இவற்றில் பல இன்றும் உண்மையானவை. சில இக்காலத்தில் ஏற்றுக் கொள்ளப்படாதவை. ஆனால், இவைகளைப்பற்றிய செய்தியைத் தருவதற்காகத் திருமறையின் நூல்கள் எழுதப்படவில்லை.

திருமறை சமய நோக்குள்ள நூலாகும். மனுக்குலத்தின் மீட்புக்கான கடவுளின் அருளையும் அக்கறையையும் கூறுவதே அதன் நோக்கம். இந்த நோக்கத்தை உணர்ந்து படிக்கும் போதுதான் திருமறை உயிர்த்துடிப்புள்ளதாக நிகழ்கால வாழ்க்கையோடு நிகரற்ற தொடர்புடையதாக விளங்கும். இந்த நோக்கத்தை மறத்தலாகாது.

மேற்கூறிய குறிப்புகளை மனத்தில்கொண்டு, நல்ல விளக்கவுரைகளைத் துணைகொண்டு திருமறையைப் படிக்கும்போது அதன் உண்மையை, ஆக்கியோரின் நோக்கத்திற்கேற்ப புரிந்துகொள்வது எளிதாகலாம். ஆயினும், புரிந்துகொண்டதைப் பிறருக்கு விளக்கும் முயற்சியிலும் சில உண்மைகளை அறிந்திருப்பது நலம்.

## திருமறை விளக்கத்தில் துணைநிற்கும் சில விதிகள்

**1. இலக்கியத் தன்மை:** திருமறையில் பலதரப்பட்ட இலக்கியங்கள் இடம்பெற்றுள்ளன எனக் கூறியுள்ளோம். நாம்

விளக்கம்தர முற்படும் குறிப்பிட்ட பாகம் எவ்வகை இலக்கியம் என்ற அறிவு தேவை. உவமைகள், கதைகள், கவிதைகள், தரிசனங்கள், வரலாறுகள் போன்றவற்றை அவற்றிற்கேற்ற பிரத்தியேகமான முறைகளில் விளக்கவேண்டும். இவ்வாறு இலக்கியத் தன்மையினை அறியாது விளக்கம் அளிப்பதினால் பல தவறுகள் ஏற்படுகின்றன.

2. **சூழமைவு (Context):** சூழமைவு இருவகைப்படும்:

**(அ) முழுத் திருமறையின் சூழமைவு:** குறிப்பிட்ட ஒரு வாக்கியத்திற்கு அல்லது திருமறைச் சொல்லிற்குப் பொருள் தர முற்படும்போது திருமறையின் முழுமையான செய்தியின் சூழமைவினை மறத்தலாகாது. (உ—ம்) பலியிடுதல். எபிரேய மக்களிடையில் இந்த வழக்கம் நிலவியதால் நாமும் மிருகங்களைப் பலியாகச் செலுத்தவேண்டும் என்று பொருள் தருவது முறையாகாது. திருமறையின் முழுச் செய்தியின் சூழமைவில் பலியின் பொருள் என்ன என்று அறியவேண்டும். மேலும் தனிப்பட்ட ஒரு சொல்லிற்குப் பழைய ஏற்பாட்டில் என்ன பொருள், புதிய ஏற்பாட்டில் என்ன பொருள் எனவும் அறிய வேண்டும். திருமறையின் முழுமையான செய்திக்கு எதிரான விளக்கம் தவறானது எனக்கொள்க.

**(ஆ) நூலின் சூழமைவு:** திருச்சபையின் வரலாற்றில் திரிபுக் கொள்கைகள் பல தோன்றியுள்ளன. இவற்றிற்கு ஒரு முக்கிய காரணம் திருமறையின் நூல்கள், பத்திகள், வாக்கியங்கள் ஆகியவற்றின் சூழமைப்பை விட்டுவிட்டு மனம் விரும்பியபடி விளக்கம் தருவதாகும். சூழமைவு அல்லது சந்தர்ப்பம் என்பது ஒரு வாக்கியம் அல்லது பத்தி அமைக்கப்பட்டிருக்கும் முழு பின்னணியாகும். எனவே ஒரு வாக்கியத்தை அதின் முந்தின, பிந்தின வாக்கியங்களோடு உறவுபடுத்தி விளக்கவேண்டும். அப்படியே ஒரு பத்தியை அதின் முந்தின, பிந்தின பத்திகளோடும், ஒரு அதிகாரத்தை அந்த நூலின் முழுமையின் சந்தர்ப்பத்திலும் விளக்கவேண்டும். உண்மையான பொருளை அறிந்துகொள்வதில் இம்முறை பெரிதும் துணை நிற்கின்றது.

3. **ஆக்கியோனின் நோக்கம் அறிதல்:** திருமறை விளக்கத்தில் இடறலான உபதேசங்கள் தோன்றுவதற்கு முக்கிய காரணங்

களில் ஒன்று ஆக்கியோனின் நோக்கத்தை அறியாமையாகும். விளக்கம் தருவோர் தங்கள் மனத்திலிருக்கும் சிந்தனைகளை குறிப்பிட்ட வாக்கியங்களில் புகுத்துவதற்குச் சோதிக்கப்படுகின்றனர். திருமறையின் நூல்கள் பல தனிப்பட்ட நோக்கங்களோடு குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் எழுதப்பட்டவை. (உ—ம்) உபாகம நூலின் பல பிரமாணங்கள், பழைய ஏற்பாட்டின் பல தீர்க்கதரிசனங்கள், பவுலடியாரின் கடிதங்கள் இவைகளை விளக்குங்கால் ஆக்கியோன்கள் தங்கள் காலத்து சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப எழுதினர் என்பதனை மனத்திற்கொள்ளவேண்டும். ஆக்கியோரின் நோக்கத்தை அறிந்த பின்னர் நமது காலத்துக்குரிய செய்தியினை அதிலிருந்து புரிந்துகொள்ளலாம்.

**4. இயல்பான பொருள்:** திருமறை விளக்கப் பணியில் மேற்கூறிய விதிகளோடு குறிப்பிட்ட ஒரு பாகத்தை அணுகுங்கால் அதன் இயல்பான பொருள் வெளிப்படுகின்றது. நாம் விளக்கும் பாகத்தின் இலக்கியத்தன்மை, சூழமைவு, ஆக்கியோரின் நோக்கம் ஆகியவற்றை ஓரளவாயினும் புரிந்துகொண்டோமாயின் அப்பாகத்தின் இயல்பான பொருள் பெருமளவில் தெளிவாகிவிடும். இயல்பான பொருளைப் புரிந்துகொண்ட பின்னர் கேட்போரின் தேவைகளுக்கு ஏற்ப அதன் செய்தியை அளிக்கலாம்.

**5. திருமறைக்குத் திருமறையே விளக்கம்:** திருமறையை விளக்கும்போது நமது சொந்தக் கருத்துக்களை உட்புகுத்த முயற்சிப்பது தவறு. திருமறையின் ஒரு பாகத்தின் பொருள் விளக்கம் முழு திருமறையின் மொத்தமான செய்திக்கு முரண்படாமலிருக்கவேண்டும். தனிப்பட்ட வாக்கியங்களை அவற்றின் சந்தர்ப்பங்களிலிருந்து பிரித்தெடுத்துத் தொகுத்துத் திருமறையின் பொதுவான போதகத்துக்கு விரோதமானவைகளைக் கற்பிக்க முயற்சிப்பது சரியன்று. எந்தத் தனிப்பட்ட வாக்கியத்தையும் ஆதாரமாகக்கொண்டு திருமறைக்கும், கிறிஸ்தவ அனுபவத்திற்கும் பொருத்தமற்றவைகளை உபதேசிப்பது முறையாகாது. (உ—ம்) 1 யோ. 3:9, ‘கடவுளால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான், அவருடைய வித்து அவனுக்குள் நிலைத்திருக்கிறதே. கடவுளால் அவன் பிறந்திருக்கிறவனுதலால் அவன் பாவஞ்செய்ய முடியாது’ என்று கூறுகின்றது. இதிலிருந்து கிறிஸ்துவை மீட்பராக ஏற்றுக்கொண்டு மறுபடி

யும் பிறந்த அனுபவமுள்ளவர்கள் பாவத்தில் ஈடுபடமாட்டார்கள் என்ற உபதேசத்தைப் போதிப்பது தவறு. பவுலடியார் கொரிந்தியருக்கு எழுதிய முதலாம் கடிதத்தில் 'கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்கள்' *(1 கொ. 1:2)* என்று கொரிந்து சபையினரைக் குறிப்பிட்ட பின்னர் 'மேலும் சகோதரரே . . . பொறாமையும், வாக்குவாதமும் உங்களுக்குள் இருக்கும்போது, நீங்கள் மாம்சத்திற்குரியவர்களும், மனுஷ முறையின்படி நடக்கிறவர்களாயுமிருக்கிறீர்கள்.'

6. **தூய ஆவியரின் துணை:** திருமறையையும் இயேசுகிறிஸ்துவையும் காலத்துக்கும் தேவைக்கும் ஏற்ப விளக்குபவர் தூய ஆவியரே *(1 கொ. 2:9–14)*. இறைவனுக்கு அடுத்தவைகளை விளக்க வல்லவர் அவருடைய ஆவியரே. ஆர்வத்தோடும் உண்மையை அறிந்து அனுபவித்து விளக்கும் நோக்கத்தோடும் திருமறையை அணுகுகின்றவர்களுக்கு அவர் உறுதுணை நிற்கின்றார். இதனால் மேற்கூறிய விளக்க விதிகளை நாம் விட்டுவிடலாம் என்பது பொருளன்று. திருமறையைப் படிக்கும் உண்மையான ஆர்வத்தைத் தூண்டும் தூய ஆவியரே மீண்டும் கூட இருந்து உதவிசெய்கின்றார் *(1 கொ. 2:14,15)*.

புரிந்துகொள்ளுதலும், கீழ்ப்படிதலும் ஒன்றிணைந்த உண்மைகளாம். வெறும் அறிவு வளர்ச்சிக்காகத் திருமறையைப் படித்தறிவது மெய்யறிவன்று. படிக்கின்றவர்கள் கீழ்ப்படிய வேண்டும் என்பது திருமறையின் நடுநாயகமான இயேசு கிறிஸ்துவின் சித்தமாகும் *(மத். 7:24)*. கீழ்ப்படியும் அளவுக்குத்தக்க நமது அறிவும் விருத்தி அடைகின்றது. எனவே புரிந்துகொண்டு விளக்கும்போது விளக்குவோர், கேட்போர் ஆகியோரின் தேவைகளையும் மனத்திற்கொள்ளவேண்டும். நாம் படிக்கும் எல்லா பாகங்களிலும் நமக்கேற்ற செய்தி கட்டாயம் அமைந்திருக்கவேண்டும் என்ற நியதி இல்லை. எனினும், நமது தேவையை உணர்ந்து திருமறையைப் பயிலுவது இன்றியமையாதது.

# நமது காலத்துக்கு திருமறையின் செய்தி

இதுகாறும் திருமறையைப்பற்றிய பல்வேறு உண்மைகளைச் சிந்தித்தோம். நாம் படித்தவை யாவும் திருமறைக்கு ஒரு முகவுரையாகவே அமைந்திருக்கின்றன எனலாம். ஏனெனில், இந்நூலின் ஒவ்வொரு அதிகாரத்தின்பேரிலும் பல அறிஞர்களால் அநேக நூல்கள் எழுதப்பட்டுள்ளன. நாம் படித்தனவற்றிலிருந்து, சாதாரணமாக நாம் நினைப்பதுபோல் திருமறை எளிய ஒரு நூலன்று என்றுணர்ந்தோம். அதன் பல நூல்களைப் புரிந்துகொள்ளவும் தகுந்த முறையில் விளக்கவும் பலதரப்பட்ட அறிவு தேவை என்பதனையும் நாம் கவனித்தோம். இதனால் திருமறை அறிஞர்க்கு மாத்திரம் புலனாகும் நூல் என்று சிந்திப்பது மிகவும் தவறு. மிகவும் சாதாரண மக்களும் தங்களது ஆவிக்குரிய தேவைகளை நிவர்த்திசெய்யும் ஒரு நூலாகத் திருமறையை உபயோகிக்கலாம். ஏனெனில், திருமறையினைப் புரிந்துகொள்வதிலும் விளக்குவதிலும் துணை நிற்பது விளக்கவுரைகள் மாத்திரமன்று, தூய ஆவியர் உறுதுணை நின்று திருமறையினை விசுவாசிக்கு விளக்குகின்றார். விசுவாசி அதனைப் பிறருக்கு எடுத்தியம்ப முற்படும்போதும் அவர் மாறாத துணையாய் நின்று உதவுகின்றார்.

திருமறையைப் புரிந்துகொள்ளுவதும் விளக்குவதும் அவரவரது சூழ்நிலைக்கு ஏற்புடைத்திருப்பது அவசியமாகும். நாம் வாழும் காலம் பிரச்சினைகள் நிறைந்த ஒன்றாகும். மனித வரலாறு இதுவரையிலும் கண்டிராத அளவு பல துறைகளில் அறிவு முன்னேறியுள்ளது. மேனாடுகளில் திருமறையைப் படிப்போர், திருச்சபையோடு தொடர்புகொண்டவர்கள் ஆகியோரின் எண்ணிக்கை இந்த நூற்றாண்டில் குறைந்து விட்டதாகக் கூறப்படுகிறது. ஏனெனில், இக்காலத்தின்

பிரச்சினைகளுக்குத் திருமறையில் பதிலில்லை என்று பலர் கருதுகின்றனர். மேலும் திருமறை மிகப் பழமையான ஒரு நூல், அது பழங்கால சமூக சூழ்நிலையில் எழுதப்பட்டது; இக்கால விஞ்ஞான தொழிலிய யுகத்திற்கு அது பொருந்தாது என்று கூறுவாறும் உளர். இதனால் நமது காலத்துக்குத் திருமறையின் செய்தி யாது என்று கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

நமது காலமென்பது பிரச்சினைகளும், கேள்விகளும் நிறைந்த சிக்கலான ஒன்று என நாம் முன்னர் கூறியுள்ளோம். இக்கால வாலிபர்கள் பலர் திருப்தியற்ற ஒரு நிலையில் வாழ்கின்றனர். மேனாட்டினின்று செல்வந்தரும் அறிஞருமாகிய ஆயிரக்கணக்கான வாலிபர்கள் கீழ்நாடு நோக்கிப் பயணஞ்செய்கின்றனர். இவர்கள் திருப்தி, மன அமைதி, நிச்சயம், உறுதி ஆகியவைகளைத் தேடி வருகின்றனர். மேனாட்டிலேயே பல்லாயிர மக்கள் மயக்கும் மருந்துகளை உடலில் ஏற்றி ஒருவிதமான பரவச அனுபவத்தைப் பெற்றுக்கொள்ள முயற்சிக்கின்றனர். நம் நாட்டு வாலிபர்களிலும் பலர் இந்நிலையில் இருக்கின்றனர்.

இந்திய சமூகம் விரைவாக மாறிக்கொண்டிருக்கின்றது. முற்கால கூட்டுக் குடும்ப அமைப்பு (Joint Family System) வேகமாகச் சிதைந்துகொண்டிருக்கிறது. தொழில் முன்னேற்றத்தினால் குடும்பங்கள் அடிக்கடி இடம்பெயர்ந்து புதிய புதிய சூழ்நிலைகளில் வாழ முற்படுகின்றனர். கடந்த சில ஆண்டுகளில் நாட்டின் பல துறைகளிலும், அலுவலகங்களிலும் ஆண்களும் பெண்களும் ஒருவருக்கொருவர் சமமாய்ப் பணியாற்ற முற்பட்டுள்ளனர். கல்வி, அலுவல் காரணமாக இளம் வயதிலேயே பிள்ளைகள் பெற்றோரை விட்டுப் பிரிந்து வாழ முற்படுகின்றனர். வானொலி, தொலைக்காட்சி (Television) ஆகியவைகள் மூலமாகப் புதிய கருத்துக்கள் இல்லங்களுக்குப் படையெடுத்து வருகின்றன. பெரும் அரசியல் விழிப்பு ஏற்பட்டு பல அரசியல் கொள்கைகளுக்கு மக்கள் தங்களை அர்ப்பணம் செய்துவிடுகின்றனர். நாஸ்திகக் கொள்கைகளைப் பரப்பும் மக்களின் செல்வாக்கும் சிறிதன்று.

இந்நிலையில், இந்து சமயத்தில் பெரும் மறுமலர்ச்சி ஏற்பட்டிருக்கின்றது. இந்து சமய மாநாடுகள், திருவிழாக்கள் பெருகிவிட்டன. திருவிழாக்களில் இந்து சமய அறிவுரைகள் இக்காலத்தில் இடம்பெறுகின்றன. திருச்சபையின் திருமறை

வகுப்புகளைப்போல் இந்து சமயத்தினரும் பருவத்திற்கேற்ப தங்களது மறையினைப் புகட்டும் முறைகளைக் கையாளு கின்றனர். கிறிஸ்தவர்கள் அத்தனைபேரையும் குறிப்பிட்ட ஒரு காலத்துக்குள் இந்துக்களாக்கிவிடவேண்டும் என்று கூறுவோரும் எழும்பியுள்ளனர். இந்து சமய வெளியீடுகள் பல தோன்றி வாழ்க்கையின் தேவைகளை இந்து சமயத்தால் நிறைவேற்ற இயலும் என்று பறைசாற்றுகின்றன.

விஞ்ஞான முன்னேற்றத்தினால் மனிதனாலே எல்லாம் ஆகும் என்ற நம்பிக்கை பரந்து வருகின்றது. சந்திரன் வரையிலும் பறந்து செல்லும் மனிதன், இந்த உலகத்தின் பிரச்சினைகளையெல்லாம் தீர்த்துவிட வல்லவன் என்று பலர் சிந்திக்கின்றனர். மருத்துவம், சுகாதாரம், இயந்திரம், பொருளாதாரம், விவசாயம்போன்ற துறைகளில் ஏற்பட்டுள்ள சிறந்த முன்னேற்றங்கள் இச்சிந்தனைக்கு உரமிடுகின்றன. இயந்திர முன்னேற்றத்தினால் பட்டணங்களும், நகரங்களும் பெருகி மக்களின் வாழ்க்கை வசதிகளும் வளர்ந்துவிட்டன. ஒருபுறம் வேலையில்லாமையும் வறுமையும் இருப்பினும், இன்னொருபுறம் வாழ்க்கையின் பல வசதிகளுடன் வாழ் வோரின் எண்ணிக்கை பெருகிக்கொண்டேயிருக்கிறது. இவை யெல்லாம் மனிதரின் முயற்சியால் ஏற்பட்டதென்று கருதி, அவனது திறமையிலும் ஆற்றலிலும் நம்பிக்கை வைக்க பலர் துணிந்துள்ளனர்.

எனினும், ஏமாற்றமடைந்து வாழ்க்கையில் வெறுப்புள்ள மக்கள் பலர் இந்நாட்டில் உள்ளனர். கல்வி பயின்றும் அலுவல் கிடையாதோர், அலுவல் இருந்தும் போதிய வருவாயில்லா தோர், போதிய வருவாயிருந்தும் மன நிறைவு இல்லாதோர் ஆகியோரின் எண்ணிக்கையும் பெருகியுள்ளது. சமூக வாழ்க் கையில் இலஞ்சம், பட்சபாதம் ஆகிய ஊழல்கள் பெருகி யுள்ளன. ஒழுக்கநிலை மிகவும் குன்றி நிற்கின்றது எனலாம்.

இவ்விதமான நாட்டின் பொதுவான நிலை திருச்சபை மக்களையும் பாதிக்கின்றது என்று கூறத் தேவையில்லை. திருச் சபை மக்களிலும் விசுவாச உறுதி இல்லாதவர்கள், கல்வி கற்றும் வேலையில்லாதவர்கள், பலவித நாஸ்திக சக்திகளினால் பாதிக்கப்படுகிறவர்கள், விஞ்ஞான—தொழிலியல் வளர்ச்சி யின் சிக்கல்களில் இருப்பவர்கள் போன்றவர்கள் பலர் இருக்

கின்றனர். இவர்கள் அனைவருக்கும் தேவையான செய்தி திருமறையில் இருக்கின்றது என்பது நமது விசுவாசம். திருமறையின் தனிப்பட்ட நூல்கள் ஒவ்வொன்றிலும் இக்கால மக்களுக்குத் தேவையான பல உண்மைகள் இருக்கின்றன. எனினும், இக்காலத்துக்குத் திருமறையின் பொதுவான செய்தி என்ன என்பதனை மாத்திரம் இவண் கவனிப்போம்.

1. திருமறை அகிலம் முழுவதுக்குமுரிய இறைவனின் ஒரு பெரும் திட்டத்தை விவரிக்கின்றது: படைப்பிற்கு அல்லது இருக்கைக்கு (existence) இலட்சியம் ஏதாயினும் உண்டோ என்று மக்கள் பலர் கேட்கின்றனர். அனைத்தும் எதேச்சை யாய்த் தோன்றின எனக் கூறுகின்றவர்கள் வாழ்க்கைக்கும் இருக்கை அனைத்திற்கும் ஓர் இலட்சியம் அல்லது நோக்கத் தைக் காண்பதில்லை. பிறத்தலும், வாழ்தலும், இறத்தலும் முடிவில்லாச் சக்கரம்போல் சுழன்றுகொண்டிருப்பதுபோலப் பலர் காண்கின்றனர். ஆனால், திருமறையின் பொதுவான செய்தி, அனைத்தும் ஒரு பிரமாண்டமான திட்டத்திற்குட் பட்டு, ஓர் இலக்குக்கு நேராக இயக்கப்படுகின்றது என்ப தாகும். எல்லாவற்றையும் படைத்த இறைவன், படைப்பின் மகுடமான மனிதனுக்கு சுயசித்தம் என்னும் சிறப்பியல்பை அளித்தார்; அதனை உபயோகித்து இறைவனுக்குக் கீழ்ப்படிந்து அவர் சித்தம் செய்வதில் மகிழ்ச்சியையும் வாழ்க்கையில் நிறைவையும் காண்பதற்குப் பதிலாக, கீழ்ப்படியாமையில் ஈடுபட்டு சுயசித்தத்தைத் துர்ப்பிரயோகம் செய்கின்றான் மனிதன். இதிலிருந்து மனிதனையும் அவனது வரலாற்றையும், ரோ. 8:19,21ன்படி, படைப்பு அனைத்தையுமே மீட்கும் திட்டத்தில் இறைவன் ஈடுபடுகின்றார். இத்திட்டத்தின்படி அவர், இஸ்ரவேலரது வரலாற்றிலும், திட்டத்தின் உச்சகட்ட மாக இயேசுகிறிஸ்துவிலும், மனுக்குலத்தை மீட்கும்படி ஈடுபடுகின்றார். கிறிஸ்துவில் தொடங்கிய மீட்பு அல்லது விடுதலையை மனுக்குலம் முழுவதிற்கும் எடுத்தளிக்கும் கருவி யாய் உலகின்கண் அவர் திருச்சபையை அமைத்துள்ளார். எனவே இத்திட்டம் வரலாறு முழுவதையும் மீட்கும் பெரும் திட்டமாகும். இதில் ஈடுபடும் தனி மனிதர், சமூகங்கள் ஆகியவர்களின் செயல்கள் மிகவும் முக்கியமானவை. மக்கள் இறைவனோடு எந்த அளவு ஒத்துழைக்கின்றனரோ அந்த

அளவு இத்திட்டம் நிறைவேறுகின்றது எனலாம். எனவே இலட்சியமற்ற ஒரு வாழ்க்கையிலன்று, குறிக்கோளுள்ள ஒரு திட்டத்தில் நாம் ஈடுபட்டிருக்கின்றோம்.

2. இத்திட்டத்தின்படி உலகினைப் புதுப்பிக்கும் செயலில் இறைவன் எப்பொழுதும் ஈடுபட்டுள்ளார்: இறைவன் மனிதர் சிந்தனையினுள் அடங்காதவர் என்றும், அவர் உலகோடு தொடர்பு கொண்டால் அவரது தெய்வத் தன்மைக்கு இழுக்கு ஏற்படும் என்றும் கூறுவார் உளர். வேறு சிலர், இறைவன் உலகைப் படைத்து, அதைத் தானாகவே இயங்கும்படி அமைத்துவிட்டுப் பின்னர் அதில் ஈடுபடுகிறதில்லை எனக் கூறுகின்றனர். ஆனால், ஆரம்ப முதல் இறுதி வரையிலும் திருமறை கூறுவது, இறைவன் மனித வாழ்க்கையிலும் வரலாற்றிலும் இடையறாது ஈடுபட்டுள்ளார் என்பதாகும். கடவுள் இறங்கினார், கர்த்தர் பார்த்தார், கதவை அடைத்தார், ஆண்டவர் பேசினார், அவர் கேட்கிறார் என்பதுபோன்ற கூற்றுகள் உலகோடுள்ள இறைவனது இந்த ஈடுபாட்டையே குறிக்கின்றன.

இந்த ஈடுபாட்டின் ஒப்பற்ற செயலாக இயேசுகிறிஸ்துவில் அவரே உண்மையான மனிதனாக வரலாற்றில் ஊனுடலில் காட்சியளித்து மனித வாழ்க்கையை மாற்றி அமைக்கின்றார். அன்பு, தன்னலமின்மை, தியாகம் ஆகிய அடிப்படைகளில் வாழ்க்கையையும் வரலாற்றையும் புதுப்பிக்கும் புதிய நயத்தை தமது வாழ்க்கையில் செயலாற்றிக் காண்பிக்கின்றார். அதோடு நின்றுவிடாமல் தமது தூய ஆவியரால் மக்களை— அறிஞர்களையும், தலைவர்களையும், இயக்கங்களையும் எழுப்பி அவர்கள் மூலமாகச் சமூகத்தின் அநேக தீமைகளை ஒழித்து மனித வாழ்க்கையைப் புதுப்பித்து வருகின்றார். உலக மக்களின் முன்னேற்றத்திற்கான பிரமாண்டமான சமூகத் திட்டங்கள், பொருளாதார நயங்கள், கல்வித் திட்டம், மருத்துவ சேவை போன்ற அனைத்திலும் இறைவன் ஈடுபாடு கொண்டு உலக வாழ்க்கையையும், வரலாற்றையும் புதுப்பிக்கிறார் என்பது திருமறையின் கூற்று.

3. ஆகவே திருமறையின் நடுப்பொருள் இயேசுகிறிஸ்துவேயாம்: இயேசுகிறிஸ்து இல்லையேல் திருமறை இல்லை. இயேசு கிறிஸ்து இல்லையேல் பழைய ஏற்பாடு கிறிஸ்தவத் திருமறையில் இடம்பெறாமல் யூத மக்களின் திருமறையாக மாத்திரம்

இருந்திருக்கும். கிறிஸ்தவம் உலகிற்கு அளிக்கும் நற்செய்தி இயேசுகிறிஸ்துவே. அவர் ஒரு யூதனுகப் பிறந்து, குறு நாடாகிய பலஸ்தீனுவிலே குறுகிய காலம் வாழ்ந்தபோதிலும் அவரது வாழ்க்கை நித்தியத் தன்மையுள்ளது. கிறிஸ்து எல்லாருக்கும் உரியவர். மெய்யான மனிதனைக் கிறிஸ்துவில் காண்கிறோம். மெய்யான இறைவனை கிறிஸ்துவில் காண்கின்றோம். ஏழைக்கு ஏழையாய், தொழிலாளிக்குத் தொழிலாளியாய், துன்பப்படுவோருக்கு துன்புறுத்தப்படுகிறவராய், பிறரது பகையாலும் பொறுமையாலும் அல்லல் படுவோருக்கு அதே அனுபவம் உள்ளவராய் அவர் காட்சியளிக்கின்றூர். புறக்கணிக்கப்பட்டவர்களை அரவணைக்கிறவராய், தாழ்த்தப் பட்டவரை உயர்த்துகிறவராய், தாம் நேசிக்கிறவர்களுக்காக உயிரையும் தியாகம் செய்கிறவராய் அவர் வாழ்ந்தார். இறைவனைப்பற்றி பழைய ஏற்பாட்டில் கூறிய உயரிய தன்மைகளெல்லாம் அவரில் நிறைவேறுகின்றன. மக்கள் பலர் தேடி அலையும் மனச்சமாதானம், நிறைவுள்ள திருப்தியளிக்கும் வாழ்க்கை, பிறரைச் சேவிப்பதில் மகிழ்ச்சி காணும் உயரிய இலட்சியம் ஆகியவற்றை மக்களுக்கு அளிக்கின்றூர். இந்தக் கிறிஸ்துவே திருச்சபை உலகிற்கு அளிக்கும் உயரிய செல்வம்.

4. மேற்கூறிய மூன்றிலுமிருந்து உலக வரலாறு ஒரு குறிக்கோளுக்கு நேராகச் செல்கிறது என்றறிகின்றோம்: இந்து சமயத்தில், வரலாறு சுழன்றுகொண்டிருக்கும் ஒரு சக்கரம் போன்றது என்றும், மக்கள் சக்கரத்தில் ஒட்டிய தூசுபோல் வாழ்க்கைச் சக்கரத்தில் ஈடுபட்டு முடிவில்லாதபடி சுழன்றுகொண்டிருக்கின்றனர் என்றும், உயிரானது பல பிறவிகள் எடுத்துக் கர்மவினை அகல்வதில் ஈடுபட்டிருக்கின்றது என்றும் கூறப்படுகின்றது. திருமறை இவ்விதமான இலட்சியமற்ற ஓர் இயக்கத்தைப்பற்றிக் கூறுவதில்லை. முன்னர் கூறியபடி குறிக்கோளுள்ள ஓர் இலட்சியத்துக்கு நேராக வரலாறு இயக்கப்படுகின்றது. இந்த வரலாறு எப்போதும் முன்னேற்றப் பாதையில் செல்கின்றது என்று கூற இயலாது. பாபேல் கோபுரம் கட்டிய மக்கள்போல் உலக அரசுகள் சுயநலத்தாலும், பகையாலும் தங்களுக்குப் பெயருண்டாக முற்படும்போது, யுத்தங்களும் பேரழிவுகளும் வரலாற்றில் ஏற்படுகின்றன. இவை

தற்காலிகமாக இறைவனின் திட்டத்தில் குறுக்கிடும் தடைகளாயிருக்கலாம். செத்துப்போன சாராளின் கர்ப்பத்திலிருந்து குமாரனையும், கொடிய சிலுவை மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்த கிறிஸ்துவையும் தரும் கடவுள், யுத்தங்கள் போன்ற கொடிய நிகழ்ச்சிகளினுல் வரலாறு அழியாமல், தமது திட்டம் சிதையாமல் பாதுகாக்கிறுர். எனவே வரலாறு பற்றிய ஒரு நம்பிக்கையுள்ள உபதேசத்தை திருமறை தருகின்றது.

**5. மனித வரலாறு உண்மையானதும் முக்கியமானதுமாக இருப்பதனுல் மனிதனுக்கும் அவன் செயல்களுக்கும் திருமறை முக்கிய இடமளிக்கின்றது:** இஸ்லாமிய சிந்தனையில் இறைவனின் சித்தமே எல்லாம் என்றும், மனிதன் அவரது கரத்தில் இயந்திரம்போலவே இயங்குகிறுன் என்றும் கூறப்படுகிறது. நம் நாட்டிலும் 'அவனன்றி அணுவும் அசையாது' என்ற கூற்றை எழுத்தின்படி பொருள்கொண்டால், பெருமளவில்மேற்கூறிய இஸ்லாமிய சிந்தனைக்கொத்த பொருளே தோன்றும். இவற்றின்படி, மனிதன் தானுகச் சிந்தித்துச் செயலில் ஈடுபடும் ஆற்றலற்றவன்; நன்மையாயினும், தீமையாயினும் அவன் செய்வதெல்லாம் ஏற்கெனவே இறைவனுல் முன் குறிக்கப்பட்டுள்ளன என்ற பொருள் ஏற்படுகின்றது.

திருமறையோவெனில், ஆரம்ப முதல் இறுதி வரை மனிதனுக்கும் அவனது செயல்களுக்கும் பெரும் முக்கியத்துவம் அளிக்கின்றது. ஆதாம், ஏவாள் சித்திரந்தொடங்கி, இஸ்ரவேலரின் வரலாறு வழியாகப் புதிய ஏற்பாட்டின் இறுதி வரையிலும் மனித வாழ்க்கை முக்கியத்துவம் அடைகின்றது. வரலாறு என்பது மக்களும் அவர்களது செயல்களும், அச்செயல்கள் தம்மிலுள்ள உறவுகளும் சேர்ந்ததேயாகும். யூதாஸ், பிலாத்து, பேதுரு போன்றவர்களின் பலவீனங்களையும்; தாவீது, எரேமியா, பவுல் போன்றவர்களின் உயர்வுகளையும் கவனிக்கும்போது, இறைவனின் திட்டத்தில் மனிதனுக்கிருக்கும் முக்கிய இடம் விளங்குகின்றது. எனவே திருமறை, வரலாற்றின் முக்கியத்துவத்தினுல், தனி மனிதனையும் அவன் செயல்களையும் மறந்துவிடவில்லை என்க.

6. மேற்கூறிய வரலாறும் மனித செயல்களும் நிகழும் அரங்கு உலகம்; எனவே உலகம் மிக முக்கியமானது என்பது திருமறை

யின் செய்தி: காண்பது எல்லாம் மாயை; நிலைவரமானது ஒன்றுமில்லை; மனித வாழ்க்கை நீர்மேல் குமிழிபோன்றது; உண்மையானதும் நிலைவரமானதும் ஒன்றுமில்லை என்பாருளர். சடப்பொருள் தீயது; மனித ஆத்துமா சடப்பொருளாகிய உடலாகிய சிறையினுள் அகப்பட்டுவிட்டது; நற்செயல்களால் இச்சிறையிலிருந்து ஆத்துமா விடுதலைபெறவேண்டும் என்ற போதனை இந்து சமயத்தில் இருக்கின்றது.

திருமறையில் 'பிரசங்கி' நூலில், 'எல்லாம் மாயை' என்று கூறப்பட்டாலும், அது திருமறையின் பொதுவான செய்தியாகாது. வரலாறு நிகழ்வதும் மனிதன் வாழ்வதுமான இந்த உலகம் மிகவும் முக்கியமானது என்பதைத் திருமறை வற்புறுத்துகின்றது. உபாகம நூலின் சட்டதிட்டங்கள் இந்த உலகு உண்மையானது என்ற அடிப்படைத் தத்துவமுள்ளவை. இயேசுகிறிஸ்து மெய் மனிதனாய் உண்மையான ஊனுடல் ஏற்று வாழ்ந்தார். இறையாட்சி இந்த உலகில் வந்திருக்கின்றது என்று அவர் போதித்தார். தங்கள் காலத்துச் சமயத்திலும் சமூகத்திலுமிருக்கும் தீமைகளை இயேசு கிறிஸ்துவும் அவரது அடியாரும் இக்காரணத்தினாலேயே கண்டிக்கின்றனர். வாழ்க்கையைவிட்டுப் பின்வலித்து வனத்தில் சென்று தனித்துத் தவஞ்செய்து பிறவியிலிருந்து விடுதலையடையத் திருமறை போதிப்பதில்லை. இந்த உலகத்திலேயே, சமூக வாழ்க்கையிலேயே மீட்பை அனுபவிக்க திருமறை போதிக்கின்றது. எனவே இறைவன் நல்லதாய்ப் படைத்த போதிலும், தீமை நிறைந்த உலகம் மிகவும் முக்கியமானதாகும்.

7. மேற்கூறியனவற்றிலிருந்து திருமறை நம்பிக்கை தரும் ஒரு நூல் என்பது தெளிவு: உலகத்தில் பலவிதத் தீமைகள் இருக்கின்றன. இவைகள் இயல்பானவைபோல் காட்சியளிக்கின்றன. நூற்றாண்டு காலமாய் இவைகளிருப்பதால், வாழ்க்கையைவிட்டு இவைகள் அகலக்கூடுமோ என்ற கேள்வி எழுப்பப்படுகின்றது. எனினும் தீமையைக் கண்டு மனிதன் வேதனைப்பட்டு நம்பிக்கை இழக்காதபடி திருமறை உயரிய நம்பிக்கையை அளிக்கின்றது. 'தரிசன நூலில்' திருமறை புதிய வானத்தையும் புதிய பூமியையும்பற்றிக் கூறுகின்றது. இறைவனின் திட்டத்தில் குறுக்கிடும் பாவம், தீமை போன்ற

வைகள் நிரந்தரமானவையல்ல, அவைகள் அழிக்கப்படும் ஒரு காலம் வரும் என்பது திருமறையின் உபதேசம். இதற்கு உதவியாக இயேசுகிறிஸ்து சிலுவை மரணத்தாலும், உயிர்த்தெழுதலாலும் பாவத்தையும் மரணத்தையும் ஜெயித்துவிட்டார். அவர் பாவத்தையும் மரணத்தையும் மடங்கடித்து வல்லமையற்றவைகளாக்கிவிட்டார். அவர்மேல் விசுவாசம் வைக்கிறவர்களுக்கு அவரது வெற்றி சொந்தமாகிவிடுகிற படியினுல், அவர்களும் உயிர்த்தெழுந்தவர்கள்போல் பாவத்தையும் மரணத்தையும் மேற்கொண்டு வருங்காலத்தை நம்பிக்கையோடு எதிர்பார்க்கின்றனர். வாழ்க்கையின் முழுமையையும் நாம் இவண் அனுபவிப்பதில்லை. இனி வரவிருக்கும் ஒரு காலத்தில் நாம் இறைவனை முகமுகமாய்த் தரிசிப்போம். எப்போதும் அவரோடுகூட இருப்போம் என்ற திடனுன ஒரு நம்பிக்கையை திருமறை தருகின்றது. இந்த நம்பிக்கையினுல் உலகின் தீமைகளை நாம் வன்மையாய் எதிர்த்துப் போராடி அவற்றின்மேல் வெற்றி கொள்ளுகின்ருேம். இது மனிதனுக்கு வாழ்க்கையைப்பற்றியும், வருங்காலத்தைப்பற்றியும் ஒரு நம்பிக்கையைக்கொடுக்கிறது.

8. **தனி வாழ்க்கையின் பிரச்சினைகளுக்கு திருமறை ஏற்ற செய்தியைத் தருகின்றது:** மனித வாழ்க்கை பல நெருக்கடிகளின் நடுவில் வைக்கப்படுகின்றது. மனித உடலும் உள்ளமும் நோய்வாய்ப்படும் நிலைமை இருக்கின்றது. குடும்பம், சமூகம் இவைகளினுல் பல பிரச்சினைகள் தனி மனிதனுக்கு ஏற்படுகின்றன. திடீர் மரணம், சண்டை சச்சரவுகள், பிரிவினைகள், நஷ்டங்கள், தோல்விகள், பகைகள் போன்றவை நேரிடும்போது மக்கள் பலர் திகைத்துவிடுகின்றனர். இவ்வித நேரங்களில் திருமறையிடம் திரும்புவோருக்கு ஆறுதலும், தைரியமும், நம்பிக்கையும் அளிக்கும் பாகங்கள் அதிலிருக்கின்றன, எனினும், திருமறை இதற்காகவே தரப்பட்ட ஒரு நூல் என்று சிந்திப்பது தவருகும். தனியாரின் வாழ்க்கைகளின் பிரச்சினைகளுக்குத் திருமறையில் பதிலிருப்பினும், முழு மனுக்குலமும் இயேசுகிறிஸ்துவில் மீட்கப்பட்டு ஒருமைப்படவேண்டும் என்பதே திருமறையின் முக்கிய செய்தியாகும்.

9. **திருமறை தனி மனிதனைப் புதுப்பித்து ஆக்கல் முறையான பணியில் ஈடுபடுத்துகின்றது:** திருமறையினைப் படிப்பதற்கு

முனைகின்றவர்கள் திறந்த மனத்தோடு அதனைப் பயில வேண்டும். அதில் கடவுளின் செய்தி இருக்கின்றது என்ற விசுவாசத்தோடு திறந்த மனதுள்ளவர்களாகத் திருமறையினைப் படிக்கின்றவர்களுக்கு ஒரு புதிய அனுபவம் கிடைக்கின்றது. அவர்கள் திருமறையில் விளங்கும் இயேசுகிறிஸ்துவைச் சந்திக்கின்றார்கள். இச்சந்திப்பில் மனிதர் தங்கள் பாவநிலையை உணர்ந்து, இயேசுகிறிஸ்து தங்கள் பாவங்களை மன்னித்திருப்பதை அறிந்து மன்னிப்பின் உறுதியை அடைகின்றார்கள். இவ்வாறு விசுவாசத்தின்மூலம் இயேசுகிறிஸ்துவைச் சந்தித்து அவரோடு ஐக்கியப்படும்போது உலகில் இறைவனைச் சேவிக்கும் ஆர்வம் அடைகின்றார்கள். உலகம் முழுவதையும் தமது ஆட்சியினுள் கொண்டுவர இறைவன் எங்கும் ஈடுபட்டிருக்கும் திருக்காட்சியினை அவர்கள் பெற்று விடுகின்றார்கள். தாங்கள் எத்துறையில் ஈடுபட்டிருந்தாலும் அத்துறையில் கிறிஸ்துவின் ஆட்சி ஊடுருவிச் செல்ல ஆக்கல் முறையில் அவர்கள் ஈடுபடுகின்றார்கள். இப்பணியில் அவர்களை ஈடுபடுத்துவதோடு நின்றுவிடாமல், திருமறை தினமும் அவர்களுக்கு வழிகாட்டுகின்றது.

## முடிவுரை

திருமறையின் மொத்தமான செய்தியை நாம் கூறினபோதிலும், இந்நூல் விசுவாசத்திலிருந்து விசுவாசத்திற்கு எழுதப்பட்டது என்ற உண்மையை வற்புறுத்த விரும்புகின்றோம். திருமறைக்கும் மற்ற நூல்களுக்குமுள்ள பெரிய வித்தியாசம் இதுவே. திருமறையின் நூல்களை எழுதியவர்களெல்லாம் அடிப்படையான ஒரு விசுவாசத்திலிருந்தே எழுதினார்கள். அந்த விசுவாசத்தினால் அவர்களுக்கு ஏற்பட்ட அனுபவத்தை இந்நூல்களில் பிறரோடு பகிர்ந்துகொள்ளுகின்றனர். எனவே, திருமறையின் செய்தி யாது என்றறிய விரும்புகின்றவர்கள், திறந்த மனதோடும், உண்மையினை ஏற்றுக் கீழ்ப்படியும் ஆர்வத்தோடும் வரவேண்டியது இன்றியமையாதது. யோ. 20:31ல் கூறியபடி, 'இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும் . . .'

ஒரு பொருளில் இதுவே திருமறையின் நோக்கமாகும். எனவே, திருமறையின் செய்தியை அறிய வருவோர், விசுவாச அடிப்படையில் அதனை அணுகுவது இன்றியமையாததாகும்.

பின்னிணைப்பு

# திருமறையின் கால அட்டவணை

திருமறையின் கால அட்டவணை முழுமையையும் திட்டமாகக் கூற இயலாது. ஏனெனில், கால அமைப்பின்படி திருமறை வரலாறுதொடர்பாக எழுதப்படவில்லை. சிறப்பாக, ஆதியாகமத்தின் கால அட்டவணை மிகவும் பிரச்சினைக்குரிய ஒன்றே. பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஜேம்ஸ் அஷர் (James Ussher) என்ற தலைமைப் பேராயர் வெளியிட்ட புதிய ஏற்பாட்டில், படைப்பு கி.மு. 4000 என குறிப்பிடப்பட்டிருந்தது. இக்காலத்திலும் பல ஆங்கிலத் திருமறைப் பதிப்புகளில் இக்குறிப்பினைக் காணலாம். இது ஆதியாகமம் 5, 7, 9, 11 ஆகிய அதிகாரங்களில் தரப்படும் சில எண்களைத் துணையாகக்கொண்டு கணக்கிடப்பட்ட ஒன்றாகும்.

ஏற்கெனவே திருமறையைப்பற்றி இந்நூலில் கூறப்பட்டுள்ள உண்மைகளின்படி ஆதி. 1–11 அதிகாரங்களையும் எழுத்தின்படி பொருள்கொள்ளப்புகின், எழும் பிரச்சினைகள் பல. ஏனெனில், சடப்பொருள் பல இலட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே தோன்றியுள்ளது என ஆராய்ச்சியாளர் திட்டமாகக் கூறுகின்றனர். ஆகையால் படைப்பு கி.மு. 4000 ஆண்டில் நடைபெற்றது என்ற கருத்தினை நாம் ஏற்றுக் கொள்ள இயலாது.

ஆபிரகாம் முதல் இஸ்ரயேலர் எகிப்திலிருந்து விடுதலையடைந்த காலம் வரை தரப்படும் வரலாற்றிற்கும் திட்டமான கால வரையறைக் கூறுவது எளிதன்று. எனினும், திருமறையிலும் இதர நூல்களிலும் காணக்கிடைக்கும் பல குறிப்புகளைத் துணைகொண்டு பின்வரும் கால அட்டவணை பொதுவாகப் பொருத்தமெனக் கூறலாம்.

## பழைய ஏற்பாட்டு கால அட்டவணை

முற்பிதாக்கள்—(ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு) கி.மு. 1800.
எகிப்தில் இஸ்ரவேலர்—கி.மு. 1700.
இஸ்ரவேலரின் வனந்தரப் பயணம்—கி.மு. 1250.
கானான் முற்றுகை, நியாயாதிபதிகள், சவுல் அரசன்—கி.மு. 1020–1000.
தாவீது—கி.மு. 1000–961.
சாலொமோன்—கி.மு. 961–922.

## புதிய ஏற்பாடு

பழைய ஏற்பாட்டைவிட புதிய ஏற்பாட்டு கால அட்டவணையைத் திட்டம்செய்வது எளிது எனத் தோன்றினும், உண்மையில் இதுவும் கடினமானதே. ஏனெனில், கால அட்டவணையைப்பற்றிய குறிப்புகள் பல புதிய ஏற்பாட்டு நூல்களில் தரப்படவில்லை. மேலும், அக்காலத்தில் உபயோகிக்கப்பட்ட நாள்காட்டியினாலும் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. அக்கால வரலாற்று ஆசிரியர்கள் கிறிஸ்தவத் திருச்சபையின் வரலாற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கவில்லை. திபேரியு பேரரசன் காலத்தில் பொந்தியு பிலாத்து என்னும் தேசாதிபதியின் நாட்களில் கொலைசெய்யப்பட்ட கிறிஸ்து என்பவரைப் பின்பற்றியவர்கள் கிறிஸ்தவர்கள் என மாத்திரம் அக்கால ரோமைச் சரித்திர ஆசிரியனாகிய டாசிடஸ் (Tacitus) என்பவர் கூறுகின்றார். புதிய ஏற்பாட்டு ஆக்கியோரில் லூக்கா மாத்திரம் சிறிதளவு வரலாற்றுக் குறிப்புகள் தருகின்றார்.

## இயேசுவின் பிறப்பு

இயேசுவின் பிறப்பைப்பற்றிய கால அட்டவணை தெளிவில்லை. ஏரோது அரசன் கி.மு. 4 அல்லது 3ல் மரித்ததாகக் கணக்கிடப்பட்டிருக்கின்றது. மத்தேயு 2:1–16ன் படி ஏரோது இயேசுவைக் கொலைசெய்யும் நோக்கத்தோடு பெத்லகேமின் இரண்டு வயதுக் குழந்தைகளைக் கொலைசெய்தான். எனவே, ஏரோதுவின் மரணத்துக்கு இரண்டு

ஆண்டுகளுக்கு முன்னராகவாவது இயேசு பிறந்திருக்க வேண்டும். இதன்படி இயேசுவின் பிறப்பு கி.மு. 6ல் நடைபெற்றிருக்கலாம்.

## புதிய ஏற்பாட்டு கால அட்டவணை

இயேசுவின் பிறப்பு—கி.மு. 6.

இயேசுவின் ஊழியம்—கி.பி. 27–30.

சிலுவையில் அறைதல், உயிர்த்தெழுதல்—கி.பி. 30.

பெந்தெகொஸ்தே நாள்—கி.பி. 30.

சவுல் குணப்படுதல்—கி.பி. 33.

பவுலின் முதல் நற்செய்தி பரப்பும் பயணம்—கி.பி. 47–48 (கலாத்தியர் நிருபம்).

எருசலேம் ஆலோசனை மன்றம்—கி.பி. 49.

பவுலின் இரண்டாம் பயணம்—கி.பி. 49–52 (தெசலோனிக்கேயர் நிருபங்கள்).

பவுலின் மூன்றும் பயணம்—கி.பி. 53–58 (1, 2 கொரிந்தியர், ரோமர்).

ரோமாபுரியில், சிறையில்—கி.பி. 61–63 (பிலிப்பியர், கொலோசெயர், பிலேமோன், எபேசியர், 1, 2 தீமோத்தேயு, தீத்து). சிலர் இதைவிடப் பிந்திய காலத்தைக் குறிப்பிடுகின்றனர்.

நேரோவின் துன்புறுத்தல், பவுல், பேதுரு மரணம்—கி.பி. 64.

யூதரது கலகம்—கி.பி. 66–70.

எருசலேம் அழிக்கப்படுதல்—கி.பி. 70 (மத்தேயு, லூக்கா, அப்போஸ்தலர்).

தொமீஷியான் காலத்தில் துன்புறுத்தல்—கி.பி. 95,96 (தரிசன நூல், யோவான், 1, 2, 3 யோவான், எபிரேயர், 1, 2 பேதுரு).

## ஆசிரியரின் பிற நூல்

அருளுரைகள் .. ரூ. 3·00

## திருமறைபற்றிய வேறு நூல்கள்

திருநாடும் திருமறையும் .. ரூ. 2·75

—டென்னிஸ் பாலி

வேதப் பொருட் கண்ணுடி .. ரூ. 15·00

—டி. எம். மில்லர்

சுவிசேட ஒற்றுமைத் திரட்டு .. ரூ. 15·00

—இ. வாங்ஷே

CLS

UNDERSTANDING THE BIBLE

By R. EDWARD SAM

விலை ரூ. 3·50